பகுத்தறிவுப் பகலவனாய் பெரியார் தோன்றிப்
பார்ப்பனர்தம் மடமையெனும் இருளை நீக்கித்
தகுதியுடன் தமிழரெலாம் ஏற்றங் கொண்டு
தமிழ்நாட்டில் தலையெடுக்கச் செய்த தேபோல்
மிகுதிறமை யுடன்நாளும் முயன்று ழைத்து
மொழியுணர்வைத் தமிழர்க்கே ஊட்டி நின்ற
தகுபுலமைப் பாவாணர் நூல்க ளாய்ந்து
தனித்தமிழை வளர்த்தவர்தம் புகழ்வ ளர்ப்போம்!

– பாவலரேறு பெருஞ்சித்திரனார்


'பெரியார் குடில்'
பி.11. குல்மொகர் குடியிருப்பு,
35, செவாலியே சிவாசி கணேசன் சாலை,
தியாகராயர்நகர், சென்னை - 17.

பாவாணர் தமிழ்க்களஞ்சியம்

8

# பாவாணர்

# தமிழ்க்களஞ்சியம்–8



## தமிழர் வரலாறு–2

தமிழ்மண் அறக்கட்டளை

# பாவாணர்
## தமிழ்க் களஞ்சியம்

**8**

## தமிழர் வரலாறு – 2

*ஆசிரியர்*

மொழிஞாயிறு **ஞா. தேவநேயப் பாவாணர்**

**தமிழ்மண் அறக்கட்டளை**

*சென்னை - 600 017*

*நூற் குறிப்பு*

| | |
|---|---|
| நூற்பெயர் | : **பாவாணர் தமிழ்க் களஞ்சியம் - 8** |
| ஆசிரியர் | : மொழி ஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர் |
| பதிப்பாளர் | : கோ. இளவழகன் |
| முதல் பதிப்பு | : 1972 |
| மறு பதிப்பு | : 2009 |
| தாள் | : 16 கி வெள்ளைத்தாள் |
| அளவு | : 1/8 தெம்மி |
| எழுத்து | : 11 புள்ளி |
| பக்கம் | : 8 + 176 = 184 |
| நூல் கட்டமைப்பு | : இயல்பு (சாதாரணம்) |
| விலை | : உருபா. **170/-** |
| படிகள் | : 1000 |
| நூலாக்கம் | : பாவாணர் கணினி<br>தி.நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | : வ. மலர் |
| அச்சிட்டோர் | : ஸ்ரீ வெங்கடேசுவரா<br>ஆப்செட் பிரிண்டர்சு<br>இராயப்பேட்டை, சென்னை - 14. |

வெளியீடு

**தமிழ்மண் அறக்கட்டளை**
**"பெரியார் குடில்"**
பி.11 குல்மொகர் குடியிருப்பு,
35 செவாலிய சிவாசி கணேசன் சாலை, தியாகராயர் நகர்,
சென்னை - 600 017. தொ.பே. 2433 9030

மின்னஞ்சல் : tm_pathippagam@yahoo.co.in
இணையதளம் : www.tamilmann.in

# பதிப்புரை

*தமிழுக்கும் தமிழருக்கும் வளமும் வலிமையும் சேர்க்கக் கூடிய பழந்தமிழ் நூல்களையெல்லாம் தேடியெடுத்துத் தமிழ் கூறும் உலகிற்கு வழங்கும் தொலைநோக்குப் பார்வையுடன்* **தமிழ்மண் பதிப்பகம்** *தொடங்கப்பட்டது. அதன் வாயிலாக மொழிஞாயிறு பாவாணரின் நூற்றாண்டு நினைவாக அவர் எழுதிய நூல்கள் அனைத்தையும் சேர்த்து அவருடைய மறைவுக்குப் பிறகு 2000-த்திலும், பல்வேறு இதழ்களிலும், மலர்களிலும் வெளிவந்து, நூல் வடிவம் பெறாத பாவாணரின் அரிய கட்டுரைகளை எல்லாம் தொகுத்து 2001- லும் ஒருசேர வெளியிட்டு உலகெங்கும் உள்ள தமிழர்களுக்கு வழங்கினோம். பாவாணர் வழி நிலை அறிஞர்களான முதுமுனைவர்* **இரா. இளங்குமரனார்** *அவர்களும், மருத்துவர்* **கு.பூங்காவனம்** *அவர்களும் இவ்வரிய கட்டுரைப் புதையல்கள் நூல் வடிவம் பெறுவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்தனர். இப்பெருமக்களை நன்றியுணர்வுடன் நினைவுகூர்கிறேன்.*

*“சொல்லாராய்ச்சித் துறையில் தேவநேயர் ஒப்பற்ற தனித் திறமையுடைவர் என்று* **மறைமலையடிகளும்,** *நாவலந் தீவுக்கு நந்தமிழே தாயென்று* **பாவேந்தரும்,** *தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் நற்றொண்டு ஆற்றியவர் பாவாணர் என்று* **பேரறிஞர் அண்ணா** *அவர்களும், வெட்ட வெட்டக் கிடைக்கும் தங்கச் சுரங்கம் போன்றவர் என்று தமிழறிஞர்* **இராசமாணிக்கனாரும்,** *தமிழகம் மொழித்துறையிலே பாவாணர் போன்ற ஒரு அறிஞரை இன்னும் பெற்றுத் தரவில்லை என்று* **பன்மொழிப் புலவர் அப்பாத்துரையரும்,** *குறைமதியர் தேக்கிவைத்த கரையிருளை நீக்க வந்த மறைமலையார் வழிவந்த நிறைமலையார் பாவாணர் என்று மேனாள் பேரவைத்தலைவர்* **தமிழ்க்குடிமகன்** *அவர்களும், தமிழர் யார்? எதிரிகள் யார்? என்று ஆய்ந்து அறிந்து காட்டியவர் பாவாணர் என்று பேராசிரியர்* **இளவரசு** *அவர்களும், ஓராயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்தபின் வாராது போல வந்த மாமணி” பாவாணர் என்று முதுமுனைவர்* **இளங்குமரனார்** *அவர்களும் குறிப்பிட்டுள்ள பெருமைகளுக்குரிய பேரறிஞரின் நூல்களை மீள்பதிப்பக வெளியிடுவதில் பெருமை கொள்கிறேன்.*

"பாவாணர் நூல்கள் அத்தனையும் தமிழ்மொழிக்கு ஏற்றம் உரைப்பன. தமிழை ஆரிய இருளினின்று மீட்டுக் காப்பன. வீழ்ந்து பட்ட தமிழனுக்கு விழிப்பூட்ட வல்லன. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டுக்கிடக்கும் தமிழ்மொழியை மீட்கவல்லது" என்று பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் கூற்றை இக் களஞ்சிய வெளியீட்டில் பதிவு செய்வது எமது கடமையாகும்.

பாவாணரைத் தூக்கிப் பிடித்தால்தான் தமிழினம் உருப் படமுடியும் - உயரமுடியும். பாவாணர் கொள்கைகள் தமிழர் உள்ளமெல்லாம் நிலைத்து நிற்பதற்கும், பாவாணர் நூல்கள் தமிழர் இல்லமெலாம் இடம் பெறுவதற்கும் முன் குறிப்பிட்ட 2000 - 2001 காலக்கட்டத்தில் வெளியிடப்பட்ட பாவாணரின் அறிவுக் கருவூலங்களையெல்லாம் ஒட்டு மொத்தமாக சேர்த்து ஒரே வீச்சில் **பாவாணர் தமிழ்க் களஞ்சியம்** எனும் தலைப்பில் எம் அறக்கட்டளை வெளியிடுகிறது.

மறைக்கப்பெற்ற மாபெரும் வரலாற்றையும், சிதைக்கப் பெற்ற ஒப்புயர்வுயற்ற மொழியையும் கொண்ட தமிழினத்தின் முன்னேற்றம் கருதி இவ்வருந்தமிழ் புதையல்களை தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்க முன் வந்துள்ளோம். தமிழ் மொழியை மூச்சாகவும், பேச்சாகவும், செயலாகவும் கொண்டு ஒருநாளின் முழுப்பொழுதும் தமிழாகவே வாழ்ந்த செம்புலச்செம்மல், தனித்தமிழ்க் கதிரவன் மொழிஞாயிறு பாவாணர் நூல்களை வாங்கிப் பயன் கொள்வீர்.

இளமையிலேயே பொதுத்தொண்டிலும், தனித்தமிழ் இயக்கத் தொண்டிலும் நான் ஈடுபாடு கொள்வதற்குக் காரணமாக இருந்தவர்கள் **பெரும்புலவர் நக்கீரன்** அவர்களும், அவர்தம் இளவல் **புலவர் சித்திரவேலன்** அவர்களும் ஆவர். இவர்களை இவ்வெளியிட்டின் வாயிலாக நன்றியுணர்வோடு நினைவு கூறுகிறேன். தந்தை பெரியாரின் தன்மதிப்பு இயக்கக் கொள்கை களாலும், மொழிஞாயிறு பாவாணரின் தனித்தமிழ் இயக்கக் கொள்கைகளாலும் ஈர்க்கப்பட்டவன். அத்தகு பின்புலத்தோடு பதிப்புப்பணியில் என் காலடிச் சுவடுகளைப் பதித்து வருகிறேன்.

**கோ. இளவழகன்,**
**பதிப்பாளர்.**

# உள்ளடக்கம்

பக்கம்


| | | |
|---|---|---|
| பதிப்புரை | ... | iii |
| குறுக்க விளக்கம், குறி விளக்கம் | ... | v |
| **II. கலவுநிலைக் காண்டம்** | | |
| ஆரியர் இந்தியாவிற்குட் புகவு | ... | 1 |
| தியூத்தானியத்திற்கும் தமிழுக்கும் உள்ள நெருக்கம் | ... | 7 |
| இராமாயணக் காலம் | ... | 16 |
| நால்வரணப் பகுப்பு | ... | 25 |
| முத்திருமேனிப் புணர்ப்பு | ... | 29 |
| பாரதக் காலம் | ... | 33 |
| தொல்காப்பியம் | ... | 39 |
| தொல்காப்பியர் காலத் தமிழக எல்லை | ... | 49 |
| மதுரை யமைப்பு | ... | 54 |
| கடைக் கழகத் தொடக்கம் | ... | 54 |
| பாணினீயம் | ... | 56 |
| மோரியப் படையெடுப்பு | ... | 58 |
| கடைக்கழக முடிவு | ... | 64 |
| கடைக்கழகக் காலக் குறுநில மன்னர் | ... | 65 |
| கடைக்கழகக் கால ஆரிய மீக்கூர்வு | ... | 77 |
| மூவேந்தர் ஆரிய அடிமை முதிர்வு | ... | 90 |
| குலங்கள் தோன்றிய வகைகள் | ... | 95 |
| நால்வரணத் தோற்றமும் விளக்கமும் | ... | 99 |
| இற்றைப் பிரவிக் குலங்கள் | ... | 105 |
| ஆரிய அட்டுழியத்தால் தமிழர்க்கு விளைந்த கேடுகள் | ... | 124 |
| **III தெளிநிலைக் காண்டம்** | | |
| திருவள்ளுவர் தமிழரின் கண்திறப்பிப்பு | ... | 135 |
| ஆங்கிலராட்சியும் அதன் நன்மைகளும் | ... | 136 |

கால்டுவெலார் கண்ட வுண்மை ... 140

தமிழன் பள்ளியெழுச்சிப் பாடகர் சுந்தரம் பிள்ளை ... 143

தனிப்பெருந் தமிழ் மீட்பர் – மறைமலையடிகள் ... 145

தமிழ் வளர்த்த தனிப்பெரு முதல்வர் – இராமசாமிக் கவுண்டர் ... 148

தமிழ்நாட்டிற்குத் தகுந்த கட்சி தி.மு.க.வே ... 149

தமிழ்நாடு இன்னும் விடுதலை பெறவில்லை ... 150

கல்வித் திணைக்களத்தின் கடுங்குறைகள் ... 151

புலவர் பெருமிதம் ... 153

முத்தமிழ்க் காவலர் ... 154

தமிழ்நாடு முன்னேறும் வழிகள் ... 157

தமிழக எல்லை வரவரக் குன்றியமை ... 158

தமிழன் முன்னேற்றத் தடை ... 165

தமிழ்நாட்டுப் பிராமணர்க்கு ஓர் அன்பெச்சரிக்கை ... 166

புரட்சி ... 167

**பின்னிணைப்பு**

1. உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடுகளால் தமிழுக்கு விளைந்த கேடு

2. மொழியின வுணர்வும் படிமுறைக் கலப்பும் ... 174

அரும்பொருள் அருஞ்சொல் அகரமுதலி ... 176

கருவிநூற்பட்டியல் ... 177

பாவாணர் வாழ்க்கைச்சுவடு ... 178

# தமிழர் வரலாறு - 2

# 2

# கலவுநிலைக் காண்டம்

## ஆரியர் இந்தியாவிற்குட் புகவு

(தோரா. கி.மு. 1500)

*மேனாடுகளுள் முதற்கண் நாகரிக மடைந்தவை சுமேரியாவும் எகிப்தும் ஆகும்.*

*சுமேரியர், கொளுவுநிலை* (Agglutinative) *மொழி பேசிய துரேனிய அல்லது சித்திய இனத்தார். பிற்காலத்திற் சேமிய வகுப்பார் சுமேரி யாவைக் கைப்பற்றினர். சுமேரிய நாகரிக வழிப்பட்டது பாபி லோனிய நாகரிகம். இரண்டிற்கும் உரிய நாடுமெசொப்பொத் தாமியா. அது தைகிரிசு ஐப்பிராத்து என்னும் ஈராறுகட் கிடையில், கீழைத்துருக்கி நீங்கலாக உள்ள நாடாகும். இன்று கிடைத்துள்ள முதற் பழஞ் சுமேரிய வெட்டெழுத்தின் காலம் கி.மு 3100, சுமேரிய மொழி கி.மு. 2000 வரை ஆட்சிமொழியா யிருந்தது. அதன்பின், பாபிலோனிய அக்கேடிய* (Akkadian) *மொழி அதன் இடத்தைக் கொண்டது.*

*தென் பாபிலோனிய அல்லது தென் கல்தேயத்* (Chaldean) *தலைநகரான ஊர் என்னும் நகர் இருந்த இடத்து அகழ்வில், கி.மு. 3000 ஆண்டிற்கு முற்பட்ட சேரநாட்டுத் தேக்கு உத்தரம் எடுக்கப்பட்டுள்ளது. நிலாத் தெய்வத்திற்கு அங்கொரு கோவிலும் இருந்ததாகச் சொல்லப்படுகின்றது. பாண்டியர் திங்களைத் தம் குடிமுதலாகக் கொண்டிருந்ததனால், முதற்காலத்தில் அதைத் தெய்வமாகவும் வணங்கியிருத்தல் வேண்டும். பொதுமக்களும் அதை வணங்கியதைப் 'பிறைதொழுகென்றல்' என்னும் அகப்பொருட் டுறையால் அறியலாம். பூம்புகாரில் ஒரு நிலாக்கோவில் இருந்தது.*

***" நிக்கந்தக் கோட்டம் நிலாக்கோட்டம் புக்கெங்கும் "*** (சிலப்.9:13)

*பாபிலோனியர் கைக்கொண்ட பிற தமிழப் பழக்கவழக்கங் களை,* **'தமிழர் தோற்றமும் பரவலும்'** *என்னும் (ஆங்கில) நூலிற் காண்க.*

*எகிபதிய அரசாட்சி, 31 ஆள்குடிகள்* (Dynasties) *தொடர்ந்து, தோரா. கி.மு. 3100 -லிருந்து தோரா. கி.மு. 335 வரை இருந்துவந்தது. அதன்பின், கி.மு. 332-ல் மக்கதோனியப் பேரரசனான மா* **அலெக சாந்தர்** *எகிபதுவைக் கைப்பற்றினான். தொன்மையில், எகிபதுவும் சுமேரியாவும் ஏறத்தாழச் சமமாகும்.*

*ஆப்பிரிக்காவின் தென்பாகத்தினின்றும் மேலையாசியா வினின்றும் அடுத்தடுத்துச் சென்ற மக்கட்கூட்டத்தாரே, நீலாற்றின் பள்ளத்தாக்கிலுள்ள சதுப்புநிலங்களை யடுத்த தாழ்நிலங்களை, நாலாயிரம் ஆண்டாக மெள்ள மெள்ளத் திருத்திக் குடியிருந்தனர் என்று எகிபது நாட்டு வரலாறு கூறுகின்றது. அந் நாட்டிற்கும் இந்தியாவிற்கும் தொன்றுதொட்டு வணிகத் தொடர்பிருந்ததாக, வரலாற்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.*

*"ஆசியாவினின்று கடல் வழியாக, முதற் குடியேற்றக் கூட்டத் தார் கி.மு.3000-ற்குப் பிற்படாது கிரேக்க நாட்டிற்குச் சென்றபோதே, மெசொப்பொத்தாமியாவில் ஊர் நாகரிகம் முழுவளர்ச்சி யடைந் திருந்தது. அவர்கள், செப்பறைத் தீவிலும்* (Cyprus) *கிரேத்தாத் தீவிலும்* (Crete) *சில சைக்கிலேடுகளிலும்* (Cyclades), *கிரேக்கத் தீவக் குறையில் மேற்குப் பாகத்தைவிட வெப்பமாகவும் காய்ந்துமிருந்த கிழக்குப் பாகத்திலும் குடியேறினார்கள். அன்று அவர்கள் பயிர்த்தொழிலிலும் கடற்செலவிலும் முல்லை வாழ்க்கையிலும் பயின்றிருந்தனர். ஆயினும், அன்றும் அவர்கள் புதுக் கற்கால நிலையிலேயே யிருந்தனர். ஏனெனின், அவர்கள் கருவிகள் கல்லாலும் பெரும்பாலும் மெலோசுத்* (Melos) *தீவிற் கிடைத்த புட்டிக்கண்ணாடி போன்ற எரிமலை யுறைகூழாலுமே* (obsidian) *செய்யப்பட்டிருந்தன. தோரா. கி.மு. 2600 ஆன கிரேக்க உறைக்காலத் தொடக்கத்தில் (சில ஆசிரியர் உறைக்காலத்தைச் செம்புக்கால மென்றும் சரியான உறைக் காலமென்றும் பிரித்து, அதன் தொடக்கத்தைத் தோரா. கி.மு. 2900 என்றும் முந்திய தாக்குவர்.), செம்பைப் பயன்படுத்தத் தெரிந்த வேறு சில கூட்டத்தாரும் சென்று, முன்பு சிதறலாகக் குடியிருந்தவ ரொடு கூடிக்கொண்டனர். அவர்களும் ஆசியாவினின்று சென்றவர் களாகவும், தங்கட்கு முந்தினவரின் இனத்தைச் சேர்ந்தவர்களாகவும் பெரும்பாலும் இருந்திருக்கலாம்." (பிரித்தானியக்கலைக்களஞ்சியம் (1970), 10. ப. 790)*

*"மெசொப்பத்தாமியாவிலும் எகிபதுவிலும் நாகரிக மாந்தனாற் செய்யப்பட்ட திருந்திய கலைகளும் தொழில்களும், ஐரோப்பாவில் முதற்கண் கிரேத்தாத் தீவின் மினோவராலும்* (Minoans) *கிரேக்க நாட்டு மைசீனியராலும்* (Mycenaeans) *உறைக்காலத்தில் தழுவப்பட்டு வளர்க்கப்பட்டன."* ***(பிரித்தானியக் கலைக்களஞ்சியம் (1970) 10, ப. 789).***

*கிரேக்கரின் நகர நாட்டுக் காலத்தில் (கி.மு.458-404) அரசியல் மதியியல் (அகக்கரணவியல்) குமுகாயவியல் புத்தெழுச்சி யுண்டா யிற்று. கிரேக்க நாகரிகம், கி.மு. 8ஆம் நூற்றாண்டிலிருந்து நண்ணிலக் கடற்கரை ஐரோப்பிய நாடுகட்கும் கருங்கடற்கரை நாடுகட்குங் கொண்டுசெல்லப்பட்டது. கிரேக்கராலும் மக்கதோனி யராலும்* (Macedonians) *கி.மு.4ஆம் நூற்றாண்டில் ஒரு பேரரசு ஏற்படுத்தப் பட்டது. மக்கதோனிய அரசனான மாஅலெகசாந்தர்* (Alexander the Great- *கி.மு 356-323), சிந்துவெளிவரை அப் பேரரசை விரிவுபடுத்தி னான். கி.மு.5ஆம் நூற்றாண்டில் உரோமப் பேரரசு கிரேக்கப் பேரரசை வீழ்த்தியது. உரோமப் பேரரசின் தலைநகர், கி.மு.330-ல், உரோம நகரத்தினின்று (பின்னர்க் கான்சுத்தாந்திநோபில் எனப் பெயர்பெற்ற) பிசந்தியத்திற்கு* (Byzantium) *மாற்றப்பட்டபோது, பிசந்தியப்* (Byzantine) *பேரரசு தொடங்கிக் கி.பி. 1453 வரை நீடித்தது. பிசந்தியத்திலும் அதையடுத்த சுற்றுப்புறத்திலும் கிரேக்கரே யிருந்தனர். கிரேக்கப் பேரரசில் மட்டுமன்றி, உரோமப் பேரரசிலும் பிசந்தியப் பேரரசிலும் கிரேக்க நாகரிகமே இணைப்புக் கூறாக இருந்து, இற்றை ஐரோப்பிய நாகரிகத்திற்கு அடிகோலிற்று. ஆயின், அக் கிரேக்க நாகரிகத்திற்கு அடிமணை தமிழ நாகரிகம் என்பதை உலகம் இன்னும் அறிந்திலது.*

*மேலையாசியாவினின்று, கிரேக்க நாட்டிற்கு மக்கள் குடியேறு முன்பே, கொளுவுநிலை மொழிகளைப் பேசிக்கொண்டிருந்த துரேனிய இனத்தார் வட ஐரோப்பாவிற் குடியேறிவிட்டனர்.*

*துருக்கியர்* (Turks), *காசக்கர்* (Cossacks) *முதலிய வகுப்பார் சேர்ந்த தார்த்தாரிய* (Tartarian) *இனத்தாரும் இரசியாவிற் குடியேறி யிருந்தனர். அதனாலேயே,* "Scratch a Russian and you find a Tartar" *என்னும் ஆங்கிலப் பழமொழி யெழுந்தது.*

*துரேனியர்க்கும் தார்த்தாரியர்க்கும் பின் மேலையாரியரின் முன்னோரான வடதிரவிடர் வடமேலை ஐரோப்பாவிற் குடியேறி னர். அங்கு அவர் மொழி தியூத்தானிய* (Teutonic) *ஆரியமாகத் திரிந்தது. அது பின்னர்த் தெற்கில் இலத்தீன முறையிலும் அதன்பின் கிரேக்க முறையிலும் மாறிற்று. அதற்கடுத்த திரிபே கீழையாரிய மூலமாகும். அதுவும் பின்னர் இந்தியம் ஈரானியம் என்னும் இருகிளையாகப் பிரிந்தது.*

## தியூத்தானியம் (செருமானியம்)

*தியூத்தானியக்கிளை(1) மேலைச் செருமானியம், (2) வடசெரு மானியம், (3) கீழைச் செருமானியம் என்னும் முப்பிரிவுகளைக் கொண்டது. பழைய ஆங்கிலம், பழைய பிரிசியம்* (Frisian), *பழைய சாகசனியம், பழைய உயர்செருமானியம் என்பன மேலைச்*

செருமானியத்தையும்; ஐசிலாந்தியம், தேனியம் (Danish), நார்வீசியம், சுவீடியம் என்பன வடசெருமானியத்தையும்; கோதியம் (Gothic), வாந்தலியம் (Vandalic) என்பன கீழைச் செருமானியத்தையும் சேர்ந்தவையாகும். இம் முப்பிரிவுகளுஞ் சேர்ந்த தியூத்தானியத்தின் மூலநிலையே (Proto Teutonic), தியூத்தானிய முறை என்று மேற்குறிக்கப்பட்டது.

பழைய ஆங்கிலம் அல்லது ஆங்கில சாகசனியம் (Anglo Saxon) என்று சொல்லப்படும் மொழியில், இன்று கிடைத்துள்ள முதற் பழைய எழுத்தேடு (document) 1200 ஆண்டகவையதே.

## இலத்தீன்

இத்தாலியரின் முன்னோர், நடு ஐரோப்பாவிலிருந்து, கி.மு.8ஆம் நூற்றாண்டிற்குமுன், ஆல்பசு (Alps), அப்பெனைன் (Appennines) மலைத்தொடர்களின் வழியாக வந்து குடிபுகுந்தனர். கி.மு.753-ல், திபேர் (Tiber) ஆற்றங்கரைமேல் உரோம நகர் கட்டப்பட்டது. அந் நகரை யுட்கொண்ட இலாத்தியம் (Latium) என்னும் கோட்டத்தில் (Dt.) பேசப்பட்ட மொழியே இலத்தீன். அது கி.மு.600-லேயே ஒரு திரிமொழியாயிருந்தது. கி.மு. முதல் நூற்றாண்டில்தான் அது இலக்கியச் செம்மொழி யாயிற்று. அதன் காலம் பின்வருமாறு ஐம் பாகுபடும்.

1. பழைய இலத்தீன் - கி.மு. 75-ற்குமுன்
2. இலக்கிய இலத்தீன் - கி.மு. 75-கி.பி. 175
3. பிந்திய இலத்தீன் - கி.பி. 175-600
4. இடைக்கால இலத்தீன் - கி.பி. 600-1500
5. இக்கால இலத்தீன் - கி.பி. 1500-லிருந்து

இலத்தீன முறையென்று மேற்குறித்தது இலத்தீனத்தின் மூலநிலையையே (Proto-Latin).

## கிரேக்கம்

கிரேக்க நாடு பல நகரநாடுகளாகத் தோன்றியதனால், கிரேக்க மொழி பல கிளைமொழிகளாகப் பிரிந்திருந்தது. அக்கிளை மொழிகள் அத்திக்கம், அயோனியம், ஈயோலியம், தோரியம், ஆர்க்கேடியம், சைப்பிரியம் என்பன. அவற்றுள், அத்திக்கமே சிறந்த இலக்கியச் செம்மொழி யாயிற்று. அதன் திரிபான காய்னீ (Koine) என்னும் பொதுமொழியே, அலெகசாந்தர் பேரரசிலும் பிசந்தியப் பேரரசிலும் ஆட்சிமொழியா யிருந்தது. பழங்கிரேக்கத்தின் மிகப் பிந்திய வளர்ச்சியே இக்காலக் கிரேக்கம்.

இத்தாலியிலிருந்த 'கிரையாய்' என்னும் ஒரு சிறு மக்கட் கூட்டத்தின் பெயரினின்று, கிரீக்கு (Greek) என்னும் பெயர் தோன்றியதாகச் சொல்லப்படுகின்றது. இத்தாலியும் கிரேக்க நாடும்

ஒன்றையொன்று அடுத்திருப்பதனாலும், கிரேக்கப் பேரரசையடுத்து உரோமப் பேரரசு தோன்றியமையாலும், பின்னதன் தொடர்ச்சியான பிசந்தியப் பேரரசின் காலத்தில் கிரேக்கர் தம்மை உரோமர் என்றும் தம் மொழியை உரோமேயம் (Romaic) என்றும் சொல்லிக் கொண்டமையாலும், இலத்தீனுக்கும் கிரேக்கத்திற்கும் பல சொற்கள் பொதுவாயிருப்பதனாலும், இருமொழியும் மிக நெருங்கியவை என்பது அறியப்படும். இலக்கிய வளர்ச்சியிலும், அரசியல் வளர்ச்சியிலும் கிரேக்கம் முந்தியதேனும், மொழிநிலையில் இலத்தீன் முற்பட்டதாகும்.

கெலத்தியம், செருமானியம் (தியூத்தானியம்), இத்தாலியம், எல்லெனியம் (கிரேக்கம்), பாலத்தோ-சிலாவியம், அல்பானியம், அர்மீனியம், ஈரானியம், இந்தியம் எனத் தொண் பெருங்கிளை களையும், வேறு சில சிறு கிளைகளையுங் கொண்டது ஆரியம் என்னும் மொழிக்குடும்பம். பெருங்கிளைகளுள் முதல் நான்கும் இறுதி யொன்றுமே, தமிழ்த் திரிபாராய்ச்சிக்குச் சிறந்தவை யாகும்.

ஆரியம் என்பது, இனவகையில் ஐரோப்பாவில் தோன்றிய தேனும், மொழிவகையில் இந்தியாவிலேயே தொடங்கிவிட்டது. அதன் தொடக்கநிலை வடுகு என்னும் தெலுங்கே. வடுகு என்பது வடகு என்பதன் திரிபாகும். வடகு வடமொழி. ஆகவே, தெலுங்கு பெயராலும் திரிபாலும் வடமொழி யென்னும் சமற்கிருதத்தை ஒருபுடை யொத்ததாம்.

## ஆரியத் தன்மை யடைந்த தெலுங்குத் திரிபுகள்

1. உரப்பொலி

   எ - டு: செய் - ceyi.

2. எடுப்பொலி

   எ - டு: குடி (வீடு, கோயில்)-gudi, சப்பு - ஜப்பு (b), தகை (தாகம்) - daga, புகா (சோறு) - buvva.

3. மெலிவலி யிணை வலிப்பு

   எ - டு: inga (இன்னும்), mancu (மூடுபனி), enta (எவ்வளவு), mantta (மண்ட்ட) - தீக்கொழுந்து, gumpu (கும்பு).

   தமிழில், ங்க (nga), ஞ்ச (ñja), ண்ட (ṇḍa), ந்த (nda), ம்ப (mba) என்ற மெலிவலி மெய்ம்மயக்கே இயலும்.

4. தன்மை முன்னிலைப் பெயர்களின் நகரமுதல் மகரமாதல்

   எ - டு: நாம் - மனமு, நீர் - மீரு.

5. வினாவடி ககரமாகத் திரிதற்கு வழிவகுத்தல்

   எ - டு: எவற்றினை - வேட்டினி, எவற்றின் - வேட்டி.

வகரம் ககரமாகத் திரிதல் இயல்பு.

எ - டு: ஆவா - ஆகா, சிவப்பு - சிகப்பு, துவர் - துகர்.

இம் முறையில், எவ் - வெ - கெ என்று திரிந்து, பிராகிருதம் என்னும் வடதிரவிடத்திலும் ஆரிய மொழிகளிலும் வினாவடி ககரமா யமையும்.

எ-டு: இந்தி - கோன் = யார், கஹான் = எங்கே.

இலத்தீன் - qui = எது, quot = எத்தனை.

சமற்கிருதம் - குத்ர = எங்கே, கிம் = என்ன.

## தன்மை யொருமைப் பெயர்

| | இந்தி | சமற்கிருதம் | இலத்தீன் | ஆங்கிலம் |
|---|---|---|---|---|
| முதல் வேற்றுமை | மைன் | அஹம் | (ego) எகொ | இக், ஐ |
| இரண்டாம் " | முஜே | மாம், மா | மே | மீ |
| மூன்றாம் " | முஜ்ஸே | மயா | - | - |
| நான்காம் " | முஜ்கோ | மஹ்யம், மே | மிஹி | - |
| ஐந்தாம் " | முஜ்ஸே | மத் | மே | - |
| ஆறாம் " | மேரா | மம | மெயீ | மை |
| ஏழாம் " | முஜ்மே | மயி | - | - |

சூரசேனிப் பிராகிருதத்தின் வழிவந்த இக்கால மொழி இந்தி. அதில் நான் என்பது மைன் என்றும், நாம் என்பது ஹம் என்றும் திரிந்துள்ளன. தன்மைப் பன்மைப்பெயர் சூரசேனியில் ஹாம் என்றிருந்திருத்தல் வேண்டும். அது பின்னர் வடமொழியில் அஹம் என்றும், இலத்தீனிலும் கிரேக்கத்திலும் (அக) - (எக) - எகொ - எகோ (Gk. ego) என்றும் திரிந்ததாகத் தெரிகின்றது.

மெய்ம்முதற் சொற்கள் முதற்குறைத் திரிபால் உயிர் முதலாவது இயல்பே. எ-டு: மேழகம் - ஏழகம்.

ஆகும் என்பதன் திரிபான ஆம் (yes) என்னும் தமிழ்ச்சொல், வடமொழியில் ஆம் என்றே திரியாதிருக்கவும், இந்தியில் ஹாம் என்று திரிந்துள்ளது. ஆதலால், நாம் - ஆம் - ஹாம் என்னும் திரிபு இயற்கைக்கு மாறான தன்று.

வடமொழியிலும் மேலையாரிய மொழிகளிலும், தன்மை யொருமைப் பெயர் அகர அல்லது எகர முதலாயிருப்பினும், அதன் ஏனை வேற்றுமைகளெல்லாம் மகர முதலாகவே யிருப்பதால், அதன் எழுவாய் வேற்றுமையும் முதற்கண் மகர முதலாகவே யிருந்திருத்தல் வேண்டுமென்பது துணியப்படும்.

வடஇந்தியாவில் முதற்கண் குடியேறியவர் தமிழர் வழியினரான திரவிடரே யாதலால், வடஇந்தியமொழி வடதிரவிடம் எனப்படும். வடுகிற் கடுத்த திரிமொழி வடதிரவிடமே.

வடதிரவிடருள் ஒருசாரார் வடமேற்காகச் சென்று ஐரோப் பாவின் வடமேலைப் பகுதியை (செருமானியக் காண்டிநேவியத்தை) அடைந்ததனால், அவ்விடத்துத் தோன்றிய தியூத்தானியம் (செருமானியம்), ஆரியக் கிளைகள் எல்லாவற்றுள்ளும் தமிழுக்கு மிக நெருக்கமாக வுள்ளது. அதன் தெற்கிலுள்ள இலத்தீனம் அதினுஞ் சற்றுத் திரிந்தும், தென்கிழக்கிலுள்ள கிரேக்கம் இலத்தீனினுஞ் சற்றுத் திரிந்தும், கிரேக்கத்திற்குக் கிழக்கில் நெடுந்தொலைவு வந்த கீழை யாரியம் இலத்தீன கிரேக்கத்தினும் மிகத் திரிந்தும் உள்ளமை தமிழாரி யத் திரிபு வளர்ச்சிப்பாதை வளைவைத் தெளிவாகக் காட்டும்.

## தியூத்தானியத்திற்கும் தமிழுக்கும் உள்ள நெருக்கம்

### (1) சொல்லொப்புமை

***கத்தொலிகள்:*** *கூ* - *கூவு*-coo, *கரை* - cry, crow,*ஊள் (வி.)* - howl, *ஊளை (பெ.)* - howl, *கனை* - neigh, *பிளிறு* - blare, *உரறு*- roar, *இமிர்* - hum, *கலி* - call.

***விளிகள்:*** *ஏ, ஏய்* - hey, *ஓ* - o, oh, *ஓய்* - hoy, *எல்ல* - *எல்லா* - hallo.

***குறிப்பொலிகள்:*** *ஆ (வருத்தம்)* - ah, *ஆகா (வியப்பு)* - aha, *ஏ (வினா)*-eh, *(உ)ம் (தயக்கம், வெறுப்பு)*-hum, *சீ-சே, சை*-shaw, pshaw.

***சுட்டுச்சொற்கள் :*** *ஆன் (அங்கு)* - yon, *ஆண்டு* - yond, *அதோள்*-thider, *இதோள்*-hider, *எதோள்*-whider, *இதா, இதோ*-lo.

***இளமைப்பெயர்கள்:*** *பையன்* - ME. boi, E. boy, *சிறுக்கன்-சிக்கன்*-OE. cicen , E. chicken, *குழந்தை*-OE. cild, E. child, *குட்டி*-kid, kiddy, *குரு-கரு*-LG. gor (child), *குருளை*-ME. gurle, E. girl, *சிட்டு*-chit.

***முறைப்பெயர்கள் :*** *அம்மை* - *அம்மா* - mamma, ma, *அப்பன்-அப்பா*-papa, pa, *தா (தந்தை)*-da, *தாதா-தாத்தா, தாதை*- daddy, dad, *மகன்*-Gael. magus(son), E. mac.

***அஃறிணை யுயிரிப் பெயர்கள்:*** *உதள் (ஆட்டுக்கடா)*-OHG. widar, E. wether, *புல்லம்*-bull, *பூசை*-pussy, *கொத்தி*-cat, *ஏழகம்*-elke, elk, *மறி*-mare, *குருகு*-crane, *நாகம்*-OE. snaca, E. snake, *களவன் (நண்டு)-கடப்பான்* OE. crabba, E. crab, *சுறவு*-shark.

**முதன்மை வினைகள்:** *ஈன்*-ean, yean, *உருள்*-whirl, *ஒழுகு*-walk, *கரை* - cry, *காண் (அறி)* - kon, ken, con, *குந்து*- squat, *கொல்*-ME. culle, kille, E. kill, OE. cuell, E.quell, *சப்பு*- sup, sip, *தின்*-dine, *துப்பு*-spit, *துருத்து*-thrust, *தொள்*-till, *நாடு*-OE. neod, E. need, *பொள்-பொளி*-bore, *பொறு*-OE., OS., OHG., ber, E. bear, *முன்(னு)* - mun (to think), *விக்கு - விக்கல்*-hiccup.

**துணைவினைகள்:** இரு- are *(வடசெருமானியம்).* arem - am *(இருக்கிறேன்)* . art = இருத்தி *(இருக்கின்றாய்).*

இரு-is *(தென்செருமானியம்).*

பூ- be *பூத்தல் = தோன்றுதல், உண்டாதல், இருத்தல்.*

**" பூத்தலிற் பூவாமை நன்று"** **(நீதிநெறி. 6)**

*புகு - பொகு - பொகில் = அரும்பு. பொகில் - போகில் = அரும்பு. பொகு - போ - போத்து = புதிதாகத் தோன்றுங் கிளை. போத்து வெடித்தல் என்பது மரபு. மலரைக் குறிக்கும் பூ என்னும் சொல் வேறு. அது பொல் என்னும் வேரினின்று திரிந்தது; பொலிதற் பொருளது. பொலிதல் விளங்குதல். பூ- வ.* bhu.

*பதி-வதி-வசி-***வ**. *வஸ்*-E. was.

*இரிச்சார்டு மாரிசு* (Richard Morris) *தம்* `Historical Outlines of English Accidence' *என்னும் ஆங்கில இலக்கண வாராய்ச்சி நூலில்,* was *என்னும் ஆங்கிலத் துணை வினைச்சொல்லை வஸ்* (to dwell) *என்னும் வடசொல்லினின்றே திரிப்பர் (ப.266).*

*பிள்-பெள். பெட்டல் = விரும்புதல். பிள்-விள்-விரு-விரும்-விரும்பு. விள்-வெள்-வெண்டு. வெண்டுதல் = விரும்புதல். வெள்-வேள்-வேண்டு. வேள்-வேண் = விருப்பம். வேட்டல் = விரும்புதல்.*

*விள்* - will *(விருப்பத் தீர்மானத்தைக் குறிக்கும் ஆங்கில எதிர்காலத் துணை வினைச்சொல்).*

*மைந்து (வலிமை)*-might. *இயல்வைக் குறிக்கும்* may *என்னும் ஆங்கிலத் துணை வினைச்சொல்லை* might *என்பதனின்றே திரிப்பர். இயல்வு*-possibility.

can *என்னும் ஆங்கிலத் துணை வினைச்சொல்லை, அறிதற் பொருள் கொண்ட*con *என்னும் வினைச்சொல்லினின்று திரிப்பர் இரிச்சார்டு மாரிசு* (H.O.E.A., *பக்.268). காணுதல் = அறிதல். காட்சி = அறிவு. காண்* - con-can.

*பொதுச்சொற்கள்: எ-டு:* இல்-inn, எல்லாம்-OE. eal, all, ஏர்-AS. ear (to plough), *குரல் (தொண்டை)*- ME. crawe, E. craw, *தாங்கல்(குளம்)*- tank, *துளை(வாயில்)*-door, *பக்கு(பை)*-bag, *படி(உடம்பு)*-body, *பார்(கம்பி)*-bar, *பிறந்தை*-birth, *புதல் (அரும்பு)*-ME. boddle, budde, E. bud, *புருவம்*-brow, *புழுதி*-mould, *மூளை*-marrow, *மெது*- OE. smoth, E smooth, *விசுக்கு (விரைவுக் குறிப்பு)* -whisk.

*முன்னொட்டுகள்* (Prefixes)*: அல்-அன்*-un, *இல்(7ஆம் வேற்றுமையுருபு)*-in, *அண் (மேல்)* - on, *உம்பர்*-up, over.

*பின்னொட்டுகள்: அஃகுதல் = சுருங்குதல், சிறுத்தல், நுணுகுதல். அஃகு* - ock (dim.suf.)

*இட்டிது = சிறியது. இட்டு* - et, ete, ette (dim. suf.).

*குன்னுதல் = குறுகுதல், சிறுத்தல், குன்-குன்னி (சிறுத்தது)*-kin (dim. suf.)

*ஏர்தல் = எழுதல். ஏர்*-er (comp.adj.suf.).

*எட்டுதல் = உயர்தல். எட்டு*-est (sup. adj. suf.).

*வினையீறுகள்: வான் - ஆன் - அன்* - an (inf. suf.).

*கொண்டு - கிண்டு (கொச்சை) - இரண்டு (கொச்சை)* - inde (pres. part. suf.).

## (2) இலக்கண வொப்புமை

**புணர்ச்சி :**

"*தனிக்குறில் முன்னொற் றுயிர்வரின் இரட்டும்*" ***(நன். 205)***

*எ-டு: கண் + அழகன் = கண்ணழகன்,*

*சொல் + இனிமை = சொல்லினிமை.*

*இந் நெறியீடு ஆங்கிலத்திற்கும் ஏற்கும்.*

*எ-டு:* thin+er = thinner, sit+ing = sitting.

*இருமொழியிலும் ஒருமை பன்மையென்னும் ஈரெண்களே யுண்டு.*

*தனிநிலையமைப்பு* (Absolute Construction)

*எ-டு: தமிழ் - கூட்டம் முடிந்து, எல்லாரும் போய்விட்டனர்.*

*ஆங்கிலம்* - The meeting having ended, all went away.

## (3) ஆங்கிலத்திற் சொன்மூல மின்மை

Bag, broad, kill, spread *முதலிய பல சொற்கு மூலந் தெரிய வில்லையென்று, எருதந்துறை அகரமுதலியிற் குறிக்கப்பட்டுள்ளது. அவற்றிற்கெல்லாம் மூலம் தமிழிலேயே உள்ளது.*

*பக்கு(பை)* - bag, *பரந்த* - broad, *கொல்* - kill, *பரத்து* - spread.

*அவ் வகரமுதலியில், சில ஆங்கிலச் சொற்கட்கு மூலந் தவறாகக் குறிக்கப்பட்டுள்ளது.*

*எ-டு:* "bury ....... burg-st. of Gmc bergan shelter, protect." *இது பொருந்தப் புகலல் என்னும் உத்திபற்றியது. புதை*-bury, *புதையல்*-burial. *ஒ.நோ: விதை-விரை.*

"lo, int ....... combining OE. la int. ME. lo = loke, Look." *இதுவும் பொருந்தப் புகலலே.*

*இதா*-la, *இதோ*-lo. *ஒ.நோ: மது*-L. mel.

*ஆரிய மொழிகள் ஐரோப்பாவின் மேற்கினின்று கிழக்காகத் திரிந்த படிமுறைத் திரிபைக் காட்டும்.*

# சொற்பட்டி

| **தமிழ்** | **தியூத்தானியம்** | **இலத்தீன்** | **கிரேக்கம்** | **கீழையாரியம்** |
|---|---|---|---|---|
| அல் (எதிர்மறை முன்னொட்டு) | அன் | – | அன் | ந(ந்+அ) |
| இதோள் (இங்கு) | ஹிதர் | கித்ர | – | அத்ர |
| இரு | இஸ் | எஸ் | எஸ் | அஸ் |
| இரும்பு | ஐரன் அயெண் | ஈரிஸ் | – | அயஸ் |
| இலக்கம் (வெளிச்சம்) | லைற்(று) | லுக்ஸ் | லியூக்கோஸ் | ருச் |
| உகை–அகை (செலுத்து) | அக | அகோ(g) | அகோ(g) | அஜ் |
| கணு (முட்டு) | க்னீ | கெனு(g) | கொனு(g) | ஜானு |
| கத்து (வெட்டு) | கட் | – | – | க்ருத் |
| காண் (அறி) | கான்– க்னா–க்னோ– னோ | க்னோ(g) –னோ | க்னோ(g) | ஜ்ஞா |
| கிழம் | –(கம்) | – | கெரொன்(g) | ஜரா |
| குந்து | ஸ்குவாத் | ஸெத்(d) | – | ஸத்(d) |
| கும்(கூடு) | – | கும் | ஸிம் | ஸம் |
| துளை (வாயில்) | தோர் | – | துர | த்வார்(d) |
| துருத்து | த்ரஸ்ற்(று) | த்ருடொ | – | தூத்(d) |
| நாவி, நாவிஸ் | | நௌஸ் நௌ | | நாவாய் |

| | | | | |
|---|---|---|---|---|
| பார் | – | பரெ | – | பஸ் |
| பிறங்கு | பிரைற்(று) | – | – | ப்ரஜ்(bh) |
| பொறு | பெர்(b) | பெர்(fer) பொர்த் | பெர்(ph) | பர்(bh) |
| மன் | மெஅன் | – | – | மநு |
| முழுகு | – | மெர்கொ(g) | – | மஜ்ஜ் |
| முன்(னு) (கருது) | முன் | – | – | மன் |
| மூளை | மேரோ | – | – | மஜ்ஜா |
| மெது | ஸ்மூத் | – | – | ம்ருது |
| வலி,வலம் | – | வலி,வலர் | – | பல(b) |
| விடலை (மாட்டுக் கன்று) | வெலெ | விதுல | இதலொஸ் | வத்ஸ |
| க.பேக்கு(b) பக் | (beg) | – | – | பிக்ஷ்(bh) |

*கிரேக்கநாட்டொடு தொடர்பு கொண்டிருந்த கீழையாரியர், சின்ன ஆசியாப் பக்கத்தினின்று பாரசீகம் வழியாக வந்து, ஆகசுசு (Oxus) ஆற்றுப் பள்ளத்தாக்கில் தங்கினர். அங்குக் கொள்கையும் எதிர்காலத் திட்டமும்பற்றி அவர்கட்குள் கருத்து வேறுபாடு உண் டானதனால், இருகட்சிப்பட்டு ஒருசாரார் மேற்கிற் பாரசீகத்திற்குப் பிரிந்து போயினர். இன்னொரு சாரார் இந்துக்குசு மலைத்தொடர்க் கணவாய்களைக் கடந்து, ஆபுக்கானித்தானம் என்னும் காந்தார நாட்டு வழியாகச் சிந்துவெளிக்குட் புகுந்தனர்.*

*பொதுவாக, மேற்கே சென்றவர் உண்மையும் நேர்மையும் உள்ளவ ரென்பது, பிற்கால வரலாற்றால் தெரிய வருகின்றது.*

*ஆரியர் ஒரே யினத்தா ராயினும், இசரவேலரைப்போல் முன் னோர் பெயரால் ஏற்பட்ட பல்வேறு குடிவகுப்புகளா யிருந்திருக் கின்றனர். ஒவ்வொரு குடிவகுப்பிற்கும் ஒரு தலைவனும் ஒரு பூசாரியும் இருந்தனர்.*

*ஆரியர் இந்தியாவிற்கு வந்தபோது ஆடுமாடு மேய்ப்பதன்றி வேறொன்றும் அறிந்தவரல்லர். அவர்கட்குக் கல்வியுமில்லை, கலையு மில்லை, எழுத்துமில்லை, இலக்கியமுமில்லை. பூசாரிகள் இயற்கைத் தெய்வங்களை, சிறப்பாக நெருப்புத் தெய்வத்தை வழிபட்டுத் தங்கள் குடிவகுப்பாரின் சடங்குகளை நடத்திப் பல்வகை வேள்விகளை வளர்த்து வந்தனர். குடிவகுப்புத் தலைவர் தமிழ்நாட்டு ஊர்க் கவுண்டர் அல்லது நாட்டாண்மைக்காரர் போன்றே தத்தம் தொழிலைச் செய்து, அவ்வப்போது ஏற்படும் சண்டைசச் சரவுகளையும் வழக்குகளையுந் தீர்த்து வந்தனர்.*

*ஆரியர் பழங்குடி மக்களை நோக்க, மிகமிகச் சிறுபான்மையரா யிருந்ததனால், தம் முன்னோர் மொழியைப் பேச வாய்ப்பின்றி*

விரைந்து மறந்துவிட்டனர். வடநாட்டிலிருந்த தமிழரொடும் திரவிடரொடும் போட்டியிட்டுப் பழந்தமிழ் மந்திரங்கள்போல் பாடத் தொடங்கிய, ஆரியப் பூசாரிகளின் வான்கோழியாட்டுப் போன்ற பாட்டுகளும், தென்றமிழ்ச்சொல்லும் வட திரவிடச்சொல்லும் மிக்கு எகர ஒகரமின்றி, பிராருகிதம் என்னும் முன் வடமொழியிலேயே உள்ளன.

மந்திரம் என்னும் சொல்லும், வேதப் பிரிவின் பெயரான மண்டலம் என்னும் சொல்லும், தூய தென்சொற்களே. வேதம் என்னும் சொல்லும், வேதத்தின் மறுபெயரான சுருதி யென்னும் சொல்லும், தென் சொற்களின் திரிபுகளே. மண்டலம் என்னும் சொல்வரலாறு முன்னரே கூறப்பட்டது.

முன்னுதல் = கருதுதல். முன் - மன். மன்னுதல் = கருதுதல். திரம்(திறம்) என்பது ஓர் ஈறு. உள்ளத்தின் தூய்மையும் வலிமையும் உள்ளவர், தாம் கருதியது தப்பாது நிறைவேறுமென்று எண்ணி, வாய்விட்டோ வாய்க்குள்ளோ சொல்வதே மந்திரமாம். மன்னும் திறம் அல்லது எண்ணும் வலிமை மந்திரம் (மன் + திரம்).

> ***“எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்***
> ***திண்ணிய ராகப் பெறின்.”*** **(குறள்.666)**

கீளுடை (லங்கோடு) அல்லது நீர்ச்சீலை(கோவணம்) போலும் எளிய வுடையன்றி வேறு புறக்கோலம் கொள்ளாது, உள்ளத்துறவு பூண்டு இருவகைப் பற்றையும் அறவே யறுத்து, இறைவனொடு இரண்டறக் கலந்தாற்போல் அவனைப்பற்றிய ஊழ்கத்தில் (தியானத்தில்) ஆழ்ந்து ஈடுபட்ட பேரறிஞர், தாம் உண்மையென்று உணர்ந்தவற்றை வெளியிடுஞ் செய்யுள்களும் மந்திரம் அல்லது வாய்மொழி யெனப்படும்.

> ***“நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த***
> ***மறைமொழி தானே மந்திரம் என்ப.”*** **(தொல்.1434)**

> ***“பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே”*** **(தொல். 1336)**

திருமூலர் திருமந்திரமும் நம்மாழ்வார் திருவாய்மொழியும் இத்தகையன. தப்பாது நிறைவேறும் மெய்ம்மொழி யென்னுங் கருத்தில், மந்திரம் வாய்மொழி யெனப்பட்டது.

விழித்தல் = கண்திறத்தல், காணுதல், அறிதல். விழி = அறிவு. “தேறார் விழியிலா மாந்தர்” (திருமந்.177. ). விழி-L vide-Skt. வித்- வேத = அறிவு, மறை.

செவியுறு-**வ**.ச்ரு-ச்ருதி=கேள்வி, (எழுத்தின்மையாற் பார்க்கப்படாது) கேட்கப்படும் ஆரிய மறை.

மேலையாரிய மொழிகள் எல்லாவற்றிலும் எகர ஒகரக் குறில்கள் உள்ளன. வேதமொழியில் மட்டும் அவை யின்மையால், இந்திய ஆரியர், கடலிற் காயம் உரசினதுபோல், வடஇந்தியப் பழங்குடி மக்களொடு இரண்டறக் கலந்துபோய் அவர் மொழியையே மேற்கொண்டமை அறியப்படும். ஆயின், ஆரியப் பூசாரிகள் மட்டும் தங்கள் உயர்வைக் காத்தற்குத் தனியினமாகவே வாழ்ந்து, மதவியல்பற்றிய தம் முன்னோர் மொழிச் சொற்களை, தம் மந்திரங்கள் என்னும் பாடல்களிலும் இருவகைச் சடங்குகளிலும் பல்வகை வேள்விகளிலும் போற்றி வந்திருக்கின்றனர். இது, அராபியரும் துருக்கியரும் பாரசீகருமான முகமதியர், இந்தியாவிற்கு வந்தபின் தம் முன்னோர் மொழிகளை மறந்து வடநாட்டுப் பழங்குடி மக்களின் தாய்மொழியாகிய இந்தியையே மேற்கொண்டு, மதத்துறையில் மட்டும் அரபிச் சொற்களையும் பாரசீகச் சொற் களையும் போற்றிவருவது போலாம்.

ஆரியர் பெருங்கூட்டத்தாராக வந்து இந்தியாவிற்குட் புகுந்தன ரென்றும், பிராமணர் சத்திரியர் வைசியர் சூத்திரர் என்னும் நால்வகைக் குலவொழுங்கு கொண்டிருந்தனரென்றும், தம் போர் வலிமையாலேயே வடநாட்டைக் கைப்பற்றினரென்றும், தவறான கருத்துகள் இன்றும் இருந்துவருகின்றன.

வடஇந்தியாவில் ஆரியப் பூசாரிகள் தவிர மற்றெல்லாரும் பழங்குடி மக்களொடு கலந்து போனமையால், இன்று வடநாட்டு மக்களை ஆரியரென்றும் திரவிடரென்றும் பிரித்தறிய முடியாது. தென்னாட்டிற்கு வந்த ஆரிய வகுப்பார் பூசாரியரே. ஆதலால், தமிழரும் திரவிடருமான தென்னாட்டு அல்லது தென்னிந்திய மக்க ளெல்லாம் ஆரியக் கலப்பற்ற தூய பழங்குடியினத்தாரே. இந்தியா வெங்கும், தனிப்பட்ட முறையில் ஆடவரும் பெண்டிரும் பழங்குடி மக்களொடு தொன்றுதொட்டுத் தொடுப்பும் மணவுறவும் கொண்டு வந்திருப்பினும், குலவளவில் ஓரளவு தூய்மையைப் போற்றி வந்திருக்கும் ஆரிய வகுப்பார் பிராமண ரென்னும் பூசாரியரே.

ஆரியப் பூசாரிகள், அகக்கரண வளர்ச்சியின்றிச் சிறுபிள்ளை கள் போல், இயற்கையுஞ் செயற்கையுமான பல்வேறு சிறுதெய்வங் களைப் பற்றி முன்னிலைப் பரவலாகவும் படர்க்கைப் பரவலாகவும் பாடிய பாடற்றிரட்டே, ஆரிய வேதத் தொகுப்பாம். முதன்முதலாகத் தோன்றிய தொகுப்பு (ஸம்ஹிதை) இருக்கு (ருக்) வேதம். அதில் கங்கை வெளியும் பிரமபுத்திர வெளியுமாகிய கீழ் வடவிந்தியாவிற் குரிய அரிசி, ஆலமரம், வேங்கை முதலியன சொல்லப்படாமையால், அத் தொகுப்பு முழுதும் பஞ்சாபு என்னும் ஐயாற்று வெளியில் ஆரியர் தங்கியிருந்த போதே பாடப்பட்டதாக அறிஞர் கருது கின்றனர். இனி, அவ் வேதப் பிரிவுகளான பத்து மண்டலங்களுள்,

முதல் தொண்டுள் ளும் (ஒன்ப துள் ளும்) நாற்குலப் பகுப்பைப்பற்றிய குறிப்பேயில்லை யென்று சொல்லப்படுகின்றது. பத்தாம் மண்டலத் திலுள்ள புருட சூத்தம் (புருஷ ஸூக்த) என்னும் குழறுபடை மந்திரப் போலியும், பிற்காலத்துச் சேர்க்கப்பட்ட இடைச்செருகலே. இது 'தமிழர் மதம்' என்னும் நூலில் விளக்கப்படும்.

பூசாரிகளல்லாத ஆரிய வந்தேறிகள் பழங்குடி மக்களொடு கலந்து போனதனால், அவர்களொடு கலவாத ஆரியப் பூசாரிகள் நாட்டுமக்களை யடுத்தே பிழைக்க வேண்டி யிருந்தது. சிவநெறி யாரும் நாகரிக மக்களும் பொதுமக்களிடை யிருந்ததனால், அவர் களாற் புறக்கணிக்கப்பட்ட ஆரியப் பூசாரிகள், அரசரை வயப் படுத்தச் சூழ்ச்சி செய்து சில வழிகளை வகுத்தனர். அவற்றுள் ஒன்று வேள்வி வளர்த்தல்.

தெய்வத்தின் பெயரால் என்ன சொன்னாலும் நம்புவதும் எதைக் கேட்டாலும் கொடுப்பதும் ஆகிய மதப்பித்தம், பழங்குடி மக்களின் சிறப்பியல் பென்பது கண்டு, அரசரிடம் சென்று,தாங்கள் தேவர் வழிவந்த நிலத்தேவர் (பூசுரர்) என்றும், தங்கள் மொழி தேவமொழி யென்றும் தாங்கள் வகுத்த வேள்விகளைச் செய்தால் அரசர்க்கு வெற்றியும் குடிகட்கு நன்மையும் நாட்டிற்குச் செழிப்பும் உண்டாகு மென்றும், சொல்லி ஏமாற்றினர். இவ் வேமாற்றிற்கு, அவர்களின் வெண்ணிறமும், உரப்பியும் எடுத்தும் கனைத்தும் ஒலிக்கும் ஒலிகள் மிக்க அவர்களின் மந்திரமொழியும் பெரிதும் துணை செய்தன. அடியைச் சாய்த்தால் மரஞ்சாய்வதுபோல் அரசனை வயப் படுத்தி னால் குடிகள் தாமாக வயப்படுவர் என்று அவர்கள் கருதியது நிறைவேறிற்று. விசுவாமித்திரர் போன்ற அரசர் சிலர் வயப்பட்டனர்.

வேள்வி செய்யவேண்டிய முறையைப்பற்றிப் பெரும்பாலும் உரைநடையில் இருக்கு மந்திரங்களை எடுத்துக் கூறி, அவற்றிற்கு எசுர்(யஜுர்) வேதத் தொகுப்பென்றும்; வேள்வியிற் பாடற் கேற்றவாறு பல இருக்கு மந்திரங்கட்கு இசையமைத்து, அவற்றின் திரட்டிற்குச் சாமவேதத் தொகுப்பென்றும் பெயரிட்டனர். இதனால், முன்னர் ஒரே வேதமாயிருந்தது மூவேதம் (த்ரயீ) ஆயிற்று.

வேள்வியில் மந்திரம் கூறித் தெய்வங்களை அழைப்பவன் 'ஹோதா' என்றும், தீ வளர்ப்பவன் 'அத்வர்யு' என்றும், இசைவகுத்த மந்திரங்களைப் பாடுபவன் 'உத்காதா' என்றும் பெயர் பெற்றனர். வேள்வியின் பெருமைக்குத் தக்கவாறு, இம் முப்பணியர் தொகையும் மிகும்.

வேளிரும் மன்னரும் வேந்தரும் போன்று மூவகை யரசர் செல்வநிலைக்கும் ஏற்றவாறு, சிலபல நாள்களில் முடிவனவும் சிலபல மாதங்களில் முடிவனவும் சிலபல ஆண்டுகளில் முடிவனவுமான

பற்பல வேள்விகள் வகுக்கப்பட்டன. நூற்றுக்கணக்கிலும் ஆயிரக் கணக்கிலும் இலக்கக்கணக்கிலும், பொதுமக்கள் பணம் அரசர் வாயிலாகச் செலவிடப்பட்டது. வேள்விப் பணியாளர் (ருத்விக்குகள்) பொன்னும் மணியும் ஏராளமாகப் பரிசுபெற்றதுடன், ஆயிரக்கணக் கான ஆரியப் பூசாரியர் கொழுக்க விருந்துண்டனர். இங்ஙனம், அவர்கள் வாழ்க்கை எளியமுறையில் இனிது நடைபெற வழி வகுக்கப் பட்டுவிட்டது. அரசர், வேள்வி வளர்ப்பே கால மழைக்குக் கரணியம் என்று நம்பியதால், எத்துணைப் பொருட்செலவு நேரினும் பொருட் படுத்தாது, இக்காலத்துப் பொருளியல் வளர்ச்சித் திட்டங்கள் (Economic Projects) போன்றே கருதி, இயன்ற போதெல்லாம் சிறு வேள்விகளையும் பெரு வேள்விகளையும் இயற்றுவித்து வந்தனர்.

ஆரியப் பூசாரிகள் வடநாட்டரசரை வயப்படுத்த இன்னொரு வலக்காரத்தையும் கையாண்டனர். அது தமிழர் மருதநிலத்து வேந்தன் வணக்கமான இந்திர வணக்கத்தைத் தாமுந் தழுவியமை. அரசன் என்று பொருள்படும் இந்திரன் என்னும் பெயர், வேந்தனுக்கு வழங்கிய வடநாட்டுச் சொல்லாகும். இந்திர வணக்கமோ அதையொத்ததோ மேலையாரியருக்கில்லை யென்று, **மாகசு முல்லர்** கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. ஆரியர் தென்னாடு வந்தபின், இந்திரன் என்னும் சொல் தமிழகத்திலும் வழக்கூன்றியது. "இந்திரனே சாலுங் கரி" என்று திருக்குறளிலும் (25), இந்திரவிழவூ ரெடுத்த காதை யென்று சிலப்பதிகாரத்திலும் ஆளப்பட்டிருத்தல் காண்க. இந்திரவிழா பண்டைத் தமிழர் விழாவா யிருந்ததனாலேயே, காவிரிப் பூம்பட்டினத்தார் அந் நகர் மூழ்கும்வரை அதைக் கொண்டாடி வந்தனர்.

> **" தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்**
> **விண்ணவர் தலைவனை வணங்கிமுன் நின்று**
> **மண்ணகத் தென்றன் வான்பதி தன்னுள்**
> **மேலோர் விழைய விழாக்கோ ளெடுத்த**
> **நாலேழ் நாளினும் நன்கினி துறைகென "** (மணிமே. 1:4–8)

வடநாட்டரசர் தமிழர் போன்றே இந்திரனைக் குலதெய்வமாகக் கொண்டிருந்ததனால், ஆரியப் பூசாரியர் இந்திரனை மன்றாடிப் பாடிய மந்திரங்கள் அவர் உள்ளத்தை இறுகப் பிணித்துவிட்டன.

ஆயினும், ஆரியக் கொலை வேள்வியையும் சிறுதெய்வ வணக் கத்தையும் அயன்மொழி மந்திரங்களையும் ஏற்காத சிவ நெறியாரான மன்னர், ஆரியப் பூசாரியரைப் போற்றவில்லை. அதனால், அப் பூசாரியர் தமக்கு வயப்பட்டவரைக் கொண்டே வயப்படாதவரொடு போரிட்டு வென்றனர். இத்தகைய வெற்றிகளே இருக்கு வேதத்திற் சொல்லப்பட்டுள்ளன. இவ் விருபதாம் நூற்றாண்டிலும், ஆங்கில

ராட்சியும் ஆங்கிலக் கல்வியும் ஏற்பட்ட பின்பும், பேராயக் கட்சித் (Congress) தலைவரான பிராமணர் அறியாமையும் தன்னலமுங் கொண்ட தமிழரைக்கொண்டே, தமிழரையும் திரவிடரையும் முன்னேற்றிய நயன்மைக் கட்சித் (Justice Party) தலைவரைத் தோற்கடித்திருப்பதையும், திருக்கோவில் தமிழ் வழிபாட்டைத் தடுப்பதையும் நோக்குக.

வடநாட்டுப் பழங்குடி மக்களுள் சிவநெறியாரு மிருந்தமை, அவர் வழிபட்டுவந்த திருக்குறிப் படிமையை, ஆண்குறித் தெய்வம் (சிச்ன தேவ) என்று ஆரியப் பூசாரியர் பழித்ததனால் அறியப்படும்.

இந்திரன் சம்பரனின்100 கோட்டைகளை அழித்தான் என்று இருக்கு வேதத்திற் சொல்லப்பட்டிருப்பது,(2:14:6) இந்திர வணக்கங் கொண்ட ஓர் அரசனின் வெற்றி இந்திரன்மேல் ஏற்றிக் கூறப்பட் டிருப்பதே.

## இராமாயணக் காலம்
### (தோரா கி.மு. 1300-1200)

சோழன் வேந்தனானபின் வடநாட்டில் தன் படிநிகராளியாக அமர்த்திய சோழக்குடியினன் வழிமரபே, சமற்கிருத இலக்கியத்திற் 'சூரிய வமிசம்' என்று சொல்லப்படுவது. அவ் வழியில் வந்தவனே இராமன்.

கம்பராமாயணம், பாலகாண்டம், குலமுறை கிளத்து படலத்தில், இராமனின் முன்னோராகச் சொல்லப்பட்டவர் பதினால்வர். அவர் பெயர்கள்: மனு, பிருது (வேனன் மகன்), இட்சுவாகு, ககுத்தன் (ககுத்ஸன்), பாற்கடல் கடைந்து அமுதளித்தவன் (நிமி?), மாந்தாதா, முசுகுந்தன், சிபி, சாகரர், பகீரதன், நூறு குதிரைவேள்வி (அசுவமேதம்) செய்தவன், இரகு, அசன், தசரதன் என்பன.

ஒருகாலத்தில் கலுழன் விண்ணுலகை யடைந்து, அங்கிருந்த அமிழ்தத்தைக் கவர்ந்து சென்றான். இந்திரன் தான் திரும்பி வருமளவும் விண்ணகரைக் காக்க முசுகுந்தச் சோழனை அமர்த்தி, அவனுக்குத் துணையாக ஒரு பூதத்தையும் நிறுத்திவிட்டு, அமிழ் தத்தை மீட்கச் சென்றுவிட்டான். அக்காலை அவுணர் திரண்டு வந்து முசுகுந்தனொடு பொருது தோற்றோடினர். பின்னர் ஒரு வஞ்சனை யால் அவனை வெல்லக் கருதி, அவர் மீண்டும் வந்து, அவன் அகக் கண்ணும் காரிருளில் மூழ்குமாறு ஒரு பேரிருள் அம்பை விடுத்தனர். அவன் செய்வதறியாது மயங்கி நிற்கும்போது, அவன் துணைப்பூதம் ஒரு மந்திரத்தை உதவ அதனால் தெளிந்து, அவுணரைக் கொன்று குவித்தான். மீண்டுவந்த இந்திரன் செய்தி யறிந்து, முசுகுந்தனுக்கு நிலையாக வுதவுமாறு அப் பூதத்தையும் அவனுடன் அனுப்பினான்.

*அது புகாரில் நாளங்காடியில் நின்று நாள்தொறும் படையலுண்டு வந்தது.*

*இக் கதையே சிலப்பதிகாரத்தில்,*

***“ கடுவிசை யவுணர் கணங்கொண் டீண்டிக்***
***கொடுவரி யூக்கத்துக் கோநகர் காத்த***
***தொடுகழல் மன்னற்குத் தொலைந்தன ராகி***
***நெஞ்சிருள் கூர நிகர்த்துமேல் விட்ட***
***வஞ்சம் பெயர்த்த மாபெரும் பூதம்***
***திருந்துவேல் அண்ணற்குத் தேவன் ஏவ***
***இருந்துபலி யுண்ணும் இடனும்”*** (சிலப்.6:7–13)

*என்று கூறப்பட்டுள்ளது.*

*சீன நாட்டிற்கு வானவர் நாடு என்றொரு பெயருண்டு. அந் நாடு பூதக் கதைகட்குப் பெயர் போன தென்பது அலாடின் கதையால் அறியப்படும்.*

*முசுகுந்தன் சீனநாட்டரசன் ஒருவனொடு நட்புக் கொண் டிருந்து, அவன் நகருக்குச் சென்றிருக்கலாம். அன்று கலுழவேகன் என்பானொருவன் அமிர்தபதி என்பா ளொருத்தியைக் கவர்ந்து சென்றிருக்கலாம். சீனவரசன் முசுகுந்தனைத் தன் நகரைக் காக்குமாறு இருத்திவிட்டு அமிர்தபதியை மீட்கச் சென்றபின், ஊணர்* (Huns - *ஹூணர்) என்னும் நடு ஆசியவாணர் சீனத் தலைநகரைத் தாக்கி முசு குந்தனால் முறிடிக்கப்பட்டிருக்கலாம். சீன அரசன் தனக்குத் துணை யென்று கொண்டிருந்த பூதப்படிமையைப் புகாருக்கு அனுப்பி யிருக்கலாம்.*

*புலவர் குழந்தையார் முசுகுந்தனை முதுகாந்தன் என்பர்.*

*முசுப்போற் குந்தியிருப்பவன் என்னும் பொருள் கொண்ட தாயின், முசுகுந்தன் என்பது தூய தென்சொல்லே. முற்பிறப்பில் முசுக் கலையா யிருந்தான் என்னுங் கதை இக்காலத்திற் கொள்ளத்தக்க தன்று.*

*சிபி என்பவன், புறாவைத் துரத்திய பருந்திற்குத் தன் தசையை அறுத்துக் கொடுத்த செம்பி அல்லது செம்பியன் என்னும் சோழனே. அவன் பெயர் வடமொழியிற் சிபி எனத் திரிந்துள்ளது. இதையறியாத (அல்லது அறிந்தே ஏமாற்றுகின்ற) வடமொழிப் புலவர், சோழர் சிபி என்னும் வடநாட்டு ஆரிய வரசனின் வழியினராகக் கூறி மகிழ்வர்.*

*இராமன் காலத்தவனான பரசுராமன், கார்த்தவீரியார்ச்சுனன் மக்கள் எய்த இருபத்தோரம்பு பட்டு இருபத்தொரு முறை தன் மார்பில் அடித்துக்கொண்டிறந்த, தன் தாயைக் கொன்றதற்குப்*

பழிவாங்குமாறு, இருபத்தொரு தலைமுறை அரசரைக் கருவறுக்க வஞ்சினங் கூறினானென்றும், அதன் தொடர்பாகக் காந்தன் என்னும் சோழனைக் கொல்லப் புகார் வரும்போது, அச் சோழன் தன் அரசப் பொறையைத் தன் காதற் கணிகை மகனாகிய ககந்தனிடம் ஒப்புவித்து, "நான் அகத்திய முனிவர் கட்டளைப்படி திரும்புமளவும் நீ இதை ஏற்றுத் தாங்கு" என்று சொல்லி நாட்டைவிட்டுப் போனதாகவும் ஒரு கதை, மணிமேகலையிற் கூறப்பட்டுள்ளது.

***" மன்மருங் கறுத்த மழுவாள் நெடியோன்***
***தன்முன் தோன்றல் தகாதொளி நீயெனக்***
***கன்னி யேவலிற் காந்த மன்னவன்***
***இந்நகர் காப்போர் யாரென நினைஇ***
***நாவலந் தண்பொழில் நண்ணார் நடுக்குறக்***
***காவற் கணிகை தனக்காங் காதலன்***
***இகழ்ந்தோர் காயினும் எஞ்சுத லில்லோன்***
***ககந்த னாமெனக் காதலிற் கூஉய்***
***அரசா ளுரிமை நின்பா லின்மையின்***
***பரசு ராமன்நின் பால்வந் தணுகான்***
***அமர முனிவன் அகத்தியன் தனாது***
***துயர்நீங்கு கிளவியின் யான்தோன் றளவும்***
***ககந்தன் காத்தல் காகந்தி யென்றே***
***யியைந்த நாமம் இப்பதிக் கிட்டீங்***
***குள்வரிக் கொண்டவ் வுரவோன் பெயர்நாள் "*** (மணிமே. 22:25–39)

இதனால், இராமன் காலமும் அகத்தியன் காலமும் காந்தன் காலமும் ஒன்றென்பதும், புகாரின் பழமையும், மூவேந்தர் குடிகளின் தொன்மையும் அறியப்படும்.

## அகத்தியர்

வேதக் காலத்தில் வடஇந்தியாவில் நிகழ்ந்த இனப்போர்களெல்லாம், ஆரியச் சூழ்ச்சியால் பழங்குடிமக்களும் வடதிரவிடருமான ஒரே இனத்திற்குள் நிகழ்ந்தவையே. உலகமுதல் உயர்தனிச் செம்மொழி பேசியவரும், ஒப்புயர்வற்ற இலக்கிய விலக்கணமுடையவரும், பல்துறைப் பண்பாட்டு நாகரிகரும், கூற்றுவனையும் அறைகூவிக் குமைக்கும் படையினரும், கடல் கடந்து பல நாடுகளைக் கைப்பற்றியவரும், மாபேரினத்தாருமான பண்டைத் தமிழர் கல்வியறி வில்லாதவரும், கையோங்கினுங் காதவழி யோடுபவரும், கையுங்காலு மாக வந்தவரும், இரந்துண்டே வாழ்பவரும், விரல்விட்டும் எண்ண வேண்டாத சிறு தொகையினருமான, ஆரியப் பூசாரிகட்கு அடிமைப்பட்டுப் போனதையும்; இவ் விருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் ஆரிய வயப்பட்ட பேராயத் தமிழர்,

உரிமை வேண்டும் நயன்மைக் கட்சித் தமிழரைப் பகைத்து வென்றதையும் இன்றும் எதிர்ப்பதையும் நோக்குமிடத்து, வடநாட்டுப் பழங்குடி மக்கள் ஆரியப் பூசாரிகட்கு அடங்கிப் போனது ஒருசிறிதும் வியப்பன்று. தமிழரைக் கொண்டே தமிழரை அடக்கி யொடுக்கி வருவது போல், நாட்டுமக்களைக் கொண்டே நாட்டுமக்களை வென்றிருக்கின்றனர் வடக்கிலும்.

ஆரியப் பூசாரிகள் சிந்துவெளியினின்று கங்கைவெளிக்கு வந்தபின், வேத மந்திரங்களின் பொருளை விளக்கும் பிராமணம் என்னும் உரைநடை நூல்கள் எழுந்தன. பல் வேள்விச்சாலை முதுகுடுமிப் பெருவழுதியும் அரசவேள்வி (ராஜஸூய) வேட்ட பெருநற்கிள்ளியும் பல்யானைச் செல்குழு குட்டுவனும் போன்ற அரசரைத் தமிழகத்தில் துணைக்கொண்டது போன்றே, விதேக நாட்டு மாதவன் போன்ற அரசரை வடநாட்டில் துணைக்கொண்டு ஆரிய வேள்வி மதத்தைப் பரப்பியிருக்கின்றனர் என்பது, சதபத பிராமணத்தால் தெரியவருகின்றது (1,4:1:10).

வேள்வி எல்லாம் வல்லதும் அளவிலா ஆற்றலுடையது மாகுமென்றும், வேள்வி யாசிரியனே மக்களுட் பெரியவனென்றும், அவன் வேள்வி வளர்ப்பதனாலேயே மழை பெய்து பயிர் விளைந்து ஆ சுரந்து உலகம் நடைபெறுகிறதென்றும் கருத்துகள் பரப்பப் பட்டன. ஆரியப் பூசாரி பெரியவன் என்னும் கருத்தில் பிரமன் (Brahman) எனப்பட்டான். பிரமன் = பிராமணன்.

**"பிரமன் முதல் நால்வருணத்து"** (திருவானைக். கோச்செங். 69)

பிரமகத்தி = பிராமணக் கொலை.

**"பிரம கத்தியி னீங்கிப் பிறங்குவான்"** (சேதுபு. தனுக். 57)

| | | |
|---|---|---|
| பிரம காதகன் | = | பிராமணனைக் கொன்றவன். |
| பிரம காயத்திரி | = | பிராமணர் நாடோறும் ஓதும் மந்திரம். |
| பிரம குலம் | = | பிராமண வகுப்பு. |
| பிரம சர்ப்பம் | = | பிராமணப் பாம்பு. |
| பிரம சூத்திரம் | = | பூணூல் (பிராமணன் அணிவது). |
| பிரம தாயம் | = | பிராமணர்க்கு விடப்பட்ட இறையிலி நிலம். |
| பிரம தீர்த்தம் | = | நீரில் தருப்பையைத் தோய்த்து உடம்பில் தடவுகை. |
| பிரம தேயம் | = | பிராமணர்க்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட ஊர். |
| பிரம மாராயன், பிரம ராயன் | = | பிராமண அமைச்சன் பட்டப்பெயர். |
| பிரம முடி(முடிச்சு) | = | பிராமணரின் பூணூலிலுள்ள ஒருவகை முடிச்சு |
| பிரம முனி(ரிஷி) | = | பிராமண முனிவன். |

| | | |
|---|---|---|
| *பிரம ராக்கதன்* | = | *தீச்சாவடைந்த பிராமணப் பேய்.* |
| *பிரம யோனி* | = | *பிராமணப்பிறப்பு* |
| *பிரம விந்து* | = | *பிராமணனுக்குப் பிறந்தவன்.* |

*பெரு-பெருகு-**வ**. பிருஹ். பெருங்கதை, பெருவுடையார் என்னும் தென்சொற்களின் மொழிபெயர்ப்பே, ப்ருஹத் கதா, ப்ருஹதீஸ்வர என்னும் வடசொற்கள்.*

*பெருமன்-**வ**. ப்ரஹ்மன்-பிரமன். பிரமனுக் குரியது பிராமணம். பிராமணத்திற் குரியவன் பிராமணன்.*

*பிராமணர் தென்னாட்டுத் தமிழ நாகரிகச் சிறப்பைப்பற்றிக் கேள்விப்பட்டு, இங்கும் தம் மேம்பாட்டை நிறுவுமாறு, நைமிச அடவியில் அடிக்கடி மாநாடு கூடிச் சூழ்ந்ததாகத் தெரிகின்றது.*

*ஒரு நிமை (நொடி) நேரத்தில் ஒரு பெரும்படை கொல்லப்பட்ட இடம், நைமிசம் என்று பெயர் பெற்றதாகச் சொல்லப்படுகின்றது. இமை-நிமை - **வ.** நிமி - நிமிஷ - நைமிஷ - நைமிச.*

*நைமிசாடவி மாநாட்டுத் தீர்மானத்தின்படி, அகத்தியர் தென்னாடு நோக்கிப் புறப்பட்டார். அவர் காசியினின்று விந்தமலை யடைந்து அங்கிருந்து தண்டக அடவி வந்து தங்கி, அதன்பின் காஞ்சி யடைந்து, பின் காவிரி தோன்றும் சையம் என்னும் குடகுமலை சென்று, குடமலை வழியாகப் பொதியமலை போய்ச் சேர்ந்ததாகக் காஞ்சிப் புராணங் கூறுகின்றது.*

*விந்தமலை கடக்க முடியாத தென்று ஆரியர் நெடுநாளாகக் கருதிக்கொண்டிருந்ததனால், அகத்தியர் அதைக் கடந்து வந்தபோது அதன் செருக்கை யடக்கினதாகக் கூறினர்.*

> ***“ யோகமுறு பேருயிர்கள் தாமுலைவு றாமல்***
> ***ஏகுநெறி யாதெனமி தித்தடியி னேறி***
> ***மேகநெடு மாலைதவழ் விந்தமெனும் விண்டோய்***
> ***நாகமது நாகமுற நாகமென நின்றான்”*** **(ஆரணி. அகத்.39)**

*என்பது கம்பராமாயணம்.*

*இராமன் தன் மனைவியொடும் தம்பியொடும் காட்டிற்கு வந்து தண்டக அடவியில் அகத்தியரைக் கண்டபோது, அம் முனிவர் இராமனை அங்கேயே யிருந்து அரக்கரைக் கொல்லச் சொன்னா ரென்றும்; அதற்கு இராமன் தான் அதற்காகவே வந்திருப்பதால், இன்னும் சற்றுத் தெற்கே தள்ளிப் போய் அரக்கர் வரும் வழியிற் காத்திருக்க வேண்டுமென்று சொன்னானென்றும்; அதற்கு அகத்தியர் இசைந்து, வில்லும் வாளும் அம்பும் புட்டிலும் கொடுத்துப் பஞ்சவடியிற் போயிருக்கச் சொன்னாரென்றும் கம்பராமா யணங் கூறுகின்றது.*

***"விழுமியது சொற்றனையிவ் வில்லிதிவண் மேனாள்***
***முழுமுதல்வன் வைத்துளது மூவுலகும் யானும்***
***வழிபடவி ருப்பதிது தன்னைவடி வாளிக்***
***குழுவழுவில் புட்டிலொடு கோடியென நல்கி.***

***"இப்புவன முற்றுமொரு தட்டினிடை யிட்டால்***
***ஒப்புவர விற்றெனவு ரைப்பரிய வாளும்***
***வெப்புருவு பெற்றவரன் மேருவரை வில்லா***
***முப்புரமெ ரித்ததனி மொய்க்கணையு நல்கா."*** (கம்பரா. அகத். 55,56)

*என்பன அகத்தியர் இராமனுக்குப் படைக்கலம் வழங்கியது பற்றியன.*

*அகத்தியர் காசியிற் புறப்படு முன்னரே சிவபெருமானிடந் தமிழ் கற்றார் என்னுங் கதையும், அகத்தியருக்கு அடுத்தே ஒரு பிராமணக் கூட்டம் வந்து தண்டக அடவியில் தங்கியிருந்ததும், அகத்தியர் இராமனுக்கு வில்லும் வாளும் வழங்கியதும் நோக்குமிடத்து, ஓர் ஆரியக் குடியேற்றக் கூட்டத்தின் தலைவராகவே அகத்தியர் திட்டமிட்டு வந்ததாகத் தெரிகின்றது.*

*அவர் தமிழகம் வந்து முத்தமிழுங் கற்று, ஒரு முத்தமிழிலக்கணம் இயற்றி, அதற்கு அகத்தியம் எனப் பெயரிட்டார். தமிழ முனிவர் போற் பொதியமலையில் தங்கி, ஆரியரும் தமிழருமான மாணவர் பலருக்குத் தமிழ் கற்பித்தார். ஆரிய மாணவருள் ஒருவனான இந்திரன் என்பவன், இயற்றமி ழிலக்கணத்தைத் தழுவி, பொருள் ஆரியத்திற் கேற்காமை யால் அதை நீக்கி, எழுத்தும் சொல்லும்பற்றி முதல் ஆரிய இலக்கண நூலை இயற்றி, அதற்கு ஐந்திரம் எனப் பெயரிட்டான். அதைப் பின் பற்றியே பிராதிசாக்கியங்கள் என்னும் ஆரிய வேதச் சிற்றிலக்கணங் கள் தோன்றியிருத்தல் வேண்டும். இந்திரன் தமிழெழுத்தினின்று கிரந்த எழுத்தை வகுத்தே நூலியற்றி யிருத்தல் வேண்டும்.*

*கான்சுத்தாந்தியசு பெசுக்கி* (Constantius Beschi) *என்னும் வீரமா முனிவர், இத்தாலியா நாட்டினின்று 18ஆம் நூற்றாண்டில் இங்குவந்து, வேம்பாய்* (Bombay) *மண்டலத்தைச் சேர்ந்த கோவாவில் தமிழ்கற்று, தமிழ்நாட்டிற் பொதுமக்களொடு தொடர்புகொண்டு சமயப்பணி யாற்றி, 3615 மண்டிலம் (விருத்தம்) கொண்ட* **தேம்பாவணி** *என்னும் சிறந்த பாவியத்தையும்,370 நூற்பாக் கொண்ட* ***ஐந்திலக்கணத் தொன்னூல் விளக்கம்*** *என்னும் அரிய இலக்கண நூலையும், இயற்றியதை நோக்கின், அகத்தியர் முத்தமிழி லக்கணம் இயற்றியது அத்துணை வியப்பிற் கிடமானதன்று.*

*அகத்தியம் ஆரியரால் அழியுண்டபின், பிற நூல்களிலுள்ள அகத்திய மேற்கோள்களெல்லாம் தொகுக்கப்பட்டன. முதற்கண்*

தொகுத்த சிறு தொகுப்பு சிற்றகத்தியம் என்றும் பின்னர்த் தொகுத்த பெருந் தொகுப்பு பேரகத்தியம் என்றும் பெயர் பெற்றதாகத் தெரிகின்றது. பிற்காலத்தில் அவையும் இறந்தொழிந்தன.

சிவபெருமான் திருமணத்திற்கு வந்த பதினெண் கணத்தாரையும் தாங்காது பனிமலை யமிழ்ந்ததனால், ஞாலத்தின் வடதிசை தாழ்ந்து தென்றிசை யுயர, தேவர் வேண்டுகோட்கிணங்கி அகத்தியர் தெற்கில் வந்து பொதிய மலைமேல் நின்றபின், இரு திசையும் சமநிலைப் பட்டன என்னுங் கதை, ஒரு காலத்திற் பனிமலை கடலடியிருந்ததை யும், தெற்கிற் பனிமலைபோல் உயர்ந்திருந்த குமரிமலை முழுகினதை யுமே குறிக்கும்.

இனி, அணிவகையிற் பொருள் கொள்ளின், இலக்கியத் துறை யிலும் பொருளியல் குமுகாயவியல் அரசியல் முதலிய வாழ்க்கைத் துறைகளிலும், வடக்கில் தாழ்ந்திருந்த ஆரியம், அகத்தியர் தெற்கே வந்தபின் உயர்ந்த தென்றும், தெற்கில் அவற்றில் உயர்ந்திருந்த தமிழம் தாழ்ந்த தென்றும் கொள்ளலாம். இவ்வகை யிலேயே,

> **“ மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்**
> **தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்”**

என்னும் புறப்பொருள் வெண்பாமாலைச் சிறப்புப் பாயிரம் பொருள் படுவதாகும்.

அகத்தியரை யடுத்தே நாரதரும் தென்னாடு வந்து, இசைத்தமிழ் கற்றுப் **பஞ்சபாரதீயம்** என்னும் இசைத்தமிழ் நூலை இயற்றி யிருத்தல் வேண்டும்.

“இனி இசைத்தமிழ் நூலாகிய **பெருநாரை பெருங்குருகும்**, பிறவும், தேவவிருடி நாரதன் செய்த **பஞ்சபாரதீய** முதலா உள்ள தொன்னூல்களும் இறந்தன. நாடகத்தமிழ் நூலாகிய பரதம் அகத்தியம் முதலாகவுள்ள தொன்னூல்களும் இறந்தன” என்று 14ஆம் நூற்றாண்டினரான **அடியார்க்குநல்லார்** தம் சிலப்பதிகார உரைப் பாயிரத்துள் வரைந்திருத்தல் காண்க.

> **“ நாரதன் வீணை நயந்தெரி பாடலும்**
> **.........................................................**
> **மங்கல மிழப்ப வீணை மண்மிசைத்**
> **தங்குக இவளென”** (சிலப். 6:18–23)

என்பதனாலும், நாரதனின் தமிழகத் தொடர்பும் இசைப் புலமையும் அறிப்படும். வீணை என்பது தமிழர் நரப்புக்கருவி. நரம்பு விண்ணென இசைப்பது வீணை. நோயினால் நரம்பு வலிக்கும் போது, நரம்பு விண்விண் எனத் தெறிக்கின்றது என்று கூறும் வழக்கை நோக்குக.

*விண் - வீண் - வீணை =* **வ**. *வீணா. மூங்கிலைக் குறிக்கும் வேணு என்னும் வடசொல்லினின்று, வீணை அல்லது வீணா என்னும் சொல்லைத் திரிப்பது பொருந்தாது. வேதக்காலத்தில் ஆரியருக்கு நரப்புக் கருவியுமில்லை; இசைப்புலமையு மில்லை. ஒரு நரம்பில் ஒரே யிசை(சுரம்) இசைப்பது யாழ் என்றும், ஒரு நரம்பில் மெலிவு சமன் வலிவு என்னும் முந்நிலைகளுள் ஒன்றும் பலவும் இசைப்பது வீணை என்றும் வேறுபாடறிக. செங்கோட்டியாழும் சகோடயாழும் வீணை வகைகளே. இவற்றுள் முன்னது மெட்டுள்ளது; பின்னது கோட்டியம் (கோட்டு வாத்தியம்) போல் மெட்டில்லது.*

*“நாடகத்தமிழ் நூலாகிய பரதம்” என்று அடியார்க்குநல்லார் குறித்திருப்பதால், தமிழ்ப் பரதநூலே வடமொழி நடநூலாகிய பரத சாத்திரத்திற்கு முதனூலென அறிக. முதனூலின் பெயரையே வழிநூற்கும் இடுவது ஓர் ஆரிய வலக்காரம். முதனூலை அழித்து விட்டு வழிநூலை முதனூலென்பது அவர் வழக்கம். ஆதிவாயிலார் வெண்பாவில் இயற்றிய பரதசேனாபதியம் என்னும் நாடகத் தமிழ்நூல் இறந்துவிட்டது. இன்று வழங்கும் பரதசேனாபதியம் வேறு.*

*இராமாயணம் என்பது, கதையை நோக்கினும், பாவியத்தை (காவியத்தை) நோக்கினும், பாரதம்போல் அத்துணை வரலாற்று முறைப்பட்டதும் தெளிவும் திட்டமுமான செய்திகளைக் கொண்டதும் அன்று.*

*வடநாட்டில் நாற்பதுவகை இராமாயணக் கதைகள் வழங்கு கின்றன வென்றும், அவற்றுள் ஒன்றில் இராமன் தன் தங்கையான சீதையை மணந்தான் என்றும், இன்னொன்றில் இராமன் இராவண னின் மனைவியான சீதையைக் கவர்ந்துகொண்டான் என்றும் இருப்பதாகச் சொல்கின்றனர்.*

*இராமன் கோதாவரிக்குத் தெற்கில் வரவில்லையென்றும், சீதையைக் கவர்ந்த அரக்கன் வாழ்ந்த இலங்கை கோதாவரி யாற்றிடைத் திட்டே யென்றும், தமிழ்நாட்டிலும் இலங்கைத் தீவிலும் நிகழ்ந்தனவாகச் சொல்லப்படும் செய்திகளெல்லாம் பிற்காலத்துக் கட்டுக்கதை யென்றும் ஆராய்ச்சியாளர் சிலர் கருதுகின்றனர்.*

*இதற்கு ஏதுக்களாவன:*

1. *இராமன் தன் மனைவியுடனும் தம்பியுடனும், கோதாவரிக் கரையிலுள்ளதும் ஐந்து ஆலமரங்கள் சேர்ந்திருந்ததுமான பஞ்சவடியில் தங்கினமை.*
2. *இராவணன் சீதையைப் பஞ்சவடியிற் கவர்ந்தமை.*

3. இலங்கை என்னும் சொற்கு ஆற்றிடைக்குறை என்னும் பொருளுண்மையும், கோதாவரி நடுவில் ஓர் ஆற்றிடைக்குறை யுண்மையும்.

4. கி.மு. 3 ஆம் நூற்றாட்டை மோரியர்க்குமுன், வடநாட்டார் ஒருவரும் தமிழகத்தின்மேற் படையெடுக்காமை.

5. இராமன் படையைக் குரக்குப்படை யென்றதும், குரங்குகட்கு உயர்திணைத் தன்மை கூறியதும், அனுமான் என்னும் குரங்கைப் பன்மொழிப் புலவனென்றும் தொண்ணிலக்கணப் (நவ வியாகரண) பண்டிதனென்றும் பாராட்டியதும்.

6. சீதையைத் தேடுமாறு இராமன் குரங்குகளை விடுத்தபோது, கோதாவரிக்கு வடக்கிலுள்ள விந்தமலை, நருமதையாறு, ஏமகூடம், தண்டக அடவி, முண்டத்துறைச் சோலை, பாண்டு மலை ஆகிய இடங்களைப் பார்க்கச் சொன்னதுடன், கோதாவரியும் அடையுங்கள் என்றமை.

7. எருமையூர்க்கு (மைசூர்க்கு) வடக்கிலுள்ள கிட்கிந்தை மலை, அன்று சேரநாட்டைச் சேர்ந்து மாவலி (மகாபலி) வேந்தன் ஆட்சிக்குட் பட்டிருந்தமை.

8. இராமவிலக்குமணர் வெள்ளக்கணக்கான குரக்குப் படை யுடன் சோழநாடு வழியாகப் பாண்டிநாடு வந்து, கடலுக் கணைகட்டி இலங்கை புகுந்து, இராவணனொடு பதினெண் மாதம் பொருது வென்று அரக்கர் குலத்தை வேரறுத்தனர் என்னும் செய்தி, சோழனுக்கும் பாண்டியனுக்கும் தெரியாது போனமை.

9. இராமன் விந்தமலைக்குத் தெற்கில், முனிவர் என்னும் ஆரியப் பூசாரிகளும் அரக்கரும் சடாயு என்னும் கழுகும் குரங்குகளும் தவிர, தமிழரையும் வேறு மக்களையுங் காணாமை.

10. பீடுமன், இராமன் காலத்தவனான பரசுராமனிடம் விற்கலை பயின்றவ னாயினும், இராமனையோ இராமாயணத்தையோ அறியாதிருந்தமை.

11. இராமாயணக் கதை இடத்திற் கிடமும், இராமாயணப் பாவி யம் ஆசிரியர்க் காசிரியரும், சிறிதும் பெரிதும் வேறுபட்டி ருத்தல்.

12. இராமாயணப் பாவியம், மேன்மேலும் உயர்வுநவிற்சியும் இடைச்செருகலும் பிற்சேர்க்கையும் கதை மாற்றமும் கொண்டு வந்துள்ளமை.

13. *இராமாயணப் பனுவல் முதன்முதல் வான்மீகியாரால் சிற்றளவாகப் பாடப்பட்டிருக்கலாம். பாரதக் காலத்திற்குப் பின் பதின்தோற்றரவு (தசாவதாரம்) வகுக்கப்பட்டபோது, இது விரிவடையத் தொடங்கி யிருக்கலாம்.*

***"பருதி சூழ்ந்தவிப் பயங்கெழு மாநிலம்***
***ஒருபகல் எழுவர் எய்தி யற்றே***
***வையமுந் தவமுந் தூக்கின் தவத்துக்***
***கையவி யனைத்தும் ஆற்றா தாகலின்***
***கைவிட் டனரே காதலர் அதனால்***
***விட்டோரை விடாஅள் திருவே***
***விடாஅ தோரிவள் விடப்பட் டோரே"*** (புறம்.358)

*என்னும் புறப்பாட்டு வான்மீகியார் என்னும் புலவரொருவர் பாடியதாக வுள்ளது. இது அரசு நிலையாமையையும் தவத்தின் மேன்மையையும் அழகாக எடுத்துக் கூறுவது. ஆசிரியர் பெயரையும் பாட்டின் பொருளையும் நோக்குமிடத்து, இவர் இராமாயண வான்மீகியார்தாமோ, அன்றி அவர் வழியினரோ என்னும் எண்ணம் மின்போல் தோன்றி மறைகின்றது.*

*அகத்தியர் வழிகாட்டியபின் தமிழகம் வந்த பிராமணர், தென்னாட்டாரும் வடநாட்டார் போன்றே மதப்பித்தரா யிருந்தது கண்டு, தாம் நிலத்தேவரென்றும் தம் மொழி தேவமொழி யென்றும் ஏமாற்றி, குமரிமுதல் பனிமலைவரை இந்தியப் பழங்குடி மக்கள் அனைவரையும், உலகில் மக்களுள்ள காலமெல்லாம் தமக்கும் தம் வழியினர்க்கும் அடிமைப்படுத்துதற் பொருட்டு, குமுகாயத் துறையில் ஒன்றும் சமயத்துறையில் ஒன்றுமாக ஈரனைத்திந்தியத் திட்டங்களை வகுத்துவிட்டனர்.*

## நால்வரணப் பகுப்பு

*தமிழ்ப் பொருளிலக்கணத்தில் அகப்பொருட்குச் சிறப்பாக வுரியவராகத் தலைமக்களே கொள்ளப்பட்டதனால், கல்வி காவல் வணிகம் உழவு கைத்தொழில் என்னும் மருதநிலத் தொழில்கள் ஐந்தனுள், கைத்தொழில் உழவிற்குப் பக்கத் துணையான தென்று நீக்கி, ஏனை நான்கிற்கும் உரிய அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்னும் நால்வகுப்பாரையே காதலன் காதலி யென்னும் கிளவித் தலைவராகக் குறித்தனர்.*

*அந்தணர் என்பது துறவியரான ஐயரையே சிறப்பாகக் குறிக்கு மேனும், அகப்பொருட்டுறைக்கு அவர் ஏற்காமையின் இல்லறத் தாரான பார்ப்பாரே அந்தணர் என்னும் பெயராற் கொள்ளப் பெறுவர். அந்தணர் முதலிய நால்வகுப்பார் பெயரும் அவ்வவ்*

வகுப்பார் அனைவரையுங் குறிக்குமேனும், அவருள் தலைமை யானவரே, கிளவித்தலைவராகக் குறிக்கப் பெறுவர் என்பதை அறிதல் வேண்டும். ஆகவே, வேளாளர் என்பவர் அவ் வகுப்பாரின் (உழுவித் துண்ணும்) தலைவரான வேளிர் என்னும் குறுநில மன்னரே யென்றும், வணிகர் என்பவர் மாசாத்துவன் போலும் நிலவணிகரும் மாநாய்கன்போலும் நீர்வணிகருமே யென்றும், அரசன் என்பவர் கோக்களும் வேந்தருமே யென்றும், அந்தண ரென்பார் தலைமைப் புலவரும் குருக்களும் அமைச்சருமே யென்றும், இது புலனெறிவழக்க மென்னும் இலக்கிய (செய்யுள்) வழக்கே யென்றும் அறிந்துகொள்க. துறவியர் அகப்பொருட் டலைவ ரல்லரேனும், தூது செல்லல் சந்து செய்தல் முதலிய புறப்பொருட்குத் தலைவராவர்.

உலக வழக்கில் கல்வி, காவல் (ஆட்சி), வணிகம், உழவு, கைத் தொழில் என்னும் ஐவகைத் தொழில் செய்வோரும், முறையே, பார்ப்பார் அரசர் வணிகர் உழவர்(வேளாளர்) தொழிலாளர் எனப்படுவர். பிராமணர் இப் பாகுபாட்டைப் பயன்படுத்தி, பார்ப் பாரையும் அந்தணரையும் ஒருங்கே பிராமணர் என்றும், அரசரைச் சத்திரியர் என்றும், உழவர் சிறார் சிலர் மாடு மேய்ப்பதாலும், உழுவித்துண்ணும் வேளாளர் வகுப்பைச் சேர்ந்தவர் (வெள்ளாளர்) பலர் கடைகாரரும் வணிகருமா யிருப்பதாலும், உழவும் வணிகமும் மாடுமேய்ப்பும் ஒருங்கே செய்பவரை வைசியர் என்றும், உழவுங் கைத்தொழிலுங் கூலிவேலையுஞ் செய்யும் மூவகுப்பாரைச் சூத்திர ரென்றும் மக்களை நால்வகுப்பாக வகுத்து, பிராமணனுக்கு வெண்ணிறமும் சத்திரியனுக்குச் செந்நிறமும் வைசியனுக்குப் பொன்னிறமும் சூத்திரனுக்குக் கருநிறமும் சார்த்திக் கூறி, நால்வரணப் பாகுபாட்டை ஏற்படுத்தி, பிராமணர் கல்வித்தொழிலை யும் பிற வகுப்பார் தத்தமக்குக் குறிக்கப்பட்ட தொழில்களையும் வழிவழி செய்து வரவேண்டு மென்றும், சத்திரியன் முதலிய மூவரும் பிராமணனுக்கு இறங்கு வரிசையில் தாழ்ந்தவ ரென்றும், சூத்திரன் மேன் மூவர்க்கும் வைசியன் மேலிருவர்க்கும் சத்திரியன் பிராமணர்க் கும் தொண்டு செய்யவேண்டு மென்றும், இது இறைவன் ஏற்பா டென்றும், மேல்வகுப்பார் மூவரும் பூணூல் அணியும் இருபிறப்பாள ரென்றும், வேதத்தைச் சூத்திரன் காதாலுங் கேட்கக் கூடாதென்றும், பிராமணனைக் காணின் மற்ற மூவரும் தத்தம் தாழ்வுநிலைக்குத் தக்கவாறு ஒதுங்கி நிற்கவேண்டு மென்றும் இறைவன் கட்டளை யிட்டதுபோற் கற்பித்துவிட்டனர்.

இச் சட்டதிட்டம் வடநாட்டில் விரைந்து முழுவதும், தென் னாட்டிற் படிப்படியாகப் பேரளவும், ஆட்சிக்குக் கொண்டுவரப் பட்டது.

இங்ஙனம், இயற்கையாகத் தொழில்பற்றி யிருந்த குலப் பாகுபாடு நிறம்பற்றி மாற்றி யமைக்கப்பட்டது. வரணம் = நிறம். வள்ளுதல் = வளைத்தல், வளைத்தெழுதுதல். வள் - வளை. வளைத்தல் = வளைத்தெழுதுதல், வண்ணப்படம் வரைதல், வரைதல்.

**"உருவப் பல்பூ வொருகொடி வளைஇ"** (நெடுநல்.113)

வள் - வண். வளை - வணை. வண் - வண்ணம் = 1. எழுத்து. 2.எழுதிய படம்.3. படமெழுதுங் கலவை. "பலகை வண்ண நுண் டுகிலிகை" (சீவக.1107 ).4. எழுதுங்கலவை நிறம், நிறம். "வான்சுதை வண்ணங் கொளல்" (குறள்.714). வண்ணமாலை = நெடுங் கணக்கு. **வ**. வர்ணமாலா.

வள் - வர் - வரி. வரிதல் = எழுதுதல். வரித்தல் = 1. எழுதுதல். "வள்ளுகிர் வரித்த சாந்தின் வனமுலை" (சீவக.2532). 2. ஓவியம் வரைதல். "வல்லோன் தைஇய வரிவனப் புற்ற வல்லிப் பாவை" (புறம்.33). 3. கோலஞ்செய்தல். "புன்னை யணிமலர் துறை தொறும் வரிக்கும்" (ஐங்குறு.117).

வரி=1. கோடு. "நுண்ணிய வரியொடு திரண்டு" (சீவக.1702). வரிமா = வரிப்புலி(வேங்கை). 2. தொய்யிற் கொடி வரை. "மணிவரி தைஇயும்"(கலித்.76).3 .கை வரை. 4. எழுத்து, எழுத்தின் வரிவடிவு. 5. ஓவியம். 6. நிறம். "வரியணி சுடர்வான் பொய்கை" (பட்டினப்.38)

வர் - வரு - வருவு. வருவுதல் = வரைதல். வருவுமுள் = பொன்னத் தகட்டிற் கோடிழுக்கும் இருப்பூசி.

வரு - வரை. வரைதல் = எழுதுதல்.

வரி+அணம் = வரணம் = 1. எழுத்து, ஓவியம்.2. நிறம். 3. நிறம்பற்றிய நால்வகுப்பு.

வண்ணம் = வரணம். ஒ.நோ: திண்ணை = திரணை.

வண்ணம் = வண்ணி. வண்ணித்தல் = ஓவியம் வரைந்து கோலஞ் செய்தல் போல், ஒரு பொருளைப்பற்றி அழகாகப் புனைந் துரைத்தல். "வண்ணித்த லாவ தில்லா" (சீவக.2458 ).

வரணம் - வரணி. வரணித்தல் = அழகாகப் பலபடப் புனைந்துரைத்தல்.

வண்ணி - வண்ணனை. வரணி-வரணனை.

வண்ணம் = நிறம், நிறத்தால் வேறுபடும் பொருள்வகை, வகை (பொது), இனவகை, ஓசைவகை, ஓசைவகையால் ஏற்படும் செய்யுள்வகை (இருபது தொல்காப்பிய வண்ணமும் நூறு அவிநய

வண்ணமும் கணக்கற்ற திருப்புகழ் வண்ணமும்), பாட்டுவகை (கணக்கற்ற வண்ண மெட்டுகள்).

வண்ணம் என்னும் சொல்லிற்குரிய பொருள்கள், பெரும் பாலும், வரி, வரணம் என்னும் சொற்கட்கு முண்டு.

அவ்வண்ணம் இவ்வண்ணம் என்பன, அப்படி இப்படி என்று பொருள்பட்டுப் பொதுவான வகையைக் குறிப்பன. இன்ன வண்ணம் - இன்னணம்.

வரணி - **வ**. வர்ண். வரணனை - **வ**. வர்ணனா.

வண்ணம், வரணம் என்னும் இரு தென்சொற்களையும் வடசொல்லென மயங்கி, வரணம் என்பதை வருணம் என்றும், வரணி என்பதை வருணி என்றும், வரணனை என்பதை வருணனை என்றும், அகரத்தை உகரமாக மாற்றி எழுதுவதோ டமையாது, வண்ணம், வண்ணி என்னும் சொற்களையும் வர்ண, வர்ண் என்னும் வடசொல் வடிவுகளின் திரிபாகக் கொள்வா ராயினர்.

நால்வகை வரணப் பகுப்பின் பின்னரே, பேருலக வடிவான 'விராட்' என்னும் பரம்பொருளின் முகத்தினின்று பிராமணனும், தோளினின்று (புயத்தினின்று) சத்திரியனும், தொடையினின்று வைசியனும், பாதத்தினின்று சூத்திரனும் தோன்றினர் என்னும் 'புருட சூத்தம்' (புருஷ ஸூக்த) இருக்கு வேதம் பத்தாம் மண்டலத்தில் செருகப்பட்டது. பேருலக வடிவான பரம்பொருட் கருத்தும், பிராமணர்க்குத் தமிழரொடு தொடர்பு கொண்டபின் தோன்றியதே.

முகம் முதலிய நான்கனுள்ளும், முகமே உச்சியிலும் ஏனை மூன்றும் ஒன்றனொன்று தாழ்ந்தும், முறையே மேலிருக்கும் ஒன்றையும் இரண்டையும் மூன்றையும் தாங்கியும் இருப்பது போல், நால் வரணத்துள்ளும் பிராமணனே தலைமையானவன் என்பதும், ஏனை மூவரும் முறையே ஒருவரினொருவர் தாழ்ந்தவரும் மேலுள்ள ஒருவனையும் இருவரையும் மூவரையும் தாங்க வேண்டியவருமாவர் என்பதும்; நாலுறுப்பும் ஒரே ஆள் வடிவான பேருலக மகன் (விராட் புருஷ) கூறுகளாதலால், நால்வரணமும் இறைவன் படைப் பென்பதும் கருத்தாம்.

இனி, கல்வித் தொழிலுக்கு வாயும் (நாவும்) மூளையும், போர்த்தொழிலுக்குத் தோளும், இருந்து துலை நிறுத்தற்குத் தொடையும், நடந்து பாடுபடுதற்குப் பாதமும் வேண்டுமென்பது உட்கருத்தாம்.

இனி, போருக்கு வேண்டும் தோள்வலிமை மறக்குடியினர்க்கும், வணிகத்திற்கு வேண்டும் பண்டமாற்றுத் திறமை வாணிகக் குடி

யினர்க்கும், உழைப்பிற்கு வேண்டும் உடல்வலிமை பாட்டாளி மக்கட்கும் இருப்பதுபோல், கல்விக்கு வேண்டும் நாவன்மையும் மதிநுட்பமும் பிராமணனுக்கே யுண்டென்பதும், ஆதலால், நால் வரணத்தாரும் தத்தமக்குக் குறிக்கப்பட்ட தொழிலையே செய்துவர வேண்டுமென்பதும், நச்சுத்தன்மையான சூழ்ச்சிக் கருத்தாம்.

பிராமணர் பொதுமக்களொடு தொடர்புகொள்ளாது நேரே வேந்தரை யடுத்து, அவர் பழங்குடிப் பேதைமையையும் கொடைமடத்தையும் மதப் பித்தத்தையும், தம் வெண்ணிறத்தையும் வெடிப்பொலி மொழியையும், வரையிறந்து பயன்படுத்திக்கொண்டு, தாம் நிலத்தேவர் என்றும் தம் மொழி தேவமொழி யென்றும், தாம் குறித்த வேள்விகளைச் செய்யின் இம்மையில் மாபெரு வெற்றியும் மறுமையில் விண்ணுலக வேந்தப் பதவியும் பெறலாமென்றும் துணிந்து சொன்னபோது, அறிவியற் கல்வியும் மொழியாராய்ச்சியும் இல்லாத அக்காலத்து அரசர் முற்றும் நம்பி அடிமையராயினர். "மன்னன் எப்படி, மன்னுயிர் அப்படி" ஆதலால், குடிகளும் ஆரியர்க் கடிமையராயினர்.

ஒன்றரை நூற்றாண்டு ஆங்கிலர் ஆட்சியும், இரு நூற்றாண்டு ஆங்கில அறிவியற் கல்வியும், கால் நூற்றாண்டு நயன்மைக் கட்சி முன்னேற்றமும் ஏற்பட்ட பின்னும், மேலையர் திங்களையும் செவ் வாயையும் அடையும்போதும், தமிழின் திரிபான சமற்கிருதத்தைத் தேவமொழி யென்றும், சமற்கிருதச் சொல்லின் ஆற்றல் தமிழ்ச்சொற் கில்லையென்றும், உறமூரையாடுவாராயின், அதைச் செவிமடுத்துத் தமிழரும் ஊமையரும் உணர்ச்சி நரம்பற்றவருமா யிருப்பாராயின், மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட கள்ளங் கரவற்ற வெள்ளந்தி மக்கள் ஆரிய ஏமாற்றிற்கு இணங்கியது வியப்பாகாது.

## முத்திருமேனிப் புணர்ப்பு

பிராமணர் தமக்கும் தம் வேதத்திற்கும் தம் வேதமொழிக்கும் எத்துணை யுயர்வைத் தேடிக்கொள்ளினும், மதத்துறையில் மட்டும் தமிழரை வெல்ல முடியவில்லை. ஏனெனில், ஆரிய மதம் வீடுபேற்றுக் கொள்கையும் கடவுளுணர்ச்சியுங் கோவில் வழிபாடு மில்லாது, கீழ்மக்கள் பேய்கட்குப் படைப்பதும் காவு (பலி) கொடுப்பதும் போல், இயற்கையுஞ் செயற்கையுமான பல்வேறு சிறுதெய்வங்கட்கு, விலங்குகளைக் காவிட்டுத் தீயிற் சுட்டெரிக்கும் அல்லது வாட்டித் தின்னும் வேள்விநெறியே.

தமிழரோ, எங்கும் நிறைந்து எல்லாவற்றையும் படைத்துக் காத்தழிக்கும் இறைவனை, சிவன் என்னும் பெயராலும் திருமால் என்னும் பெயராலும் பெரும்பாலும் காய்கனிகளையே படைத்து

வழிபடுவனவும், வெவ்வேறு மெய்ப்பொருளியல் கொண்டனவும், இல்லறத்தாலும் துறவறத்தாலும் வீடுபேறடைவனவுமான, சிவமதம் திருமால்மதம் என்னும் இருபெரு மதங்களையுடையவர்.

அவ்விரு மதங்களையும் ஆரியப்படுத்துவதற்கு, இறைவனின் முத்தொழிற் கொள்கையைப் பயன்படுத்தி, முத்தொழிற்கும் வெவ்வேறு தலைவர் உண்டென்றும், படைப்பவன் பிரமா என்றும், காப்பவன் திருமால் என்றும், அழிப்பவன் சிவன் என்றும் முத்திரு மேனிக் (திருமூர்த்திக்) கொள்கையை வகுத்துவிட்டனர் பிராமணர்.

பிரமா என்னும் சொல் பிரமன் என்னுஞ் சொல்லினின்று திரித்ததாகும். பிரமா பிராமணக்குல முதல்வன் என்பதும், அதற்கேற்ப நால்வரணங்களையும் அவற்றிற்குரிய குணங்களுடன் படைப்பவன் என்பதும் உட்கருத்து.

பிரமா மூவுலகும் அல்லது பல்லுலகும் படைப்பவன் என்று கொள்ளப்படினும், உண்மையிற் பிரமா பிராமணராற் படைக்கப் பட்ட செயற்கைத் தெய்வமே.

முத்திருமேனிக் கொள்கை வகுக்கப்பட்ட பின்பும், தமிழர் பிரமாவை வணங்காதும் ஒப்புக்கொள்ளாதும் முன்போற் சிவனை யும் திருமாலையுமே வணங்கி வந்திருக்கின்றனர். பிரமாவிற்குக் கோவிலும் வழிபாடும் இல்லாது போயின.

சிவனையும் திருமாலையும் ஆரியத் தெய்வங்களாகக் காட்டு தற்கு, வேதத் தெய்வங்களோடு அவரை இணைத்தனர். சூறாவளித் தெய்வமாகிய உருத்திரனைச் சிவனென்றும், கதிரவத் தெய்வமாகிய விட்டுணு (விஷ்ணு)வைத் திருமாலென்றும் கூறினர்.

சிவன் என்னுஞ் சொல்லை ஆரியச்சொல் லாக்குதற்கு, அதற்கு மங்கலமானவன் அல்லது நன்மை செய்பவன் என்று பொருள்கூறி, சிவ என்னும் குறிப்புப் பெயரெச்சத்தை உருத்திரன் இந்திரன் அக்கினி என்னும் வேதத் தெய்வங்களின் பெயருக்கு அடையாக்கினர். சிவன் என்னுஞ் சொற்போன்றே சிவந்தவன் என்று பொருள்படும் அரன் என்னுஞ் சொல்லை, ஹரன் என்று திரித்து அழிப்பவன் என்று பொருள் கூறினர்.

வேதத்தை அல்லது வேதங்களை முதற்கண் எழுதாது செவிமர பாகப் போற்றி வந்ததற்கு, எழுத்தின்மையே கரணியம். பின்னர்த் தமிழ் எழுத்துவழிப்பட்ட கிரந்த எழுத்துத் தோன்றிய பின்னும் பல நூற்றாண்டு எழுதா திருந்தமைக்குக் கரணியங்கள் பின்வரும் மூன்றாகும்:

1. வேதப் பொருளின் தாழ்வை மறைத்தல்.
2. வேதமோதிப் பிழைக்கும் தொழிலை ஆரியப் பூசாரிகட்கே உரிமை யாக்கல்.
3. அவ்வக்கால அறிவு வளர்ச்சிக் கேற்ப, வேண்டிய பகுதிகளை இடைச்செருகல்.

**“ ஆற்ற லழியுமென் றந்தணர்கள் நான்மறையைப்**
**போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதார்”**

என்பது, கோதமர் பெயரிலுள்ள திருவள்ளுவ வெண்பா மாலைச் செய்யுள்.

பொதுவாக ஆரியர் என்று சொல்லப்படும் பிராமணர், முதற்கண் சிந்துவெளியிலிருந்து பின்னர்ப் பிரமவர்த்தத்திற்கும், அதன் பின் மத்திய தேசத்திற்கும் பரவினர். சரசுவதி யாற்றிற்கும் திருடத்துவதி யாற்றிற்கும் இடைப்பட்டது பிரமவர்த்தம். சரசுவதி மறைந்த வினசனத்திற்குக் கிழக்கும், பிரயாகைக்கு மேற்கும், பனிமலைக்குத் தெற்கும், விந்தியமலைக்கு வடக்கும் உள்ள நாட்டுப்பகுதி **மத்திய தேசம்.** இராமாயணக் காலத்தில் பிராமணர் மத்திய தேசக் கிழக்கெல்லை அடைந் திருத்தல் வேண்டும்.

### சிந்து என்னும் பெயர்

ஆரியர் வருமுன்னர் தமிழரே வடநாட்டிற் குடியேறி யிருந்தமை யாலும், குமரிமலை முழுகி அரபிக்கடல் தோன்றியபின், சிந்துவெளி வழியாகவே தமிழர் அல்லது திராவிடர் மேலை யாசியாவிற்கும் அதன் பின் ஐரோப்பாவிற்கும் சென்றிருப்ப ராதலாலும், சிந்து என்னும் ஆற்றுப்பெயர் தமிழர் இட்ட தமிழ்ப்பெயராகவே யிருக்கலாம்.

சிந்துதல் = சிதறுதல். சிதறுதல் நீர்ப்பொருளையும் கட்டிப் பொருளையும் சிறுசிறு பகுதியாக வீழ்த்துதல். மழை துளித்துளி யாகப் பெய்தலின், மழை பெய்தல் துளி சிதறுதல் என்று சொல்லப் படும்.

**“ தாழிருள் துமிய மின்னித் தண்ணென**
**வீழுறை யினிய சிதறி யூழிற்**
**கடிப்பிகு முரசின் முழங்கி யிடித்திடித்துப்**
**பெய்தினி வாழியோ பெருவான்”** (குறுந்.120)

என்பது முகில் துளி சிதறுதலையும்,

**“ அருவி யன்ன பருவுறை சிதறி**
**யாறுநிறை பகரு நாடனை”** (குறுந்.121)

என்பது ஆறு துளி சிதறுதலையும் குறித்தன.

*முகில் துளி சிந்தியே மக்கட்குக் கீழ்நீரும் மேல்நீரும் ஆற்றுநீரும் கிடைத்தலால், சிந்து என்னுஞ் சொற்கு நீர் (பிங்.), ஆறு (பிங்.) என்னும் இருபொருளும் ஏற்பட்டன.*

*இனி, சிந்துதல் என்னும் வினைச்சொற்குத் தெளித்தல் என்பதனொடு ஒழுகுதல் என்னும் பொருளுமிருத்தலால், சிந்து என்னுஞ் சொல் ஓர் ஆற்றின் பெயராவதற்கு முற்றும் பொருத்தமானதே. வடமொழியில் இச் சொற்கு மூலமில்லை. மானியர் உவில்லியம்சு தம் சமற்கிருத-ஆங்கில அகரமுதலியில், ஒருகால் சித்* (sidh) *என்பது மூலமா யிருக்கலாம் என்று ஐயுறவாகக் குறிப்பர். அச் சொற்குச் செல்லுதல்* (to go) *என்னும் பொருளே உள்ளது. மேலும், இருக்கு வேதத்தில் சிந்தாற்றிற்குச் சரசுவதி யென்னும் பெயரே வழங்கப் பட்டிருப்பதாகத் தெரிகின்றது. பிற்காலத்தில் ஆரியர் பிரமவர்த்தம் சென்ற பின்னரே, அந் நிலப் பகுதிக்கு மேலெல்லையாகவும் சட்டிலெசு என்னும் கிளையாற்றிற்குத் துணைக்கிளையாகவும் இருந்த சிற்றாற்றிற்கு, அப் பெயரை இட்டதாகத் தெரிகின்றது. அது இன்று சுர்சூதி* (Sursooty) *என்று வழங்குகின்றது.*

*பழம்பாரசீகரின் சொராத்திரிய* (Zoroastrian) *வேதமாகிய* **செந்துஅவெத்தாவில்** (Zend-Avesta), **ஹப்த ஹைந்தவ** *என்பது அகுரமத்தாவினாற் படைக்கப்பட்ட பதினாறு தெய்வங்களுள் ஒன்றாகக் கூறப்பட்டிருப்பதனாலும்,* **ஹாக்வைதி** (Haraquaiti) *என்பது ஓர் ஆபுக்கானிய ஆறாகக் குறிக்கப்பட்டிருப்பதனாலும், பல தெய்வங்கள், சிறப்பாக அக்கினி, சொராத்திரியர்க்கும் இருக்கு வேதியர்க்கும் பொதுவாயிருப்பதனாலும், அவ்விரு வகுப்பாரும் ஒருகாலத்திற் சிந்துவெளியில் ஓரினத்தாரும் ஒரே மதத்தாருமாய் வாழ்ந்திருந்து, பின்னர் முன்னவர் மேற்கும் பின்னவர் கிழக்குமாகப் பிரிந்து போயினர் என்பது உய்த்துணரப்படும்.*

*சகரம் அல்லது ஸகரம் பாரசீகர் வாயில் ஹகரமாகத் திரியும்.*

*எ-டு:*

*சிந்து (ஸிந்து) - ஹிந்து*

*ஸப்தன் (ஏழு) - ஹிப்தன்*

*அசுரன் (அஸுர) - அஹுர*

*இம் முறையிலேயே, ஸப்தஸிந்து என்பது ஹப்தஹிந்து என்றும், ஸரஸ்வதி என்பது ஹரக்வைதி என்றும் திரிந்துள்ளன.*

*இதனால், சிந்தாறு ஒருகாலத்தில் எழுகிளைகள் கொண்டிருந்ததாகத் தெரிகின்றது. சிந்தாற்றுத் தேவிக்கு ஏழ் உடன் பிறந்தாண்மார்* (sisters) *என்ற இருக்குவேதியர் கொள்கையினாலும் இது வலியுறும்.*

*இனி, சில தெய்வ வேறுபாட்டினாலும் கொள்கை மாறுபாட்டினாலும், சொராத்திரியரின் முன்னோர் பகைமை கொண்டே பிரிந்து போனதாகத் தெரிகின்றது. செந்து அவெத்தாவிற் கூறப்பட்டுள்ள* **அஹுரமஸ்தா** *இருக்கு வேதத்திற் குறிக்கப்படவில்லை. சொராத்திரியர் அசுரரை நல்லவராகவும் தேவரைத் தீயவராகவுங் கொண்டனர். இந்திய ஆரியர் கருத்து இதற்கு முரணானது.*

## பாரதக் காலம்
## (தோரா. கி.மு. 1100-1000)

*பீடுமன் பரசுராமனிடம் விற்கலை பயின்றவன் என்று சொல்லப்படுவதால், பாரதக்காலம் இராமாயணக் காலத்திற்கு இரு தலைமுறையே பிற்பட்டதாகும்.*

*பாண்டவரும் கௌரவரும் திங்கள் மரபைச் சேர்ந்தவர். வடநாட்டுத் திங்கள் மரபு, பாண்டியன் கங்கைக்கண் நிறுவிய படிநிகராளி வழியினதே. பாண்டவரின் முன்னோர் புதன் (அறிவன்), புரூரவன், ஆயு, நகுடன், யயாதி, பூரு, துடியந்தன், பரதன், அத்தி, குரு, சந்தனு, பீடுமன், விசித்திரவீரியன், திருதராட்டிரன், பாண்டு என்போர். பீடுமன் கௌரவ பாண்டவரின் பாட்டனும், திருதராட்டிர பாண்டுவர் அவரின் தந்தைமாரு மாவர்.*

*பாரதக் காலத்திற் பெயர்பெற்றவனும் பாரதப் போரை இயக்கியவனும் கண்ணன் ஆவன். அவன் தென்னாட்டு ஆயர் மரபுப்படி, கோசல நாட்டரசன் மகள் சத்தியை என்னும் நப்பின்னையை ஏழ் ஏறுதழுவி மணந்தான். அவன் மதுராவில் ஆண்டுகொண்டிருந்த போது, காலயவனன் என்பவன் பெரு மிலேச்சப் படையுடன் வந்து அந் நகரை முற்றுகையிட்டான். அதை முன்னரே அறிந்த கண்ணன், குசராத்தின் மேற்கில் அரபிக்கடலிலுள்ள ஒரு தீவில் துவாரகை (துவரை) என்னும் நகரை யமைத்து, அதற்குத் தன் தலைநகரை மாற்றிக்கொண்டான்.*

*யவனம் என்பது கிரேக்க நாட்டிற்கொரு பெயர். யவனன் கிரேக்கன். சின்ன ஆசியாவிலும் கிரேக்க நாடுகளிருந்தமையால், அவற்றை யடுத்து வாழ்ந்த அரபியர்க்கும் அவரையொத்த மூர் வகுப்பாரான வடஆப்பிரிக்கர்க்கும் அப் பெயர் வழங்கிற்று. அதனால், உண்மையான கிரேக்கரை வெள்ளை யவனர் என்றும், அரபியரும் மூராருமான சோனகரைக் காலயவனர் என்றும், நிறம்பற்றி வேறுபடுத்திக் கூறியதாகத் தெரிகின்றது. காலம் = கருப்பு. 'சுன்னத்து' என்னும் வழக்கம்பற்றிச் சோனகர் எனப் பெயர் பெற்றனர் போலும்! மிலேச்சர் = பெலுச்சியர். பெலுச்சியர் நாடே பின்னர்ப் பெலுச்சித் தானம்* (Baluchistan) *எனப்பட்டது.*

*மாவலி என்னும் சேரவேந்தன் மகனான வாணன், வேம்பாய்க்கு (Bombay) வடக்கே மேல்கரையடுத்த சோணிதபுரம் என்னும் நகரிலிருந் தாண்டு வந்தான். அவன் மகள் உழை கண்ணன் பேரனான அநிருத்த னொடு களவொழுக்கம் பூண்டு வந்தாள். அதுகண்ட வாணன் அநிருத்தனைச் சிறையிட்டான். அதனால் கண்ணன் படையொடு வந்து பொருது வாணனைத் தோற்கடித்தான். உடனே வாணன் அநிருத்தனையும் தன் மகளையும் கண்ணனிடம் ஒப்புவித்து மன்னிப்புப் பெற்றான். அன்று அநிருத்தன் தந்தையான காமன் (பிரத்தியும்நன்) ஆடிய வாகைக் கூத்து, பேடி என்னும் புறநட வகையாகும். அதையே,*

***“ சுரியற் றாடி மருள்படு பூங்குழற்
பவளச் செவ்வாய்த் தவள வாணகை
யொள்ளரி நெடுங்கண் வெள்ளிவெண் டோட்டுக்
கருங்கொடிப் புருவத்து மருங்குவளை பிறைநுதற்
காந்தளஞ் செங்கை யேந்திள வனமுலை
யகன்ற வல்கு லந்நுண் மருங்கு
லிகந்த வட்டுடை யெழுதுவரிக் கோலத்து
வாணன் பேரூர் மறுகிடைத் தோன்றி
நீணில மளந்தோன் மகன்முன் னாடிய
பேடிக் கோலத்துப் பேடுகாண் குநரும்”*** (மணிமே. 3:116–125)

*என்று பாடினார் சீத்தலைச்சாத்தனார். பேடிக் கூத்து முன்னரே தமிழகத்தில் ஆடப்பட்டு வந்தது. முதற் கடல்கோட்குப்பின் குமரி நாட்டினின்று வடக்கிற் சென்ற ஆயர்வழியினனே கண்ணனாதலால், அவன் மகன் அந் நடத்தை முன்னோர் வாயிலாக அறிந்திருந்து ஆடினான்.*

*வாணன் நகர் குசராத்து என்னும் குச்சரநாட்டி லிருந்ததனால், அற்றைச் சேரநாடு அதுவரை பரவி யிருந்தமை அறியப்படும். இதனால், முழுகிப்போன குமரிநாடு முழுதும் பாண்டிநாடா யிருந்த காலத்து, இந்திய நிலமுழுதும் குமரியாற்றிலிருந்து பனிமலைவரை, கிழக்கிற் சோழநாடும் மேற்கிற் சேரநாடுமாக இருந்ததென்னும் உண்மையும் புலனாகும். குமரிநாடு முழுகிய பின்பும், இந்தியா முழுதும் மூவேந்த ராட்சிக் குட்பட்டு முந்நாடாயிருந்த நிலை மையையே, நாரதன் மூவுல குலாவி (திரிலோக சஞ்சாரி) என்னும் வழக்குணர்த்தும். மூவுலகென்றது மூவேந்தர் நாடுகளையே. ‘திரிபுவன தேவன்’, ‘திரிபுவனச் சக்கரவர்த்தி’, ‘மூவுலகாளி’ என்று சோழர் விருதுப் பெயர்கள் கொண்டிருந்தமை காண்க.*

*அகத்தியர் இராமன் காலத்திலேயே தமிழகம் வந்து பொதிய மலையில் தங்கிவிட்டதனால், அவர் “துவராபதிப் போந்து*

நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் அரசர் பதினெண் மரையும் பதினெண்குடி வேளிருள்ளிட்டாரையும் அருவாளரையும் கொண்டுபோந்து, காடு கெடுத்து நாடாக்கிப் பொதியின்கணிருந்து, இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து, இராக்கதரை ஆண்டு இயங்காமை" விலக்கினார் என்று, நச்சினார்க்கினியர் தம் தொல்காப்பிய எழுத்ததிகார உரைமுகத்திற் கூறியிருப்பது பொருந்தாது. இதிலிருந்து அறியக் கூடியதெல்லாம், கண்ணன் காலத்தில் மராட குச்சர நாடுகளில் தமிழ வேளிர் குடியிருந்தனர் என்பதே. இனி, அகத்தியர் இராவணனைத் தம் இசைவலிமையால் அடக்கித் தமிழகம் புகாமற் செய்தனர் என்பதும், இராமாயணக் கதையொடு முரண்படுவதாகும்.

## அருச்சுனன் (மருதன்) தென்னாட்டுத் திருநீராட்டு வருகை

அருச்சுனன் குமரிநீராடத் தென்னாடு வந்தபோது பாண்டியன் (சித்திராங்கதன்) மணவூர் என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டிருந்தான். அங்குப் பாண்டியனின் விருந்தினனா யிருந்த அருச்சுனனுக்கும் பாண்டியன் மகள் சித்திராங்கதைக்கும் இடையே காதல் நேர்ந்ததனால், இருவருக்கும் திருமணம் நிகழ்ந்தது.

சித்திராங்கதன், சித்திராங்கதை யென்பன, பாரத ஆசிரியர் வேண்டுமென்றே இட்ட வடசொற் கட்டுப்பெயர்கள்.

மணவூர் நிலையான தலைநக ரன்மையின், அங்குத் தமிழ்க் கழகம் ஏற்படவில்லை.

வடமொழியாளர் மணவூரை மணலூர் என்று திரித்து, சிக்காதாபுரி என்று மொழிபெயர்த் திருப்பதாகத் தெரிகின்றது.

பாரதப்போரில் முத்தமிழ் வேந்தருங் கலந்துகொண்டனர். சோழபாண்டியர் பாண்டவர்க்குத் துணைநின்று பொருதனர்.சேரன் உதியஞ் சேரலாதன் நடுநிலையா யிருப்பதுபோல் ஒரு பக்கமும் சேராதிருந்து, இருபக்கப் படைகட்கும் போர் நிகழ்ந்த பதினெண் நாளும் சோறு வழங்கி, பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதன் என்னும் பெறற்கரும் பெரும்பெயர் பெற்றான்.

> ***"யாணர் வைப்பி னன்னாட்டுப் பொருந***
> ***வான வரம்பனை நீயோ பெரும***
> ***அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ***
> ***நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை***
> ***யீரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்***
> ***பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"*** (புறம்.2)

என்று முரஞ்சியூர் முடிநாகராயர் பாடியிருத்தல் காண்க.

*பாரதப்போர் முடிந்தபின், வியாசர் மகாபாரதம் என்னும் வடமொழிப் பாவியத்தை இயற்றினார். அது பின்னர் மேன்மேலும் விரிவாக்கப்பட்டது. வியாசர் பதினெண் புராணங்களையும் இயற்றியதாகச் சொல்லப்படுகின்றது.*

*பாரதப் போருக்குப் பின்னரே அதர்வ (அதர்வண) வேதம் தோன்றி, வேதம் நான்கென வியாசரால் வகுக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதனாலேயே அவர் வேதவியாசர் என்று பெயர் பெற்றதாகத் தெரிகின்றது. முந்தின வேதங்களிற் சொல்லப்படாத பல்வேறு உலக வாழ்க்கைச் செய்திகளும், ஆரிய ஒழுக்க முறைகளும், ஆக்க வழிப்பு மந்திரங்களும், சாவேள்வியும், சில இருக்கு வேத மந்திரங்களுடன் சேர்த்து அதர்வ வேதத்திற் கூறப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. பேய் மந்திரங்களிலும் செய்வினையிலும் பற்றும் நம்பிக்கையுங் கொண்ட கல்லா மாந்தரைக் கவர்தற்கு, அதர்வ வேதம் தொகுக்கப்பட்டது போலும்!*

*பகவற்கீதை கண்ணபிரானாற் சொல்லப்பட்டதன்று; பத்துத் தோற்றரவு வகுப்பும் அத்துவைதம் என்னும் இரண்டன்மைக் கொள்கையும் தோன்றிய பின்னரே, ஒருவரால் இயற்றப்பட்டு மேன் மேலும் விரிவாக்கப்பட்டு வந்திருத்தல் வேண்டும்.*

*சாலோமோன் (கி.மு. 1034-980) என்னும் யூதவரசன், பாரதக் காலத்தில் தென்னாட்டினின்று மயில் குரங்கு தங்கம் முதலிய பொருள்களைக் கலங்களில் தருவித்தான்.*

*மயில் தமிழகக் குறிஞ்சிநிலப் பறவை. தோகை என்பது அதன் சினையாகுபெயர். அதற்கு அழகுதருவது அதன் தோகையே. தோகை-* Arab. *தாவூஸ், தவஸ்,* G.K. *தவோஸ்,* L. *பவோ,* E. *பீ*(pea), peacock *(மயிற்சேவல்).*

*கப்பு = மரக்கிளை. குரங்கு மரக்கிளையில் வாழ்வது.*

***“கோடுவாழ் குரங்கும் குட்டி கூறுப.”*** (தொல்1512)

*கப்பு - கப்பி (குரங்கு)* - Skt. *கபி,* Gk. *கேப்போஸ்,* Heb. *கோப்* (kof), E. (ape).

*பொன் கொங்குநாட்டில் மிகுதியாக விளைந்தது முன்னர்க் கூறப்பட்டது.*

***“ பொன்படு கொண்கான நன்னன் நன்னாட்***
***டேழிற் குன்றம் பெறினும்”*** (நற்.391)

***“ உவரா வீகைத் துவரை யாண்டு***
***நாற்பத் தொன்பது வழிமுறை வந்த***

***வேளிருள் வேளே விறற்போ ரண்ணல்***

***.....................................................................................***

***இருங்கட லுடுத்தவிவ் வையகத் தருந்திறற்***
***பொன்படு மால்வரைக் கிழவ"*** (புறம்.201)

என்பன, சாலோமோன் கப்பல்கள் பொன் ஏற்றிச் சென்ற உப்பரா (Ophir) என்னும் மேல்கரைத் துறைமுகத்திற்கு அடுத்துள்ள கொண் கானத்திலும் கொங்கிலும் பொன் விளைந்தமை கூறுதல் காண்க.

பாரதக் காலத்தில் ஆரியப் பூசாரிகள் வடஇந்தியா முழுதும் பரவியிருத்தல் வேண்டும். அதன்பின் அந் நிலப்பகுதிக்கு ஆரியா வர்த்தம் என்னும் பெயருண்டாயிற்று. வங்கநாட்டை யடைந்து காளிக் கோட்டத்தைக் கண்டபின், காளிவணக்கத்தை மேற்கொண்டு, காளி கோயிற் பூசாரியரு மாயினர்.

## ஆரியன் என்னும் சொல்

ஐரோப்பிய மொழிகளும், பாரசீக மொழியும், வேத மொழியும் சமற்கிருதமும், வடஇந்திய மொழிகள் மட்டுமன்றி நடுவிந்திய மொழிகளும், இன்று ஆரியம் என்று சொல்லப்படினும், முதன்முதல் அப் பெயர் ஏற்பட்டது வேதமொழியும் சமற்கிருதமும் ஆகிய வடமொழிக்கே. சென்ற நூற்றாண்டில் மாகசுமுல்லரே வேத மொழிக்கு அல்லது சமற்கிருதத்திற்கு இனமான மொழிகட் கெல் லாம் ஆரியம் என்னுஞ் சொல்லைப் பொதுப்பெயராக வழங்கினார்.

ஐரோப்பிய மொழிகட்கும் பாரசீகத்திற்கும் ஆரியம் என்னும் பெயர் பொருந்தினும் வடஇந்திய மொழிகட்கு, சிறப்பாக நடுவிந்திய மொழிகட்கு, அப் பெயர் பொருந்தாது. வடமொழியாளரே வேதக்காலத்தின்பின், தென்னிந்திய மொழிகளை யெல்லாந் திரவிட மொழிகள் என்று கொண்டு, தமிழ், தெலுங்கு, கன்னடம், மராத்தி, குசராத்தி ஆகிய ஐந்தையும் ஐந்திரவிடம் (பஞ்ச திராவிட) எனக் குறித்தனர். வடஇந்திய மொழிகளை 'முன்வடமொழி' (பிராகிருதம்) எனக் குறிப்பதே பொருத்தமாம். வடஇந்திய மொழிகளையும் நடுவிந்திய மொழிகளையும் ஆரிய மொழிகள் எனக் கொள்வது மட்டுமன்றி, அவற்றைச் சமற்கிருதக் கிளைகளாகவுங் கொள்வது, இருமடி மொழியியல் வழுவாம். இது, தமிழ் குமரிநாட்டு மொழி யென்னும் உண்மையையும் அதன் வடதிசைத் திரிபையும் அறி யாததனால் விளைந்த கேடாகும்.

ஆரியன் மொழி ஆரியம். ஆரியன் (ஆர்ய) என்னுஞ் சொல்லை 'அர்ச்' என்னும் மூலத்தினின்று திரிந்ததாகக் கொண்டு, வணங்கப் படத்தக்கவன் என்று அதற்குப் பொருள் கூறுவர் செருக்கிற் சிறந்த பிராமணர், ஏரைக் குறிக்கும் 'அர்' என்னும் இலத்தீனச் சொல்லி னின்று ஆரியன் என்னும் சொல்லைத் திரித்து, அதற்கு ஏர்த்தொழில்

*செய்வோர் என்று பொருள் கூறுவர் மாகசுமுல்லர். சமற்கிருதத்தில் இல்லாத மேலையாரியச் சொற்களுள் 'அர்' (ஏர்) என்பது ஒன்றென்று அவரே கூறியிருப்பதாலும், வேத ஆரியர் மாடு மேய்த்தவரேயன்றிப் பயிர்த்தொழில் செய்யாதவராதலாலும், அதுவும் பொருந்தாது.*

*ஆரியம் தமிழின் இருமடித் திரிபாதலாலும், சமற்கிருதச் சொற்களின் ஐந்தி லிருபகுதி தமிழாதலாலும், வடமொழியாளர்க்கு ஆரியர் என்னும் பெயர் இந்தியாவிலேயே, அதுவும் அவர் தமிழரொடு தொடர்புகொண்ட பின்னரே ஏற்பட்டதனாலும், ஆரியன் என்னும் சொற்கு மூலம் தமிழிலேயே ஆய்ந்து காணல் வேண்டும். "மிலேச்சர் ஆரியர்" என்னும் பிங்கல நூற்பா(5:72), ஆரியரின் முற்கால நிலைக்கு ஏற்பினும் பிற்கால நிலைக்கு ஏற்காது.*

*அருமை = பெறற்கரிய அல்லது காண்டற்கரிய பெருஞ் சிறப்பு, மேன்மை. அரு - அரி - ஆரி = மேன்மை. ஆரி - ஆரியம் = மேன்மை.*

***" ஆரி யந்தனி யைங்கரக் களிறு "*** (கம்பரா. ஊர்தேடு.11)

*ஆரியம் - ஆரியன் = மேலோன், பெரியோன்.*

***" அஞ்சிலே யொன்றா றாக வாரியற் காக வேகி "***
(கம்பரா. பாயிரம். அனுமன்)

***" ஐயுற லுளதடை யாளம் ஆரியன்***
***மெய்யுற வுணர்த்திய வுரையும் வேறு "*** (கம்பரா. உருக்.25)

***" ஆரிய னுரைப்ப தானா னனைவரு மதனைக் கேட்டார் "***
(கம்பரா. விபீடண.106)

*கம்பர் இராமனை ஆரியன் என்றது, பண்பும் பதவியும் பற்றியுமே யன்றி இனம்பற்றி யன்று. இராமன் சோழர்குடியைச் சேர்ந்தவ னென்றும் வடநாட்டுத் திரவிடனென்றும், ஆரிய இனத்தானல்ல னென்றும் அறிதல் வேண்டும்.*

*பார்ப்பான், அந்தணன், ஐயன் என்னும் தூய தமிழ்ப் பெயர் களை ஆரியர் எங்ஙனம் மேற்கொண்டனரோ, அங்ஙனமே ஆரியன் என்னும் பெயரையும் தென்சொல் என்று தெரிந்தோ தெரியாமலோ மேற்கொண்டிருத்தல் வேண்டும். இது, துரை என்னும் தென்சொல் வெள்ளையருக்கே பிற்காலத்தில் வரையறுக்கப்பட்டது போலாம்.*

*இராமாயணக் கதையிலும் பாவியத்திலும் பல செய்திகள் பிராமணராற் கட்டிச் சொல்லப்பட்டிருப்பதுபற்றி, இராமனை ஓர் ஆரிய அடிமைய னென்று இகழ்ந்துவிடல் கூடாது. மேலும்,*

இக்காலத்திலும் நம்மிடையே ஆரிய அடிமையரான அமைச்சரும் கட்சித்தலைவரும் இருக்கும்போது, நாம் ஏன், வரலாற்றுச் சான்றில்லாததும் மெய்யானதென்று திட்டமாகத் தெரியாததுமான ஒரு பழங்கதையிற் சொல்லப் பட்டிருப்பவனைப்பற்றிக் கருதி வீணாக நோகவேண்டும்?

சம்புகன் என்னும் சூத்திரன் தவஞ்செய்ததால் ஒரு பிராமணப் பிள்ளை இறக்க, அது அகாலச் சாவென்று கருதித் தந்தை துயருற்றதை, நாரதரால் அறிந்த இராமன் சூத்திரனைக் கொன்ற வுடன், பிராமணப் பிள்ளை உயிர்பெற் றெழுந்தது என்னுங் கதை, பழங்குடி மக்களை அச்சுறுத்தப் பிராமணர் கட்டிய கட்டுச் செய்தியாகவு மிருக்கலாம்.

துரோணாச்சாரியன் ஏகலைவனுக்கு விற்கலை பயிற்ற இசையாமையும், அவன் தானாகப் பயின்றபின் அவனது இடக்கைப் பெருவிரலைத் துண்டிக்கச் செய்ததும், பாரதக் காலத்தில் உண்மையாக நடந்ததென்று கருத இடமுண்டு.

ஆரியன் என்ற சொல்லொடு, aristo (best) என்னும் கிரேக்கச்சொல் தொடர்புடையதா யிருக்கலாம்.

வல் - வள் - வட்டு (வள்+து) - வட்டம் - **பிரா**. வட்ட - வ. வ்ருத்த - வர்த்த. வர்த்த என்னுஞ்சொல் 'ஆ' என்னும் முன்னொட்டுப் பெற்று ஆவர்த்த என்றாகும். ஆரிய + ஆவர்த்த = ஆரியா வர்த்த. பிரம வர்த்த என்பதில் முன்னொட்டில்லை. வட்டம், வட்டகை, வட்டாரம் என்னுஞ் சொற்கள் தமிழகத்திலும் நாட்டுப் பகுதிகளைக் குறித்தல் காண்க.

பாபிலோனுக்கு முதன்முதல் மயில் கொண்டுசென்றவர் தென்னாட்டு வணிகரே.

## தொல்காப்பியம்
### (கி.மு.7ஆம் நூற்றாண்டு)

தொல்காப்பியம் இன்றுள்ள முதல் தொன்னூல் மட்டுமன்றி, பண்டைத் தமிழ் நாகரிகத்தையும் பண்பாட்டையும் தாங்கிநிற்கும் ஒரு பெருந் தூணாகும். அஃதின்றேல், கடைக்கழகத்திற்கு முந்திய தமிழும் தமிழ் வரலாறும் அதனால் தமிழர் வரலாறும் அறவே இல்லாமற் போம்; தமிழன் உலகுள்ள வளவும் ஆரியனுக் கடிமையாகவே இருந்துழல்வான். குமரிநாட்டுத் தமிழன் தன் நுண்மாண் நுழைபுலத்தால் வகுத்த பொருளிலக்கணம், அதற்கு அச் சிறப்பைத் தந்துள்ளது.

அத்தகைய சிறப்பு வாய்ந்ததேனும், முகமண்டபமும் கூட கோபுரமுங் கொண்ட மணிமாட மாளிகைகள் நிறைந்த ஒரு மாநகரம், ஆழ்கடலில் மூழ்கிப்போனபின், அதன் கற்கள் சிலவற்றை யெடுத்துக் கட்டிய ஒரு சிற்றில் போன்றதே தொல்காப்பியம்.

இலக்கணத்திற்கு முந்தியது இலக்கியம்; இலக்கியத்திற்கு முந்தியது மொழி. தொல்காப்பியத்திற்கு முந்தின இலக்கணங்களே நூற்றுக்கணக்கின; இலக்கிய நூல்கள் ஆயிரக்கணக்கின; ஏனைப் பனுவல்கள் எண்ணிறந்தன.

தொல்காப்பியச் சிறப்புப்பாயிரம் பாடிய பனம்பாரனார் என்னும் உடன் மாணவர்,

**“ செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு**
**முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்**
**புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்”**

என்று கூறியிருப்பது , 2ஆம் கடல்கோட்குப்பின், நீண்ட காலமாகக் கழகந் தோன்றாமையால் பண்டை நூல்களெல்லாம் ஆரியரால் அழியுண்டும் மறையுண்டும் போனநிலைமையில், உ.வே.சாமி நாதையர் திருவாவடுதுறை மடத்தில் அழிவிற்குத் தப்பிக் கிடந்த கடைக்கழகப் பனுவல்களையும் தொகைநூல்களையும் கண்டெடுத்ததுபோல், தொல்காப்பியனாரும் பல தொன்னூல்களைக் கண்டெடுத்தாரோ எனக் கருத இடந்தருகின்றது.

**“ ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்”**

என்று பனம்பாரனாரும்,

**“ இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்**
**றனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே.”** (தொல்.880)

**“ நூலே கரகம் முக்கோல் மணையே**
**ஆயுங் காலை அந்தணர்க் குரிய”** (தொல்.1570)

என்று தொல்காப்பியனாரும் கூறியிருப்பதால், தொல்காப்பியக் காலத்திலேயே ஆரியம் தமிழகத்தில் ஓரளவு வேரூன்றிவிட்டதை அறியலாம்.

ஆரியர் கூறும் படைப்புத் தெய்வமாகிய பிரமனைத் தமிழர் ஒத்துக்கொள்ளாமையால், முத்திருமேனியரும் சேர்ந்தவரே முதற் கடவுள் என்பதை யுணர்த்தற்கு, ஆரியப் போலித் துறவியர் சென்றவிடமெல்லாம் முக்கவர்க்கோலை ஏந்திச் சென்றனர்.

**“ எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடைநீழல்**
**உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்**

***நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக்***
***குறிப்பேவல் செயன்மாலைக் கொளைநடை யந்தணீர்"*** (கலித்.9)

என்னும்பாலைக்கலித்தரவையும்"உறியிலேதங்கினகமண்டலத்தையும், அரி அயன் அரனென்னும் மூவரும் ஒருவரென்று சொல்லுதல் தன்னிடத்தே அமைந்த முக்கோலையும், முறைமைபடத் தோளில் வைத்து...........போதலை இயல்பாக வுடைய ஒழுக்கத்தினை யுடையீர்" என்னும் அதன் உரையையும் நோக்குக.

***" புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்"***

என்றதற் கேற்ப,

***" எழுத்தெனப் படுப***
***...................***
***முப்பஃ தென்ப"*** (தொல்.1)

என்று எழுத்ததிகாரத்தையும்,

***" உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே***
***அஃறிணை யென்மனார் அவரல பிறவே"*** (தொல்.484)

என்று சொல்லதிகாரத்தையும்,

***" கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்***
***முற்படக் கிளந்த எழுதிணை யென்ப"*** (தொல்.947)

என்று பொருளதிகாரத்தையும், அதனுள்ளும்,

***" அகத்திணை மருங்கின் அரில்தப வுணர்ந்தோர்***
***புறத்திணை யிலக்கணந் திறப்படக் கிளப்பின்"*** (தொல்.1002)

என்று புறத்திணை யியலையும்,

***" பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்***
***கண்ணிய புறனே நால்நான் கென்ப"*** (தொல்.1195)

என்று மெய்ப்பாட்டியலையும்,

***" நல்லிசைப் புலவர் செய்யு ளுறுப்பென***
***வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே"*** (தொல்.1259)

என்று செய்யுளியலையும் தொடங்கியதுடன், இடையிடை நெடுகலும் "என்மனார் புலவர்", "நுண்ணிதின் உணர்ந்தோர்", "மொழிப", "என்றிசி னோரே" என்றும் பிறவாறும் முன்னூலாரைப் பன்மையிற் சுட்டி, இறுதியில் நூலையும் "நுனித்தகு புலவர் கூறிய நூலே" என்று தொல்காப்பியனார் முடித்திருப்பதால், ஒரோவிடத்துள்ள ஒருசில ஆரியக் கருத்துகள் தவிர ஏனைய இலக்கணச் செய்திகளெல்லாம், முந்து நூல்களிற் கண்டவையே என்பது தெளிவாகும்.

தொல்காப்பியத்திற் சொல்லப்பட்டுள்ள (அகமும் புறமும் பற்றிய) பாட்டு, உரை, நூல் (இலக்கணமும் பல்வேறு அறிவியலும்), வாய்மொழி (மந்திரம்), பிசி (விடுகதை), அங்கதம் (எதிர்நூல்), முதுசொல் (பழமொழி) என்னும் எழுநில யாப்பிற்கும்; வெள்ளை, ஆசிரியம், கலி, வஞ்சி, மருள், பரிபாடல் என்னும் அறுவகைப் பாவிற்கும்; புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, அவையடக்கியல், செவியுறை என்னும் நால்வகை வாழ்த்திற்கும்; பாவண்ணம், தாவண்ணம் முதலிய இருபதுவகை வண்ணத்திற்கும்; அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்னும் எண்வகை வனப்பிற்கும் இலக்கியமா யிருந்தவற்றுள் ஒன்றுகூட இன்றில்லை.

இலக்கணத்திற்கு முந்தியது இலக்கியமும் இலக்கியத்திற்கு முந்தியது மொழியுமாதலாலும், சொல்லிலும் சொல்வடிவிலும் உலக வழக்கினின்று வேறுபட்ட செய்யுள் வழக்கே பண்டை யிலக்கண நூல்களிற் பெரும்பாலும் எடுத்து விளக்கப் பட்டமையாலும், உலக வழக்குப் பொதுமக்களுடைய தாதலாலும், பொதுமக்களொடு தொடர்புகொள்ளாத புலவர் சிலரும் இலக்கண நூல் இயற்றி யுள்ளமையாலும், எல்லாத் தமிழ்ச்சொற்களையும் எடுத்துக் கூறும் மேலைமுறைச் சொற்களஞ்சியம் இதுவரை தொகுக்கப் பெறாமை யாலும், தமிழின் சொல்வளத்தை மொழியாராய்ச்சி வாயிலாகவே அறிதல் கூடும்.

***“ சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே***
***அ ஐ ஔஎனும் மூன்றலங் கடையே”*** (எழுத்து.62)

என்னும் தொல்காப்பிய நூற்பா உண்மைக்கு மாறானது. இந் நூற்பாவின் 2ஆம் அடியின் “அவைஔ என்னும் ஒன்றலங் கடையே” என்னும் பாட வேறுபாடு மிகப் பொருத்தமாம். ஆயின், தொல் காப்பியரைப் பெருமைப்படுத்துவதாகக் கருதிக்கொண்டு இப்பாட வேறுபாட்டை ஏற்க மறுப்பவர், உண்மையில் தொல்காப்பி யரையும் தமிழையும் சிறுமைப்படுத்துபவரேயாவர். தொல்காப் பியத்திற் சகர முதற்சொல் ஆளப்பெறாமை, அச் சொல் தமிழில் இன்மைக்குச் சான்றாகாது.

***“ சரிசமழ்ப்புச் சட்டி சருகு சவடி***
***சளிசகடு சட்டை சவளி – சவிசரடு***
***சந்து சதங்கை சழக்காதி யீரிடத்து***
***வந்தனவாற் சம்முதலும் வை”***

என்று, பண்டை நாளிலேயே ஓர் இலக்கண நூலாசிரியனால் சகர முதலின்மைக் கொள்கை மறுக்கப்பட்டுள்ளமை, நன்னூல் மயிலை நாதருரையால் (எழுத்து.51) அறியக்கிடக்கின்றது.

## சகரமுதற் சொற்கள்

*சக்கட்டி, சக்கல், சக்கு, சக்கை, சகடம் (சகடை), சகண்டை, சகதி, சகோடம்,*

*சங்கங்குப்பி, சங்கு (சங்கம்),*

*சச்சரவு, சச்சு,*

*சட்டம் (சட்டகம்), சட்டன் (சட்டநம்பி, சட்டநம்பிப் பிள்ளை-சட்டாம்பிள்ளை), சட்டி, சட்டு, சட்டுவம் (சட்டுகம்), சட்டை, சடக்கன், சடக்கு, சடங்கம், சடங்கு, சடசட (சடபுட), சடார், சடுகுடு, சடை, சடைவு,*

*சண்டி, சண்டு, சண்டை, சண்ணம், சண்ணி, சண்ணு, சண்பு (சம்பு), சணம் (சணல்), சணாய், சணாவு, சணை,*

*சத்தவி, சத்தான் (செத்தான்), சதக்கு, சதுப்பு, சதை,*

*சந்தனம், சந்தி, சந்து, சந்தை,*

*சப்பட்டை, சப்பளி (சப்பளம்-சப்பணம்-சம்மணம்), சப்பரம், சப்பன், சப்பாணி, சப்பு (சவறு), சப்பு (சப்பிடு-சாப்பிடு), சப்பை,*

*சம், சம்பளம், சம்பா, சமட்டு (சமட்டி-சம்மட்டி, சவட்டு-சவட்டி - சாட்டி, சவட்டை-சாட்டை), சமம் (சமன்), சமர் (சமர்த்து), சமை (சமையல், சமைதல், சமையம், சமயம்),*

*சர், சர (சரசர), சரக்கு, சரக்குப்புரக்கு, சரட்டு, சரடு, சரப்பளி (சரப்பணி), சரவடி, சரவை, சரி, சருக்கரை (சக்கரை), சருக்காரம் (சக்காரம்-சக்கரம், செக்கு), சருக்குக் கட்டை, சருகம், சருகு, சருச்சரை, சருவு (சருவம்), சரேல்,*

*சல் (செல்), சல்லரி, சல்லி, சல்லிகை, சலக்கு, சலங்கு, சலங்கை (சதங்கை), சல (சலசல), சலகு (சலகன்-சலவன்), சலகை, சலம், சலம்பு, சலவை, சலாகை, சலாங்கு, சலி (சலியடை-சல்லடை), சலுக்குமொலுக்கு, சலுகை,*

*சவ்வு, சவ (சவு), சவக்கு, சவடி, சவடு, சவம், சவர், சவர்க்களி, சவலை, சவள், சவளம், சவளி, சவளை, சவறு, சவை,*

*சழக்கு, சழங்கு, சழி,*

*சள், சள்ளு, சள்ளை, சள (சளசள), சளப்பு, சளம்பம், சளார், சளி,*

*சற்று, சறாம்பு, சறுக்கு, சறை, சறைமணி, சன்னம்.*

இச் சொற்களெல்லாம் தொல்காப்பியர் காலத்திற்குப் பின் றோன்றியவை என்பர் சிலர். அவர் தமிழியல்பையும் தமிழ்

*வரலாற்றையும் அறியார். தொல்காப்பியர்க்குப் பின் தமிழ் தளர்ந்ததே யன்றி வளர்ந்ததின்று.*

*சக்கணி (கூத்துவகை), சடங்கடி (வஞ்சனை), சடரி (சிதைவு), சடலை (வீண்செயல்), சக்கத்து (முத்துவகை), சக்கட்டம் (சக்கந்தம் ), சட்டறம் (அறவுரை), சப்படி (வயிரக்குற்றம்), சராய் (காற்சட்டை), சல்லடம் (அரைக்காற் சட்டை), சல்ல வட்டம் (கேடகவகை), சமனை (ஓகவகை), சவதரி (தேடு) என்பனவும், இவை போன்ற பிறவுமே, தொல்காப்பியருக்குப் பின் தோன்றி யிருக்கலாம்.*

*தொல்காப்பியர் உலகவழக்கைச் செவ்வையாக ஆராயவில்லை என்பதற்குப் பல சான்றுகள் உள.*

*(1)* **“ மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பின்**
**பார்ப்பும் பறழும் குட்டியும் குருளையும்**
**கன்றும் பிள்ளையும் மகவும் மறியும்என்(று)** (மரபு.1)

*என்றதோடமையாது,*

**“ சொல்லிய மரபின் இளமை தானே**
**சொல்லுங் காலை அவையல திலவே”** (மரபு.26)

*என்று வரையறையும் இட்டார் தொல்காப்பியர்.*

*கசளி, கயந்தலை, கரு, கருந்து, குஞ்சு, குருமன், செள், சேய், நாகு, புதல்வு (புதல்வன், புதல்வி), பொடி, முனி (யானைக் கன்று) முதலிய இளமைப் பெயர்கள் விடப்பட்டுப்போயின. இங்ஙனமே சில ஆண்பாற் பெயர்களும் பெண்பாற் பெயர் களும்.*

*(2) நீன் நீம் என்பன முன்னிலை யொருமை பன்மைப் பெயர்கள். இவற்றின் முந்தின நிலை நூன் நூம். நூம் என்பதன் வேற்றுமை யடி நும். நீன் என்பதன் கடைக்குறை நீ. நீ என்பது இர் என்னும் பலர்பா லீற்றொடு சேர்ந்து நீயிர் நீவிர் என்றாகும். ஆயின், தொல் காப்பியரோ, நும் என்பதனின்று நீயிர் என்பதைத் திரித்தார்.*

**“ அல்லதன் மருங்கிற் சொல்லுங் காலை**
**உக்கெட நின்ற மெய்வயின் ஈவர**
**இய்யிடை நிலைஇ ஈறுகெட ரகரம்**
**நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே**
**அப்பால் மொழிவயின் இயற்கை யாகும்.”** (தொல்.326)

*(3) ஒன்பது + பத்து என நிறுத்தித் தொண்ணூ று என்றும், ஒன்பது + நூறு என நிறுத்தித் தொள்ளாயிரம் என்றும் புணர்த்தார் தொல் காப்பியர். (தொல்.எழுத்து.குற்.40-58)*

இது நாளிகேரம் என்னும் சொல்லினின்று கேரளம் என்னும் சொல்லைத் திரிக்கும் வடமொழி வழக்கொத்ததே.

இவற்றை இடைச்செருகல் என்பார் இடைச்செருகலின் இயல்பை அறியார். இவை இடைச்செருகலாயின் நன்னூலார் இவற்றைப் பின்பற்றியிரார். இவை போன்ற தவற்றுப் புணர்ப்பும் பிரிப்பும் இன்னும் பலவுள. அவை யெல்லாம் என் ‘தொல்காப்பிய விளக்கம்’ என்னும் நூலில் விளக்கப்பெறும்.

(4) உரியியலில் தீர்தல், தீர்த்தல், பழுது, முழுது என்னும் பெருவழக்கான உலகவழக்குச் சொற்களும், அருஞ் செய்யுட்சொற்கள் போல் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

(5) புணரியல் 17ஆம் நூற்பாவிற் சாரியை என்று கூறப்பட்டுள்ள வற்றுள், ஆன் அக்கு இக்கு என்பன சாரியையல்ல. இற்றுச் சாரியை குறிக்கப்பெறவில்லை. அற்றுச் சாரியை வற்றுச்சாரியை எனக் குறிக்கப்பட்டுள்ளது. இவை யெல்லாம் என் தொல்காப்பிய விளக்கத்தில் விரிவாகக் கூறப்பெறும்.

## பிள்ளையாட்டு

தொல்காப்பியத்திற் சொல்லப்பட்டுள்ள பல புறத்துறைகள், பண்டைத் தமிழரின் மறத்தை மட்டுமன்றி, அக்காலத்துக் கோவரசிலுள்ள குடியாட்சி யுரிமையையுங் காட்டுவனவாயுள.

> ***“ வாண்மலைந் தெழுந்தோனை மகிழ்ந்துபறை தூங்க***
> ***நாடவற் கருளிய பிள்ளை யாட்டும்”*** (தொல்.புறத். 60)

என்னும் கரந்தைத்துறையும், அதன் உரையில் நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டிய,

> ***“ வன்கண் மறமன்னன் வாண்மலைந்து மேம்பட்ட***
> ***புன்றலை யொள்வாட் புதல்வற்கண் – டன்புற்றுக்***
> ***கான்கெழு நாடு கொடுத்தார் கருதார்க்கு***
> ***வான்கெழு நாடு வர”***

என்னும் வெண்பாவும் பாராட்டி மகிழத்தக்கன. இது புறப்பொருள் வெண்பா மாலையில் முற்றும் மாற்றப்பட்டுச் சிறப்பிழந் துள்ளது.

### தொல்காப்பிய நால்வகுப்பு

> ***“ நூலே கரகம் முக்கோல் மணையே***
> ***ஆயுங் காலை அந்தணர்க் குரிய.”*** (தொல்.1570)

> ***“ அந்த ணாளர்க் குரியவும் அரசர்க்(கு)***
> ***ஒன்றிய வரூஉம் பொருளுமா ருளவே.”*** (தொல்.1572)

***“ அந்த ணாளர்க் கரசுவரை வின்றே.”*** (தொல்.1574)

***“ படையுங் கொடியுங் குடையும் முரசும்***
***நடைநவில் புரவியுங் களிறுந் தேரும்***
***தாரும் முடியும் நேர்வன பிறவும்***
***தெரிவுகொள் செங்கோல் அரசர்க் குரிய.”*** (தொல்.1571)

***“ வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை.”*** (தொல்.1578)

***“ வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது***
***இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி.”*** (தொல்.1581)

*ஆரிய நால்வரணப் பாகுபாடு தமிழகத்தில் மெள்ளமெள்ளப் புகுத்தப்பட்டது. தொல்காப்பியர் காலத்தில் பிராமணரே அந்தண ராயினர். அவர்க்கு அரசுரிமையும் கொள்ளப்பட்டது. மற்ற மூவகுப் பும் முன்போலிருந்தன. வாணிகர்க்கு வைசியர் என்னும் வடசொல் வழங்கத் தொடங்கிற்று.*

*வேளாண் தலைவரான வேளிர்க்கு அல்லது குறுநில மன்னர்க்கு வேந்தர்க் குற்றுழிப் பிரிவுண்டு. அதனால்,*

***“ வேந்துவிடு தொழிலின் படையுங் கண்ணியும்***
***வாய்ந்தனர் என்ப அவர்பெறும் பொருளே.”*** (தொல்.1582)

***“ வில்லும் வேலுங் கழலுங் கண்ணியும்***
***தாரும் ஆரமுந் தேரும் வாளும்***
***மன்பெறு மரபின் ஏனோர்க்கு முரிய”*** (தொல்.1583)

*என்று கூறப்பட்டது. இச் சிறப்பு பொதுமக்களான உழுதூண் வேளாளர்க் கில்லை யென்பது,*

***“ அன்ன ராயினும் இழிந்தோர்க் கில்லை”*** (தொல்.1584)

*என்பதனாற் பெறப்படும்.*

## தொல்காப்பிய அரங்கேற்றம்

*தொல்காப்பியர் அகத்தியரின் மாணவரல்லர். மாணவராயின் அகத்தியரை அல்லது அகத்தியத்தைத் தம் நூலிற் குறித்திருப்பார். அகத்தியர் தலைமையிலேயே தொல்காப்பியமும் அரங்கேற்றப் பட்டிருக்கும். “முந்துநூல் கண்டு” என்றதற் கேற்ப, “என்மனார் புலவர்” என்று பலர்பாலிலேயே முன்னூலாசிரியரைத் தம் நூல் முழுதும் குறித்திருக்கின்றார். அகத்தியர்க்கும் தொல்காப்பியர்க்கும் இடைப்பட்ட காலம் ஏறத்தாழ ஐந்நூறாண்டாகும். முன்னவரின் மாணவரே பின்னவர் என்று கொண்டவர், அகத்தியரைப்பற்றித் தொல்காப்பியத்தில் ஒரு குறிப்புமின்மையால், அதற்குங் கரணியங் காட்டுவார்போல் ஒரு கதையைக் கட்டிவிட்டனர்.*

தொல்காப்பியர் காலத்தில் கழகமும் ஏற்படவில்லை. பாண்டியன் பெரும்பாலும் மணவூரில் வதிந்திருத்தல் வேண்டும். அற்றைப் பாண்டியன் பெயர் நிலந்தரு திருவிற் பாண்டியன் என்று, பனம்பாரனார் குறித்துள்ளார். அவன் இரண்டாம் கடல்கோட்குத் தப்பின இடைக்கழகப் பாண்டியன் அல்லன். நிலமில்லாத தன் குடிகள் சிலர்க்கு நிலம் ஒதுக்கியதனால், அப் பெயர் பெற்றிருத்தல் வேண்டும்.

***“ அறங்கரை நாவின் நான்மறை முற்றிய***
***அதங்கோட் டாசாற் கரில்தபத் தெரிந்து ”***

என்று சிறப்புப் பாயிரங் கூறுவதால், அரங்கேற்ற அவையில் தலைமை தாங்கினவன் நால்வேதமும் வல்ல ஒரு பிராமணத் தமிழ்ப்புலவன் என்பது தெளிவாகின்றது. இது இரா. இராகவையங்கார் தலைமையில் உ.வே. சாமிநாதையர் தம் நூலை அரங்கேற்றிய தொத்ததே.

தொல்காப்பியத்திலுள்ள ஆரியக் கருத்துகளும் ஒருசில வட சொற்களும்பற்றி நாம் வருந்த வேண்டுவதில்லை. அது அக்காலத்து நிலைமை. ஆரியக் கருத்தும் சொல்லும் கொண்டிருந்ததனாலேயே, அது இதுவரை அழிவுறாமல் தப்பிவந்துள்ள தென்று நாம் உணர்ந்து மகிழவேண்டும்.

கிறித்துவிற்கு முற்பட்ட கடைக்கழகக் காலத்து நூல்களுள், நமக்குக் கிடைத்துள்ளது திருக்குறள் ஒன்றே. அதுவும், ஆதிபகவன் கதையாலும் திரிவர்க்க வழிநூலென்னும் இளைப்பாலும் திருவள்ளுவ வெண்பாமாலையாலுமே தப்பி யிருத்தல் வேண்டும். திருக்குறட்கு ஐந்நூறாண்டு முற்பட்டதும், இயற்றமி ழிலக்கணம் முழுவதும் குமரிநாட்டு முறைப்படி எடுத்தியம்புவதுமான தொல்காப்பியம், நம் முன்னோரின் பெருமையை அறியவும், மீண்டும் தமிழை அரியணை யேற்றவும் நாமும் முன்னேறி நம் உரிமையை முற்றும் பெறவும், இன்று நம் கையில் உள்ளதெனின், இது நம் நற்காலத்திற் கேதுவான இறைவன் திருவருளே என்று தெரிந்து கொள்க.

## தொல்காப்பியத் தொழிற்குலங்களும் தொழில்களும்

அகவர் (வ. சூதர்.) -அரசன் பள்ளியெழுச்சி பாடுவோர்.

***“ சூத ரேத்திய துயிலெடை நிலையும் ”*** (தொல்.பொருள்.91)

***“ நாளீண்டிய நல்லகவர் ”*** (மதுரைக்.223)

தொல்காப்பியத்தில் வடசொல்லே ஆளப்பட்டுள்ளது.

அடியோர் - அடித்தொழில் செய்பவர், அடிமையர்.

அந்தணர் - துறவியர்.

| | | |
|---|---|---|
| அரசர் | - | நாடாள்வார். |
| அறிவர் | - | முக்கால அறிவினர், முற்காணியர் (Prophets) |
| ஆயர் | - | ஆநிரை மேய்ப்போர், ஆடுமாடு மேய்க்கும் இடையர். |
| இளையர் | - | வேலைக்காரர். |
| ஏரோர் | - | உழவர். |
| ஐயர் | - | முனிவர். |
| செவிலி | - | அரசர் செல்வர் முதலிய பெருமக்கள் பிள்ளைகளின் வளர்ப்புத்தாய். |
| கூத்தர் | - | கூத்தாடுபவர், நடஞ்செய்பவர், நாடக நடிகர். |
| துடியர் | - | உடுக்கை யடிப்பவர். |
| தேரோர் | - | தேர்ப்பாகர். |
| படைஞர் | - | படைமறவர். |
| பரத்தையர் | - | விலைமகளிர், பொதுமகளிர். |
| பாகர் | - | குதிரைப்பாகர் (வாதுவர்), யானைப் பாகர். |
| பாங்கன் | - | அரசரின் அகப்பொருளொழுக்கத் தோழன். |
| பாங்கி | - | அரசியரின் அகப்பொருளொழுக்கத் தோழி. |
| பாணர் | - | இசைப்பாணர், குழற்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப்பாணர் ஆகிய இசைத் தொழிலார் |
| பார்ப்பார் | - | ஆசிரியர், புலவர், உவச்சர், குருக்கள் முதலிய இல்லறத்தாரான கல்வித் தொழிலார். |
| பொருநர் | - | ஏர்க்களம் பாடுநரும் போர்க்களம் பாடுநரும். |
| மறவர் | - | போருங் கொள்ளையுமாகிய மறத்தொழில் புரியும் பாலைவாணர், படைமறவர். |
| வாணிகர் | - | சில்லறையாகவும் மொத்தமாகவும் பண்டமாற்றுச் செய்யும் நிலவாணிகரும், கடல் கடந்து வெளிநாட்டொடு வணிகஞ் செய்யும் நீர்வாணிகரும். |
| விரிச்சி | - | விரிச்சி (oracle) கூறுபவர். விள்- விடு - விடிச்சி - விரிச்சி = தெய்வத்தினிடமிருந்து மறைவான செய்திகளை அறிந்து வெளிப்படுத்துதல். |
| வினைவலர் | - | ஏவிய தொழில் செய்வதில் வல்லவர். |
| விறலி | - | விறல்(சத்துவம்)பட ஆடும் பாண்மகள். |
| வேட்டுவர் | - | வேட்டைத் தொழில் செய்யும் குறிஞ்சி, முல்லை பாலைவாணர். |

வேந்தர் - சேரசோழபாண்டியர்.

வேயர் - ஒற்றர்.

வேலன் - முருகன் என்னும் தெய்வமேறி யாடுபவன்.

வேளாளர் - உழுதுண்போரும் உழுவித்துண்போரும்.

இனி, பல்வகைக் கட்டடங்களும் கருவிகளும் கலங்களும் செய்பொருள்களும் தொல்காப்பியத்திற் குறிக்கப்பட்டிருப்பதால், அவற்றை உருவாக்கிய கொல்லர், தச்சர், கற்றச்சர், தட்டார், கன்னார் என்னும் ஐவகைக் கம்மியரும் கொத்தர் நெசவர் குயவர் முதலிய தொழிலாளரும், அக்காலத்தில் இருந்திருத்தல் வேண்டும்.

**தொல்காப்பியர் காலத் தமிழக எல்லை**

> ***“ வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்***
> ***நாற்பெயர் எல்லை யகத்தவர் வழங்கும்***
> ***யாப்பின் வழிய தென்மனார் புலவர்”*** (தொல்.1336)

என்று, தொல்காப்பியர் தம் காலத் தமிழ்யாப்பிற்குக் கூறிய எல்லையே அவர் காலத் தமிழக எல்லையு மாகும். ஒரு நாட்டிற்கு நாற்றிசை யிருப்பின், நாலெல்லையும் இருக்கத்தான் செய்யும். அதைச் சொல்ல வேண்டுவதில்லை. ஆயின், எல்லைப் பெயரைக் குறியாது நாற்பெயர் எல்லை என்று மட்டும் சொல்லி யிருத்தலால், அந் நாலெல்லையும் வேறுபட்ட வகையினவா யிருத்தல் வேண்டும். வடக்கில் வேங்கட மலையும் தெற்கில் குமரியாறும் கிழக்கில் வங்கக் கடலும் தெளிவாய்த் தெரிந்த எல்லைகளாம். மேற்கில் எது எல்லையெனின், அது குடமலைத் தொடரே. அக்காலத்தில் சேரநாடு திருச்சிராப்பள்ளி மாவட்டக் கருவூரைத் தலைநகராகக் கொண்டு, பெரும்பாலும் குடமலைக்குக் கிழக்கேயே இருந்தது. அம் மலைத்தொடருக்கு மேற்கில் இருந்த நிலம், மிக வொடுங்கித் துறைநகர்களுக்கன்றி ஒரு நாட்டு மக்கள் அனைவரும் வதியத்தக்க பரப்புள்ளதாயிருந்ததில்லை. பிற்காலத்திலேயே மேல்கரை நிலப்பகுதி விரிவடைந்ததாகத் தெரிகின்றது. இதையே, பரசுராமர் தாம் தவஞ்செய்தற்கு இடம் வேண்டிக் கடல்மீது அம்பெய்ய, அது சற்றுப் பின்வாங்கி இடந்தந்தது என்னுங் கதை குறிக்கும். பரசுராமர் அங்குச் சென்றபின், இயற்கையாகக் கடல் ஒதுங்கி நிலம் விரிவடைந்தது என்பதே உண்மைச் செய்தி.

“வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்” என்னுந் தொடர், தொல்காப்பியர் காலத்தில் மூவேந்தரும் ஒற்றுமைப்பட்டு உயர்வா யிருந்ததையும், குடிகள் கொள்ளையும் போருமின்றி இன்பமாக வாழ்ந்ததையும் குறிப்பாக வுணர்த்தும்.

தொல்காப்பியருக்குப் பின் ஆரியச் சூழ்ச்சியாலும் தன்னலப் பற்றாலும் மூவேந்தரிடையும் அடிக்கடி போர் மூண்டதனாலும், துணையரசரும் குறுநிலமன்னரும் தம் வேந்தர்க் கடங்காது முடிசூடி முழுவுரிமை யரசரானதனாலும், சோழநாட்டின் வடபகுதி தொண்டை நாடென்றும், சேரநாட்டின் கீழ்ப்பகுதி கொங்கு நாடென்றும் பிரிந்து போயின.

## தொண்டைநாடு

தொண்டைநாடு ஆர்க்காடுபோல் நிலைத்திணையாற் பெயர் பெற்றதாகத் தெரிகின்றது. தொண்டை என்பது கோவைக் கொடியையும் ஆதொண்டையையும் குறிக்கும். ஆதொண்டை என்பது காற்றோட்டிச் செடிக்கும் காற்றோட்டிக் கொடிக்கும் பொதுப்பெயர். இம் மூன்றனுள் ஒன்று மிகுந்திருந்த நிலப்பகுதி தொண்டைநாடெனப் பெயர் பெற்றது.

திரையன் என்பது நெய்தல்நிலத் தலைவன் பெயர். ஆர்க்காடு, செங்கழுநீர்ப்பட்டு, நெல்லூர் ஆகிய மும் மாவட்டப் பகுதிகளைக் கொண்டது தொண்டைநாடு. ஒருகால் நெய்தல்நிலச் சிறப்புப்பற்றி, அந் நாட்டரசன் திரையன் எனப் பெயர் கொண்டிருக்கலாம். நாகபட்டினத்துச் சோழன் நாககன்னியைப் புணர்ந்து ஒரு புதல்வனைப் பெற்றானென்று நச்சினார்க்கினியர் கூறுங் கதையும், கிள்ளிவளவன் பீலிவளை என்னும் நாககன்னியைப் புணர்ந்து ஒரு புதல்வனைப் பெற்றானென்று சீத்தலைச் சாத்தனார் கூறுங் கதையும், பல செய்திகளில் வேறுபட்டனவும் வெவ்வேறு காலத்தனவும் ஆகும்.

சோழன் கரிகாற் பெருவளத்தான்மேற் பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனாரே பெரும்பாணாற்றுப்படையில்,

**“ கொண்டி யுண்டித் தொண்டையோர் மருக ”**

என்று இளந்திரையனைப் பல தலைமுறைப்பட்ட ஓர்ஆள்குடியின னாகக் கூறியிருப்பதால், மேற்கூறிய கதை யிரண்டும் பிற்காலத்தன வென்றும் பெரும்பாலுங் கட்டுச்செய்தி யென்றும் அறிக.

அஃதாயின், “அந்நீர்த் திரைதரு மரபின் உரவோ னும்பன்” என்று பாடியதை இளந்திரையன் எங்ஙனம் ஒத்துக்கொண்டா னெனின், ஆரியச் சார்பால் அக்காலத் தமிழர் பகுத்தறிவை யிழந்துவிட்டதனால்,

**“ நீயே, வடபான் முனிவன் தடவினுள் தோன்றி**
**..................................**
**நாற்பத் தொன்பது வழிமுறை வந்த**
**வேளிருள் வேளே ”** (புறம்.201)

என்று கபிலர் பாடியதை இருங்கோவேள் ஏற்றுக்கொண்டது போன்றே, இளந்திரையனும் உருத்திரங்கண்ணனார் பாடியதை ஏற்றுக் கொண்டான் என்று கூறி விடுக்க.

## கொங்குநாடு

கொங்கு என்பது மணம், பூந்தாது, தேன், கள், கருஞ்சுரை, சொங்கு (உமி அல்லது புறத்தோல்), குவிவு என எண் பொருள்படும் பலபொருளொருசொல். கொங்குநாட்டில் தேன் மிகுதியாக அல்லது சிறந்ததாகக் கிடைப்பதால், அந் நாடு கொங்குநாடெனப்பட்டது என்று பலர் கூறுவர். தேன் கொங்குநாட்டிற்கே சிறப்பாக வுரியதன்று. சோலைகள், சிறப்பாக இயற்கைச் சோலைகள் உள்ள இடமெல்லாம் தேன்கூடு கட்டப்படும். அத்தகைய சோலைகளாற் போர்க்கப் பட்டிருப்பவை பெருமலைகள் அல்லது உயர்மலைத்தொடர்கள். கொங்குநாட்டு மலைகளிற் போன்றே பிறநாட்டு மலைகளிலும் தேன் கூடு கட்டும்.

> **“ அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து**
> **திணிநெடுங் குன்றந் தேன்சொரியும்”** (புறம். 109)

பறம்புமலை, முற்காலச் சோழநாட்டை அல்லது பிற்காலப் பாண்டி நாட்டைச் சேர்ந்ததாகும். பறம்புலைத் தேன் எவ்வகையிலும் திறக் கேடுள்ள தன்று. கொங்குநாட்டு ஆனைமலையை ஒரு கூறாகக் கொண்ட குடமலைத்தொடர், நெல்லை மாவட்டத் தென்கோடி வரை செல்கின்றது. அங்கும் தேன்கூடு கட்டத்தான் செய்கின்றது.

கொங்குநாட்டின் பண்டைக் காலப் பரப்பைப் பலர் சரியாக அறியவில்லை. குடகமும் எருமையூர் (மைசூர்) நாடும் சேலங் கோவை மாவட்டங்களும் சேர்ந்ததே முதற்காலக் கொங்குநாடாம். அதில் உடல்போல் மிகுந்திருந்தது எருமையூர் நாடே. மூவேந்தர் நாடு களுள்ளும் உயர்ந்து குவிந்திருக்கும் நிலப்பகுதி எருமையூர் நாடென்பதை, புறணிப் படத்தையும் (relief map) மட்டக்கோட்டுப் படத்தையும் (contour map) பார்த்துத் தெளிக. சேரநாட்டின் கீழைப் பகுதி, மலைகளாலும் உயர்நிலமட்டத்தாலும் குவிந்திருப் பதனாலேயே கொங்குநாடெனப்பட்டது.

கும் - கும்மல் = குவியல். கும்மி = கை குவித்தடித்து விளையாடும் விளையாட்டு. கும்மி - கொம்மி.

கும் - கொம் - கொம்மை = 1. மேடு. 2.அடுப்புக் குமிழ். 3.கதவுக் குடுமி. 4.கொம்மட்டிக்காய் (கும்மட்டிக்காய்). 5.கை குவித்துக் கொட்டுகை. 6.இளமுலை. “வாரணி கொம்மை” (பரிபா.22:30)

*கும்-கும்பு. கும்புதல் = குவிதல், கூடுதல்.*

*கும்பு-கும்பம் = 1.குவியல். 2. குடம். 3. யானை மத்தகம். 4.கும்ப வோரை. 5. கும்ப மாதம் (மாசி).*

*கும்பம்-வகும்ப* (kumbha).

*கும்பு-கும்பளம் = பூசணிக்காய்.*

*கும்பு-கூம்பு-கூப்பு. கூப்புதல் = குவித்தல்.*

*கும்பு-கும்பிடு. கும்பிடுதல் = கைகுவித்தல்.*

*கும்பு-குப்பு-குப்பல். குப்பு-குப்பி-கொப்பி = கும்மி.*

*குப்பு-குப்பை = குவியல், மேடு, கழிவுப்பொருட் குவியல்.*
*கும் - குமி - குமிழ் - குமிழி. குமி - குவி - குவியல், குவியம், குவால், குவை.*

*கும் - குங்கு. குங்குதல் = 1.குவிதல்.2.சுருங்குதல்.3.குன்றுதல்.*

*குங்கு - கொங்கு = குவிந்த பொருள் அல்லது இடம்.*

*கொங்கு - கொங்கை = 1. குவிந்த முலை. 2.மரத்தின் புடைப்பு* (protuberances or knobs of a tree).

*கொங்கு - கோங்கு = கொங்கைபோற் குவிந்த மொட்டு, அதன் மலர், அது பூக்கும் மரம்.*

***“ வேங்கை வெற்பின் விரிந்த கோங்கின்***
***முகைவனப் பேந்திய முற்றா விளமுலை”*** (புறம்.336:9–10)

*என்பது,கோங்கமொட்டு கொங்கைபோற் குவிந்ததென்பதைத் தெரிவித்தல் காண்க.*

*கொங்குநாடு பிற்காலத்திற் குடகொங்கு குணகொங்கு என இரண்டாகப் பிரிந்தது. பின்னர்க் குணகொங்கும் வடகொங்கு தென்கொங்கு என இரண்டாகப் பிரிந்தது. எருமையூர் நாட்டின் மேற்பகுதி குடகொங்கு; “குடகக் கொங்கரும்”(30:159) என்று சிலப்பதிகாரம் கூறுவதால், குடகப் பகுதியே முதற்காலக்குட கொங்காகும்.அதன் கீழ்ப்பகுதியும் சேலங் கோவை மாவட்டங்களும் குணகொங்கு, அது இரண்டாகப் பிரிந்தபின், எருமையூர் நாட்டின் கீழ்ப்பகுதி வடகொங்கு; சேலங் கோவை மாவட்டங்கள் தென்கொங்கு. வடகொங்கின் தென்பகுதி கங்கநாடென மாறிற்று.*

*இன்று கொங்குநாடெனப்படுவது சேலங் கோவை மாவட்ட நிலப்பகுதியே. அதுவே தென்கொங்கு வடகொங்கு மேல்கொங்கு (மீகொங்கு) என மூன்றாகப் பிரிந்தும் உள்ளது.*

*கொங்குநாடு தொடர்ந்த போர் நிகழ்ச்சியாற் செங்களமாகி அமைதி குலைந்ததனால், சேரன் தன் தலைநகரைக் கருவூரினின்று*

மேல்கடற்கரையிலுள்ள கொடுங்கோளூர்க்கு மாற்றிக்கொண்டான். அது பின்னர்க் கருவூர், வஞ்சி என்னும் பெயர்களும் பெற்றது. பழைய கருவூர் சோழர் வயப்பட்டது.

சேரநாட்டு மக்கள் குடமலைக்குக் கிழக்கிலுள்ள கொங்கு நாட்டினின்று சென்று குடியேறியதனாலேயே, அவர் வழியினர் மொழியிலும், கதிரவன் எழுந்திசை கிழக்கு என்றும் விழுந்திசை மேற்கு என்றும், சோழ பாண்டி நாடுகளிற் போன்றே சொல்லப் படுகின்றன. குடமலைக்குக் கிழக்கிலுள்ள நிலப்பகுதியில், கடலடுத்த கீழ்ப்பாகம் தாழ்ந்தும் மலையடுத்த மேற்பாகம் உயர்ந்தும் இருப்பதால், கதிரவன் எழுந்திசையும் விழுந்திசையும் கிழக்கு மேற்கு எனப்பட்டன. கீழ்-கீழ்க்கு-கிழக்கு. மேல்-மேற்கு. குடமலைக்கு மேற்கிலுள்ள நிலப்பகுதி கிழக்கில் உயர்ந்தும் மேற்கில் தாழ்ந்தும் இருப்பதால், கிழக்கை மேற்கென்றும் மேற்கைக் கிழக்கென்றும் சொல்ல வேண்டும். அவ் வழக்கின்மையால், சேரநாட்டாரின் முன்னோர் தமிழகத்தின் கீழைப் பகுதியினின்றே மேலைப்பகுதிக்குச் சென்றனர் என்பது தெளிவாம்.

மேற்றிசையைக் குறிக்கப் ‘படுஞாயிறு’ (படுஞாயிற்றுத் திசை) என்னும் சொல்வழக்கும் சேரநாட்டில் அல்லது மலையாள நாட்டில் உண்டேனும், அதுவும் சோழ பாண்டி நாட்டிற் பொழுதடைவைக் குறிக்கும் கீழைத் தமிழ்ச்சொல்லே யென்றும், மேற்கு என்னும் சொல் அதனால் அங்குத் தன் பொருளை இழந்துவிடவில்லை யென்றும், கீழ்த்திசையைக் குறிக்கக் கிழக்கு என்பது தவிர வேறொரு சொல்லு மில்லை யென்றும் அறிந்துகொள்க.

கிழக்கிந்தியத் தீவினின்று கரும்பைக் கொண்டுவந்து பயிராக்கிய முதுபழங்காலச் சேரனை, அதிகமானின் முன்னோ னென்று ஔவையார் கூறியிருப்பதும், சேரநாட்டு மக்களின் முன்னோர் கொங்குநாட்டினின்று சென்றவர் என்பதை வலியுறுத்தல் காண்க.

குமரிமலைத்தொடர் மூழ்கியபின், நிலமட்டத்தில் வடநாடு உயர்ந்தும் தென்னாடு தாழ்ந்தும் போனதனால், வடதென் திசைகட்கு உத்தரம், தக்கணம் என்னும் பெயர்கள் ஏற்பட்டுள்ளமையையும் நோக்குக.

உ = உயர்வு. தக்கு = தாழ்வு. உத்தரம் - **வ.** உத்தர. தக்கணம் - **வ.** தக்ஷிண. எழுங்கதிரவனை நோக்கும் போது தென்றிசை வலப்புறத்தி லிருப்பதனால், கதிரவ வணக்கங் கொண்ட ஆரியர் தக்ஷிண என்னுஞ் சொல்லிற்கு வலம் (right) என்னும் பொருள் கொண்டனர்.

ப்ரதக்ஷிண = வலமாகச் சுற்றிவருதல். L. dexter = right.

## மதுரையமைப்பு
### (தோரா. கி.மு. 5ஆம் நூற்றாண்டு)

*இரண்டாங் கடல்கோட்குப் பின், நீண்ட காலமாகக் கொற்கை யிலும் மணவூரிலும் பாண்டியரிருந் தாண்டுவந்தனர். அதன் பின், வைகைக் கரையில் இருந்த கடம்பவனம் என்னும் கடப்பங்காடு அழிக்கப்பட்டு இற்றை மதுரை கட்டப்பட்டது. பஃறுளிக்கரைமே லிருந்த பாண்டியன் முதல் தலைநகர்ப் பெயரே இதற்கும் இடப் பட்டதனால், அப் பெயர்க் கரணியமே இப் பெயர்க்குமாம். அக்கால வழக்கிற் கேற்ப, மதுரையைச் சுற்றி நாற்புறமும், பல்வேறு போர்ப் பொறிகளைப் பொருத்தற்கும் நொச்சி மறவர் நின்று போர் செய்தற்கும் ஏற்றவாறு, அகன்றுயர்ந்த கோட்டைமதில் எழுப்பப் பட்டது. நாற்புறமும் கோட்டைவாயிலும் வாயில்தொறும் மேன்மாடமும் அமைந்தன. மதின்மேல் இடையிடை காவற் கோபுரங்களும் கட்டப்பட்டன. வாயின்மாடச் சிறப்பினால் மதுரை மாடமதுரை யெனப்பட்டது.*

***" மாட மதுரையும் "*** (புறம்.32:5)

***" மாடமதுரை "*** (சிலப்.பதி.20,8:3,9:76,15:112)

***" நான்மாட மதுரை "*** (திருவால. திருவிளை.20:1).

## கடைக்கழகத் தொடக்கம்
### (கி.மு. 5ஆம் நூற்றாண்டு)

*மதுரை மாநகர் அமைக்கப்பட்டவுடன், மூன்றாம் புலவர் கழகமும் தோற்றுவிக்கப்பட்டது. நாற்பத்தொன்பதின்மர் உறுப் பினராயினர். முக்கழகத்திலும் உறுப்பினர் தொகைக்கு வரையறை இல்லை. அவ்வக் காலத்தில் தலையாய புலவர் அல்லது சிறந்த புலவர் எத்தனைவரோ அத்தனைவரும் இடம்பெற்றனர். புதிதாக யாரேனும் சிறந்த புலவர் வரினும் சேர்க்கப்பட்டனர். இதனையே, தகுந்த புலவர் வரின் கழகப்பலகை தானே ஒரு முழம் நீண்டு இடந்தரும் என்னும் மரபுரை குறிக்கும். நாற்பத்தொன்பது என்னுந் தொகை ஏழேழென்று வகுக்கப்படுவதால், மொழிப்பற்றும் மூப்பும் புலமைத்திறமும் நோக்காது, மதம்பற்றியோ குலம்பற்றியோ நிலம்பற்றியோ ஏழெழுவர் தொகுக்கப்பட்டனர் எனக் கருதற்க. எத்தனைவர் வரினும் ஏற்றுப் போற்றற் கேற்ற செல்வம் பாண்டியனிடத் திருந்தது. முக்கழகத்திலும் புலவர் தொகையை ஒன்பதென்னும் எண்ணில் முடித்தது, ஓரிடத்தை இறைவனுக்கு ஒதுக்கவேண்டு மென்னுங் கொள்கை பற்றியே.*

**“ சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும்**
**உறைவான் உயர்மதிற் கூடலி லாய்ந்தவொண் டீந்தமிழ்”**

என்று மாணிக்கவாசகர் பாடியது இக் கருத்துப்பற்றியே. அகத்தியமும் தொல்காப்பியமும் கடைக்கழக இலக்கண நூல்களாயிருந்தன.

இடைக்கழகத்திற்கும் கடைக்கழகத்திற்கும் ஈராயிரத்தைந் நூறாண்டிற்குமேல் இடையீடுபட்டுவிட்டதனால், இடைக்கழகத் திறுதிப் பாண்டியனான முடத்திருமாறனே கடைக்கழக முதற் பாண்டியனானான் என்பது பொருந்தாது. இந் நெட்டிடை யீட்டிற்குக் கரணியம் பின்னர்க் கூறப்படும். கழக இருக்கையை இறையனா ரகப்பொருளுரை உத்தர மதுரை யென்று கூறியது தென்மதுரையொடு ஒப்புநோக்கியென் றறிக.

கழகத்திற்குத் தொகை யென்றும், கூடல் என்றும் பெயர்கள் ஏற்பட்டன. அதன்பின், இடவாகு பெயராக மதுரையும் கூடலெனப் பட்டு, மாடச் சிறப்பால் மாடக்கூடல், நான்மாடக்கூடல் என்னும் வழக்கெழுந்தது. மாடங்கள் முகில்படியுமாறு வானளாவ வுயர்ந் திருந்ததனால், நான்முகின் மாடக்கூடல் என்று புலவர் புகழ்ந்து பாடினர். அத் தொடரைத் தொல்கதையாளர் பயன்படுத்திக் கொண்டு, மதுரைமேற் கடுமழை பொழிந்த நான்முகில்களை நான்மாடங்கள் கூடித் தடுத்தன வென்று கதை புனைந்துவிட்டனர்.

மதுரைக் கோட்டை வாயில் ஒன்றன் முன், ஒரு மூதால மரம் படர்ந்தோங்கி யிருந்ததனால், அவ்விடம் ஆலவாய் என்று பெயர் பெற்றிருந்திருக்கலாம். அப் பெயரையும் பொருள் திரித்து, பாம்பினால் எல்லை காட்டப்பட்ட விடமென்று கதை கட்டி விட்டனர். ஆலவாய் என்பது முதலில் நான்மாடங்களுள் ஒன்றன் பெயராகவே யிருந்தது. நான்மாடப் பெயர்களை, “அவை திருவாலவாய் திருநள்ளாறு திருமுடங்கை திருநடுவூர். இனிக் கன்னங் கரியமால் காளி ஆலவாய் என்றுமாம்” என்று நச்சினார்க்கினியர் கூறுதல் காண்க. (கலித்.92,உரை).

## சமற்கிருத ஆக்கம்

வேத ஆரியர் என்று சொல்லப்படும் இந்திய ஆரியர் இந்தியாவிற்குட் புகுந்தவுடன் தம் (கிரேக்கத்தை யொத்த) மொழியை மறந்துவிட்டனர். இதற்கு அவர் சிறுதொகையினரா யிருந்ததும் பழங்குடி மக்களுடன் கலந்து போனதுமே கரணியம்.

ஆரியப் பூசாரியரும் அவரைப் பின்பற்றிய விசுவாமித்திரன் போன்ற ஒருசில நாட்டுமக்களும், பாடிய மந்திரத் தொகுதி என்னும் பாடற்றிரட்டே இருக்கு வேதமாம். அதன் மொழி, மறந்துபோன கீழை யாரியமும் வடநாட்டுத் திரவிடமாகிய பிராகிருதமுங் கலந்த

மொழியாம். அக் கலப்பினால், இந்திய ஆரிய மொழி எகர ஒகரக் குறில்களையும் இழந்தது.

ஆரியப் பூசாரிகளான பிராமணர் தென்னாடு வந்து தமிழரொடு தொடர்பு கொண்டபின். வேதமொழியுடன் ஏராளமான திரவிடச் சொற்களும் தமிழ்ச்சொற்களும் அவற்றினின்று திரிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான புதுச்சொற்களும் இடுகுறிச் சொற்களும் கலந்து, கலவை மொழியில் இதிகாச புராணங்களும் தரும சாத்திரங்களும் நாடகங்களும் பிறவும் இயற்றப்பட்ட பின்னரே, கி.மு. 6ஆம் நூற்றாண்டுபோல் சமற்கிருதம் என்னும் அரைச் செயற்கையான இலக்கிய நடைமொழி நிறைவாக உருவாயிற்று. பிராகிருதம் (பிராக்ருத) என்பது முந்திச் செய்யப்பட்டது என்றும், சமற்கிருதம் (ஸம்ஸ்க்ருத) என்பது கலந்து செய்யப்பட்டது என்றும் பொருள் படுவன வாகும்.

இந்தைரோப்பியம், வேதியம், சமற்கிருதம் என்னும் மூவேறு நிலைகளில், ஆரியம் தமிழ்ச்சொற்களைக் கடன் கொண்டுள்ளது. வேதியம் கடன்கொண்டது வடநாட்டுப் பிராகிருத வாயிலாக வென்றறிக. வடமொழி என்னும் பெயர் வேதமொழிக்கும் சமற்கிருதத்திற்கும் பொதுவாகும். பைசாசி, சூரசேனி, மாகதி என்று வடநாட்டில் மூன்றும், திராவிடி என்று தென்னாட்டில் ஒன்றுமாக, பிராகிருதம் நான்கென வகுத்தனர்.

வேதமொழி போன்றே சமற்கிருதமும் நூன்மொழியாகும். அது பிறந்ததுமில்லை; இறந்ததுமில்லை. ஒரு மொழிக்கு உயிர் உலக வழக்கே. சில பல பண்டிதர் பல்லாண்டு வருந்திக் கற்றுச் சமற்கிருதத் திற் பேசுவதனால், அது உயிர்மொழியாகிவிடாது. அது உயிர்மெய்யு மன்று; சவமுமன்று; வல்லோன் புனைந்த பாவை போன்றதே.

உலக வழக்கு மொழிகளா யிருந்து இறந்து போனவற்றை மட்டுமன்றி, சென்ற நூற்றாண்டு மேலை மொழியறிஞர் புனைந்த எசுப்பெராந்தோ (Esperanto), நோவியல் (Novial) முதலிய செயற்கை மொழிகளைக்கூடக் கற்றுப் பேசக்கூடியவர் உலகிலுள்ளனர்.

மறையியலாக மட்டுமுள்ள வேதமொழிக்கு இலக்கணம் வகுத்தது ஐந்திரம் என்றும், மறையியலும் (வைதீகமும்) உலகியலும் (லௌகீகமும்) கலந்த சமற்கிருத மொழிக்கு இலக்கணம் வகுத்தது பாணினீயம் என்றும் அறிதல் வேண்டும்.

### பாணினீயம்

சமற்கிருதத்தின் தலைசிறந்த இலக்கண நூலாகிய பாணினீயம் பாணினியால் கி.மு.4ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. இலக்கண நூலை வியாகரணம் என்பர் வடநூலார். அது கூறுபடுப்பு

(Analysis) என்னும் பொருளது. நந்நான்கு இயல்கள் (பாதங்கள்) உள்ள எண்ணதிகாரங்கள் (அத்தியாயங்கள்) கொண்டது பாணினி வியாகரணம். அதனால் அது அட்டாத்தியாயீ (அஷ்டாத்யாயீ) எனப் பெயர் பெற்றது. அதன் நூற்பாக்கள் (சூத்திரங்கள்) ஏறத்தாழ 3980. அந் நூற்குமுன் எண்ணிலக்கண நூல்கள் இயற்றப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. அவற்றுள் முதலது வேதகாலத்த தெனப்படும் ஐந்திரம்.

தொல்காப்பியம் பாணினீயத்திற்கு முந்நூற்றாண்டு முந்தியது. அதனாலேயே, "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" என்று மட்டுங் கூறினார் தொல்காப்பியரின் உடன்மாணவரான பனம்பாரனார். சமற்கிருத இலக்கண நூல்களெல்லாம் பவணந்தி நன்னூல்போல் எழுத்துஞ் சொல்லுமே கூறுவன வென்றும், தமிழிற்போல் ஒரு வழங்கு மொழியை விளக்காது வேதமும் இதிகாச புராணங்களு மாகிய இலக்கியத்திலுள்ள அரைச் செயற்கையான நடை மொழியையே (Semi-artificial literary dialect) விளக்குவன வென்றும் அறிதல் வேண்டும்.

தொல்காப்பியம் எழுத்துஞ் சொல்லும் பொருளுமாகிய மூவதிகாரங் கொண்டது; பொருளதிகாரத்தில், தமிழுக்கே சிறப்பான பொருளிலக்கணத்துடன் செய்யுளியலையும் அணியியலான உவமவியலையும் உட்கொண்டது. ஆதலால், பாணினீயத்தினின்று தொல்காப்பியம் தோன்றியதாகச் சிலர் கூறுவது, பேரன் பாட்டனைப் பெற்ற கதையும், களாச்செடியிற் பலாப்பழம் பறித்த கதையுமே யாகும்.

பாணினி, "அ இ உண்", "ரு லு க்", "ஏ ஓங்", "ஐ ஔச்", "ஹ ய வ ரட்", "லண்", "ஞ ம ங ண ந ம்" முதலிய 14 குறுங்கணக்கு நூற் பாக்களை, சிவபெருமானின் உடுக்கையினின்று தோன்றிய ஒலி களாகக் கூறி, அவற்றிற்கு 'மகேசுவர சூத்திரங்கள்' எனப் பெயரிட்டது, இந்தியப் பழங்குடிவாணரை ஏமாற்றத் துணிச்சலுடன் செய்த படுமோசச் சூழ்ச்சியாகும்.

**" புண்ணிய சரவணம் பொருந்துவி ராயின்**
**விண்ணவர் கோமான் விழுநூ லெய்துவிர் "** (சிலப்.11:98–9)

என்னும் சிலப்பதிகார அடிகளை நோக்கின், பாணினியின் ஏமாற்றை மக்கள் நம்பி அவரிலக்கணத்தையே போற்றிப் பயிலுமாறு, தமிழ்த் தொடர்பு காட்டும் ஐந்திர வியாகரணப் படிகளை யெல்லாம் தொகுத்து, அழகர்மலையடுத்ததும் மக்கள் வழங்காததும் ஆழம் மிக்கதுமான ஒரு பொய்கைக்குள் எறிந்துவிட்டதாகக் கருத இடமுண்டாகிறது. தமிழகத்துத் தோன்றிய ஐந்திரம் தமிழகத் திலேயே அழியுண்டது போலும்!

**குடவம் (பித்தளை-brass)**

*மூன்றில் இருபங்கு செம்பும் ஒருபங்கு துத்தநாகமுங் கலந்தது குடவமாகும். உரோம நகரில் கி.மு. 20-ல் குடவக் காசு வழங்கிற்று. தமிழகத்தில் ஏனமும் எளியார் அணிகலமும் செய்யக் குடவம் கி.மு. 3ஆம் நூற்றாண்டிற் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.*

# மோரியப் படையெடுப்பு

**(கி. மு. 3ஆம் நூற்றாண்டு)**

*தமிழகத்தின்மேல் முதன்முதலாகப் படையெடுக்கத் துணிந்த வட இந்திய (மகதநாட்டு மோரிய) அரசன் பிந்துசாரன் (கி.மு.301-273), ஒரு பெரும்படையைத் தென்னாட்டிற் கனுப்பினான். அப் படை கோசர் என்னும் ஒருவகைப் பொருநரைத் துணைக்கொண்டு, தென்கன்னடம் என்னும் கொண்கானத்தின் கடற்கரைப் பகுதியான துளுநாட்டிற் புகுந்து, அதை யாண்டுகொண்டிருந்த நன்னன் என்னும் தமிழ் மன்னனை நாட்டைவிட்டு ஓட்டிவிட்டது. இதனை,*

***"அழியல் வாழி தோழி நன்னன்***
***நறுமா கொன்று நாட்டிற் போக்கிய***
***ஒன்று மொழிக் கோசர் போல"*** (குறுந்.73)

*என்னும் குறுந்தொகைப் பாட்டால் அறியலாம்.*

*பின்னர், கோசர் தென்கிழக்காக வந்து கொங்குநாட்டுப் பழையன் மோகூரைத் தாக்கினர். அவன் அவரைப் புறங்கண்டு துரத்தினான். அதன்பின் கோசருக்குத் துணையாக மகதத்தினின்று ஒருபுதுப்படை வந்தது. அது வரும்போது, அதைச் சேர்ந்த தேர்களும் சரக்கு வண்டிகளும் வருவதற்குத் தடையாயிருந்த பாறைகளை யெல்லாந் தகர்த்து, பாதையைச் செவ்வைப்படுத்திக்கொண்டு வந்தது. அது,*

***"துனைகா லன்ன புனைதேர்க் கோசர்***
***தொன்மூ தாலத் தரும்பணைப் பொதியில்***
***இன்னிசை முரசங் கடிப்பிகுத் திரங்கத்***
***தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்***
***பணியா மையிற் பகைதலை வந்த***
***மாகெழு தானை வம்ப மோரியர்***
***புனைதேர் நேமி யுருளிய குறைத்த***
***இலங்குவெள் ளருவி யறைவாய்"*** (அகம்.251)

*என்னும் அகப்பாட்டுப் பகுதியால் அறியப்படும்.*

*இனி, அப் படை வடுகரையும் துணைக்கொண்டு வந்ததென்பது,*

***“ முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்***
***தென்றிசை மாதிரம் முன்னிய வரவிற்கு***
***விண்ணுற வோங்கிய பனியிருங் குன்றத்***
***தொண்கதிர்த் திகிரி யுருளிய குறைத்த***
***அறையிறந்து ”*** (அகம்.281)

*என்னும் மாமூலர் கூற்றால் தெரிய வருகின்றது.*

*ஆகவே, வடுகர் கோசர் மோரியர் என்னும் மூவின மறவரைக் கொண்டது அப் படை என்பதை அறியலாம். வடுகரையும் கோசரையும் புறங்காணின் மோரியர் தாமே புறங்காட்டுவர் என்பதை அறிந்த சோழன் இளஞ்சேட் சென்னி, தன் நாட்டைக் காக்கும் கடமையை யுணர்ந்து, முன்பு “வளங்கெழு கோசர் விளங்குபடை நூறி” (அகம்.205), பின்பு கொண்கானஞ் சென்று பாழியரணை யழித்து ஒரே யடியாக மோரியரைத் தமிழகத்தினின்று துரத்திச் “செருப்பாழி யெறிந்த” என்னும் விரு அடைமொழியும் பெற்றான். இதனை,*

***“ எழாஅத் திணிதோட் சோழர் பெருமகன்***
***விளங்குபுகழ் நிறுத்த இளஞ்சேட் சென்னி***
***குடிக்கட னாகலிற் குறைவினை முடிமார்***
***செம்புறழ் புரிசைப் பாழி நூறி***
***வம்ப வடுகர் பைந்தலை சவட்டி ”*** (அகம்.375)

*என்பதனால் அறியலாம். அவன் “வடவடுகர் வாளோட்டிய” (புறம்.378) செயல் சற்றுப் பிந்தினதா யிருக்கலாம். வடவடுகர் கலிங்க நாட்டுத் தெலுங்கர்.*

*கீரந்தையின் வீட்டுக் கதவைத் தட்டி, அதனால் வேண்டாது தன் கையைக் குறைத்துக்கொண்ட பொற்கைப் பாண்டியனும், மகனை முறை செய்த மனுமுறை கண்ட சோழனும், கி.மு.2ஆம் நூற்றாண்டினரா யிருந்திருக்கலாம்.*

*மனுமுறை என்றது வடமொழி மனுதரும சாத்திர முறையயன்று. அந் நூலின் காலம் கி.பி.2ஆம் நூற்றாண்டு. அதற்கு முன் தோன்றிய ஆரிய தருமநூல்களும், நடுநிலையின்றிக் குலத்திற் கொருமுறை கூறுவனவே. கன்றைக் கொன்றதற்குக் கழுவாய் அல்லது தண்டனை யென்னென்று சோழன் வினவிய போது, பொற் கன்று செய்து பிராமணர்க்குக் கொடுத்து, ஆநிரையொடு காடு சென்று ஒரு மாதம் புன்மேய்ந்து வரவேண்டுமென்று பிராமணர் கூறினர். அதை அவன் ஒப்புக்கொள்ளாது, உயிருக் குயிரே யீடென்று தன் மகன்மேல் தேரேற்றிக் கொன்றான். வடநூல்களிற் கதிரவன்குல அரசருள்*

*முதல்வனாகக் குறிக்கப் பெறும் மனு, தமிழ்ப்பெயர் கொண்ட ஒரு சோழனாயிருந்திருத்தல் வேண்டும். அவன் கண்ட நடுநிலை முறையையே, மகனை முறைசெய்த சோழன் சிறப்புப் பெயர் குறித்தல் வேண்டும்.*

*தில்லையிலிருந்து பாணினீயத்திற்கு விரிவுரை (பாஷ்யம்) வரைந்த பதஞ்சலியார் கி.மு. 2ஆம் நூற்றாண்டினரே. பேசு-**வ.**-பாஷ்-பாஷ்யம்.*

*ஆரியம் தமிழகத்தில் வேரூன்றி, நால்வரணமும் பிறப்பிலமைந்தவை யென்றும், பிராமணன் நிலத்தேவன் என்றும், துறவால் மட்டும் வீடுபேறென்றும், துறவு பிராமணனுக்கே வுரியதென்றும், பிராமணன் வேள்வி வளர்ப்பதனாலேயே உலகம் நடைபெறுகின்றதென்றும், பிராமணனுக்குத் தொண்டு செய்வதனாலேயே ஏனை மூவரணத்தாரும் மறுமையில் நன்னிலையடைவரென்றும், பல தீய கொள்கைகள் தமிழருள்ளத்திற் பதிக்கப்பட்டு வருவது கண்ட திருவள்ளுவர், தமிழரின் கண் திறக்கவும் அவரை முன்னேற்றவும் தம் திருக்குறளை இயற்றியருளினது கி.மு. 2ஆம் நூற்றாண்டாகும். என் **திருக்குறள் தமிழ்மரபுரை**யைப் பார்க்க.*

*பிராமணர்க்கு முற்றும் அடிமையாகித் தமிழகத்தைப் பாழாக்கிய பாண்டியருள் தலைசிறந்த பல்வேள்விச் சாலை (யாகசாலை) முதுகுடுமிப் பெருவழுதி, கி.மு. முதல் நூற்றாண்டினரா யிருந் திருக்கலாம்.*

***“ இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த***
***நான்மறை முனிவ ரேந்துகை யெதிரே”*** (புறம். 6)

*என்று, வேதமோதிய பிராமணரை யெல்லாம் முனிவர் என்று கூறி, அவருக்குமுன் தன் குடுமியவிழ்ந்து விழுமாறு தலை குனிந்து வணங்கும்படி, முதுகுடுமிப் பாண்டியனை வேண்டிய காரிகிழார் என்னும் தமிழத் தமிழ்ப் புலவன் நிலைமையை நோக்கும் போது, எத்துணை யுணவுத்தட் டிருப்பினும் இக்காலமே நற்காலம் என்று தெரிகின்றது. இனி,*

***“ பல்சாலை முதுகுடுமியின்***
***நல்வேள்வித் துறைபோகிய***
***தொல்லாணை நல்லாசிரியர்***
***புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்***
***நிலந்தரு திருவின் நெடியோன் போல”*** (மதுரைக். 759–63)

*என்னும் அடிகள், தொல்காப்பியம் அரங்கேறிய காலத்து நிலந்தரு திருவிற் பாண்டியனும், நான்மறை முற்றிய அதங்கோட்டாசானைக் கொண்டு பல்வேள்வி செய்தவன்தானோ என்று ஐயுறச் செய்கின்றன.*

கி.பி. முதல் நூற்றாண்டினனான கரிகால் வளவன்,

> “ ***இருநில மருங்கிற் பொருநரைப் பெறாஅச்***
> ***செருவெங் காதலிற் றிருமா வளவன்***
> ***வாளுங் குடையு மயிர்க்கண் முரசும்***
> ***நாளொடு பெயர்த்து நண்ணார்ப் பெறுகவிம்***
> ***மண்ணக மருங்கினென் வலிகெழு தோளெனப்***
> ***புண்ணிய திசைமுகம் போகிய வந்நாள்***
> ***அசைவி லூக்கத்து நசைபிறக் கொழியப்***
> ***பகைவிலக் கியதிப் பயங்கெழு மலையென***
> ***இமையவ ருறையுஞ் சிமையப் பிடர்த்தலைக்***
> ***கொடுவரி யொற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு***
> ***மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்***
> ***கோனிறை கொடுத்த கொற்றப் பந்தரும்***
> ***மகதநன் னாட்டு வாள்வாய் வேந்தன்***
> ***பகைபுறத்துக் கொடுத்த பட்டிமண் டபமும்***
> ***அவந்தி வேந்த னுவந்தனன் கொடுத்த***
> ***நிவந்தோங்கு மரபின் தோரண வாயிலும்***
> ***பொன்னினும் மணியினும் புனைந்தன வாயினும்***
> ***நுண்வினைக் கம்மியர் காணா மரபின***
> ***துயர்நீங்கு சிறப்பினவர் தொல்லோ ருதவிக்கு***
> ***மயன்விதித்துக் கொடுத்த மரபின விவைதாம்***
> ***ஒருங்குடன் புணர்ந்தாங் குயர்ந்தோ ரேத்தும்***
> ***அரும்பெறன் மரபின் மண்டபம்*** ”  (சிலப்.5:89–110)

நிறுவி,

> “ ***காடுகொன்று நாடாக்கி***
> ***குளந்தொட்டு வளம்பெருக்கி***
> ***...............***
> ***கோயிலொடு குடிநிறீஇ*** ”  (பட்டினப்.283–4)

காவிரிக்குக் கரை கட்டி வேலி நிலம் ஆயிரங் கலம் நெல் விளையச் செய்து,

> “ ***நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்***
> ***காலின் வந்த கருங்கறி மூடையும்***
> ***வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்***
> ***குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்***
> ***தென்கடல் முத்துங் குணகடல் துகிரும்***
> ***கங்கை வாரியும் காவிரிப் பயனும்***
> ***ஈழத் துணவுங் காழகத் தாக்கமும்***
> ***அரியவும் பெரியவும் நெரிய வீண்டி*** ”  (பட்டினப்.185–192)

**“ பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்**
**கட்டு நுண்வினைக் காருக மாந்தரும்”** (சிலப்.5:16–7)

**“ கஞ்ச காரரும் செம்புசெய் குநரும்**
**மரங்கொல் தச்சரும் கருங்கைக் கொல்லரும்**
**கண்ணுள் வினைஞரும் மண்ணீட் டாளரும்**
**பொன்செய் கொல்லரும் நன்கலந் தருநரும்**
**துன்ன காரரும் தோலின் துன்னரும்**
**கிழியினும் கிடையினும் தொழில்பல பெருக்கிப்**
**பழுதில் செய்வினைப் பால்கெழு மாக்களும்”** (சிலப்.5:29–34)

*வேறு பல தொழிலாளரும் தழைத்தோங்கச் செய்தான். ஆயின், அவனும் ஆரியர் சாய்கடையில் வீழ்ந்து,*

**“ அறமறக் கண்ட நெறிமா ணவையத்து**
**முறைநற் கறியுநர் முன்னுறப் புகழ்ந்த**
**தூவியற் கொள்கைத் துகளறு மகளிரொடு**
**பருதி யுருவிற் பல்படைப் புரிசை**
**யெருவை நுகர்ச்சி யூப நெடுந்தூண்**
**வேத வேள்வித் தொழின்முடித் தது”** (புறம்.224)

*மிகமிக வருந்தக் தக்கதே.*

*கி.பி. 2ஆம் நூற்றாண்டினரான ஆரியப்படை கடந்த நெடுஞ் செழியனும், கண்ணகிக்குப் படிமை சமைத்த சேரன் செங்குட்டு வனும், தமிழினத்தின் பெருமையைக் காத்ததனாற் பாராட்டத் தக்கவரே.*

*ஆரியப் படை என்றது ஆந்திரப்பேரரசின் (கி.மு.567-கி.பி.220) வடுகப் படையை. வட நாட்டில் அல்லது வடக்கில் உள்ளவரையெல் லாம் ஆரியரென்னும் வழக்கு இடைக்காலத்தில் எழுந்துவிட்டது. “ஆரியக்கூத் தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு” என்னும் பழமொழியில், ஆரியக்கூத் தென்றது வடுகரின் கழைக்கூத்தையே.*

*புதைய லெடுத்தவ னென்று சிறையிலிடப்பட்ட வார்த்திகனை விடுதலை செய்தபின், நெடுஞ்செழியன்*

**“ நீர்த்தன் றிதுவென நெடுமொழி கூறி**
**அறியா மாக்களின் முறைநிலை திரிந்தவென்**
**இறைமுறை பிழைத்தது பொறுத்தல்நும் கடனென”**
(சிலப்.23:115–7)

*மன்னிப்புக் கேட்டதுடன்,*

**“ தடம்புனற் கழனித் தங்கால் தன்னுடன்**
**மடங்கா விளையுள் வயலூர் நல்கியதே”** (சிலப்.23:118–9)

அளவிற்கு மிஞ்சினதாம். அதற்கும் மேல், நெடுஞ்செழியன் வார்த்திகன் காலில் விழுந்து வணங்கியது தமிழினத்திற்கே அழியாப் பேரிழிவாம். இதனால் அற்றைப் பிராமணர் கொட்டமும் தமிழர் அடிமைத்தனமும் தெளிவாம்.

**“ கார்த்திகை கணவன் வார்த்திகன் முன்னர்**
**இருநில மடந்தைக்குத் திருமார்பு நல்கி”** (சிலப் 23:120–1)

என்று இளங்கோவடிகள் படிமாற்றணியால் மறைத்துக் கூறியிருத்தல் காண்க.

கோப்பெருந்தேவியின் ஊடலால் ஏற்பட்ட மனக்கலக்க நிலையில், நெடுஞ்செழியன் ஆய்ந்து பாராது கோவலனைக் கொன்றது கடுங் குற்றமாயினும்,

**“ பொன்செய் கொல்லன் றன்சொற் கேட்ட**
**யானோ வரசன் யானே கள்வன்**
**மன்பதை காக்குந் தென்புலங் காவல்**
**என்முதற் பிழைத்தது கெடுகவென் னாயுளென**
**மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே தென்னவன்**
**கோப்பெருந் தேவி குலைந்தனள் நடுங்கிக்**
**கணவனை யிழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்**
**றிணையடி தொழுதுவீழ்ந் தனளே”** (சிலப்.20:75–81)

என்னுஞ் செய்தி, வளைந்த கோலை உடனே நிமிர்த்திவிட்டது. இதனாற் பாண்டியன் செங்கோன்மையும் வெளியாயிற்று.

சேரன் செங்குட்டுவன், தமிழரசரை யிகழ்ந்த கனகவிசயர்மேல், பனிமலையி லெடுத்த பத்தினித் தெய்வப் படிமைக் கல்லை ஏற்றிக் கொணர்ந்தது, என்றும் தமிழர்க்குப் பெருமை தருவதே. ஆயினும், அக் கல்லைக் கங்கைக் கரையில் நீராட்டியபோது, மாடலன் என்னும் பிராமணனுக்குத் துலைநிறைத் தானமாக 50 துலாம் பொன் கொடுத்ததும், கொடுங்கோளூரில் அவன் சொன்னவுடன் வேள்வி செய்ததும், அவனது ஆரிய அடிமைத்தனத்தைத் தெளிவாகக் காட்டும்.

செங்குட்டுவன் பத்தினிப் படிமைக்குக் கல்லெடுக்க வடநாடு சென்ற போது பேரியாற்றங் கரையிலிருந்து ஒரே நாளில் தன் தலைநகர்க்குத் திரும்பியதனாலும். நீலமலையில் தங்கினதாலும், திரும்பி வந்தக்கால் நெய்தல்நில மகளிர் வரவேற்றுப் பாடியதனாலும், அவன் காலத்தில் கொடுங்கோளூரே தலைநகராக இருந்ததாகத் தெரிகின்றது. தமிழகம் மட்டுமன்றி இந்தியா முழுதும் அவன் அதிகாரத்திற் குட்பட்டிருந்ததனால், அவன் விரும்பியிருப்பின் கொங்குநாட்டுக் கருவூரை மீண்டும் தலைநகராகக்

*கொண்டிருத்தல் கூடும். ஆயின், அவன் முன்னோரே அதை விட்டு விட்டதனாலும், நாட்டை வளம்படுத்தும் நீர் வணிகத்திற்குப் பூம்புகார் போல் ஒரு துறைநகரே ஏற்றதா யிருந்ததனாலும், கொடுங்கோளூரிலேயே நிலைத்துவிட்டான். திருமால் கோவிலாகிய ஆடகமாடம், கருவூரிற் போன்று கொடுங்கோளூரிலும் கட்டப் பட்டிருத்தல் வேண்டும். அக்காலத்திற் பொன்னிற்குப் பஞ்ச மில்லை. செங்குட்டுவன் காலத்திற் கொங்குநாட்டுப் பகுதியையாண்ட சேரர் குடியினர், தகடூர் அதிகமான் சரவடியினரே.*

*நெடுஞ்செழியன் ஆரியப்படையை வென்றிருந்ததனாலும், செங்குட்டுவன் படை கங்கையைக் கடத்தற்கு நூற்றுவர் கன்னர் (சாதகர்ணி? சாதவாகனர்?) உதவியதனாலும், கி.பி.2ஆம் நூற் றாண்டில் ஆந்திரப் பேரரசிற்குத் தமிழ்நாடு உட்பட்டிருந்த தென்று கொள்ள இடமில்லை.*

## கடைக்கழக முடிவு

*கி.பி.3ஆம் நூற்றாண்டில், உக்கிரப் பெருவழுதி காலத்தில், பாண்டிய வரசும் கடைக்கழகமும் குலைந்தன.*

*முதலிரு கழக இலக்கியமும் முற்றும் ஆரியரால் அழியுண்டத னால், இக்காலத்திற் சிலர் கடைக்கழகம் ஒன்றே இருந்ததெனக் கருதுவர். வையாபுரிகளோ, அதுவுமிருந்த தில்லையென்றும், கி.பி. 9ஆம் நூற்றாண்டில் மதுரையில் தோன்றிய சமண சங்கம் ஒன்றே தமிழகத்திலிருந்த பண்டைத் தமிழ்க் கழகம் என்றும் கூறுவர்.*

*10ஆம் நூற்றாண்டினரான பட்டினத்து அடிகள் கழகத்தைக் குறிக்கும் சங்கம் என்னும் வடசொல்லும் பெரிய சங்கைக் குறிக்கும் சங்கம் என்னும் தென்சொல்லும் வடிவொத் திருப்பதால், சங்கைப் பயன்படுத்தும் காலம் நோக்கி அதை மூன்றாக்கி,*

***“ முதற்சங் கமுதூட்டும் மொய்குழலா ராசை***
***நடுச்சங்கம் நல்விலங்கு பூட்டும் – கடைச்சங்கம்***
***ஆம்போ ததுவூதும் அம்மட்டோ இம்மட்டோ***
***நாம்பூமி வாழ்ந்த நலம்”*** (பொது)

*என்னும் வெண்பாவில், பண்டைத் தமிழ்க் கழகம் மூன்றென்பதைக் குறிப்பாக வுணர்த்துதல் காண்க.*

*நல்விலங்கு பூட்டும் என்றது திருமணத்தன்று ஊதப்பட்டதை. அக்காலத்தில் மங்கல வினைக்கும் சங்கூதப்பட்டது. ஆம்போது என்றது இறந்தபின் ஊதப்படும் வேளையை. மூவிடத்தும் சங்கம் என்னும் வடிவே அமையுமாறு, முதற்சங்கம் பாலூட்டும் என்று பாடியிருக்கலாம். ஆயின், பாலூட்டுவது சிறு சங்காதலால், அதைச் சங்கு என்று குறித்தார்.*

## கடைக்கழகக் காலக் குறுநில மன்னர்

அகுதை, அத்தி, அதிகமான், தகடூர் பொருது வீழ்ந்த எழினி, அதிகமான் நெடுமானஞ்சி, அதிகமான் நெடுமானஞ்சி மகன் பொகுட் டெழினி, அந்துவஞ் சாத்தன், அந்துவங்கீரன், அம்பர் கிழான் அருவந்தை, அவியன், ஆதனழிசி, ஆதனுங்கன், ஆந்தை, ஆமூர் மல்லன், ஆய் அண்டிரன், இயக்கன், இருங்கோவேள், இளங்கண்டீரக்கோ, இளங்குமணன், இளவிச்சிக்கோ, இளவெளி மான், ஈர்ந்தூர் (ஈந்தூர்), கிழான் தோயன் மாறன், எயினன், எழினி, ஏற்றை, ஏறைக்கோன், ஏனாதி திருக்கிள்ளி, ஒல்லையூர்கிழான் மகன் பெருஞ்சாத்தன், ஓய்மான் நல்லியக்கோடன், ஓய்மான் வில்லியாதன், கங்கன், கட்டி, கடிய நெடுவேட்டுவன், கண்டீரக்கோப்பெரு நள்ளி, கந்தன் (நாஞ்சிற் பொருநன்), கரும்பனூர்கிழான், குமணன், கொண்கானங் கிழான், சிறுகுடிகிழான் பண்ணன், சோழநாட்டுப் பிடவூர்கிழார் மகன் பெருஞ்சாத்தன், சோழிய வேனாதி திருக்குட்டு வன், தந்துமாறன், தருமபுத்திரன், தழும்பன், தாமான் தோன்றிக் கோன், தென்பரதவர், தேர்வண் மலையன், தொண்டைமான், நம்பி நெடுஞ்செழியன், நன்னன், நன்னன் சேய் நன்னன், நாஞ்சில் வள்ளுவன், நாலைகிழவன் நாகன், நெடுவேளாதன், பழையன், பிட்டங் கொற்றன், புல்லி, பூந்துறை (புன்றுறை), பொறையாறு கிழான், மல்லிகிழான் காரியாதி, மலையமான் சோழிய வேனாதி திருக்கண்ணன், மலையமான் திருமுடிக்காரி, முக்காவல் நாட்டு ஆமூர் மல்லன், முதியன், மூவன், மையற்கோமான் மாவன், மோகூர்ப் பழையன், வல்லார்கிழான் பண்ணன், வல்வில் ஓரி, வாட்டாற் றெழினியாதன், விச்சிக்கோன், வெளிமான், வேங்கை மார்பன், வேள் எவ்வி, வேள் பாரி, வையாவிக்கோப் பெரும்பேகன் முதலியோர்.

இவருள், தொண்டைமான், நன்னன் முதலிய சிற்றரசரும், வள்ளல்களும் முடியணிந்தவராவர். கடைக்கழகக் காலத்திற் பொதுவாக மூவேந்தர் கைகளும் தாழ்ந்துவிட்டதனால், குறுநில மன்னர் தலையெடுத்து முடியணிந்துகொண்டனர். சேரன் செங்குட்டுவன் ஏழரசரை வென்று, அவர் முடிகளை மாலையாக அணிந்திருந்தான். அவ் வெழுவருள் ஐவர் குறுநில மன்னர்.

> **“ வில்கெழு தானை விச்சியர் பெருமகன்**
> **வேந்தரொடு பொருத ஞான்றை”** (குறுந்.328)

என்பது, குறுநில மன்னன் வேந்தரை எதிர்த்ததைக் கூறுதல் காண்க.

## குறுநில மன்னருட் பெருவள்ளல்கள்

அதிகமான், ஆய், ஓரி, காரி, நள்ளி, பாரி, பேகன், குமணன், நல்லியக்கோடன் என்பவர் பெருவள்ளல்கள். இவருள் முதலெழுவர்

இலக்கியப் புகழ் பெற்றவர். அவருள்ளும் பாரி பெரும்புகழ் பெற்றவன். அவ் வெழுவர் கொடைப் பொறையையும் அவருக்குப் பின் நல்லியக்கோடன் ஒருவனே தாங்கினானென்றும், நல்லூர் நத்தத்தனார் பாடுவர் (சிறுபாண்:113-15). தன் தம்பியால் நாடு கொள்ளப்பட்டுக் காடு போந்திருந்த குமணன், பெருந்தலைச் சாத்தனார்க்குக் கொடுக்கத் தன்னிடம் பொருளின்மையால், தன் தலையை வெட்டிக் கொண்டு போய்த் தன் தம்பியிடங் கொடுத்துப் பெரும் பொருள் பெறுமாறு தன் வாளைக் கொடுத்து,

> **“ சாதலி னின்னாத தில்லை யினிததூஉம்**
> **ஈத லியையாக் கடை”** (குறள்.230)

என்னுங் குறளுக்கு எடுத்துக்காட்டானான்.

இனி, எவ்வி, நன்னன், பண்ணன் முதலிய வேறுபல வள்ளல் களுமிருந்தனர்.

> **“ ஓம்பா வீகை மாவே ளெவ்வி”** (புறம்.24)
>
> **“ இசைநல் லீகைக் களிறுவீசு வண்மகிழ்**
> **பாரத்துத் தலைவன் ஆர நன்னன்”** (அகம்.152)
>
> **“ தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்**
> **பண்ணன் சிறுகுடி”** (அகம்.54)

இவ் வள்ளல்கள் இன்றேல், கடைக்கழகக் காலத்திற் புலவர் பாணர் கூத்தர் பொருநர் முதலிய இரவலர் வாழ்ந்திருக்கவும், தமிழும் இசையும் கூத்தும் வளர்ந்திருக்கவும் முடியாதென்றே கூறலாம். மாபெருஞ் செல்வரான மூவேந்தரும், பிராமணர்க்குத் தொண்டுந் தானமுஞ் செய்வதிலும், அவர் ஏவிய வேள்விகளை யெல்லாம் இயற்றுவதிலுமே, காலத்தையும் குடிகள் பணத்தையும் செலவிட்டு, ஏழைப் புலவர்க் கெல்லாம் எட்டாக் கையராகவே யிருந்துவந்தனர்.

ஆரியத் தொல்கதைஞர், தமிழ வள்ளல்களின் தலைத்திறக் கொடைச் சிறப்பையும் பொன்றாப் புகழையும் மறைத்தற் பொருட்டு, வரையாது கொடுப்பவன் தலைவள்ளல் என்றும், கேட்கக் கொடுப்பவன் இடைவள்ளல் என்றும், புகழக் கொடுப்பவன் கடைவள்ளல் என்றும், வள்ளல்களை மூவகைப்படுத்தி, செம்பியன் முதலிய எழுவர் தலையெழு வள்ளல்களும், அக்குரன் முதலிய எழுவர் இடையெழு வள்ளல்களும், ஆய் முதலிய எழுவர் கடையெழு வள்ளல்களும் ஆவர் என்று பொருத்தமின்றி உண்மைக்கு மாறாக வகுத்துள்ளனர். இருந்த வூர்களை யெல்லாம் இரவலருக்குக் கொடுத்த ஆயும் பாரியும், புலவனுக்குத் தலையையுங் கொடுத்த குமணனையும் ஒத்த கொடையாளிகள் வரலாற்றிற்குத் தெரிந்தவரை ஒருவரு மில்லை.

செம்பியனை ஆரியனென்று கருதிக்கொண்டு, அவனைத் தலையெழு வள்ளல்களுள் ஒருவனாகக் கூறியுள்ளனர். அவன் தமிழகத்துச் சோழருள் ஒருவன் என்பது முன்னரே கூறப்பட்டது. இடையெழு வள்ளல்களுள் ஒருவனாகக் கொண்ட கன்னனைப் பெருமைப் படுத்த, கொடைக்குக் கன்னன் என்றும், “கார்த்திகைக் கப்பால் மழையு மில்லை, கருணனுக் கப்பால் கொடையுமில்லை” என்றும் கூறுவர். “கொடுக்கனுக் கப்பால் மழையுமில்லை,குமணனுக் கப்பால் கொடையு மில்லை" என்றே பழமொழி வழங்கல் வேண்டும். கொடுக்கன் = தேள், நளி(கார்த்திகை) மாதம். கடைக்கழகக் கால வள்ளல்களின் தொகையை அடிப்படையாகக்கொண்டே, ஏனைக் காலத்தார் தொகையையும் ஏழேழாக வகுத்திருத்தல் காண்க.

அண்டிரன் என்பது கண்டீரன் என்பது போன்ற ஓர் இயற் பெயர். தமிழகத்தின் தென்கோடியிலுள்ள பொதியமலை நாட்டை ஆண்ட ஆய் அண்டிரன் தெலுங்கனல்லன். அண்டிரன் என்னுஞ் சொற்கு ஆந்திரன் என்னுஞ் சொல்லொடு தொடர்பில்லை.

## வடபாற் குறுநிலமன்னர்

### எருமையூரன்

இற்றை மைசூர் நாட்டின் பழம்பெயர் **எருமை நாடு** என்பது. எருமைகள் மிக்கிருந்ததனால் அந் நாடு அப் பெயர் பெற்றது. அதன் தலைநகர் **எருமையூர்**. அதிலிருந் தாண்டவன் எருமை யூரன். தலையாலங் கானத்துச் செருவென்ற **நெடுஞ்செழியனால்** வெல்லப்பட்ட எழுவருள் எருமையூரனும் ஒருவன்.

***“ கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்***
***ஆலங் கானத் தகன்றலை சிவப்பச்***
***சேரல் செம்பியன் சினங்கெழு திதியன்***
***போர்வல் யானைப் பொலம்பூண் எழினி***
***நாரரி நறவின் எருமை யூரன்***
***தேங்கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின்***
***இருங்கோ வேண்மான் இயல்தேர்ப் பொருநன்என்***
***றெழுவர் நல்வலம் அடங்க ஒருபகல்***
***முரசொடு வெண்குடை அகப்படுத் துரைசெலக்***
***கொன்றுகளம் வேட்ட”*** **(அகம்.34)**

என்று நக்கீரர் பாடுதல் காண்க.

***“ நேரா வன்தோள் வடுகர் பெருமகன்***
***பேரிசை எருமை நன்னாட் டுள்ளதை”*** **(அகம்.253)**

என்பதில், எருமை என்பது வடுகர் தலைவன் ஒருவனின் பெயரைக் குறித்ததேயன்றி, அவனை எருமைநாட்டொடு தொடர்புபடுத்தியதன்று.

எருமைக்கு வடமொழியில் மகிசம் (மகிஷ) என்று பெயர். அதனால் எருமையூர் என்பதைப் பிராமணர் மகிசபுரி என மொழிபெயர்த்தனர். அச் சொல் அதன் ஆங்கில வடிவையொட்டி இன்று மைசூர் என வழங்குகின்றது.

"மாவா ராதே" (273) என்னும் புறப்பாட்டைப் பாடிய **எருமை வெளியனார்** என்னும் புலவர், எருமையூரினராவர். "இருள்கிழிப் பதுபோல்" என்னும் 72ஆம் அகப்பாட்டைப் பாடிய கடலனார் இவர் மகனார் ஆவர்.

**நன்னன்**

எருமை நாட்டிற்கும் குடமலைக்கும் மேற்கிலுள்ள தென் கன்னடப்பகுதி, **கொண்கானம்** என்னும் பெயர்கொண்டதாகும். கொண்கு துறைமுகம் அல்லது கடற்கரை. கொண்கன் நெய்தல் நிலத்தலைவன். **கொண்கானம்** கடற்கரை நிலமாதலால் அப் பெயர் பெற்றது போலும்!

கடைக்கழகக் காலத்தில் கொண்கானத்தை ஆண்டவன் **நன்னன்.** அவன் தலைநகர் கடம்பின் பெருவாயில் என்பர். ஏழிற் குன்றம் என்னும் பெருமலையையும் **பாழி, பாரம், வியலூர், பிரம்பு** என்னும் பேரூர்களையும் உடையது கொண்கானம். அவ் வூர்களுள் பாழி ஒரு வல்லரண் நகர். அது ஏழில்மலையின் எழு குவடுகளுள் ஒன்றான **பாழியை** அரணாகக் கொண்டதாகத் தெரிகின்றது. நன்னன் ஒரு கொடையாளியாகவும் இருந்தான்.

> ***" பொன்படு கொண்கான நன்னன் நன்னாட்***
> ***டேழிற் குன்றம் பெறினும்"*** (நற்.391)

> ***" இசைநல் லீகைக் களிறுவீசு வண்மகிழ்***
> ***பாரத்துத் தலைவன் ஆர நன்னன்***
> ***ஏழில் நெடுவரைப் பாழிச் சிலம்பில்"*** (அகம்.152)

> ***" சூழி யானைச் சுடர்ப்பூண் நன்னன்***
> ***பாழி அன்ன கடியுடை வியனகர்"*** (அகம்.15)

> ***" நறவுமகிழ் இருக்கை நன்னன் வேண்மான்***
> ***வயலை வேலி வியலூ ரன்ன"*** (அகம்.97)

நன்னன் வேளிர் மரபைச் சேர்ந்தவன் என்பது, வேண்மான் என்னும் பெயராலும்,

> **" நன்னன் உதியன் அருங்கடிப் பாழித்**
> **தொன்முதிர் வேளிர் ஓம்பினர் வைத்தபொன்"** (அகம்.258)

என்பதனாலும் அறியப்படும். **பாழிப்** பொன் கவர அடிக்கடி போர் நிகழ்ந்ததனால் அந் நகர் **செருப்பாழி** எனப் பெயர் பெற்றது போலும்!

ஏழில்மலை என்பதைப் பிராமணர் சத்த சைலம் (ஸப்த சைல) என மொழிபெயர்த்தனர். பின்னர் ஏழில்மலை என்பது எலிமலை எனத் திரிந்தபோது, ஏழில்மலை நாட்டை அவர் மூசிகநாடு என்றனர். மூசிகம் (மூஷிக) என்பது எலியைக் குறிக்கும் வடசொல். **பாழிச் சிலம்பு** என்பது **பாழிக்கல்** என்றும் வழங்கும். அது இன்று **பாட்கல்** எனத் திரிந்துள்ளது. வியலூர் என்பது, இன்று கன்னடமொழி யியல்பிற்கேற்பப் பெயிலூர் (Bailur) என்று வழங்குகின்றது.

கொண்கானத்தின் கடலோர வடபகுதி துளுநாடு எனப்படும். அங்குத் தோகைக்கா என்ற ஊருள்ளது. மயில்கள் நிறைந்த சோலையினால் அவ் வூர் அப் பெயர் பெற்றது.

> **" .................பறைக்கண் பீலித்**
> **தோகைக் காவின் துளுநாட் டன்ன"** (அகம். 15)

பாழிச் சிலம்பும் மயிலுக்குப் பெயர் பெற்ற தென்பது,

> **" ஏழில் நெடுவரைப் பாழிச் சிலம்பிற்**
> **களிமயிற் கலாவத் தன்ன"** (அகம்.152)

என்பதனால்அறியப்படும். **தோகைக்கா** என்பது தோக்கா என மருவி, இன்று சோக்கு (ஜோக்) எனத் திரிந்துள்ளதாகப் பேரா. ஔவை சு. துரைசாமிப் பிள்ளையார் கூறுவார்.

கொண்கானம் என்பது கடைக்கழகக் காலத்திலேயே கொங் கணம் எனத் திரிந்துவிட்டது. "கொக்கென்று நினைத்தனையோ கொங்கணவா?" என்று திருவள்ளுவர் மனைவியார் கூறியதாகக் கதையுண்மையும், "கொங்கணர் கலிங்கர் கொடுங்கரு நாடர்" என்று சிலப்பதிகாரம்(25:156) கூறுவதையும் காண்க.

## வெளியன் வேண்மான் ஆய் எயினன்

கொண்கானத்தின் தென்கீழ்ப் பகுதி **புன்னாடு** எனப்பட்டது.. அதை ஆண்ட வெளியன் வேண்மானார் மரபில் வந்தவன் வெளியன் வேண்மான் ஆய் எயினன். அவன் தலைநகர் **வாகை.**

> **" வண்கை எயினன் வாகை யன்ன"** (புறம்.351)

> **"யாம விரவின் நெடுங்கடை நின்று**
> **தேமுதிர் சிமையக் குன்றம் பாடும்**
> **நுண்கோ லகவுநர் வேண்டின் வெண்கோட்**
> **டண்ணல் யானை யீயும் வண்மகிழ்**
> **வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்"** (அகம்.208)

என்பதனால், அவன் கொடைத்திறம் விளங்கும்.

பதிற்றுப்பத்தின் 2ஆம் பதிகம், இமயவரம்பன் நெடுஞ்சேர லாதனை, "உதியஞ் சேரற்கு வெளியன் வேண்மாள் நல்லினி ஈன்ற மகன்" என்கின்றது. அவ் வேண்மாள் வெளியன் மரபினள் போலும்.

## பிட்டங்கொற்றன்

கொண்கானத்திற்குக் கிழக்கில், குடமலைத் தொடரிலுள்ள குவடுகளுள் ஒன்று குதிரைமலை. அம் மலைநாட்டை யாண்டவன் பிட்டங்கொற்றன்.

> **"அருவி யார்க்குங் கழைபயில் நனந்தலைக்**
> **கறிவள ரடுக்கத்து மலர்ந்த காந்தட்**
> **கொழுங்கிழங்கு மிளிரக் கிண்டிக் கிளையொடு**
> **கடுங்கட் கேழ லுழுத பூழி**
> **நன்னாள் வருபத நோக்கிக் குறவர்**
> **உழாஅது வித்திய பரூஉக்குரற் சிறுதினை**
> **முந்துவிளை யாணர் நாட்புதி துண்மார்**
> **மரையான் கறந்த நுரைகொள் தீம்பால்**
> **மான்றடி புழுக்கிய புலவுநாறு குழிசி**
> **வான்கே ழிரும்புடை கழாஅ தேற்றிச்**
> **சாந்த விறகின் உவித்த புன்கம்**
> **கூதளங் கவினிய குளவி முன்றிற்**
> **செழுங்கோள் வாழை யகலிலைப் பகுக்கும்**
> **ஊராக் குதிரைக் கிழவ கூர்வேல்**
> **நறைதார்த் தொடுத்த வேங்கையங் கண்ணி**
> **வடிநவில் அம்பின் வில்லோர் பெரும**
> **கைவள் ளீகைக் கடுமான் கொற்ற**
> **வையக வரைப்பில் தமிழகங் கேட்பப்**
> **பொய்யாச் செந்நா நெளிய ஏத்திப்**
> **பாடுப என்ப பரிசிலர் நாளும்**
> **ஈயா மன்னர் நாண**
> **வீயாது பரந்தநின் வசையில்வான் புகழே"** (புறம். 168)

என்னும் கருவூர்க் கந்தப் பிள்ளை சாத்தனார் பாட்டும்,

***" ஒளிதிகழ் முத்தம் விறலியர்க் கீத்து***
***நார்பிழிக் கொண்ட வெங்கட் டேறல்***
***பண்ணமை நல்யாழ்ப் பாண்கடும் பருத்தி"*** (புறம். 170)

என்னும் உறையூர் மருத்துவன் தாமோதரனார் பாட்டும்,

***" இன்று செலினுந் தருமே சிறுவரை***
***நின்று செலினுந் தருமே பின்னும்***
***முன்னே தந்தனென் என்னாது துன்னி***
***வைகலுஞ் செலினும் பொய்யல னாகி***
***யாம்வேண்டி யாங்கெம் வறுங்கலம் நிறைப்போன்***
***தான்வேண்டி யாங்குத் தன்னிறை யுவப்ப***
***அருந்தொழில் முடியரோ திருந்துவேற் கொற்றன்***
***இனமலி கதச்சேக் களனொடு வேண்டினும்***
***களமலி நெல்லின் குப்பை வேண்டினும்***
***அருங்கலம் களிற்றொடு வேண்டினும் பெருந்தகை***
***பிறர்க்கும் அன்ன அறத்தகை யன்னே"*** (புறம்.171)

என்னும் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாட்டும், குதிரைமலைக் குறவர் வாழ்க்கையையும், கொற்றன் கொடைத் திறத்தையும் தெளியக் காட்டும்.

குதிரைமலைப் பகுதியிலுள்ள வடகரை மேற்கரை என்னும் இடப்பெயர்கள், இன்று 'படகரா', 'மர்க்கரா' என்று உருமாறி வழங்குகின்றன.

குதிரைமலை நாட்டுத் தலைநகர்ப் பெயரான கொற்றன் கருவூர் என்பது, இன்றும் 'கொத்த கனவூர்' என்று வழங்கி வருவதாகப் பேரா. ஔவை சு.து. கூறுவர்.

## இருங்கோவேள்

கொண்கானத்தின் வடபா லிருந்தது கடம்பரின் பங்களநாடு. அவ்விரு நாடுகட்கும் கிழக்கில் குடமலைத்தொடரின் கீழ்பால் இருந்தது வேளிரது வேணாடு. அந் நாட்டுத் துவரை நகரைத் தலைநகராகக் கொண்டு இருங்கோவேள் ஆண்டு வந்தான்.

***" உவரா வீகைத் துவரை யாண்டு***
***நாற்பத் தொன்பது வழிமுறை வந்த***
***வேளிருள் வேளே"*** (புறம்.201)

என்று கபிலர் பாடுதல் காண்க.

துவரை (துவாரசமுத்திரம்) இன்று எருமையூர் நாட்டைச் சேர்ந்தது.

வேம்பாய்ப் (Bombay) பைதிரம் (பிரதேசம்) முழுதும் முன் காலத்தில் வேணாடா யிருந்தது. முன்னர் நைசாம் அரையத்தைச் சேர்ந்திருந்த எல்லோரா (Ellora), பழைய பட்டையங்களில் (சாஸனங்களில்) வேளூர் என்றும் வேளூரகம் என்றும் குறிக்கப் பட்டுள்ளது. வேம்பாய்ப் பைதிரத்துச் சோழாபுரம் (Sholapur) மாவட்டத்தில் ஒரு நகர் வேளாபுரம்(Velapur) என்ற பெயர் கொண்டுள்ளது. அகமதுநகர் வட்டத்தில் வேளாபுரம் என்றும், பூனா மாவட்டத்தில் வேளகம் என்றும், பல நகரங்கள் உள்ளன. அப் பைதிரத்தைச் சேர்ந்த வேளகம் (வேள் கிராமம் (?)) என்னும் மாவட்டத் தலைநகர் பெல்காம் (Belgaum) என்றும், வேள்பட்டி என்னும் ஊர் பேல்ஹூட்டி (Belhutti) என்றும் வழங்குகின்றன. ஒய்சள மன்னரின் பட்டப்பெயரான பெல்லாள என்பது வேளாளன் என்பதன் திரிபாகவே கருதப்படுகின்றது.

தொடக்கக் காலத்தில், வேணாடு மராட்டிய நாட்டில் மட்டுமன்றி கூர்ச்சரத்திலும் பரவியிருந்தது. கத்தியவார் கச்சுப் (Cutch)பைதிரங்களில், இன்றும் பலவூர்கள் வேளா என்பதன் திரிபான பேலா(Bela) என்னும் பெயர் கொண்டுள்ளன. அகத்தியர் துவராபதிப் போந்து பதினெண்குடி வேளிருள்ளிட்டாரைக் கொண்டுவந்தார் என்னும் நச்சினார்க்கினியர் கூற்றும், வேதக் காலத்தில் மராடமும் குச்சரமும் பஞ்சதிரவிடத்துள் அடக்கப் பட்டதும் இங்குக் கவனிக்கத்தக்கன.

பிற்காலத்துத் தோன்றிய சளுக்கியர் வேணாட்டை ஆண்ட தனாலேயே, "வேள்புல வரசர் சளுக்கு வேந்தர்" என்று திவாகரமும் பிங்கலமும் கூறுகின்றன.

### கங்கர்

இற்றை எருமையூர் (மைசூர்) நாட்டின் ஒரு பகுதியை, அஃதாவது, பண்டைக் குணகொங்கின் வடபாகத்தில் ஒரு பகுதியை, கங்கர் என்னும் மரபினர் கடைக்கழகக் காலத்திலேயே ஆண்டு வந்தனர்.

**" துன்னருங் கடுந்திறற் கங்கன் கட்டி "** (அகம்.44)

என்று அகப்பாட்டும்,

**" பங்களர் கங்கர் பல்வேற் கட்டியர் "** (சிலப்.25:157)

என்று சிலப்பதிகாரமும் கூறுதல் காண்க.

கொங்கன் என்னும் பெயரே கங்கன் என்று திரிந்திருக்கலாம்.

## கட்டியர்

*கங்கநாட்டிற்குக் கிழக்கிலிருந்த பண்டைக் குணகொங்குப் பகுதியைக் கங்கர் ஆண்டுவந்ததாகத் தெரிகின்றது.*

***" குல்லைக் கண்ணி வடுகர் முனையது***
***பல்வேற் கட்டி நன்னாட் டும்பர்***
***மொழிபெயர் தேஎத்த ராயினும் "*** **(குறுந்.11)**

*என்னுங் குறுந்தொகைப் பாட்டை நோக்குக.*

*வடக்கிற் பல்லவர் தலையெடுத்த பின்பும், தெற்கில் அதிகமானர் கை தாழ்ந்த பின்புமே? கங்கநாடும் கட்டிநாடும் தெற்கே தள்ளி வந்திருத்தல் வேண்டும்.*

## காவிரிப்பூம்பட்டினம் கடலில் மூழ்கியமை

*சேரன் செங்குட்டுவன் பத்தினித் தெய்வத்திற்குப் படிமை நிறுவி விழா வெடுத்தபின், காவிரிப்பூம்பட்டினத்தைக் கடல் கொண்டது. அன்றோ அதற்குச் சற்றுமுன்போ குமரியாறும் கடலுள் மூழ்கிற்று. அதன்பின் தமிழகத்தின் தென்னெல்லையும் கடலாயிற்று. அதனால்,*

***" நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும் "*** **(சிலப்.8:1)**

*என்று பாடினார் இளங்கோவடிகள்*

## கடைக்கழக் கால வாணிக வளர்ச்சி

*நிலவணிகமும் நீர்வணிகமும் கடைக்கழகக் காலத்திற் பெரு வளர்ச்சி யடைந்திருந்தது.*

*சட்டை யணிந்தவரும் பாதக்கூடு* (boots) *மாட்டியவருமான மேலையாசியரும் மேனாட்டாரும், மிளகுபொதிகள் கொண்டு செல்லும் கோவேறு கழுதைச் சாத்தொடு கூடி, மலைபடு செல்வமுங் கடல்படு செல்வமுமான பல அரும்பொருள்களை, அரசன் நிறுத்திய விற்படைஞர் இரவும் பகலுங் காத்திருக்கும் சுங்கப் பெருவழிகளிற் சென்று விற்றுத் திரிந்தனர்.*

***" மலையவுங் கடலவு மாண்பயந் தரூஉம்***
***அரும்பொரு ளருத்துந் திருந்துதொடை நோன்றாள்***
***அடிபுதை யரணம் எய்திப் படம்புக்கு "***
***.............................................................***
***உடம்பிடித் தடக்கை யோடா வம்பலர்***
***அணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்***
***உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்***
***...............................................................***
***வில்லுடை வைப்பின் வியன்காட் டியவின்*** (பெரும்பாண்:67–82)

கடாரம் (பர்மா), மலையா முதலிய கீழைநாடுகட்கும், சுமதுரை சாலி (சாவகம்) முதலிய கீழைத்தீவுகட்கும், நீர்வாணிகர் சென்று வணிகம் செய்து வந்தனர். அவர் இக்காலத்து நாட்டுக்கோட்டைச் செட்டிமார்போல் தங்கள் குடும்பங்களை இங்கேயே விட்டுச் சென்றனர். இவ் வழக்கம் கி.மு. 7ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே இருந்ததென்பது,

**" முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை."** (தொல்.980)

என்னும் தொல்காப்பிய நூற்பாவால் அறியப்படும்.

கீழ்கரையி லிருந்த கொற்கை தொண்டி புகார் முதலிய துறை நகரங்களுள், புகார் மிகப் பெரிதாகவும் உலகிலேயே தலைசிறந்த தாகவும் இருந்தது. அது காவிரிக் கயவாயில் அமைந்த அழகிய துறைநகரமாதலால் காவிரிப்பூம்பட்டினம் என்றும், அவ்வாறு கடலிற் புகும் இடத்திலிருந்ததனால் புகார் என்றும் பெயர் பெற்றது. துறைநகரைப் பட்டினம் என்பது பண்டை வழக்கு. பதி - பதனம் - பத்தனம் - பட்டனம் (பட்டணம்) - பட்டினம்.

**" கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்**
**பயனற வறியா யவனர் இருக்கையும்**
**கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்**
**கலந்திருந் துறையும் இலங்குநீர் வரைப்பும்"** (சிலப்.5:9–12)

**" மொழிபெயர் தேத்தோர் ஒழியா விளக்கமும்"** (சிலப்.6:143)

என்பவற்றால், உலகெங்கணுமுள்ள பல்வேறு நாட்டுமக்கள், காவிரிப் பூம்பட்டினத்தில், தங்கள் நாட்டுப் பொருள்களுடன் தங்கியிருந்தமை அறியப்படும். யவன ரென்பார் கிரேக்கரும் உரோமரும்.

மேல்கரையி லிருந்த முசிறி தொண்டி மாந்தை முதலிய துறைநகர்களுள், சுள்ளியம் பேரியாற்றுக் கயவாயிலிருந்த முசிறி சிறந்ததா யிருந்தது.

**" சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க**
**யவனர் தந்த வினைமாண் நன்கலம்**
**பொன்னொடு வந்து கறியொடு பெயரும்**
**வளங்கெழு முசிறி"** (அகம்.149)

## பாண்டியன் உரோம நாட்டுத் தொடர்பு

பாண்டியன் அகத்தசு(Augustus-கி.மு. 44 - கி.பி.14) என்னும் உரோம நாட்டுப் பேரரசனுக்குத் தூது விடுத்ததாகவும், அது ஏற்றுக் கொள் ளப்பட்டதாகவும் சொல்லப்படுகின்றது. ஏற்கெனவே இரு நாடுகட்கும் இடையே இருந்த வாணிகத் தொடர்பொடு

தூதாண்மைத் தொடர்பும் ஏற்பட்டதன் விளைவாக, ஒரு சிறு உரோமக் குடியேற்றம் மதுரையில் அமைந்ததாகவும், பாண்டியன் மெய்காவற்படை உரோமப் பொருநரைக் கொண்டிருந்ததாகவும் தெரிகின்றது. மதுரை மாநகர்க் கோட்டை வாயிலையும், கோவலன் காலத்தில் உரோமப் படைஞர் காத்து நின்றதை,

> **“ கடிமதில் வாயில் காவலிற் சிறந்த**
> **அடல்வாள் யவனர்க் கயிராது புக்காங்கு ”** (சிலப். 14:66–7)

என்பதனால் அறியலாம். இந் நிலைமை கி. பி. 4ஆம் நூற்றாண்டு வரை நீடித்தது. அதனால், அக்காலத்து உரோமக் காசுகள், பாண்டி நாட்டில் மட்டுமன்றித் தமிழகத்தின் பலவிடங்களிலும் கிடைத் துள்ளன.

> **“ யவனர் நன்கலந் தந்த தண்கமழ் தேறல் ”** (புறம். 56:18)

என்பது, யவனர் பாண்டியர் வாணிகத் தொடர்பைக் காட்டும்.

## மேலை யாரியக் கலத்துறைச் சொற்கள்

உலகில் முதன்முதல் ஆழ்கடலிற் பெருங்கலஞ் செலுத்தின வரும், சுற்றுக்கடலோடிகளா(circumnavigators)யிருந்தவரும் தமிழரே. அதனாற் கடலும் கலத்துறையும்பற்றிய பல தமிழ்ச் சொற்கள், மேலையாரிய மொழிகளிற் கலந்துள்ளன.

வாரி-L. mare. வாரணம்-L. marinus, E. marina, marine, mariner.

படகு-LL. barea, It., Sp., Pr. barca, F. barque. E. bark, barque.

L. barga, OF. barg, E. barge.

ட-ர, போலித் திரிபு. ஒ. நோ: கொடுக்கு-ME. croc, E. crook. குடகு, தூத்துக்குடி, கள்ளிமேடு, தரங்கம்பாடி முதலிய இடப்பெயர்கள் ஆங்கிலத்திற் கொண்டுள்ள வடிவுகளையும் நோக்குக.

கலம் - Gk. galaia, L. galea, OF. galie, ME. galie, E. galley

கப்பல் - OE. scip, OFris. skip, schip, NFris. skapp, skep, WFris. skip. OS. skip, MLG. schip, schep, LG. schipp, MDu. sc(h)ip, sc(h)eep, Du. schip, WFlem. scheep, OHG. scif, skef, MHG. schif, schef, G. schiff, ON. skip, Sw. kepp, Da. skib, Goth. skip, F. esquif, It, schifo.

இது தியூத்தானியப் பொதுச்சொல் (Com. Teut.) என்றும், இதன் அடிமூலம் திட்டமாய்த் தெரியவில்லை யென்றும் ("the ultimate etymology is uncertain") என்றும், எருதந்துறை ஆங்கிலப் பேரகர முதலியிற் (O.E.D.)குறிக்கப்பட்டுள்ளது.

கொம்பு - கொப்பு - கப்பு - கப்பல் = பல கிளைகளைக் கொண்ட பாய்மரமுள்ள கலம்.

நாவி, நாவாய்-L. navis, navia, OF. navie, ME. navie, E. navy. Gk. naus.

நங்கூரம்-Gk. agkura, L. ancora, OE. ancor, E. anchor, Pers. langar.

ஆங்கில அகரமுதலியில், இச் சொற்கு agk(hook) என்னும் கிரேக்கச் சொல் மூலமாகக் காட்டப்பட்டுள்ளது. அச் சொல்லும் அங்கு என்னும் தென்சொல்லின் திரிபே. அங்குதல் = வளைதல். அங்கு - அங்கணம் = வாட்டமான சாய்கடை.

முதன்முதல் தமிழகத்தினின்றே மேனாடுகட்குச் சரக்குகள் ஏற்றுமதியாயின என்பதற்கு, அரிசி, இஞ்சி என்னும் இரு சொற்களே போதிய சான்றாம்.

அரு - அரி = 1. சிறுமை. அரிநெல்லி (சிறுநெல்லி).

2. நுண்மை. “அரியே ஐம்மை.” **(தொல். 839)**

3. அரிசி. “அரிசியும் வரியும் அரியென லாகும்” **(பிங்.)**

அரி - அரிசி = 1. சிறியது. அரிசிப் பல் (சிறுபல்). 2. நெல் புல் (கம்பு) முதலிய கூலங்களின் உள்ளீடு.

அவரை துவரை முதலிய பயற்றம் பருப்புகளை நோக்க, நெல் புல் முதலிய தவசங்களின் அரிசி சிறியதாயிருத்தல் காண்க.

அரிசி-E. rice, ME. rys, Fris. rys, Du. rijst, rijs, rys, MLG. riis, ris, MHG. ris, G. reis, MSw. riis, Sw. and Da. ris, OF. ris, F. riz, It. riso, L. oriza, oryza, Gk. oruza, oruzon, Sp. and Pg. arroz, Arab. aruz, uruz. Bot. n. L. Oryza sativa.

நெல் தொன்றுதொட்டுத் தமிழகத்து விளைபொருள் என்பதும், அரிசி முதன்முதல் தமிழகத்தினின்றே மேனாடுகட்கு ஏற்றுமதியான தென்பதும் வெளிப்படை. அங்ஙனமிருந்தும், எருதந்துறை ஆங்கிலப் பேரகர முதலியில் (O.E.D.), ‘அரிசி’ தமிழ்ச்சொல் லென்று குறிக்கப்படாது, "probably of Oriental origin", என்றும் எருதந்துறைச் சிற்றகர முதலியில் (C.O.D.), “of oriental orig." என்றும் மட்டுமே குறிக்கப் பட்டுள்ளது.

இதற்குக் கரணியமா யிருந்தவர் ஆரியர் மட்டுமல்லர்; அவரடியா ரான வையாபுரிகளும் தன்னலப் புலிகளும் வணிகப் புலவரு மாவர். அண்ணாமலை பல்கலைக் கழகத்திற் பத்தாண்டு கட்கு முன்னரே என்னால் தொகுக்கப்படவிருந்த செந்தமிழ்ச் சொற் பிறப்பியற் பேரகர முதலி, சேதுப்பிள்ளையால் தடுக்கப்பட்டு விட்டது. அதை இன்னும் அப் பல்கலைக்கழகம் உணரவில்லை.

*இஞ்சிவேர்*-Gk. ziggiberis, L. zingiber, gingiber, OE. gingifer, gingiber, E. ginger.

OF. gingibre, gingimbre, Mod. F. gingembre, Pr. gingibre, gingebre, Sp. gengibre, agengibre, Pg. gengivre, It. zenzevero, zenzero, gengero, gengiovo.

Arab. zanjabil, MDu. gengber, D. gember, MHG. ingewer, Ger. ngwer, MLG. engewer, Da. ingefeer, Sw. ingefara.

*கோழிக்கோட்டிலிருந்த*(Calicut) *ஏற்றுமதியான பருத்தித் துணி ஆங்கிலத்திற் கலிக்கோ*(Calico) *என்று பெயர் பெற்றுள்ளது.*

### கடைக்கழகக் கால ஆரிய மீக்கூர்வு

*பழங்குடிப் பேதைமை, மதப்பித்தம், கொடைமடம் என்னும் முக்குற்றமும் ஒருங்கு கொண்ட மூவேந்தரும், பகுத்தறிவைப் பயன் படுத்தாது பிராமணரை முற்றும் பின்பற்றியதனால், கடைக்கழகக் காலத்தில், மதவியல் குமுகாயவியல் மொழியியல் என்னும் முத்துறை யிலும், ஆரியம் மிக வேரூன்றிவிட்டது.*

## (1) மதத்துறை

### ஆரியப்படுத்தம்

*தமிழர், நால் வேதங்களையும் நான்முகமாகக் கொண்டதனால், அவனைத் திருமாலின் (கொப்பூழினின்று பிறந்த) மகனென்று தமிழ்த் தெய்வத்துடன் இணைத்துவிட்டனர்.*

***“ நீனிற வுருவின் நெடியோன் கொப்பூழ்***
***நான்முக வொருவற் பயந்த பல்லிதழ்த்***
***தாமைரப் பொகுட்டிற் காண்வரத் தோன்றி”*** (பெரும்பாண்.402–4)

*ஆரிய வேதங்கட்கும் சிவனுக்கும் யாதொரு தொடர்பும் இன் றேனும், சிவனே வேதங்களை யருளியதாகக் கூறப்பட்டது.*

***“ நான்மறை முதுநூல் முக்கட் செல்வன்”*** (அகம்.181)

*முதுகுடுமிப் பெருவழுதி, கரிகால் வளவன், அரச வேள்வி (ராஜஸூய) வேட்ட பெருநற்கிள்ளி, பல்யானைச் செல்கெழு குட்டுவன், சேரன் செங்குட்டுவன் முதலிய தமிழவேந்தர், ஆவின் பாலிருக்க அங்கணநீர் குடிப்பார்போல், கோவிலில் வழிபடும் பெருந்தேவ வழிபாட்டை விட்டுவிட்டுக் கொலைவேள்வி செய்யும் சிறுதெய்வ வழிபாட்டை மேற்கொண்டனர்.*

***“ கடல்வளர் புரிவளை புரையு மேனி***
***யடல்வெந் நாஞ்சிற் பனைக்கொடி யோனும்”*** (புறம்.56)

என்பவற்றால், திருமாலின் பல தோற்றரவுக் கொள்கை புகுத்தப் பட்டது தெளிவாகின்றது.

**"கறைமிட றணியலு மணிந்தன் றக்கறை**
**மறைநவி லந்தணர் நுவலவும் படுமே"** (புறம். கட.வா.)

என்பது, ஒரு கட்டுக்கதையால் சிவனை ஆரியப்படுத்தும்.

**"நீரற வறியாக் கரகத்துத்**
**தாழ்சடைப் பொலிந்த அருந்தவத் தோற்கே"** (புறம். கட. வா.)

என்பது, சிவபெருமானுக்குப் பிராமண வடிவேற்றுந் தொடக் கத்தைக் காட்டும்.

திருமுருகாற்றுப்படை, கந்தபுராணக் கட்டுக்கதையால் முருகன் ஆரியத் தெய்வமாக்கப்பட்டதைத் தெரிவிக்கும்.

தெய்வம்பற்றிய பரிபாடற் பாக்களால், ஆரியத் தெய்வங்க ளெல்லாம் தமிழகத்துட் புகுத்தப்பட்டதை அறியலாம்.

**"தெய்வ மால்வரைத் திருமுனி யருள**
**........................................**
**தாதவிழ் புரிகுழல் மாதவி தன்னை"** (சிலப்.3:1–7)

என்பதனால், ஒரு வரலாற்று மகளும் ஆரியத் தொல்கதைத் தொடர்பு படுத்தப்பட்டுள்ளாள்.

## ஏமாற்று

நோயால் இறந்த அரசருடம்பைப் பிராமணன் தருப்பையிற் கிடத்தி வாளால் வெட்டி, அவருயிரை விண்ணுலகத்திற் கேற்றும் வாள்போழ்ந் தடக்கலும்; பாலைக் கௌதமனார், பத்துப் பெரு வேள்வி வேட்டுப் பத்தாம் வேள்வி வேட்கையில், தம் மனைவி யாருடன் விண்ணுலகடைந்தா ரென்பதும்; பாண்டியன் அரசியற் பணியாளர் வார்த்திகனைச் சிறையிலடைத்தவுடன், காளிகோயிற் கதவம் தானே சாத்திக்கொண்ட தென்பதும் துணிச்சலான ஏமாற்று வினைகளாம்.

## பொருள் கவர்வு

தமிழ வேந்தரின் பொற்செல்வப் பெருக்கையும் ஏமாளித் தன்மை யையுங் கண்ட பிராமணர், அவரிடமிருந்து இயன்றவரை பொன்னும் நிலமும் பறிக்கத் திட்டமிட்டுப் பதினாறு தானங்கள் வகுத்துள்ளனர். அவையாவன:

(1) துலாபுருடதானம் - ஆள்நிறைப் பொற்கொடை.
(2) இரணிய கருப்பதானம் - பொற் கருப்பைக் கொடை.

| | | |
|---|---|---|
| (3) | பிரமாண்ட தானம் | - பொன் நிலவுருண்டைக் கொடை. |
| (4) | கல்ப பாதப தானம் | - விண்மரப் பொற்கொடை |
| (5) | கோசகசிரம் | - ஆயிர ஆக் கொடை. |
| (6) | இரணிய காமதேனு தானம் | - பொன்னாக் கொடை. |
| (7) | இரணியாசுவ தானம் | - பொற்குதிரைக் கொடை. |
| (8) | இரணியாசுவரத தானம் | - பொற்குதிரைத்தேர்க்கொடை. |
| (9) | ஏமாத்தித தானம் | - பொன்யானைத் தேர்க் கொடை. |
| (10) | பஞ்சலாங்குல பூதானம் | - ஐயேர் நிலக்கொடை. |
| (11) | தரா தானம் | - பொன்நிலக் கொடை. |
| (12) | விசுவ சக்கர தானம் | - வியனுல காழிப் பொற்கொடை. |
| (13) | மகா கல்ப லதா தானம் | - பெருவிண்கொடிப் பொற்கொடை. |
| (14) | சப்த சாகர தானம் | - எழுகடற் கொடை. |
| (15) | இரத்தினதேனு தானம் | - மணிப்பொன் னாக்கொடை. |
| (16) | மகா பூத கடதானம் | - ஐம்பூதப் பொற்கலக் கொடை. |

இவற்றுள் விண்மரப் பொற்கொடை ஒரு குதிரை வேள்விக்குச் சமம் என்றும், பொற்குதிரைத் தேர்க்கொடையால் தீவினை யனைத்தும் நீங்குமென்றும் சொல்லப்பட்டது.

பொற்கருப்பைக் கொடை என்பது, பொன்னால் ஆவுருச் செய்து அதனூடு புகுந்து வெளிவந்தபின் அதனைப் பிராமணனுக்குக் கொடுப்பது. பொன்னாப் புகல் மறுபிறப்பிற்கு ஒப்பான தென்றும், அதனால் தீவினை நீங்கி வாழ்நாள் நீடிக்கும் என்றும் கருத்து. ஓர் ஆள் புகுந்து வெளிவருமளவு ஆவுருவம் செய்வதற்கு, எத்துணைப் பொன் வேண்டுமென்றும், அதைப் பெறுபவனுக்கு அது எத்துணைப் பெருஞ்செல்வமென்றும் எண்ணிக் காண்க.

பொன்னிலக்கொடையென்பது நாவலந்தீவம்போல் அமைத்த திண்ணிய பொற்கட்டைக் கொடுப்பது.

எழுகடற்கொடை என்பது நன்னீர், உவர்நீர், பால், தயிர், நெய், தேன், கருப்பஞ்சாறு ஆகியவற்றை எழு குண்டங்களில் நிரப்பிச் சடங்குசெய்து கொடுப்பது.

பிராமணருக்குக் கொடுக்கும் நிலத்திற்குப் **பிரமதாயம்** என்றும், ஊர்க்குப் **பிரமதேயம்** என்றும் பெயர்.

*மேற்கூறிய பதினாறு தானங்களும், தெய்வ விழா நாளாகிய திருநாளிலும் பிறந்த நாள், மணநாள், வெற்றிநாள் முதலிய பெருநாள் களிலும், அரசராற் கைம்மாறின்றிப் பிராமணத் தலைவர்க்குச் செய்யப் படும். பிராமணர் தெய்வத் தன்மையுள்ளவர் என்று நம்பப் பட்டதனால், அவர்க்குச் செய்யுந் தானம், கோவிற்குக் கொடுக்குங் காணிக்கைபோல் மதத் தொடர்பான நல்வினையாகக் கருதப்பட்டது. வேத அறிவிற்குத் தக்கவாறு பிராமணனுக்குச் சிறப்பு ஏற்பட்டது. கடைக்கழகக் காலத்திற் சேரன் செங்குட்டுவன் மாடலனுக்குக் கொடுத்த, ஆள்நிறைப் பொன் (50துலாம்) குறிக்கப்பட்ட சிலப்பதிகாரம் இறந்துபடாமல் உள்ளது. இன்னும் எத்தனை பிராமணர்க்கு எத்தனை வேந்தர் எத்தனை முறை அத் தானம் வழங்கினரோ, அறியோம்.*

## (2) குமுகாயத்துறை

### பிராமண வுயர்த்தம்

*தொடக்கத்தில் பூணூ லும் குண்டிகையும் முக்கோலும் மணையும் கொண்டு திரியும் நாடோடிப் பிராமணர்க்கும், பின்னர் வேதமோதிய எல்லாப் பிராமணர்க்கும்,தமிழ்த் துறவியர்க்குரிய அந்தணன் முனிவன் என்னும் பெயர்களை மட்டுமன்றி, இறைவனுக்குரிய பகவன் கடவுள் என்னும் பெயர்களையும், ஆரியரும் தமிழரும் வழங்கத் தலைப்பட்டு விட்டனர்.*

*தம்மை அந்தணரென்று பெருமையாகச் சொல்லிக்கொண்ட கபிலர், வேதம் ஓதினவரோ அல்லரோ அறியோம். பொதுவாக, பார்ப்பான் என்னும் பெயர் இல்லறத்தார்க்கும், அந்தணன் என்னும் பெயர் துறவறத்தார்க்கும் உரியனவாகும். வேள்வித்துறை முற்றிப் பார்ப்பன வாகை சூடிய, சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயனும், அந்தணன் என்னும் பெயரை மேற்கொண்டிலன். "அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்" என்றே (1021) தொல்காப்பியருங் கூறுகின்றார். அங்ஙனமிருந்தும், பாரியொடு பழகினவரும்,*

> ***" புலவு நாற்றத்த பைந்தடி***
> ***பூநாற்றத்த புகைகொளீஇ யூன்றுவை***
> ***கறிசோ றுண்டு"*** (புறம்.)

*வந்தவருமான கபிலர் தம்மை அந்தணர் என்றது, இக்கால நிலைக்கு இயல்பாயினும் அக்கால நிலைக்கு வியப்பானதே.*

## நால்வரண நிலைநாட்டு

நால்வரணக் கொள்கையை நன்றாக நாட்டுதற்கு, மதுரைக் கோட்டை மதில் நான்கிலும், வெண்மை செம்மை பொன்மை கருமை ஆகிய நானிற வரணப் பூதவடிவுகளும், முறையே வரையப்பட்டிருந்தன.

> **“ தண்கதிர் மதியத் தன்ன மேனியன்**
> **.......................................**
> **பவளச் செஞ்சுடர் திகழொளி மேனியன்**
> **.......................................**
> **செந்நிறப் பசும்பொன் புரையு மேனியன்**
> **.......................................**
> **மண்ணுறு திருமணி புரையு மேனியன்**
> **.......................................**
> **நாற்பாற் பூதமும் பாற்பாற் பெயர ”** (சிலப். 22:17–108)

நாடகம் பார்ப்பவர் அனைவரும் காணுமாறு, நால்வரணப் பூதங்களையும் வரைந்த வண்ணப் படம் நாடக வரங்கின்மேல் வைக்கப்பட்டது.

> **“ கூறிய வுறுப்பிற் குறியொடு புணர்ந்தாங்**
> **காடுநர்க் கியற்று மரங்கின் நெற்றிமிசை**
> **வழுவில் பூதம் நான்கும் முறைப்பட**
> **எழுதின ரியற்றல் இயல்புணர்ந் தோரே."** (சீவக.672,நச். மேற்.)

> **“ வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்**
> **கீழ்ப்பா லொருவன் கற்பின்**
> **மேற்பா லொருவனு மவன்கட் படுமே ”** (புறம். 183)

என்றான் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்.

## தொழிலாளரைத் தாழ்த்தல்

> **“ கட்டில் நிணக்கும் இழிசினன் ”** (புறம். 82)

> **“ துடியெறியும் புலைய**
> **எறிகோல் கொள்ளும் இழிசின ”** (புறம். 287)

என்பன, கட்டில் பின்னுவானையும் பறையடிப்பானையும் இழித்துக் கூறுவன.

> **“ கண்ணுள் வினைஞர் கைவினை முற்றிய**
> **நுண்வினைக் கொல்லர் நூற்றுவர் பின்வர**
> **மெய்ப்பை புக்கு விலங்குநடைச் செலவிற்**
> **கைக்கோற் கொல்லன் ”** (சிலப்.16:105–8)

பாண்டியன் பெயரொடு வரிசை பெற்றவனாயிருந்தும், "விலங்குநடைச் செலவு" என்னுந் தொடருக்கு, "இழிகுலத் தோனாதலின், உயர்ந்தோர் வந்தவிட மெங்கும் விலங்கி நடத்தல்." என்று குறிப்புரைகாரரும், "மேன்மக்களைக் கண்டு ஒதுங்கி நடத்தல்" என்று அடியார்க்குநல்லாரும் உரை வரைந்துள்ளனர். இதனால், அக்காலத்திலேயே, ஆரியர்ச் சூழ்ச்சியால் சில தமிழ வகுப்பாரிடைப் பிணக்கேற்பட்டிருந்ததாகத் தெரிகின்றது.

**மணிகளில் நால்வரணப் பிரிவு**

> ***" காக பாதமுங் களங்கமும் விந்துவும்***
> ***....................................***
> ***நால்வகை வருணத்து நலங்கே ழொளியவும்"*** (சிலப்.14:180–3)

நால்வகை வருணத் தொளியாவன:

> ***" அந்தணன் வெள்ளை அரசன் சிவப்பு***
> ***வந்த வசியன் பச்சை சூத்திரன்***
> ***அந்தமில் கருமையென் றறைந்தனர் புலவர்"***

" இனி, வருண நான்கின் பயனாவன :

> ***" மறையோ ரணியின் மறையோ ராகிப்***
> ***பிறவி யேழும் பிறந்துவாழ் குவரே."***

> ***" மன்னவ ரணியின் மன்னவர் சூழ***
> ***இந்நில வேந்த ராவரெழு பிறப்பும்."***

> ***" வணிக ரணியின் மணிபொன் மலிந்து***
> ***தணிவற வடைந்து தரணியில் வாழ்வர்."***

> ***" சூத்திர ரணியின் தோகையர் கனகநெல்***
> ***வாய்ப்ப மன்னி மகிழ்ந்துவாழ் குவரே."*** (சிலப். அடியார். உரைமேற்.)

இங்ஙனமே, தொண்மணிகட்கும் நால்வரணப் பகுப்புண்டு. நால்வரணப் பகுப்பு நிலைப்பும் பிராமண வுயர்வும் இதன் பயனாம்.

**தனியின வாழ்வு (Apartheid)**

பிராமணர் தமிழரொடு கலந்து குடியிராது, தனித் தெருவிலும் தனிச் சேரியிலும் தனியூரிலுமே குடியிருப்பது வழக்கம். அவர் தம் குடியிருப்புப் பகுதியை **அக்கிரகாரம்** என்பர். மயிலைநாதர் அதைப் **பார்ப்பனச் சேரி** என்பர். பிராமணர் குடியிருப்பிற்கு வேந்தர் கொடுத்த தனியூர் **சதுர்வேதி மங்கலம்** எனப்படும். மதுரைக்குக் கிழக்கேயுள்ள வேம்பற்றூர், கடைக்கழகக் காலத்திற் பிராமணர்க்குப் பிரமதேயமாகக்குலசேகரன்என்னும்பாண்டியனாற்கொடுக்கப்பட்ட தென்றும், அதனால் அது குலசேகர சதுர்வேதி மங்கலம் என்று

பெயர் பெற்றதென்றும் சொல்லப்படுகின்றது. வேந்தர் அரசிய லதிகாரி கட்குப் பட்டம் வழங்கும்போதும், பிராமணர்க்குப் **பிரமராயன்** அல்லது **பிரமமாராயன்** என்று வழங்குவதே மரபு. எல்லா வகையிலும் பிரிந்தும் தமித்தும் வாழ்வதே பிராமணர் வழக்கம். சுடலைகூட அவர்க்குத் தனியாக வுண்டு.

## இனங்காத்தல்

சேரன் செங்குட்டுவன் தன் வடநாட்டுச் செலவிடையில் நீலமலையில் தங்கியிருந்தபோது, சில வழிப்போக்குப் பிராமணர் அவனிடம் சென்று, தம்மை வானியங்கும் சித்தர்போற் காட்டி, "நீ பனிமலைக்குச் செல்வதாயின், அங்குள்ள பிராமணரைக் காத்தல் வேண்டும்" என்று கட்டளையிட்டுச் சென்றனர். முத்தமிழ் நாட்டாருள்ளும் பிராமணர்க்கு முந்தி யடிமைப்பட்டவரும் முற்றும் அடிமைப்பட்டவரும் சேரநாட்டாரே.

நூற்றுக்கணக்கினரும் ஆயிரக்கணக்கினருமான பிராமணர் கொழுக்க வுண்டு காலங் கழிக்குமாறு, வேந்தரைக் கொண்டு பெருவேள்விகள் வேட்பதும் வேட்பிப்பதும், இனங்காத்தலை ஒரு பயனாகக் கொண்டதே.

## பழந்தமிழ் வேந்தரைப் பழித்தல்

**மாவலி** என்பவன் பாரதக் காலத்திற்கு முற்பட்டுச் செங் கோலாட்சி செய்த மாபெருஞ் சேரவேந்தன். சேரநாட்டுத் தமிழரின்பின், அவர் வழியினரான மலையாளியர், இன்றும் அவ் வேந்தனை ஆண்டுதோறும் நினைவுகூர்ந்து மகிழ்ச்சியாய்க் கொண்டாடி வருகின்றனர். பிராமணர் அவனை ஓர் அசுரனாக்கி, அவன் திருமாலாற் கொல்லப்பட்டதாகக் கதையுங் கட்டிவிட்டனர்.

மாவலியின் மகன் பிள்ளை பேர்த்தியான **உழை,** கண்ணபி ரானின் மகன் பிள்ளை பேரனான **அநிருத்தனை** மணந்தாள். மாவலியின் மரபில் வந்த **சீர்த்தியை,** கோவலன் காலத்துக் **கிள்ளிவளவன்** மணந்தான். சோழநாட்டின் ஒரு பகுதியான நடுநாட்டை 14ஆம் நூற்றாண்டுவரை, வாணகோவரையர் என்னும் மாவலி மரபினர் சிற்றரசராக இருந்த ஆண்டுவந்தனர்.

பண்டைத் தமிழர் தேவரும் அல்லாதவரும் என்று குறிக்கு மிடத்துச் சுரர் அசுரர் என்றனர்.

சுல் = நெருப்பு. ஒ.நோ: L. sol (sun).

Goth. sunno, OS., OHG. sunno, sunna,. ON. sunna, OE. sunna, sunne, E. sun.

சுல்-சுல்லி=1. நெருப்புள்ள அடுப்பு. 2. அடுப்புள்ள அடுக்களை.

*சுல்லீ- **வ.** சுல்லி (C).*

*சுல்-சுள். சுள்ளெனல் = எரிதல், சுடுதல், காய்தல்.*

*சுள்-சுள்ளை = மட்கலஞ் சுடும் இடம். சுள்ளை-சூளை.*

*சுள்-சுர்-சுரம் = சுடும் பாலை நிலம்*

*சுரம்-சுரன் = தீ வடிவான தேவன். வ. ஸுர.*

*அல் (அல்லாத)-அ. ஒ.நோ:நல்-ந.*

*அசுரன் = சுரனல்லாதவன். ஒ.நோ: அவலம் = வலமின்மை, நோய், துன்பம், துயரம்.*

*பிராமணர் தம்மைச் சுரர் என்றதனால், தாமல்லாத தமிழரும் திரவிடருமான பழங்குடி மக்களை அசுரர் என்றனர்.*

*கொல்லேறடக்கல், திரிபன்றியெய்தல், கனவில் நாணேற்றல், கடுமாக் கொல்லல் முதலிய அருமறவினை செய்து மணத்தல், பழங்குடி மக்கட்கே உரியதும் இயல்வது மாதலின், அது அசுரமணம் எனப்ப ட்டது.*

*வடநாட்டிலும் தென்னாட்டிலும் பல அரசரும் அறிஞரும் பிராமணியத்தை எதிர்த்ததனால், அசுரன் என்னுஞ் சொற்குக் கொடியவன் என்னும் பொருளை ஊட்டிவிட்டனர்.*

## தமிழப் பண்பாட்டழிவு

*பூஞ்சாற்றூர்ப் பார்ப்பானை ஆவூர் மூலங்கிழார் புகழ்ந்ததும் பிராமணரை வணங்குமாறு காரிகிழார் வேண்டியதும்,*

***“ ஏற்ற பார்ப்பார்க் கீர்ங்கை நிறையப்***
***பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து”*** (புறம். 367)

*என்று ஔவையார் பாடியதும், தமிழப் பண்பாட்டொடு முரணு வன வாகும்.*

## தமிழர் ஒற்றுமைக் குலைவு

*சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனும், பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும், ஒருங்கிருந்தாரைக் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்,*

***“ ஒருவீர் ஒருவீர்க் காற்றுதிர் இருவீரும்***
***உடனிலை திரியீ ராயின் இமிழ்திரைப்***
***பௌவம் உடுத்தவிப் பயங்கெழு மாநிலம்***
***கையகப் படுவது பொய்யா காதே***
***அதனால்,***
***நல்ல போலவும் நயவ போலவும்***

***தொல்லோர் சென்ற நெறிய போலவும்
காதல் நெஞ்சின்நும் இடைபுகற் கலமரும்
ஏதின் மாக்கள் பொதுமொழி கொள்ளாது
இன்றே போல்கநும் புணர்ச்சி"*** (புறம். 58)

*என்று பாடியதனுள் மறைந்துகிடக்குங் குறிப்பைக் கூர்ந்து நோக்கிக் காண்க. மூவேந்தர்க்குள்ளும் ஓரளவு ஒற்றுமை யிருந்த கடைக்கழகக் காலம்வரை, அயலார் தமிழ்நாட்டைக் கைப்பற்ற முடியவில்லை. அதன் பின்னரே, ஒன்றன்பின் ஒன்றாகப் பல அயலாட்சிகள் தோன்றி, மூவேந்தரும் மறைந்தனர். அன்று மூவேந்தர் ஒற்றுமையைக் குலைத்த ஏதின்மாக்கள் கூட்டம், இன்றும் தமிழரிடையிருந்து ஒற்றுமையைக் குலைத்து வருகின்றது.*

### நடுநிலை திறம்பல்

*தானங்களெல்லாம் பிராமணர்க்கே செய்யப்பட்டன.*

***" ஆர்புனை தெரியல்நின் முன்னோ ரெல்லாம்
பார்ப்பார் நோவன செய்யலர்"*** (புறம். 43)

*என்று தாமப்பல் கண்ணனார் சோழன் நலங்கிள்ளி தம்பி மாவளத் தானை நோக்கிக் கூறியதனின்று பிராமணர்க்குத் தனிச் சலுகை காட்டப்பட்டமை விளங்குதல் காண்க.*

## (3) மொழித்துறை

### தமிழிழிபு

*தமிழ் வழிபாட்டிற்கும் சடங்கிற்கும் தகாத மொழியென்று தள்ளப்பட்டது.*

### தமிழ் எழுத்து மறைப்பு

*கல்வெட்டுகள் பிராமி எழுத்திலேயே வெட்டப்பட்டன.*

### சொற்பெயர்ப்பு

*பிராமணர் தமிழகம் வந்து தமிழரை யண்டித் தமிழாலேயே வாழினும், தமிழ்ச்சொற்களை வழக்கு வீழ்த்த வேண்டுமென்றே வேண்டா வடசொற்களைப் புகுத்தினர்.*

| எ-டு : | **தென்சொல்** | **வடசொல்** |
|---|---|---|
| | வேந்தன் | இந்திரன் |
| | குமரிமலை | மகேந்திர பருவதம் |
| | அறம் | தருமம் |
| | சாலி | யவ (ஜவ-ஜாவ- சாவகம்) |

சில இடப்பெயர்களைச் சற்றே திரித்து வடசொல்லாக்கினர்.

| எ-டு: | **தென்சொல்** | **வடசொல்** |
|---|---|---|
| | குமரி | குமாரீ |
| | கன்னி | கன்யா |
| | மதுரை | மதுரா |
| | காஞ்சிபுரம் | காஞ்சீபுர |
| | வாரணன் | வருண |

## வடசொல் வழக்கு

ஆயிரக்கணக்கான தென்சொற்கள் இறந்துபட்டுள்ள இக்காலத்தும் அயன்மொழித் துணையின்றித் தமிழைத் தூய்மையாக எழுதலாம். தொல்காப்பியர் காலத்தில் தமிழ்ச் செய்யுட்கு வடசொல் வேண்டியதே யில்லை. ஆயினும், வேதத்திலும் இதிகாச புராணங் களிலும் நூற்றுக்கணக்கான தென்சொற்க ளிருப்பதனாலும், அக் காலத்தில் வரலாற்றையும் மாந்தனூலையும் துணைக்கொண்ட மொழியாராய்ச்சி யின்மையாலும், வடமொழி யிலுள்ள தென் சொற்களை யெல்லாம் வடசொல் என்றே கருதின தனாலும், வடமொழி தேவமொழியாதலால் ஒரு மொழியினின்றும் கடன் கொள்ளா தென்னும் தவறான கருத்துப் புகுத்தப்பட்ட தனாலும், வடமொழி வெறியரான பிராமணர் ஒருசில வேண்டா வடசொற்களைத் தமிழிற் புதிதாகப் புகுத்தினதனாலும்,

> ***“ வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ***
> ***எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே”*** (தொல்.884)

> ***“ சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்”*** (தொல்.885)

என்று தொல்காப்பியர் கூறிவிட்டார். ஆயினும், கூடலூர்கிழார் வடக்கு கிழக்கு என்னும் அருமையான உலகவழக்குச் சொற்கள் இருக்கவும் அவற்றிற்குத் தலைமாறாக (பதிலாக), உதீசி பிராசி என்னும் வடசொற்களின் திரிபான ஊசி பாசி என்னும் சிதைவுகளை, 229ஆம் புறப்பாட்டில் ஆண்டிருப்பது, அவரது பேதைமையையே காட்டும்.

## இலக்கியத் துறை

வீட்டின்பம் அளிக்கும் இறைவனைச் சிவன் அல்லது திருமால் என்னும் பெயரில் வணங்கிவந்ததனால், தமிழரே அறம்பொரு ளின்பம் வீடென்னும் நாற்பொருளை வகுத்தவ ராவர். சிறு தெய்வங்கட்குக் காவு கொடுத்து வேள்வி வளர்க்கும் ஆரியர்க்கு, விண்ணுலகப் பேறேயன்றி வீடுபே றில்லை.

நாற்பொருட் பேறு மக்களெல்லார்க்கும் பொதுவா யிருக்கவும், அந் நான்கும் பிராமணர்க்கே யுரியவை யென்றும், அவற்றுள் முதன் மூன்றே அரசர்க்கும் முதலிரண்டே வணிகர்க்கும் முதலொன்றே சூத்திரர் என்னும் வேளாளர்க்கும் உரியவை என்றும், மதத்துறையும் குமுகாயத் துறையும் தழுவுமாறு இலக்கியத் துறையில் வகுத்து விட்டனர்.

ஒரு நாடகக் கதையை அல்லது பனுவலை அமைக்கும்போது அல்லது இயற்றும்போது, அக் கதை தலைவனின் குலத்திற் கேற்பப் பொருளை வகுக்க வேண்டுமன்பது, நூன்முறை யாகிவிட்டது. இதைக் கழகப் பாண்டியருள் ஒருவனும் நாடக நூலாசிரியனுமான மதிவாணனும் கடியாது மதிவீணனாயினன்.

**“ அறமுதல் நான்கும் ஒன்பான் சுவையும்**
**முறைமுன் நாடக முன்னோ னாகும்”**

**“ அறம்பொரு ளின்பம் அரசர் சாதி.”**

**“ அறம்பொருள் வாணிகர் சாதியென் றறைப.”**

**“ அறமேற் சூத்திரர் அங்க மாகும்.”** (செயிற்றியம்)

இங்ஙனமே தொண் (ஒன்பான்) சுவைகட்கும் வரணப் பாகுபாடு வகுக்கப்பட்டுள்ளது. இதனின்று, கடைக்கழகக் காலத்திலேயே, மூவேந்தரும் மதத் துறையில் எத்துணை அடிமடையராயினர் என்பதை அறிந்துகொள்ளலாம்.

## களப்பாளர் (களப்பிரர்) ஆட்சி
## (தோரா. கி.பி. 300-590)

கடைக்கழக முடிவிற்குப்பின் பாண்டிநாட்டை முந்நூற்றாண்டு ஆண்ட, களப்பாளர் வடநாட்டினின்று வந்தவ ரென்றும், பல் வகுப்பின ரென்றும், பலவாறு சொல்லப்படுகின்றது. அவர் பல்வேள்விச்சாலை முதுகுடுமிப் பெருவழுதி பிராமணர்க்கு அளித்த வேள்விக்குடிப் பட்டையத்தை மறுத்ததனாலும், முருக வழி பாட்டினர் என்று சொல்லப் படுவதனாலும், தமிழராகவும் இருந்திருக்கலாம். களப்புதல் = காடு வெட்டித் திருத்துதல். நெல்லை மாவட்டத்திற் சங்கரநயினார் கோவில் வட்டத்தில், களப்பாளர் குளம் என்று ஓர் ஊர் உள்ளது. களப்பிலார் என்பது கள்ளர் வகுப்பாரின் பட்டங்களுள் ஒன்றாக, பண்டிதர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் குறித்துள்ளார்.

## பல்லவர் ஆட்சி (சோழநாடு)

## (கி.பி.4ஆம் நூற்.- 9ஆம் நூற்.)

*பல்லவர் காடவரும் காடுவெட்டிகளுமான தமிழரே.*

| | | | |
|---|---|---|---|
| பாண்டியர் ஆட்சி (பாண்டிநாடு) | | - | 590 - 920 |
| சோழர் ஆட்சி (சோழநாடு) | | - | 850 - 1279 |
| (சோழபாண்டிநாடுகள்) | | - | 920 - 1190 |
| பாண்டியர் ஆட்சி (பாண்டிநாடு) | | - | 1190 - 1310 |
| மாலிக்கு காபூர் தமிழ்நாட்டுக் கொள்ளையடிப்பு | | - | 1310 |
| மதுரைச் சுலுத்தானியம் | | - | 1329-1377 |
| *செஞ்சி-* | *(1) நாயக்கர் ஆட்சி* | - | *1476-1639* |
| | *(2) முசல்மானர் ,,* | - | *1639-1659* |
| | *(3) பீசபூர்-மராத்தியர் ,,* | - | *1677-1690* |
| | *(4) முசல்மானர் ,,* | - | *1690-1698* |
| | *(5) பிரெஞ்சியர் ,,* | - | *1750-1761* |
| | *(6) ஆங்கிலர் ,,* | - | *1761-1947* |
| *மதுரை-* | *(1) நாயக்கர் ,,* | - | *1529-1736* |
| | *(2) முகமதியர் ,,* | - | *1736-1772* |
| | *(3) ஆங்கிலர் ,,* | - | *1772-1947* |
| *தஞ்சை-* | *(1) நாயக்கர் ,,* | - | *1532-1675* |
| | *(2) மராட்டியர் ,,* | - | *1675-1855* |
| | *(3) ஆங்கிலர் ,,* | - | *1855-1947* |

## சேரநாட்டு அரசர்கள்

*கடைக்கழகக் காலத்திலேயே, மேலைச் சேரநாடாகிய குடமலை நாடு, தென்வடலாக வேணாடு குட்டநாடு பொறைநாடு குடநாடு கொண்கானநாடு எனப் பல பிரிவுகளைக் கொண்டிருந்தது. அவற்றுள் கொண்கான நாட்டை நன்னனும், ஏனையவற்றை உதியன் மரபினரும் பொறையன் மரபினருமான இருவேறு சேரர்குடிக் கிளையினரும் ஆண்டுவந்தனர்.*

***“ இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவிற்***
***பொலம்பூண் நன்னன் பொருதுகளத் தொழிய***
***வலம்படு கொற்றம் தந்த வாய்வாட்***
***களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்***
***இழந்த நாடுதந் தன்ன ”*** (அகம். 199)

*என்பதனால், கொண்கான நாடு மீண்டும் சேரர்கை சேர்ந்தமை அறியப்படும்.*

*கீழைச் சேரநாடாகிய கொங்குநாட்டின் தென்பகுதியான தகடூர் நாட்டை, அதிகமான் மரபினரான சேரர்குடிக் கிளையினர் ஆண்டு வந்தனர். வடபகுதியின் மேற்பாகத்துக் குடகுநாட்டைக் கோசரும், எஞ்சிய பாகத்தை எருமையூரன் இருங்கோவேள் கங்கர் கட்டியர் ஆகியோரும் ஆண்டுவந்தனர்.*

***“ கொங்கிளங் கோசர் ”*** (சிலப். உரைபெறு கட்டுரை)

***“ குடகக் கொங்கரும் ”*** (சிலப்.30:159)

*கி.பி. 7ஆம் நூற்றாண்டில் மேலைச் சேரர்குடிக் கிளைகள் நேர்வழித் தொடர்ச்சி யற்றன. அதன் பின்,* **பெருமாள்** *மரபினர் சிலர் ஆண்டு வந்தனர். அவருள் மூவர் குறிப்பிடத்தக்கவர்.*

## முதலாம் சேரமான் பெருமாள் (667 - 712)

*இவர்* **பெருமாக் கோதை** *என்னும் இயற்பெயரையும் கழறிற் றறிவார் என்னும் சிறப்புப் பெயரையும் உடைய சிவனடியார்.*

## நாலாம் குலசேகரப் பெருமாள் (754 - 98)

*இவர் குலசேகராழ்வார் என்னும் திருமாலடியார்.*

## இரண்டாம் சேரமான் பெருமாள் (798 - 834)

*இவர் ஓர் ‘இசலாம்’ அடியார். நாட்டைப் பன்னிருவர்க்குப் பகிர்ந்து கொடுத்துவிட்டு மெக்கா சென்றுவிட்டார்.(துடிசைகிழார்: சேரர் வரலாறு).*

*அப் பன்னிரு நாடுகளாவன :*

| | |
|---|---|
| *(1) கோழிக்கோடு* | *(7) சிரக்கல்* |
| *(2) வள்ளுவநாடு* | *(8) கடத்தநாடு* |
| *(3) கொச்சி* | *(9) பாலக்காடு* |
| *(4) திருவிதங்கூர்(திருவதங்கோடு)* | *(10) பெய்ப்பூர்* |
| *(5) குறும்பரநாடு* | *(11) பரப்பநாடு (ஒரு பகுதி)* |
| *(6) கோட்டயம்* | *(12) ,, (மற்றொரு பகுதி)* |

*சேரநாட்டுத் தமிழ், 10ஆம் நூற்றாண்டிற்குப் பின் கொடுந் தமிழாகத் திரிந்து, 15ஆம் நூற்றாண்டிற்குப் பின் திரவிடமாக மாறிவிட்டது. சேர (சேரல) நாடும் மொழியும் கேரளம் எனப்பட்டன.*

*சேரல்-சேரலம்-கேரளம்.*

## கொங்குநாட்டு அரசுகள்

*அதிகர் (அதிகமானர்), கங்கர், கட்டியர் என்னும் மும்மரபினரும், கடைக்கழகக் காலத்திலிருந்து 13ஆம் நூற்றாண்டுவரை, பேரரசர்க்கு அடங்கியும் அடங்காதும், கொங்குநாட்டின் பகுதிகளை ஆண்டு வந்தனர்.*

*சோழர் ஆட்சி - 1004-1303*

*இடையிற் பாண்டியர் மீயாட்சி - 1265-1300*

*சோழராட்சிக்குப் பின், கேரளராட்சியும் ஒய்சளராட்சியும் விசயநகர நாயக்கராட்சியும் உடையாராட்சியும் ஐதரலி திப்பு சுலுத்தானாட்சியும் சிச்சிறிது காலம் நடைபெற்றன.*

*ஆங்கிலராட்சி-1799-1947*

*இந்திய விடுதலையும் ஒன்றியமும்* (Union) *(1947).*

*கேரள நாட்டுச் சிற்றரையங்களும் இந்திய ஒன்றியத்திற் கலந்தன.*

*தமிழ்நாடு- 1.பேராய* (Congress) *ஆட்சி - 1947 - 67*

*2. தி.மு.க.* (D.M.K) *ஆட்சி - 1967*

## மூவேந்தர் ஆரிய அடிமை முதிர்வு

*கடைக்கழகக் காலத்திலேயே, மூவேந்தரும் வேள்வி மதத்தைத் தழுவி ஆரிய அடிமைகளாய்ப் போய்விட்டதனால், இந்தியா முழுவதையும் நிலையான ஆரிய அடிமைத்தனத்துள் அமிழ்த்துதற் பொருட்டு, நால்வரண வொழுக்கத்தை நிலைநிறுத்தும்* ***மனுதரும சாத்திரம்*** *என்னும் குலவொழுக்க நூல் கி.பி.2 ஆம் நூற்றாண்டிலும்; கோவிலமைப்பு,வழிபாட்டு முறை,போற்றியான் (அருச்சகன்) தகுதி, கொண்முடிபு (சித்தாந்தம்), தெய்வச் சிறப்பு, வழிபாட்டின் பயன் முதலியவற்றை விளக்கிக் கூறும்* ***ஆகமம்*** *என்னும் வழிபாட்டு மறை கி.பி. 6ஆம் நூற்றாண்டிலும் சமற்கிருதத்தில் இயற்றப்பட்டுவிட்டன. சிவனிய ஆகமங்கள்* ***காமிகம்****முதல்* ***வாதுளம்****வரை இருபத்தெட் டென்பர். காளி வழிபாட்டு மறையைத்* ***தந்திரம்*** *என்பர்.*

*"தந்த்ரங்கள் ஸம்ஹிதை, ஆகமம், தந்த்ரம் என மூவகைப்படும். அவற்றுள் ஸம்ஹிதைகள் வைஷ்ணவர்களாலும், ஆகமங்கள் சைவர் களாலும், தந்த்ரங்கள் சாக்தர்களாலும் போற்றப்படுகின்றன. அவை முற்றிலும் வைதிகக் கொள்கைகளைப் பின்பற்றியன எனக் கூறுதற்கு இடன் இல்லை. அவை தீக்ஷை கொண்டு ஆசிரியனிட மிருந்து கொள்ளத் தக்கன. தந்த்ரங்கள் கி.பி. 5ஆம் நூற்றாண்டின் பின்னரே உண்டாயின என்பர்" என்று* (P.S.) *சுப்பிரமணிய சாத்திரியார் கூறுவர் (வடமொழி நூல் வரலாறு, ப.309).*

*சமற்கிருத மொழியும் பிராமணப் போற்றியானும் ஆரியத் தொல் கதைகளுந் தவிர, ஆகமப் பொருள் அனையவும் ஏற்கெனவே தமிழ் நாட்டிலும் தமிழிலும் உள்ளவையே என்றறிதல் வேண்டும். ஆகமம் என்னும் சொற்கே, புதிதாக வந்தது அல்லது தோன்றியது என்பதுதான் பொருள். எல்லா வகையிலும் ஆரியத்தை எதிர்க்கக் கூடிய தமிழ நாகரிகக் கோட்டையான தென்னாடு பிடிபட்டுப் போகவே, இந்தியா முழுதும் மதத்துறையிலுங் குலத்துறையிலும் ஆரிய வயப்பட்டுவிட்டது. பிராமணப் பூசகனே சமற்கிருதத்திற் போற்றி செய்வது, தமிழ்நாட்டுக் கோவில் மரபாயிற்று.*

*முதற் பராந்தகச் சோழன் (கி.பி.907-53), வேதம் வல்ல பிரா மணர்க்கு வீரநாராயணபுரம் முதலிய ஊர்களை முற்றூட்டாகக் கொடுத்து, பொற்கருப்பைத் தானமும் ஆள்நிறைப் பொன் தானமுஞ் செய்தான். ஆற்றூர் (ஆத்தூர்), திருத்தவத்துறைக் (லால்குடி) கோவில்களில், பூசைவேளையில் திருப்பதிகம் ஓதப் பிராமணரை அமர்த்தினான்.*

*முதலாம் இராசராசன் (கி.பி.958-1014) கட்டின தஞ்சைப் பெருவுடையார் கோவிற் கோபுரம், தாசுமகால் இந்தியாவிற்குத் தருவதினும் பதின்மடங்கு பெருமை தமிழகத்திற்குத் தருவதாகும். ஆயின் அவனும் அடிமையானதனால், சோழ மார்த்தாண்ட சதுர்வேதி மங்கலம் என்னும்* ***திருவியலூரில்,*** *ஆள்நிறைப் பொன் தானஞ் செய்தான். அவன் தேவியும் பொற்கருப்பைத் தானஞ் செய்தாள். அவனுக்குக் குருக்களா யிருந்தவர்கள் இலாடம், காசி, காசுமீரம் முதலிய வடநாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்ட பிராமணர்கள். அவர்கள் பெருமடத் தலைவர்களாயிருந்து அரசியலில் மிகுந்த சொற்செல்வு பெற்று விளங்கினர். இலாடம் வங்கநாட்டின் ஒரு பகுதி.*

***அப்பர், சம்பந்தர், சுந்தரர்*** *ஆகிய மூவரும் பாடிய தேவாரப் பதிகங்கள் மொத்தம் 96,000 என்று சொல்லப்படுகின்றது. இன்று கிடைத்திருப்பவை எழுநூற்றுத் தொண்பத்தாறே(796). இவற்றுள் ஒருசிலவே இராசராசன் காலத்திற் கோவில்களிற் பாடப்படும் வழக்கிலிருந்தன. ஏனையவற்றின் ஏடுகளையெல்லாம் பிராமணர் தொகுத்து, தில்லையம்பலத்தில் ஓர் அறைக்குளிட்டுப் பூட்டி விட்டனர். இராசராசன் இம் மருமத்தை யறிந்து, அவ் வறையைத் திறக்கச் சொன்னான். கோவிற் சொத்தைக் கொள்ளையடித்துக் கொண்டிருந்த தில்லைவாழந்தணர் என்னும் மூவாயிரம் பிராமணரும் மறுத்துத் தடுத்தனர். இராசராசன் ஒரு சூழ்ச்சி செய்து திறப்பித்தான். சிதல் அரித்த ஓர் ஏட்டுக் குவியல் காட்சியளித்தது. உடனே, "அரசே! கவலற்க. இக்காலத்திற்கு வேண்டியவற்றை மட்டும் வைத்துக்கொண்டு, வேண்டாதவற்றை யெல்லாம் யாமே சிதலரிக்க*

விட்டேம்'' என்று ஒரு வானுரை யெழுந்தது! 'சூத்திர' வேந்தன் நிலத்தேவரை ஒன்றும் செய்ய இயலவில்லை.

இராசராசன் மகனான முதலாம் இராசேந்திரனும் (கி. பி.1014-42) தஞ்சைப் பெரிய கோவிலிற் பூசைசெய்து வந்த தன் குருவாகிய சர்வ சிவ பண்டிதருக்கும், ஆரிய நாட்டிலும் மத்திய நாட்டிலும் கௌட (வங்க) நாட்டிலுமிருந்த அவர் மாணவருக்கும், ஆண்டு தோறும் ஈராயிரங் கலம் நெல் குரவ நுகர்ச்சியாகக் (ஆசாரிய போகமாகக்) கொடுக்குமாறு கட்டளை பிறப்பித்தான்.

கி.பி.1034-ல், எண்ணாயிரம் என்னும் இடத்தில், 300 பிராமண மாணவரும் 10 பிராமண ஆசிரியரும் கொண்ட ஓர் இலவச மறைநூல் விடுதிக் கல்லூரி கட்டித் தானஞ் செய்தான்.

வீரராசேந்திரச் சோழன் (கி.பி. 1062-67) திருமுக்கூடல் என்னு மிடத்தில், பிராமண மாணவர்க்கு வேதமும் பிறநூற் கலைகளும் கற்பிக்குமாறு, மருத்துவசாலையொடு கூடிய ஓர் இலவச விடுதிக் கல்லூரியைக் கட்டிக் கொடுத்தான்.

மூன்றாங் குலோத்துங்கன் (கி.பி. 1178-1218) திருவொற்றியூரிற் பிராமண மாணவர்க்குப் **பாணினீயம்** கற்பிக்குமாறு, வியாகரண தான வியாக்கியான மண்டபம் ஒன்று அமைத்து, அதற்கு 60 வேலி நிலங் கொண்ட குலோத்துங்கன் காவனூர் என்ற ஊரை இறையிலி யாக்கினான். அவன் குருவும் இலாட நாட்டுப் பிராமணரே.

பல கோவில்களில் துலாபார மண்டபம் என்றே ஒன்று கட்டப் பட்டிருந்தது. துலாபாரம் என்று ஒரு வரியும் குடிகளிடம் வாங்கப்பட்டது. சோழர் போன்றே பாண்டியரும் ஒழுகினர். சேரரைப்பற்றிச் சொல்லவே வேண்டுவதில்லை. இங்ஙனம் குடிகள் பொதுப்பணம், தமிழும் தமிழனும் தளரவும், பிராமணனும் பிராமணியமும் வளர்ந்தோங்கவும் வாரியிறைக்கப்பட்டது.

கடுங்கோன், காய்சினவழுதி, இளஞ்சேட்சென்னி, நெடுங்கிள்ளி, மாவலி, உதியஞ்சேரலாதன் என்றிருந்த அரசர் தனித்தமிழ்ப் பெயர்க ளெல்லாம் ஜடில பராந்தகன், விஜயாலயன், பாஸ்கர வர்மன் என வடசொற் பெயர்களாக மாறின.

பாண்டியர் பெயருக்கு முன் மாறவர்மன் ஜடாவர்மன் என்பனவும், சோழர் பெயருக்கு முன் ராஜகேசரி பரகேசரி என்பனவும் அடைமொழிகளாகச் சேர்க்கப்பட்டன.

அரசர் மெய்க்கீர்த்திகள் ஸ்வஸ்தி ஸ்ரீ என்று தொடங்கின. இடையிடை சமற்கிருதச் சொற்கள் கலந்தன. முன்னும் பின்னும் சமற்கிருதச் சொலவங்களும் (சுலோகங்களும்) அமைந்தன.

*சமற்கிருதச் சொற்களும் சொலவங்கள் போன்றே கிரந்த எழுத்தில் வெட்டப்பட்டன. கல்வெட்டுச் சிலாசாசனம் என்றும், செப்பு வெட்டுத் தாமிர சாசனம் என்றும் பெயர் பெற்றன.*

*மதத்துறையிற் போன்றே மற்றத் துறைகளிலும் மூவேந்தரும் பிராமணர்க்கு எடுப்பார் கைப்பிள்ளைக ளாயினர். தமிழ் சமற்கிருத வார்ப்பகத்தில் வார்க்கப்பட்டது. வடசொல் மிகுந்து, கொச்சை வழக்கும் இலக்கண வழுக்களும் புகுந்து, தமிழ்ப் புலவர் கைகடந்து, பகைவர் ஆட்சிக்குட்பட்டுவிட்டது. அரைகுறையா யிருந்ததும், நாயக்கர் ஆட்சி யிலும் தஞ்சை மராட்டிய மன்னராட்சியிலும் நிரம்பிவிட்டது. தஞ்சைச் சரபோசி மன்னர், தம் 'சரசுவதி மகால்' என்னும் கலைக்கூடத்தில் தொகுத்துள்ள 22,000-ற்கு மேற்பட்ட பொத்தகங்களுள் பெரும்பாலன சமற்கிருதமே.*

## அரசன் என்னும் சொல்வரலாறு

*உரம் = வலிமை. உரம் - உரவு = வலிமை.*

***"உரவுச் சினந் திருகிய"*** (புறம்.25:3)

*உரவு-உரவோன்=வலியோன்.*

***"ஒருதா மாகிய வுரவோ ரும்பல்"*** (புறம்.18:3)

*உரவு - உரவன் - அரவன் - அரசன் = வலியோன், தலைவன் ஆள்வோன்.*

*வ- ச: போலித் திரிபு. ஒ.நோ: ஏவு-ஏசு, பரவு-பரசு, விரவு-விரசு.*

*அரசன் - அரைசன் - அரையன்-அரையம்.*

*அரசன் -* **வ.** *ராஜன், ராஜா -* **இ.** *ராஜ்,***தெ.** *ராஜு.*

*அரையன் - அரையர் - ராயர் -* **க.***ராயரு,* **தெ.** *ராயலு.*

*அரையன் - ராயன்-* **வங்.***ராய்.*

*அரவன் - (ராவன்) -* ***மராட்.*** *ராவ்.*

*அரசன் - அரசு, அரைசன் - அரைசு.*

*அரசன்* - Gk. archon = ruler, king.

L. rex, regis, OIr. reg.

E. rich, OE. rice, OFris. rike, Mod. Fris. ryk, rik-rijck, MDu. rijke, rijck, Du. rijk, OS. riki, MLG. rike, LG. rik, OHG. richi, riche, G.reich, ON.rikr, Norw. and Sw. rik, Da. rig, Celt. rix, F. riche, Sp. rico, It. ricco.

*அரையன் - ராயன் - ராய்* - OF. roy, F. roi, ONF. rei, E. ray, roy.

*மேலை யாரிய மொழிகளில் இச் சொற்கட்கு மூலமில்லை. சமற்கிருதத்தில் ராஜன் என்னும் சொற்கு 'ரஜ்' (ஒளிர்,*to shine*) என்பதை மூலமாகக் காட்டி, 'ரங்' (நிறம்) என்னுஞ் சொல்லொடு*

தொடர்புபடுத்துவர். ஆளுதற் பொருளில், arkho அல்லது arkh-ein என்னும் கிரேக்கச் சொல்லையும், ராஜ் என்னும் சமற்கிருதச் சொல்லையும், rego என்னும் இலத்தீன் சொல்லையும், ஆளுதல் பிற்பட்ட வழக்கென அறிக.

அரசி = **வ.** ராஜ்ஞீ, L. regina. ராஜ்ஞீ என்னும் வடசொல்லே இன்று ராணி என்று வழங்குகின்றது.

அணைத்தல் = தழுவுதல், தழுவிக் காத்தல்.

ஒ.நோ: தழுவுதல் = அணைத்தல், அணைத்துக் காத்தல்.

**“ குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன் ”** (குறள்.544)

தழுவு - தழிஞ்சி = போரிற் படைக்கலங்களால் தாக்குண்டு சேதமுற்ற படையாளரைப் போற்றியுரைத்தும் பொருள் கொடுத்தும் அரசன் தழுவிக்கோடல்.

**“ அழிபடை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇ, ”** (தொல்.பொருள்.65)

அரவணைத்தல் = அரசன் தழுவுதல், அரசன்போல் தழுவிக் காத்தல்.

**“ ஐயன் புரியும் அரவணைப்பும் ”** (பணவிடு.27)

அரவணைத்துக் காக்க வேண்டும் என்னும் உலக வழக்கையும் நோக்குக. இதில், அரவு என்பது அரசனையன்றிப் பாம்பைக் குறிக்காது. பாம்பணைத்தல் என்பது புணர்ச்சியைக் குறிக்குமே யன்றிப் பாதுகாத்தலைக் குறிக்காது.

அரவு - அரசு. ஒ.நோ: உரவு - உரசு.

உரவு - உராவு - அராவு.

## கடைக்கழகக் காலத் தொழிற்குலங்கள்

அகவர் (சூதர்), அங்காடிவணிகர் (நாளங்காடி வணிகர், அல்லங்காடி வணிகர்), அச்சுக்கட்டிகள், அடியோர், அண்டர் (இடையர்), அரசர் (கிழவர், வேளிர், மன்னர், கோக்கள், வேந்தர்), அளவர், ஆட்டு வாணிகர், ஆயர் (கோவலர், கோவர்), ஆறலைகள்வர், இராக்கடைப் பெண்டிர் (தெருப் பொதுமகளிர்), இயவர் (இசைக்கருவியாளர்), இலையமுதிடுவார் (இலை வாணியர்), உமணர், உழவர் (கடையர்), உறைகாரர், எயினர், எலிமயிர்நெசவர், ஓசுநர் (மீகாமர்), ஓவர் (மாகதர்), கடம்பர், கடிகையர் (நாழிகைக் கணக்கர்), கண்ணுளர், கண்ணுளாளர் (சித்திரகாரர்), கணிகையர் (நாடகக் கணிகையர், கோவிற் கணிகையர்), கணியர், காலக் கணிதர், கம்மியர் (கம்மாளர்), களமர் (கருங்களமர், வெண்களமர்), கன்னார்

(செப்புக் கன்னார், வெண்கலக் கன்னார்), காழியர் (பிட்டு வாணிகர்), கானவர், கிணைவர் (கிணைப் பொருநர்), கிழியினும் கிடையினும் பல தொழில் செய்வார், குயிலுவர் (தோலிசைக் கருவிகள் செய்வோர்), குறவர், குன்றவர், குறும்பர், கூத்தர், கூலவாணிகர், கூவியர் (அப்ப வாணிகர்), கொல்லர், கோடியர் (கழைக்கூத்தர்), சங்கறுப்போர், சாக்கையர், சாலியர் (நெசவர்), தச்சர், துடியர், தேர்த்தச்சர், தையற்காரர் (துன்னகாரர், சிப்பியர்), நுண்வினைக் கம்மியர், நுளையர், பட்டினவர் (மீன்விலைப் பரதவர்), பட்டுச் சாலியர், படையுள் படுவோன் (சின்னமூதி), பரதர் (செட்டிகள்), பரதவர் (பரவர்), பரத்தையர் (இற்பரத்தையர், சேரிப்பரத்தையர்), பழையர் (கள் விற்கும் வலையர்), பறம்பர் (தோலின் துன்னர்), பறையர் (பறையறைந்து விளம்பரஞ் செய்வோர்), பாசவர் (ஊன் விற்போர்), பாணர் (இசைப்பாணர், குழற்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப் பாணர்), பார்ப்பார், புலையர், பூ விற்பார், பொருநர் (ஏர்க்களம் பாடுநர், போர்க்களம் பாடுநர்), பொன்வாணிகர், மணவர் (வாசவர்), மணிகோப்பார், மணிநகைத் தட்டார், மரக்கலக் கம்மியர், மழவர் (மழநாட்டு மறவர்), மறவர் (பாலை வாணர்), மாலைக்காரர், வண்ணார், வயிரியர் (ஒருவகைக் கூத்தர்), வலைஞர், வள்ளுவர் (அரசர் விளம்பரப் பறையர்), விலைமகளிர் (சிறுவிலை மகளிர், பெருவிலை மகளிர்),

**" ஈமுங் கம்மும் உருமென் கிளவியும் "** (தொல்.328)

**" மின்னும் பின்னும் பன்னும் கன்னும் "** (தொல்.345)

என்று தொல்காப்பியங் கூறுவதால், அக்காலத்திலேயே ஐங்கம்மும் செம்பும் வெண்கலமுமாகிய இரு கன்னும் நடைபெற்றமை பெறப்படும். இளங்கோவடிகள்,

**" கஞ்ச காரரும் செம்புசெய் குநரும் "** (சிலப்.5:28)

என்று, இரு கன்னையும் வேறாகப் பிரித்து, வெண்கலக் கன்னை வட சொல்லாற் குறித்தார்.

பார்ப்பார் என்னும் தமிழ்ச்சொல், கடைக்கழகக் காலத்தில் இல்லறத்தாரான பிராமணர்க்கே வரையறுக்கப்பட்டுவிட்டது. சிறப்பாகத் துறவியரைக் குறிக்கும் அந்தணர் என்னும் தமிழ்ச் சொல்லும், முதற்கண் பிராமணப் போலித் துறவியர்க்கு வழங்கி, பின்னர் இல்வாழ் பிராமணர்க்கும் வழங்கப்பட்டுவிட்டது.

## குலங்கள் தோன்றிய வகைகள்

ஆரியர் (பிராமணர்) வருமுன் தோன்றிய குலங்களெல்லாம் தொழில்பற்றியனவே யாம்.

## (1) நானிலத் தொழில்

*மருதம் - உழவர், முல்லை - ஆயர், குறிஞ்சி - வேட்டுவர், நெய்தல் - மீன் பிடியர் (நுளையர்).*

*முதன்முதல் தோன்றிய குலங்கள் இந் நால்வகைத் தொழில் வகுப்புகளே. இந் நான்கும் உணவுபற்றியனவே.*

## (2) ஐந்தாம் (நிலையில்லா) நிலத்தொழில்-கவர்வு

*முல்லையும் சிறுமலைக் குறிஞ்சியும் முதுவேனிற் காலத்தில் வற்றி வறண்டதனால், அங்குள்ள வேட்டுவர் ஆறலைப்போரும் சூறை கொள்வோருமாக மாறி அம்பெய்வதால் எய்நர் (எயினர்) என்றும், மறமிகையால் மறவர் என்றும் பெயர் பெற்றனர்.*

## (3) மருதநிலத் தொழில் நான்கு

*மருதநில மக்கள்தொகை பெருகிய பின், பண்டமாற்றிற்கு வணிகரும், வழக்குத் தீர்ப்பிற்கும் காவற்கும் ஊர்க்கிழவரும் (தலைவரும்), நோய் நீக்கவும் மழை பெய்விக்கவும் தெய்வத்தை வேண்ட உவச்சனும் (பூசாரியும்), உழவரினின்று பிரிந்தனர்.*

*ஊர்க் கிழவரே அரசர்குலத் தொடக்கம். ஆட்சிப் பரப்பு விரிய விரிய, வேளிரும் மன்னரும் கோக்களும் வேந்தரும் முறையே தோன்றினர்.*

*முதற்காலத்தில், நானிலத்திற்கும் பொதுவான பண்டமாற்று மருதநிலத்திலேயே நிகழ்ந்தது. பின்னர் நீர்வாணிகம் தோன்றியபின் நெய்தல் நிலத்திலும் நிகழ்ந்தது.*

*மருதநிலத்திற் போன்றே ஏனை நிலங்களிலும் குடியிருப்புத் தலைவரும் தேவராளரும் (பூசாரிகளும்) தோன்றினர்.*

*உவச்சர் வகுப்பினின்றே, நாளடைவில் புலவரும் ஆசிரியரும் துறவியரும் முனிவரும் முதன்முதலாகத் தோன்றினர். கல்வி, உலகியலும் மதவியலும் என இரண்டாகப் பிரிந்தது.*

## (4) மருதநிலப் பேரூர்ப் பதினெண் கைத்தொழில்கள்

*மருதநிலப் பேரூர்களில், உழவிற்குப் பக்கத் துணையாகப் பதினெண் கைத்தொழில்கள் படிப்படியாகத் தோன்றின. பிறநிலக் குடியிருப்புகளிலும், அவ்வந் நிலத்திற் கேற்றவாறு சில கைத் தொழில்கள் தோன்றின.*

## (5) பற்பல கைத்தொழில்கள்

*திணைமயக்கம் ஏற்பட்டபின், நானில மக்களும் மருதநில நகரங் களிலும் நெய்தல்நிலப் பட்டினங்களிலும் அமர்ந்து, பல்வேறு*

*கருவிப் பொருள்களைக் கொண்டு நாகரிக வாழ்க்கைக் கேற்ற பற்பல தொழில்களைச் செய்துவந்தனர்.*

## (6) தொழிற் பிரிவுகள்

*நாகரிகமும் மக்கள்தொகையும் மிகுந்தபின், எல்லாத் தொழில் களும் அல்லது வகுப்புகளும் இரண்டும் பலவுமாகப் பிரிந்தன.*

## (7) பெயர் மாற்றங்கள்

*மக்கள் பெருநிலப் பரப்பிற் படர்ந்து பரவினபின், ஒரே வகுப்பார்க்கே இடவேறுபாட்டால் பெயர் வேறுபாடு ஏற்பட்டது.*

## தொழில்கள் நிகழும் வகைகள்

*விளைப்பு, வளர்ப்பு, பிடிப்பு, தொகுப்பு, புணர்ப்பு, செய்வு, பிரித்தெடுப்பு, பண்டமாற்று, நிலைமாற்று, காப்பு (மாந்தன் காப்பு, தெய்வக் காப்பு), ஆள்வு, செப்பனீடு, விலக்கு, வாழ்விப்பு, இன் புறுத்தம், ஆய்வு, அறிவிப்பு, உய்ப்பு, உடலுழைப்பு, அழிப்பு முதலியன.*

## குலப்பிரிவுகள் தோன்றிய வகைகள்

(1) **நிறம்** - *வெள்ளாளன் (வெண்களமன்), காராளன் (கருங்களமன்), இருளன்.*

(2) **இடம்** - *சோழிய வேளாளன், ஆர்க்காட்டு முதலி, மலையாளி.*

*திசை - தென்றிசை வெள்ளாளர், மேல்நாட்டான்.*

(3) **குடியிருப்பு** - *கோட்டை வெள்ளாளன், தெருவான் (சேரநாட்டுச் சாலியன்).*

(4) **ஊண்** - *சைவ (மரக்கறி) வெள்ளாளன், புலையன், தவளை தின்னி (பறையன்).*

(5) **உடை** - *தண்டப்புலையன், குளிசீலையாண்டி (கோவணாண்டி).*

(6) **அணி** - *பவளங்கட்டி (கொங்கு வெள்ளாளர்).*

(7) **தாலி** - *சிறுதாலி மறவர், ஐந்தாலி (அஞ்சாலி)யிடையர்.*

*கொண்டைமுடிப்பு-கொண்டை கட்டி வேளாளர்.*

(8) **கோலம்** - *பச்சைகுத்தி (குறவர், வேளாளர்), நீறுபூசி (வெள்ளாளன்).*

(9) **முதற்கருவி** - *பொற்கொல்லர், வெண்கலக் கன்னார்.*

(10) **கருவி** - *வில்லி, வலையன்.*

(11) **கருவியளவு** - *சிறுபாணர், பெரும்பாணர், சின்ன மேளம், பெரியமேளம் (மேளகாரர்).*

(12) **பண்டமாற்றுப் பொருள்** - *கூல வாணிகன், இலை வாணியன், எண்ணெய் வாணியன்.*

(13) **தொழிற்பிரிவு** - *தீக்கொல்லன், இரும்புக்கொல்லன், கடைச்சற் கொல்லன்.*

**தொழில்நுட்பம்** - *கண்ணுளர், கணிகையர்.*

**தொழில் வேறுபாடு** - *கோலியன்.*

**தெய்வப்பற்று** - *தேவகணிகையர் (கோவிற் கணிகையர்).*

**திருத்தொண்டுவகை** - *பூவாண்டிப் பண்டாரம், உப்பாண்டிப்பண்டாரம்.*

**பண்பு** - *மறவன்.*

**அலுவல்** - *கணக்கன்.*

**கல்வி** - *புலவன், பண்டாரம், ஓதுவான்.*

**முன்னோர் பதவி** - *முதலியார் (படைமுதலியார்).*

**முன்னோர் பட்டம்** - *முதலி, முதலியார், பிள்ளை.*

**முன்னோர் வெற்றி** - *களம் வென்றார்.*

**முன்னோர் இடம்** - *செம்பியன் நாட்டார்.*

**முன்னோர் தொழில்** - *செங்குந்தர்.*

**முன்னோர் செயல்** - *முதுகர் (முதுவர்).*

**முன்னோர் பெயர்** - *திருவள்ளுவன் (வள்ளுவன்), வாணர்.*

**ஒழுக்கம்** - *பரத்தையர், திருமுடிக் கவுண்டர்.*

**சடங்கு** - *பன்னிரண்டு நாள்(பள்ளி).*

**வழக்கம்** - *பந்தல்முட்டிப் பள்ளி, கைகாட்டி(கணக்கன்), துருவாளர்.*

**நிகழ்ச்சி** - *பன்னிரண்டாம் செட்டி.*

**கதை** - *கார்காத்தார்.*

**பட்டம்** - *உடையான்.*

**பிரிவுப்பெயர்** - *இல்லத்துப்பிள்ளை.*

**முறைப்பெயர்** - *அம்மாப்பள்ளர், ஆத்தாப்பள்ளர்.*

**இடமாற்றமும் முன்னோர் செயலும்** - *பழியர்.*

**இடமாற்றமும் பெயர் மாற்றமும்** - *தேன்வன்னியர் (தென்னார்க்காட்டு இருளர்).*

**இடவேறுபாடும் பெயர் வேறுபாடும்** - *பரவர், பட்டணவர்,செம்படவர்.*

**தொகை** - *ஆயிர வணிகர் (வைசியர்), ஐஞ்ஞூற்றான் (பாணன்).*

**சின்னம்** - *ஆனை, ஆந்தை, காடை (கொங்கு வெள்ளாளர்).*

**விலங்கு பேண்வு** - *பாகர், வாதுவர் (குதிரை).*

**விலங்கு பிடிப்பு** - *நரிக்குறவன்.*

**விலங்குத்துணை** - *நாயாடி (வேட்டுவன்), எருதாண்டி.*

**கலப்பு** - *மேளகாரன் (இசைவேளாளன்), இளமகன்.*

**கிளை** - *சவளக்காரன், காவற்காரன்.*

**தொகுதி** - *முக்குலத்தார், அம்பல(க்)காரன்.*

**மதம்** - *சிவனியர்(சைவர்), திருமாலியர்(வைணவர்).*

**மதமாற்றம்** - *சமணர், பவுத்தர், கிறித்தவர், முகமதியர் (துலுக்கர்).*

**மதப்பிரிவு** - *பழஞ்சவையர் (*Roman Catholic*), சீர்திருத்தச் சவையர்* (Protestant).

**தெய்வம்** - *ஐயனார் (கள்ளர் பிரிவு).*

**செல்வம்** - *ஒற்றைச்செக்கான் (வாணியன். இரட்டைச் செக்கான் (வாணியன்).*

**கட்சி** - *வலங்கை, இடங்கை (பணிசெய்வோன்).*

**இடமாற்றம்** - *குன்னுவர், முதுவர், பச்சைமலையாளியர்.*

**வரிசை** - *கடையர்.*

**அரசன் பெயர்** - *தொண்டைமான்.*

**இரப்பு** - *நோக்கன், பொன்னம்பலத்தார், முடவாண்டி.*

## நால்வரணத் தோற்றமும் விளக்கமும்

*குலங்கள் இயற்கையாகத் தொழில்பற்றியே தோன்றின. மாந்தன் வாழ்கைக்குப் பல்வேறு பொருள்கள் வேண்டியிருப்பதால், அவற்றை*

யெல்லாம் விளைவிக்கவோ தேடவோ செய்யவோ பல்வேறு குலங்கள் ஏற்பட்டன. அப் பொருள்களுள், இன்றியமையாத வற்றிற்கு முன்னும், தேவையானவற்றிற்குப் பின்னும், இன்புறுத்து வனவற்றிற்கு அதன் பின்னும், நாகரிகச் சிறப்புப்பற்றியவற்றிற்கு இறுதியிலும் குலங்கள் எழுந்தன. பல்வேறு பொருள்களையும் ஒருவழித் தொகுத்தற்குப் பண்டமாற்றுத் தொழிலும், அவற்றைக் காத்தற்குக் காவல் தொழிலும், அவை தோன்றிய அன்றே அமைந்தன. தெய்வ வழிபாடும், நோயும் துன்பமும் இன்றிக் காக்கும் காவல்பற்றித் தோன்றியதே.

"மகனறிவு தந்தை யறிவு" என்ற முறைப்படி, தந்தையின் தொழில் திறமையும் மனப்பான்மையும் இயற்கையாகவே மகனுக்கமைவ தாலும், மக்கள்தொகை மிகாத தொடக்கக் காலத்தில் வேலை யில்லாத் திண்டாட்டம் சொல்லளவிலுந் தோன்றாமை யாலும், எல்லாத் தொழில்களும் தொல்வரவாகவே தொடர்ந்து செய்யப் பட்டு வந்தன. தலைமுறை மிகமிகத் தொல்வரவுத் தொழில் திறமை மிகுவதனாலும், அத் தொடர்ச்சி மேன்மேலும் போற்றப்பட்டு வந்தது. ஒருவன் தன் திறமைக்கும் விருப்பத்திற்கும் ஏற்றவாறு, எச் சமையத்திலும் தொழில் மாற முடியுமேனும், அதற்கேதுவான நிலைமை அக்காலத்தில் ஏற்படவில்லை.

துப்புரவு, ஒழுக்கம், கல்வி, செல்வம், அதிகாரம் முதலியன பற்றியன்றி, பிறப்பினால் ஏற்றத்தாழ்வு எவருக்கும் ஏற்றிக் கூறப் படவில்லை.

எல்லா உயிர்வாழ்க்கைக்கும் இன்றியமையாத உணவை விளைப்பதனாலும், நிலையாகக் குடியிருந்து விளைவில் ஆறிலொரு பங்கைக் கடமையாக விறுத்து அரசை நிலைநிறுத்துவதனாலும், போர்க்காலத்திற் படைஞனாகிப் பொருது வெற்றியுண்டாக்கு வதனாலும், இரப்போர்க் கீந்து துறப்போர்க்குத் துணையா யிருப்பதனாலும், எல்லாத் தொழிலாளருள்ளும், உழவனே உயர்ந்த குடிவாணனாகவும் தலைசிறந்த இல்வாழ்வானாகவும் கொள்ளப் பட்டான். கைத்தொழிலாளரெல்லாம் உழவனுக்குப் பக்கத் துணை வராகவே கருதப்பட்டனர்.

> ***" உழுவார் உலகத்தார்க் காணியஃ தாற்றா***
> ***தெழுவாரை யெல்லாம் பொறுத்து."*** (குறள்.1032)

> ***" உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்***
> ***தொழுதுண்டு பின்செல் பவர்."*** (குறள்.1033)

**" பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்**
**அலகுடை நீழ லவர்."** (குறள்.1034)

**" இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது**
**கைசெய்தூண் மாலை யவர்."** (குறள்.1035)

**" இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றின் நின்ற துணை."** (குறள்.41)

**" துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்**
**இல்வாழ்வான் என்பான் துணை."** (குறள்.42)

வெளிநாட்டு அரும்பொருள்களை யெல்லாம் கொண்டுவந்து மக்கள் வாழ்க்கையை வளம்படுத்தியும், அரசனுக் கவ்வப்போது பண முதவியும், நாட்டிற்கு நன்மை செய்த வாணிகன், உழவனுக்கடுத்த படியாகப் போற்றப்பட்டான்.

கள்வராலும் கொள்ளைக்காரராலும் பகைவராலும் அதிகாரி களாலும் கடுவிலங்குகளாலும், உயிருக்கும் பொருளுக்கும் கேடு வராமற் காக்கும் அரசன், பணிவகையில் வணிகனுக்கு அடுத்த படியாகவும், அதிகார வகையிற் கண்கண்ட கடவுளாகவும் கருதப்பட்டான்.

ஆசிரியனாகவும் அமைச்சனாகவும் தூதனாகவும் பணிபுரி பவனும், ஆக்கவழிப்பாற்ற லுள்ளவனுமான அந்தணன், இறைவனுக் கடுத்தபடி தெய்வத்தன்மையுள்ளவனாகக் கருதப்பட்டான்.

இங்ஙனம் உழவு, வாணிகம், காவல், கல்வி என்னும் நாற் றொழிலே தலைமையாகக் கொள்ளப்பட்டு, எல்லாக் கைத்தொழில் களும் உழவுள் அடக்கப்பட்டன.

பொருளிலக்கண நூலார், அகப்பொரு ளின்பத்தைச் சிறப்பித்தற் பொருட்டுத் தலைமக்களையே கிளவித்தலைவராகக் கொண்டதனால், வேந்தர்க் குற்றுழிப் பிரியும் (உழுவித்துண்ணும் வேளாளர் தலைவனாகிய) வேளையும், பொருள்வயிற் பிரியும் இருவகை வணிகர் தலைவரையும், போருக்குப் பிரியும் இருவகை யரசரையும், தூதிற்குப் பிரியும்(கீழ்நிலை அந்தணனாகிய தமிழப்) பார்ப்பனத் தலைவனையும் காதலராகக் குறித்தனர். வேளாளர் வணிகர் அரசர் அந்தணர் என்பதே வரலாற்று முறையாயினும், அந்தணர்க்கும் அரசர்க்கும் சிறப்புக் கொடுத்தற்பொருட்டு அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என எதிர் முறையிற் கூறினர்.

இந் நாற்பாற் பகுப்பையே, பிராமணர் சத்திரியர் வைசியர் சூத்திரர் எனத் திரித்தனர் ஆரியப் பூசாரியர்.

*தமிழ நால்வகுப்பிற்கும் ஆரிய நால்வரணத்திற்கும் வேறுபாடு:*

| **தமிழம்** | **ஆரியம்** |
|---|---|
| தமிழப் பாகுபாடு தொழில் ஒன்றையே அடிப்படையாகக் கொண்டது. | ஆரியப் பாகுபாடு நிறத்தையும் பிறப்பையுமே அடிப்படையாகக் கொண்டது. வரணம் நிறம், சாதி பிறப்பு. ஜன்-ஜா-ஜாதி = பிறப்பு, பிறவிக் குலம். |
| அந்தணர் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவோர், அந்தண்மை (அழகிய குளிர்ந்த அருள்) பூண்ட துறவியர். அந்தண்மை பூண்ட இல்லறத்தாரான பார்ப்பாரும் அந்தணர் என்னும் பெயருக் குரியர். இவ்விரு வகுப்பிற்கும் இனகுலமத இட வரையறையில்லை. | ஆரியப் பூசாரியாரே பிராமணர், துறவு பிராமணனுக்கே உண்டு. ஆதலால், அவனே வீடுபேறடைய முடியும். |
| அரசர் என்பார் ஆள்குடியினர். | சத்திரியர் என்பார் ஆள்குடியினரும் போர்மறக் குலத்தாரும் ஆவர். |
| வணிகர் என்பார் பண்டமாற்று அல்லது வாணிகம் ஒன்றே செய்பவர். | வைசியர் என்பார், வாணிகம் வேளாண்மை ஆ வளர்ப்பு ஆகிய முத்தொழில் செய்பவர். |
| வேளாளர் என்பார் பயிர்த்தொழில் ஒன்றே செய்பவர். | சூத்திரர் என்பார் பல்வேறு கைத்தொழிலும் கூலிவேலையும் அடிமைத் தொண்டும் செய்பவர். |
| நால்வகுப்பாருள்ளும் வேளாளனே உயர்ந்தவன். அவன் உழவுத் தொழிலும் வேளாண்மையுஞ் செய்வதனாலேயே, உலகம் நடைபெற்று வருகின்றது. | நால்வரணத்தாருள்ளும் பிராம ணனே உயர்ந்தவன். அவன் வேள்வி வளர்ப்பதனாலேயே, உலகம் நடைபெற்று வருகின் றது. உழும்போது புழுப்பூச்சிகள் கொல்லப்படுவதால், உழவுத் தொழில் மிக இழிவானது. |
| கல்வி எல்லார்க்கும் பொது. எவ்வகுப்பிலும் எக்குடும்பத்திலும் அறிஞன் தோன்றலாம். | கல்வி பிராமணனுக்கே உரியது. மற்றெல்லாரும் மற்றத் தொழில்களே செய்தல் வேண்டும். |
| திறமையும் விருப்பமும்பற்றி ஒரு வன் எத்தொழிலையுஞ் செய்ய லாம்; எச்சமையத்திலும் தொழில் மாறவுஞ் செய்யலாம். | நால்வரணமும் இறைவனாற் படைக்கப்பட்டவை. ஒவ்வொரு வனும் தன் வரணத்திற்குரிய தொழிலையே செய்தல் வேண்டும். |

இங்ஙனம் எல்லாத் தொழிலாளரும் நான்கு பிறவி வகுப்பிற்குட் புகுத்தப்பட்டுவிட்டனர். பிராமணர் வந்த புதிதில் வெண்ணிறமா யிருந்ததனாலும்; வெப்ப நாடாகிய தமிழகத்தில் வெயிலிற் காய்ந்து வேலை செய்பவர் கருநிறமாயும், வீட்டிலும் நிழலிலும் இருந்து வேலை செய்பவர் பொன்னிறமாயும், இவ்விரு சாரார்க்கும் இடைப்பட்டவர் செந்நிறமாயும் இருப்பதனாலும்; நிறம்பற்றி மக்களை நால்வகுப்பாக வகுப்பதற்குத் தோதாக விருந்தது. ஆயின்,

வேளாளருள் ஒரு சாராரான வெள்ளாளர் சூத்திர வகுப்புள் அடக்கப்பட்டது, நாலாம் வகுப்பென்னும் வரிசை பற்றியே.

தொழில்பற்றிக் குலங்கள் ஏற்கெனவே ஏற்பட்டிருந்தனவேனும், அவற்றையெல்லாம் நால்வகைப் பிறவி வகுப்புகளாக வகுத்தவர் பிராமணர். அதனையே,

**“ முற்படைப் பதனில்வே றாகிய முறைமைபோல்**
**நால்வகைச் சாதியிந் நாட்டில்நீர் நாட்டினீர் ”**

என்று, குலவிளக்க அகவல் பாடிய கபிலர் கூறினார்.

பிராமணர் கல்விக் களத்தைத் தமக்கே யுரியதாகக் கூறியதனால், கல்வித்துறையில் முன்பு தமிழர்க்கு வழங்கிய பார்ப்பார், அந்தணர், ஐயர் என்னும் பெயர்களுள் முன்னது முற்றும், பின்னவை ஓரளவும், பிராமணர்க்கு வரையறுக்கப்பட்டுவிட்டன. “அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்” என்று தொல்காப்பியரும், “பற்பலர் நாட்டிலும் பார்ப்பா ரிலையால்” என்று அகவற் கபிலரும், குறித்தது ஆரியப் பார்ப்பனரான பிராமணரையே.

## ஐயன் என்னும் பெயர்

ஐ = 1. வியப்பு. **“ஐவியப் பாகும்.”** (தொல்.868)

2. வியக்கத்தக்க பெரியோன், அரசன், தலைவன். “என்னைமுன் நில்லன்மின்” (குறள்.771). 3. குடும்பத் தலைவனான தந்தை. “தன்னை சேவடித் தாமரை” (சீகாளத்.பு.நான்முக.124) 4. மணமான பெண்ணின் தலைவனான கணவன். “என்னைக்கு முதவாது.” (குறுந்.27)

ஐ - ஆய் = அன்னை.

ஐ - ஐது = வியப்பானது. “ஐதே யம்ம” (தொல். சொல்.358, உரை)

ஐ - ஐயன் = 1. பெரியோன் 2. ஐங்குரவர் என்னும் ஐந்து பெரி யோரின் பொதுப்பெயர். தாய், தந்தை, அண்ணன், அரசன், ஆசிரியன் என்னும் ஐவரும் ஐம்பெரியோர். தாயைக் குறிக்கும்போது ஐயை என்று ஈறு திரியும். தம் ஐயன் தமையன் (அண்ணன்). “தந்தைக்குப் பின் தமையன்.” 3. பெரியோனான முனிவன். “ஐயர் யாத்தனர் கரணம் என்ப.” (தொல்.1091). பிங்கல நிகண்டின் முனிவர் பகுதி “ஐயர் வகை” என்று பெயர் பெற்றிருத்தல் காண்க. எல்லார்க்கும் எல்லாவற்றிற்கும் தலைவனான இறைவன். 5. சாத்தன் என்னும் தெய்வம். ஐயன் - ஐயனார். 6. தலைவன்.

ஐயன் என்னும் சொல் பறையரும், ஐயா என்னும் விளிவடிவம் பாண்டிநாட்டு வெள்ளாளர் முதலியார் முதலிய பல குலத்தாரும், தந்தையைக் குறிக்க ஆளும் சொல்லாகும்.

ஐயன் - ஐயர் (உயர்வுப்பன்மை) = பெரியோர், உயர்ந்தோர். இறைவனடியார் பெரியோராதலின், சேக்கிழார் கண்ணப்பரையும் திருநாளைப் போவாரையும் திருநீலகண்ட யாழ்ப்பாணரையும் ஐயர் என்னுஞ் சொல்லாற் குறித்தார்.

**" சார்வலைத் தொடக்கறுக்க ஏகும்ஐயர் தம்முனே "** (கண்ணப்.70)

**" ஐயரே அம்பலவர் அருளாலிப் பொழுதணைந்தோம். "** (திருநாளைப்.30)

**" அளவிலா மகிழ்ச்சியினார் தமைநோக்கி ஐயர்நீர் "** (திருஞான.133)

ஐ - ஐயள் = வியக்கத்தக்கவள். (ஐங்.255)

ஐயன் - ஐயை = 1.தாய். 2.காளி (அம்மை). 3.தலைவி. 4.தவப்பெண். 5.ஆசிரியன் மனைவி.

ஐயன் - ஐயா! = எல்லாப் பெரியோரையும் விளிக்கும் விளி.

ஐயன் - ஐயே! = 1.கீழ்மக்கள் தலைவனை விளிக்கும் விளி.

**" ஐயே! நானுங் கொன்றவ னல்லேன் "** (திருவிளை.பழியஞ்.24)

2.வியப்புக் குறிப்பு. (வ.ஆ.மா.).

ஐயையே! (ஐயே ஐயே) = அருவருப்புக் குறிப்பு.

ஐயன்-ஐயோ! = 1. இரக்கக் குறிப்பு, 2.வருந்தற்குறிப்பு.

ஐயன்-ஐய - ஐயவோ! ('ஐய' அண்மைவிளி)

ஐயையோ! (ஐயோஐயோ) = மிக வருந்தற் குறிப்பு.

ஐயன் - அய்ய(பாலி).

ஐயர் என்பது சுமார்த்தப் பிராமணரும், ஐயங்கார் என்பது வைணவப் பிராமணரும், தமக்கு ஆண்டுகொண்ட குலப் பட்டமாகும். ஐயர்அவர்-ஐயவாரு(தெ.)-ஐயகாரு-ஐயங்கார்.

ஐயன் என்னும் அடிப்படைத் தென்சொல்லை, ஆர்ய என்னும் இனப்பெயரின் திரிபாகச் சென்னைப் ப.க.க. அகரமுதலி காட்டி யிருப்பது, அதைத் தொகுத்த பிராமணத் தமிழ்ப்புலவரின் துணிச் சலையும், மானமிழந்த தமிழத் தலைமைத் தமிழ்ப் பேராசிரியரின் அடிமைத்தனத்தையுமே காட்டும்.

பிராமணர் ஏனை மூவகுப்பார்க்கும் தொழில்களை வரை யறுத்துவிட்டு, தமக்குமட்டும் சமையத்திற் கேற்றவாறு எத் தொழிலை யும் மேற்கொள்ளும் உரிமையை வைத்துக்கொண்டனர். துரோணாச்சாரி கிருபாச்சாரி என்னும் இரு பிராமணரும், பாரதக்காலத்தில் வில்லாசிரியரா யிருந்தனர். புத்தர் காலத்தில் தேவேந்திரநாதன் என்னும் பிராமணன் பயிர்த்தொழிலை மேற் கொண்டான். ஆயினும், அவன் பிராமண வரணம் மாறவில்லை. இற்றைப் பிராமணர் தோட்டிவேலை தவிர எல்லா வேலையுஞ்

செய்கின்றனர். ஆயினும், பிராமணர் என்றும் பிராமணரே. இங்ஙனமே, ஏனை வகுப்பாரும் கல்வியல்லாத மற்றத் தொழில்களை யெல்லாஞ் செய்துகொண்டு, உலகுள்ளவரையும் உடனுண்டலும் மணவுறவுமின்றி, வெவ்வேறு இருப்புக் கூண்டுக் குலங்களாக இருந்துவரவேண்டுமென்று அவர் விரும்புகின்றனர். இதனால், நாட்டுமக்கள் முன்னேற்றமும் ஒற்றுமையு மின்றி, வந்தேறிகளான பிராமணர்க்கே என்றும் அடிமைத்தொண்டு செய்துவருமாறு, வரணாச்சிரம தருமம் என்னும் குலவொழுக்கத் திட்டம் வகுக்கப் பட்டதென்பது தெளிவாகின்றது.

## இற்றைப் பிறவிக் குலங்கள்

### அகம்படியன்

*தொழில் - பண்டைநாளில் மறவர்குல மன்னர் மாளிகைகளில் அகம்படித் தொண்டு (இல்லப்பணி) செய்தவர். இன்று தென் மாவட்டங்களிற் பயிர்த்தொழிலும் வடார்க்காட்டு மாவட்டத் திற் கொத்த (கட்டட) வேலையும் செய்பவர்.*

*பிரிவு - ஐவழி நாட்டான், கோட்டைப்பட்டு முதலிய பன்னீரக மணப் பிரிவுகள் (*Endogamous steps*).*

*பட்டம் - அதிகாரி, சேர்வைகாரன், பிள்ளை, முதலியார்.*

*"கள்ளன் மறவன் கனத்தோர் அகம்படியன்" என்னும் பழமொழி, குலந்தோன்றிய வழியைக் காட்டும்.*

### அம்பல(க்)காரன்

*தொழில் - பயிர்த்தொழிலும் ஊர்காவலும்.*

*பிரிவு - முத்திரியன் (முத்தரையன்), காவல்காரன், வன்னியன், வலையன் என்னும் நாலக மணப்பிரிவுகள்.*

*பட்டம் - சேர்வைகாரன், முத்தரையன் (முத்தரசன்), அம்பல காரன், மழவராயன் (மழவரையன்), வன்னியன், மூப்பன்.*

### அளவன்

*தொழில் - உப்பளத்தில் உப்பு விளைத்தல்.*

*பட்டம் - பண்ணையன், மூப்பன்.*

### இடையன்

*பெயர் - அண்டன், ஆயன்(ஆன்வல்லவன்), இடையன், குடவன், கோவன் (கோன், கோனான்), கோவலன், தொறுவன், பொதுவன்.*

*தொழில்-ஆடுமேய்ப்பு, மாடுமேய்ப்பு, ஆனைந்து (பால், தயிர், மோர், வெண்ணெய், நெய்) விற்பு.*

*பிரிவு - தொழிற் பிரிவு: ஆட்டிடையன், மாட்டிடையன் (ஆனாயன்).*

*குலப் பிரிவு : கல்கட்டி, பாசி முதலிய இருபது பிரிவுகள்.*

*தலைவன் பட்டம் - அம்பலக்காரன், மந்திரி (மந்தையாரி), கீடாரி (கிடையாரி).*

*குலப்பட்டம் - கோன் (கோனான்), பிள்ளை, கரையாளன், சேர்வை, மணியக்காரன், முக்கந்தன், மந்திரி.*

*"இடையனில் ஆண்டியு மில்லை, குயவனில் தாதனுமில்லை."*

**இருளன்**

*பெயர் - இருளர் (நீலமலை), வில்லியர் (செங்கழுநீர்ப்பட்டு தென்னார்க்காடு மாவட்டங்கள்), தேன் வன்னியர் (தேன் படையாட்சி), வனப் பள்ளியர்(வ.ஆ.மா.).*

*பிரிவு - புறமணப்* (Exogamous*) பிரிவுகள்.*

*பட்டம் - நாய்க்கன், பூசாலி (பூசாரி).*

*தொழில் - தோட்டவேலை, தேனெடுத்தல், மீன் பிடித்தல்.*

**உடையான்**

*தொழில் - பயிர்த்தொழில்*

*பிரிவு - நத்தமான், மலைமான், சுதர்மான், உடையான். ஒவ்வொன்றிற்கும் காணி என்னும் அகமணப் பிரிவுகளுண்டு.*

*பட்டம் - உடையார், நயினார், மூப்பன், பண்டாரியார், பண்டா ரத்தார், பாளையத்தார், காவற்காரர்.*

**உப்பரவன் (உப்பளவன்)**

*பெயர் - உப்பிலியன்(தமிழ்நாடு), உப்பரன் (தெலுங்கு நாடு), உப்பாரன் (கன்னடநாடு).*

*தொழில் - உப்பு விளைத்தல்.*

*தலைவன் பட்டம் - பட்டக்காரன்.*

*குலப்பட்டம் - செட்டி.*

**உவச்சன் (பூசாரி)**

*தொழில் - காளிகோவிற் பூசை.*

*பிரிவு - மாராயன், பாண்டி முதலிய ஐம்பிரிவுகள்.*

*பட்டம் - புலவன்.*

**ஊராளி**

*தொழில் - பெரும்பாலும் பயிர்த்தொழில்.*

*பிரிவு - ஏழ் அகமண நாடுகள். கரை அல்லது காணியாட்சி என்னும் புறமண உட்பிரிவுகள் உண்டு.*

*பட்டம் - கவுண்டன்.*

**ஓதுவார்**

*தொழில் - சிவன் கோவிலிற் பூசை செய்தல்.*

*இனப் பிரிவு - ஓதுவார், பண்டாரம், குருக்கள், புலவர்.*

*பட்டம் - ஓதுவார்.*

**கடசன்**

*தொழில் - கூடை முடிதல், சுண்ணாம்புக்கல் சுடுதல்.*

*பிரிவு - பட்டங்கட்டி, நீற்றரசன் என்னும் அகமணப் பிரிவுகள்.*

*பட்டம் - பட்டங்கட்டி, கொத்தன்.*

**கணக்கன்**

*தொழில் - ஊர்க்கணக்கு எழுதுதல்.*

*பிரிவு - சீர், சரடு, கைகாட்டி, சோழியன் என்னும் நான்கு.*

*பட்டம் - பிள்ளை.*

**கணிகை (பெண்)**

*தொழில் - நாடக வரங்கிலும் கோவிலிலும் நடஞ்செய்தல்.*

*பிரிவு - நாடகக் கணிகை, தேவகணிகை.*

**கள்ளன்**

*பெயர் விளக்கம் - வேற்று நாட்டு ஆநிரைகளைக் களவிற் கவருமாறு , சோழ வேந்தரால் ஆளப்பட்ட பாலைநிலத்து வெட்சி மறவர் கள்ளர் அல்லது கள்வர் எனப்பட்டனர்.*

**“ வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்**
**ஆதந் தோம்பல் மேவற் றாகும்”** (தொல்.புறத்.2)

*தொழில்-பண்டைநாளிற் போர்த்தொழில். இன்று பயிர்த் தொழிலும் கல்வித் தொழிலும்.*

*பண்டை இடம் - சோழநாடு.*

*பிரிவு-மேல்நாடு சிறு குடிநாடு முதலிய பத்து அகமண நாடுகள் (மதுரை), பதினால் நாடுகள் (சிவகங்கை). வகுப்பு, தெரு, கரை, கிளை என்பன நாட்டின் புறமண உட்பிரிவுகள்.*

*தலைவன் பட்டம்-அம்பல(க்)காரன், நாட்டான், இராசாளி*

*குலப் பட்டம்-நாட்டார், வன்னியன், பிள்ளை, அம்பலகாரன், சம்புவராயன், வாண்டையார், சேர்வைகாரன், சோழகன் முதலியன.*

*பண்டிதர் ந.மு. வேங்கடசாமி நாட்டாரின் 'கள்ளர் சரித்திரம்' (348) பட்டங்களைக் குறித்துள்ளது. பழமொழி தாழ்த்திக் கூறினும், கள்ளர் மறவர்க்கு எட்டுணையுந் தாழ்ந்தவ ரல்லர்.*

**காராளன்**

*காராளர் உழுதுண்ணும் வேளாளர்.*

*சேலம் சேர்வராயன் (சேரவரையன்) மலையாளிகளுள் ஒருசாரர் தம்மைக் காராளர் என்பர்.*

***"காராள ரேர்கள் கடவோசை"*** (அரிச்.பு.மயா.25)

**குசவன்**

*தொழில் - மட்கலம் வனைதல்.*

*பட்டம் - வேளான், செட்டி, உடையார், பிள்ளை.*

**குடிமகன்**

*தொழில்-பெரும்பான்மை மயிர் சிரைத்தலும் வெட்டுதலும், சிறுபான்மை மருத்துவமும் அறுவையும் (Surgery).*

***" ஆரார் தலைவணங்கார் ஆரார்தாங் கையெடார்***
***ஆரார்தாஞ் சத்திரத்தில் ஆறாதார் – சீராரும்***
***தென்புலியூர் மேவுஞ் சிவனருள்சேர் அம்பட்டத்***
***தம்பிபுகான் வாசலிலே தான்."*** (கம்பர்)

*பிரிவு - தீண்டுவான், தீண்டான்.*

*பட்டம் - பண்டிதன்.*

**குலப்பிள்ளை (சாதிப்பிள்ளை)**

*தொழில் - இரப்பு.*

| **குலம்** | **இரப்போன்** |
|---|---|
| *பள்ளி* | *நோக்கன்* |
| *கொங்குவெள்ளாளன்* | *முடவாண்டி* |

| | |
|---|---|
| கைக்கோளன் | பொன்னம்பலத்தான் |
| பேரிச்செட்டி | வீரமுட்டி |

**குறவன்**

தொழில் - வேட்டையாடல், கூடைமுறம் முடைதல், உப்பு விற்றல், மருத்துவஞ் செய்தல், திருடல்.

பெண்டிர் தொழில் - குறிசொல்லுதல், பச்சை குத்துதல்.

பிரிவு - ஊர்க்குறவன், மலங்குறவன், நாடோடி.

ஊர்க்குறவன் பிரிவு - தப்பை (மூங்கில்வேலை), கொங்கன், உப்பு.

பல அகமணப் பிரிவுகள்.

மலங்குறவன் பிரிவு - குன்றக் குறவன், பூங்குறவன் (வேலன்), காக்கைக் குறவன் (கக்கலன்), பாண்டிக் குறவன் (நாஞ்சிற் குறவன்).

நாடோடிகள்-காளிக்கோட்டம்வரை பல்வேறு நாடு சென்று, அவ்வந் நாட்டு மொழி பேசி, வெவ்வேறு பெயர் கொண்டு, வேட்டை மருத்துவம் களவு ஆகிய தொழில் செய்பவர்.

குருவிக்காரன் அல்லது நரிக்குறவன் தமிழ் மராட்டி இந்துத்தானி ஆகிய மும்மொழி பேசுபவன்.

தலைவன் பட்டம்-பெரிய மனிதன் (மனுசன்), ஊராளி, பணிக்கன்.

குலப்பட்டம் - சேர்வைகாரன், பிள்ளை, கவுண்டன் முதலியன.

**குறும்பன்**

தொழில் - குறும்பாடு மேய்ப்பு, முரட்டுக் கம்பளி நெசவு, தேனெடுப்பு முதலியன.

பிரிவு - காட்டுக் குறும்பு X நாட்டுக் குறும்பு.

தேன்(ஜேன்) குறும்பு, பன்றிக் குறும்பு முதலியனஉட்பிரிவுகள்.

பட்டம் - மூப்பன்.

**கைக்கோளன்**

பெயர் - கைக்கோளன் (தமிழ்நாட்டின் நடுவும் தென்பாகமும்).

செங்குந்தன் (தமிழ்நாட்டின் வடபாகம்).

கையிற் கோல் (நெசவுக் குழல்) கொண்டவன் கைக்கோளன்.

கோலன் - கோளன். குழல்-கோல். கையிற் செங்குந்தம் பிடித் திருந்த போர்ப் படையினர் வழிவந்தவர் செங்குந்தர்.

தொழில் - நெசவு.

பிரிவு (சிலவிடங்களில்) - சோழியன், இறாட்டு, சிறுதாலி, பெருந்தாலி, சீர்பாதம்,சேவக விருத்தி.

நாட்டுப்பிரிவு-72 நாடு.

வழக்கம் - ஒவ்வொரு குடும்பமும் ஒரு பெண்ணைக் கோவிலுக் குத் தேவ கணிகையாக விடுதலும், அவளொடு செல்வ அல்லது ஏழைப் பிராமணன் கூடுதலும். இவ் வழக்கம் நின்றுவிட்டது.

தலைவன் பட்டம் - பெரியதனக்காரன், பட்டக்காரன், புள்ளிக்காரன்,

குலப்பட்டம் - அடவியார், நயினார், முதலியார், மூப்பர்.

## கொல்லன்

வகையும் தொழிலும் - ஐங்கொல்லர் (ஐங்கம்மாளர்).

மரக்கொல்லன் - தச்சன்.

கற்கொல்லன் - கற்றச்சன், கம்மியன்.

பொற்கொல்லன் - தட்டான், கம்மாளன்.

செப்புக் கொல்லன் - கன்னான்.

இருப்புக் கொல்லன் - கருமான் (கருமகன்), கொல்லன்.

முதன் முதல் தோன்றியவன் மரக்கொல்லனே. ஓரறிவுயிருள்ள மரத்தை வெட்டிக் கொல்வதால், அவன் கொல்லன் எனப்பட்டான்; அவன் தொழில் கொல் எனப்பட்டது. "மரங்கொஃறச்சரும்" என்று சிலப்பதிகாரம் (5 : 23) கூறுதல் காண்க. முதற்காலமாகிய கற்காலத்தில், மரத்தினாலுங் கல்லாலுமே வீடு கட்டப்பட்டது. அதன் பின்னரே பொன்னும் செம்பும் உறையும் இரும்பும் கண்டுபிடிக்கப்பட்டன. வெண்கலக் கன்னாரும் செப்புக் கன்னாருள் அடங்குவர்.

நாட்டுப்பிரிவு - பாண்டியம், சோழியம், கொங்கம் என்னும் மூன்று அகமணப் பிரிவுகள்.

தலைவன் பட்டம் - நாட்டாண்மைக்காரன், கருமத் தான் (காரியத்தன்).

குலப்பட்டம் - நயினார், பத்தன், ஆச்சாரி(ஆசாரி) என்பது பிராமணரொடு போட்டியிட்ட பிற்காலத்து ஆரியச் சொல்.

**கோலியன்**

*தொழில் - நெசவு*

*பிரிவு - நாடுகள் என்னும் பெரும் பிரிவும் குப்பங்கள் என்னும் சிறு பிரிவும்.*

*பட்டம் - 'ஈசன்' என்னும் வடசொல் அடைமொழி.*

**சவளக்காரன்**

*தொழில் - ஓடம் விடுதல், பயிர் விளைத்தல், இசைக்குழல் ஊதல், ஈட்டிப் போர் புரிதல், தாதுக்கனி தோண்டுதல்.*

*பட்டம் - படையாட்சி (பயிர்த்தொழிலாளர்), அண்ணாவி (இசைத்தொழிலாளர்).*

**சாயக்காரன்**

*தொழில் - சாயங் காய்ச்சுதல்.*

**சாலியன்**

*தொழில் - நெசவு.*

*பிரிவு - 24 புறமணவீடுகள்.*

*பட்டம் - அடவியார்.*

**சான்றான் (சாணான்)**

*பெயர்: சான்றோர் = போர்மறவர்.*

***"தேர்தர வந்த சான்றோ ரெல்லாம்"*** (புறம்.63)

*சான்றோர்-சான்றார்*

***"ஈழக்குலச் சான்றார் ஏனாதி நானார்"*** (பெரியபு.15:2)

*தொழில் - கள்ளிறக்குதல், கருப்பட்டி காய்ச்சுதல், வாணிகஞ் செய்தல், குடிக்காவல், படைக்கலம் பயிற்றல்.*

*பிரிவு - கருக்குமட்டையன், மேனாட்டான், கொடிக் கால் நட்டாத்தி, பிழுக்கை.*

*ஊர்த்தலைவன் பட்டம் - நாட்டாண்மை.*

*குலப்பட்டம்-நாடார், சேர்வைகாரன். முக்குந்தன் என்பது வழக்கு வீழ்ந்தது.*

**சிங்கன்**

*தொழில் - வேட்டையாடல்.*

## செட்டி

பெயர் விளக்கம் - பெரும்பொருளீட்டி நாட்டிற்கு நன்மை செய்த வணிகர் தலைவர்க்குப் பண்டை யரசர் அளித்த பட்டம் எட்டி என்பது. “எட்டி குமரன் இருந்தோன் தன்னை” (மணிமே. 4.58). எட்டுதல் - உயர்தல். எட்டம் - உயரம். எட்டு - எட்டி = உயர்ந்தோன். பரம + எட்டி = பரமேட்டி (எல்லார்க்கும் மேலாக வுயர்ந்த இறைவன்) - மரூஉப் புணர்ச்சி. எட்டி - செட்டி. வடநாட்டு மொழிகளில் எகரக் குறிலின்மையால், செட்டி என்பது சேட்டி - சேட் எனத் திரிந்தது. ஸ்ரீ (திரு) என்பதன் உச்சத்தரமான சிரேஷ்டி என்னும் வடசொற்கும், செட்டி என்னும் தென் சொற்கும் தொடர்பில்லை.

பல்வேறு வாணிக வகுப்பார், செட்டி என்பதைப் பட்டமாக மட்டுமன்றிக் குலப்பெயராகவுங் கொண்டுள்ளனர்.

(1) வெள்ளாளஞ் செட்டி (வேளாண்குல வாணிகன்).

(2) வாணியச் செட்டி.

தொழில் - செக்காட்டி எண்ணெய் விற்றல்.

பிரிவு - காமாட்சியம்மா, விசலாட்சியம்மா, அச்சுத் தாலி, தொப்பைத் தாலி என நான்கு.

(3) நாட்டுக் கோட்டைச் செட்டி
தொழில் - வட்டிக்குப் பணம் கொடுத்தல்.
பிரிவு - ஒன்பது கோவில்கள்.

(4) நகரத்துச் செட்டி (ஆயிர வணிகர்)

(5) காசுக்காரச் செட்டி.

தொழில் - பொன்மணி வாணிகம், காசுமாற்று.

(6) பேரிச் செட்டி.

தொழில் - ஊரூராகச் சென்று பேரிகை கொட்டிப் பண்ணியம் விற்றல்.

பிரிவு - திருத்தணியார்,அச்சிறுபாக்கத்தார் முதலிய ஐந்து அக மணப் பிரிவுகள்.

(7) கரையான் செட்டி-(பட்டணவன், பரவன்) தொழில் - கடல் வாணிகமும் மீன் வாணிகமும்.

(8) மளிகைச் செட்டி. தொழில் - பலசரக்கு விற்பனை.

(9) மஞ்சட்குப்பத்துச் செட்டி

(10) பன்னிரண்டாஞ் செட்டி.

## செம்படவன்

*தொழில் - ஆறு குளம் ஏரிகளில் மீன் பிடித்தல், கடல்மீனும் கருவாடும் விற்றல், ஓடமும் பரிசலும் விடுதல்.*

*பிரிவு - ஏழ் நாடுகள் அல்லது புறமணப் பிரிவுகள்.*

*தலைவன் பட்டம் - நாட்டான், நாட்டாண்மைக்காரன்.*

*குலப்பட்டம் - நாட்டான், கவுண்டன், மணியக்காரன், பகுத்தார், பிள்ளை.*

*பயிரிடும் சிலர் குக வெள்ளாளர் எனல்.*

## தேவடியாள்

*தொழில் - கோவில் தொண்டும் பரத்தைமையும்.*

*வகைகள் - தேவகணிகையர், நேர்ந்துகொண்டோர், வறுமை யால் அடிமைப்பட்டோர், குலவழக்கத்தால் ஆனோர், ஆரியப் பூசாரியரால் வேண்டப்பட்டோர், இவ்வகையாரின் வழியில் வந்தோர்.*

*தேவனுக்கு அடியாள் என்னும் சிறந்த பெயர் ஒழுக்கக் கேட்டால் இன்று இழிவடைந்துள்ளது.*

## தொண்டைமான்

*பெயர் - தொண்டைமான், சுண்ணாம்புக்காரன்.*

*தொழில் - சுண்ணாம்புக்கல் நீற்றல், மேளம் தட்டுதல், இசைக் குழலூதல்.*

*பட்டம் = சோழகன்.*

## நளவன்

*தொழில் - கள்ளிறக்குதல் (யாழ்ப்பாணம்).*

## பட்டணவன்

*இடம் - கிருட்டிணாமுதல் தஞ்சைவரை கடற்கரை.*

*பெயர் - பட்டணவன், கரையான்.*

*தொழில் - கடல்மீன் பிடித்தலும் வாணிகமும்.*

*பிரிவு - பெரிய பட்டணவர் X சின்னப் பட்டணவர்.*

*பட்டம் - செட்டி.*

**பண்டாரம்**

*பெயர் விளக்கம் - பண்டாரம் = கருவூலம் போன்ற உயர் பொருட் பேரறிஞன்.*

*பிரிவு - வெள்ளாளப் பண்டாரம் (கோவிற் பண்டாரம், மடத்துப் பண்டாரம், ஆண்டிப்பண்டாரம்), பள்ளிப் பண்டாரம், பள்ளர் பண்டாரம், வள்ளுவப் பண்டாரம் (பறையர் குரு).*

**பணிக்கன்**

*பெயர் - இல்லத்துப் பிள்ளை.*

*தொழில் - நெசவும் வாணிகமும்.*

*பிரிவு - பல புறமண இல்லங்கள்.*

*பட்டம் - பணிக்கர்.*

**பணிசெய்வோன் (பணிசவன்)**

*தொழில் - சாவறிவித்தலும் தாரை ஊதுதலும் இரத்தலும் (சேலம்).*

*கோவிலில் இசைக்குழல் ஊதுதலும் நட்டுவமும் (திருநெல் வேலி).*

*பிரிவு - வலங்கை, இடங்கை.*

*பட்டம் - புலவன், பண்டாரம், பிள்ளை, முதலி.*

**பரத்தை**

*பெயர் - விலைமகள், பொதுமகள், வரைவின் மகள், இராக் கடைப் பெண்டு.*

*வகை - இற்பரத்தை, சேரிப்பரத்தை.*

**பரவன்**

*பெயர் - பரவன், பரதவன், பரதன். படவன்-பரவன்.*

*இடம் - தஞ்சைக்குத் தெற்கிற் குமரிவரை கடற்கரை.*

*தொழில் - கடல்மீன் பிடித்தலும் கடல் வாணிகமும்.*

*பட்டம் - செட்டி.*

**பரிவாரம்**

*வந்தவழி - முக்குலத்தோர் கலப்பு.*

*தொழில் - வீட்டுவேலை செய்தல், மீன் பிடித்தல்.*

*பிரிவு - சின்ன வூழியம் பெரிய வூழியம் என்னும் ஈரகமணப் பிரிவுகள்.*

*பட்டம் - மணியக்காரன், சேர்வைக்காரன், ஊழியக்காரன்.*

**பள்ளன்**

*இடம் - சோழ பாண்டித் தமிழ்நாட்டின் தென்பாகம்.*

*தொழில் - பயிர்த்தொழிலும் பண்ணை வேலையும்.*

*பிரிவு - அம்மாப் பள்ளன், அஞ்ஞாப் பள்ளன், ஆத்தாப்பள்ளன், பணிக்கன், கடையன் முதலிய பல அகமணப் பிரிவுகள்.*

*“நெல்வகையை எண்ணினாலும் பள்வகையை எண்ண முடியாது (உயர்வு நவிற்சி)”.*

*தலைவன் பட்டம் - குடும்பன், நாட்டாண்மைக்காரன், பட்டக் காரன், நாட்டு மூப்பன்.*

*குலப்பட்டம் - குடும்பன், பண்ணாடி (பண்ணையாடி), மன்றாடி, மூப்பன்.*

**பள்ளி (வன்னியன்)**

*இடம் - சோழ பாண்டித் தமிழ்நாட்டின் வடபாகம். பெயர் - பள்ளி, வன்னியன், செம்பியன்.*

*தொழில் - பயிர்த்தொழில், வாணிகம், கொல்லற்று (கொத்த) வேலை, பண்டை நாளிற் சிலர் படை மறவர்.*

*பிரிவு - அரசு, பந்தல்முட்டி, அஞ்சுநாள், கோவிலர், ஓலை முதலிய பல அகமணப் பிரிவுகள்.*

*தலைவன் பட்டம் - கவுண்டன், பட்டக்காரன், கண்டர், சம்புவராயன், நாயகர், நயினார் முதலியன.*

*குலப் பட்டம் - கவுண்டன், படையாட்சி, நாய்க்கன், பிள்ளை, இராயன் முதலியன.*

*வன்னி என்பது ஒரு மரவகையைக் குறிப்பின் தென்சொல்; நெருப்பைக் குறிப்பின் வஃனி (vahni) என்னும் வடசொல்.*

*கதிரவன் திங்கள் நெருப்பு என்னும் முச்சுடரும், முறையே, சோழன் பாண்டியன் சேரன் ஆகிய மூவேந்தர் குலத்திற்கும் முதலாகக் கொள்ளப்பட்டன. பண்டைத் தமிழகம் முழுதும் மூவேந்தர் ஆட்சிக் குட்பட்டே யிருந்தது. அவருக்கடங்கிய சிற்றரசர் பலர் ஆங்காங் கிருந்தாண்டனர். வன்னியைக் காவல் மரமாகக் கொண்ட குறுநிலமன்னர், உடையார்பாளையம் வேளைப்போற் சோழ*

நாட்டுப் பகுதிகளை ஆண்டிருக்கலாம். "நாற்படை வன்னியர்" (கல்லா.37:15) என்னுந் தொடரில், வன்னியர் என்பது குறுநில மன்னரையே குறிக்கின்றது. கடம்பர் என்னும் சொல்லைப்போல் வன்னியர் என்பதையுங் கொண்டால். அது தென்சொல்லேயாகும். கிறித்துவிற்குப் பிற்பட்ட காலத்திலேயே, வடசொல் தமிழரசர் பெயர் வழக்கிற் புகுந்தது; குலப் பிரிவும் தலையெடுத்தது.

இனி, வன்னியன் என்னும் சொல், கள்ளர் வலையர் முதலிய சில குலத்தாரின் பட்டப் பெயராக வழங்குவதையும் அறிதல் வேண்டும். சத்திரியன் (க்ஷத்ரிய) என்னும் வடசொல், வல்லபம் என்னும் பொருளதே. ஆதலால், வன்னியர்குல வல்லபர் என்று வழங்குவதே. இக்காலத்திற் கேற்றதும் மோனையழகு அமைந்ததுமாகும்.

**பறம்பன்**

இடம் - திருநெல்வேலி, மதுரை, புதுக்கோட்டை.

தொழில் - தோல் வேலையும் சுண்ணாம்புக்கல் சுடுதலும், செருப்புத் தைக்கும் தமிழக் குலத்தான் இவனே. செம்மான் (சருமன்) என்பது வடசொல்.

**பறையன்**

பெயர் - பறையன், புலையன்.

தொழில் - பறையடித்தல், பறையறைந்து விளம்பரஞ் செய்தல், முரட்டுத் துணி நெய்தல், கூலிவேலை செய்தல், பிணஞ்சுடுதல்.

பிரிவு - பல புறமணப் பிரிவுகள்.

பட்டம் - சாம்பான், மூப்பன், பிள்ளை.

**பாணன்**

பெயர் விளக்கம் - பண் = பாட்டு, இசை. பண் - பாண் - பாணன் = பாடகன், இசைத் தொழிலாளன்.

தொழில் - பண்டு : வாய்ப்பாட்டு, குழலிசை, யாழிசை.
இன்று : தையலும் கூத்தும் (தமிழ்நாடு).
குடை கட்டல், மீன் பிடித்தல், பேயோட்டல்
(மலையாள நாடு).பட்டம் - பணிக்கன்.

**மறவன்**

இடம் - பாண்டிநாடு.

தொழில் - பண்டு : போர்த் தொழில்.

இன்று : காவல், பயிர்த்தொழில், கல்வித்தொழில்.

***38 பிரிவுகள் :*** *நாட்டார், மணியக்காரர், காரணர், கொத்தளர், சீத்தல், சேர்வைகாரர், தோலர், பண்டாரம், வேடங்கொண்டார், செட்டி, குறிச்சி, வேம்பன் கோட்டை, செம்பிநாடு, குன்றமான் நாடு, இராமன் நாடு, ஆப்பன் நாடு, கொங்கணர், அம்பொனேரி, வல்லம்பர், இவுளி, வன்னியர், கிள்ளை, ஒரியூர், வெட்சி, கரந்தை, வஞ்சி, உழிஞை, தும்பை, உப்புக்காடு, அஞ்சுகொத்து, கொண்டையன் கோட்டை, தொண்டைநாடு, சிறுதாலி, பெருந்தாலி, பாசிகட்டி, கன்னிகட்டி, கயிறு கட்டி, அணிநிலக் கோட்டை.*

***5 நாடுகள் :*** *செம்பிநாடு, அம்பநாடு, கிழவைநாடு, அகப்பாநாடு, ஆமைநாடு.*

***5 கோட்டைகள்:*** *செம்பிநாட்டுக் கோட்டை, கொண்டையன் கோட்டை,கருத்தக்கோட்டை,செகக்கோட்டை, அணிநிலக்கோட்டை.*

***50 கிளைகள்:*** *செம்பியன், வெட்டுவன், வீரமன், அரசன், வீரமுடி தாங்கினான், நாட்டுக்குழைத்தான், மரிக்கார், வடக்கு, அறியாதான், கோபாலன், மங்கலம், சுந்தர பாண்டியன், கங்கை, பிச்சை, தொண்டைமான், முத்துக்கினியான், வீணியன், தேரூர்வான், கம்பத் தான், கிழவி, மருவீடு, வாப்பா, நாச்சாண்டி, அமர், கருப்புத்திரன், வெட்டியான், மாப்பான சம்பந்தன், சேதுரு, அளவண்டன், சங்கரன், அகத்தா, நாலாப் பிரை, நங்கண்டா, பாச் சாலன், சாலா, இராக்கி, வன்னி, பண்டாரம், விடிந்தான், கருங்குளத்தான், பறையன்குளத் தான், மகுடி, அம்மியடுக்கி, அடு கலை, எருமைக்குளத் தான், கீரைக்குடியான், இத்தி, விளிந் திட்டான், வயநாடு, வெம்பக்குடி.*

*கொண்டையன் கோட்டையார் கொத்தும் கிளையும்-ஒன்பது கொத்தும் பதினெண் கிளையும்.*

*கற்பகக் கொத்து - மருதீசர் கிளை, அகத்தீசர் கிளை.*

*கமுகங் கொத்து - வீணியன் கிளை, பேர்பெற்றான் கிளை.*

*மல்லிகைக் கொத்து - சேதா கிளை, வாள்வீமன் கிளை.*

*முந்திரிக் கொத்து - வெட்டுவன் கிளை, அழகுள்ள பாண்டியன் கிளை.*

| | | |
|---|---|---|
| *ஏலக்கொத்து* | - | *குடையன் கிளை, அரசுமான் கிளை.* |
| *மிளகுகொத்து* | - | *செகமண்டலாதிபன் கிளை, வீர முடிதாங்கினான் கிளை.* |
| *நற்சீரகக் கொத்து* | - | *நாட்டை வென்றான் கிளை, தருமர்கிளை.* |
| *தக்காளிக் கொத்து* | - | *சங்கரன் கிளை, சாத்தான் கிளை.* |
| *தென்னங்கொத்து* | - | *ஔவை கிளை, சாம்புவன் கிளை.* |

*பட்டம்-தேவன், தலைவன், கரையாளன், சேர்வைகாரன்.*

**முத்தரையன் (முத்திராசு, முத்திரியன்)**

*வேளிர் (குறுநில மன்னர்) பதவியும் விருந்தோம்பி வேளாண்மை செய்யும் இயல்புங்கொண்ட முத்தரையர் என்னும் வகுப்பார், 6ஆம் நூற்றாண்டிலேயே தமிழ்நாட்டிலிருந்தமை,*

***“ பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும்***
***கருனைச்சோ றார்வர் கயவர்”*** (நாலடி. 200)

***“ நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத் தரையரே***
***செல்வரைச் சென்றிரவா தார்”*** (நாலடி. 296)

*என்னும் நாலடிப் பகுதிகளால் அறியக் கிடக்கின்றது.*

*அவர் தஞ்சைக்கும் புதுக்கோட்டைக்கும் இடைப்பட்ட நிலப் பகுதியை ஆண்டு வந்தவர் என்பது, செந்தலைக் கல்வெட்டால் தெரிய வருகின்றது. பல்லவர் கீழ்ப்பட்டிருந்த சோழர், தஞ்சையை ஆண்டு வந்த பெரும்பிடுகு முத்தரையனை வென்ற செய்தி, திருவாலங் காட்டுச் செப்பேட்டிற் குறிக்கப்பெற்றுள்ளது.*

*இன்று தஞ்சை திருச்சிராப்பள்ளி மாவட்டங்களிற் பயிர்த் தொழில் செய்து வாழும் முத்திரியர் என்பார், பண்டை முத்தரையர் வழியினரே.*

*தஞ்சை மாவட்டத்திலுள்ள செம்பிய முத்தரையர் என்னும் பட்டங் கொண்ட கள்ளர் வகுப்பினர், முத்தரையரின் படைமறவர் வழிவந்தவராகவே யிருத்தல் வேண்டும்.*

*கடைக்கழகக் காலத்திற் புல்லியும் பிற்காலத்தில்* **திருமங்கை** *யாழ்வாரும் போன்ற கள்வர் கோமான்கள் பலர் இருந்தமை வெள்ளிடைமலை. ஆயின், முத்தரையர் வேளிர் மரபினர் என்பதே நடுநிலை முடிபாம்.*

## முதலியார்

குலங்கள்- (1) வேளாண் முதலியார் மூவேந்தர் காலத்திற் படை முதலியாராய் (படைத்தலைவராய்) இருந்தவரின் வழியினர்.

(2) செங்குந்த முதலியார் அல்லது கைக்கோள முதலியார் (சோழர் படைமறவராகவும் படைத் தலைவராகவும் இருந்தவரின் வழியினர்).

(3) அகம்படிய முதலியார் (கொத்தவேலை செய்பவர்).

பட்டங்கள்-(1) இலங்கை யரசியலார் வழங்கும் சிறப்புப் பட்டம்.

(2) தஞ்சை மாவட்டச் சமணருள் ஒரு சாரார்க்கு வழங்கும் பட்டம்.

## வண்ணான்

பெயர் விளக்கம் - ஆடைகளை வெளுத்து வண்ணமாக்குபவன்.

பெயர்கள் - வண்ணான், வண்ணத்தான், ஈரங்கொல்லி (ஏகாலி), காழியன்.

பிரிவு - இடம் பற்றியது. பாண்டிய வண்ணான், சோழிய வண்ணான், கொங்க வண்ணான்.

நிலைமை பற்றியது: தீண்டுவான் X தீண்டாதான்.

## வல்லம்பன்

இடம் - தஞ்சை திருச்சிராப்பள்ளி மதுரை மாவட்டங்கள்.

தொழில் - பயிர்த்தொழில்.

தலைவன் பட்டம் - சேர்வைகாரன்.

குலப் பட்டம் - அம்பலகாரன்.

## வலையன்

பெயர் - வலையன், வலைகாரன், வேடன், சிவியான், குருவிக்காரன்

தொழில் - வலை வைத்துப் பறவை விலங்கு பிடித்தல், ஆறு குளங் களில் மீன் பிடித்தல்.

பிரிவு - பல அகமணப் பிரிவுகள்.

தலைவன் பட்டம் - அம்பலகாரன், கம்பளியன்.

குலப் பட்டம் - மூப்பன், சேர்வை, அம்பலகாரன், வன்னியன்.

### வாணிகன்

*வகை - அறுவை வாணிகன் (சவளிக் கடைகாரன்), கூல வாணிகன் (தவசக் கடைகாரன்), பொன் வாணிகன் (காசுக் கடைகாரன்), ஊன்வாணிகன் (இறைச்சிக் கடைகாரன்).*

### வாணியன்

*வாணிகன்-வாணியன்.*

*வகை- (1) எண்ணெய் வாணியன், (வாணியன், செக்கான், சக்கரத்தான்).*

*(2) இலை வாணியன் (கொடிக்கால் வேளாளன்). பட்டம் - மூப்பன், பிள்ளை.*

### வில்லி

*வேடருள் ஒரு பிரிவான் (வில்வேடன்).*

### வெள்ளாளன்

*உழுதுண்ணும் வேளாளனாகிய காராளனுக்கு எதிரானவன், உழுவித்துண்ணும்வேளாளனாகிய வெள்ளாளன். ஒ.நோ: களமன் X வெண்களமன்.*

*வகை:*

*(1) பாண்டி(ய) வெள்ளாளன்.*

*பிரிவு - கார்காத்த வெள்ளாளன், சிவனிய (சைவ) வெள்ளாளன், கோட்டை வெள்ளாளன், நங்குடி வெள்ளாளன், அரும்பூர் (சிறுகுடி) வெள்ளாளன், நீறு பூசி வெள்ளாளன்.*

*(2) சோழிய வெள்ளாளன்.*

*(3) தொண்டைமண்டல வெள்ளாளன்.*

*(4) துளுவ வெள்ளாளன்.*

*பட்டம் - பிள்ளை.*

*(5) கொங்கு வெள்ளாளன்.*

*பிரிவு-ஆறை நாடு, ஒருவங்க நாடு முதலிய 24 நாடுகள்.*

*அந்துவன், ஆதி முதலிய 60 குலங்கள்.*

*தலைவன் பட்டம் - நாட்டுக் கவுண்டன், பட்டக்காரர், மன்றாடியார்*

*குலப்பட்டம் - கவுண்டன்.*

*காமிண்டன் - கவுண்டன். மிண்டு = வலிமை. மிண்டன் - வல்லோன். காமிண்டன் = காவலன், தலைவன்.*

*காமிண்டன் - காவண்டன் = கவண்டன்-கவுண்டன்.*

*(6) அகம்படிய வெள்ளாளன்.*

*"கள்ளன் மறவன் கனத்ததோர் அகம்படியன்*
*மெள்ளமெள்ள வந்து வெள்ளாளன் ஆனானே".*

*(7) காரைக்காட்டு வெள்ளாளன்.*

*(8) அரும்புகட்டி வெள்ளாளன்.*

*(9) கும்பிடு சட்டி வெள்ளாளன்.*

*(10) ஆறுநாட்டு அல்லது மொட்டை வெள்ளாளன்.*

*(11) மலைகாணும் வெள்ளாளன்.*

*(12) சங்குத்தாலி வெள்ளாளன்.*

## வேடன்

*தொழில் - வேட்டையாடல்*

*பட்டம் - நாய்க்கன்.*

## வேட்டுவன்

*வகை - (1) மலை வேட்டுவன்.*

*தொழில் - வேட்டையாடல், பயிரிடல்.*

*பட்டம் - நாய்க்கன், கவுண்டன்.*

*(2) பாலை வேட்டுவன் (பண்டைக் காலத்தான்).*

## மறைந்த குலங்கள்

*இறங்குசாத்து (செட்டிகளுள் ஒரு சாரார்), எயினர் (பாலை வாணர்), கணவாளன், நாட்டார் (தென்னார்க்காடு உழவர் வகுப்பார்), மழவர் (மழநாட்டுப் போர்மறவர்), மறமாணிக்கர் (மறக்குடியினர்) முதலியன. இறவுளன், கடம்பன், களப்பாளன், காடவன், காடுவெட்டி முதலியனவும் மறைந்த குலங்களே.*

## மலைவாழ் குலங்கள்

*காடர் (ஆனைமலை), குன்றுவர் (பழனிமலை), பழியர் (குட மலை), மலையாளி (சேரவரையன் மலை, பச்சைமலை, கொல்லி மலை), மலசர் (ஆனைமலை), மன்னான் (குடமலை), முதுவர் (நீல மலை, ஏலமலை) முதலியன.*

## புதுக் குலங்கள்

*புளியங்காரர் (வடார்க்காட்டு ஆம்பூர் வட்டத்திற் புளியம்பழக் குத்தகை யெடுப்பவர்), வளுவாதியர் (திருச்சிராப்பள்ளி புதுக் கோட்டை வட்டார வலையருள் ஒரு பிரிவினர்.)*

## மதமாற்றத்தால் தோன்றிய குலங்கள்

*சமணர், பவுத்தர், கிறித்தவர், முகமதியர்.*

## மொழிமாற்றத்தால் தோன்றிய குலங்கள்

*ஆங்கிலம்-சட்டைக்காரர்.*

*திரவிடம்- (1) சேரநாட்டுத் தமிழக் குலங்கள்.*

*(2) கருநட குடக துளுநாட்டுத் தமிழக் குலங்கள்.*

*(3) வடுக (தெலுங்க) நாட்டுத் தமிழக் குலங்கள்.*

*(4) நீலமலைத் தமிழக் குலங்கள்.*

## மூவகைத் திரவிடக் குலங்கள்

*(1) பெயர் மாறாதவை : எ-டு: கம்மாளன், பாணன், அடுத்தோன் (குடிமகன்), வெளுத்தேடன் (வண்ணான்).*

*(2) பெயர் திரிந்தவை: எ-டு: ஈடிக, கொறச்ச, சோடர்.*

*(3) பெயர் மாறியவை: எ-டு: ஒக்கலிக, குருப்பு, மங்கல (வாடு).*

## குலமுயர்த்தும் வழிகள்

*ஊண் - புலால் மறுத்தல், பச்சரிசிச் சோறுண்ணல்.*

*உடை- பிராமணர்போற் கச்சங் கட்டுதல், பிராமணர் அணியும் ஆடையே அணிதல்.*

*அணி - ஆடவர் பூணூல் அணிதல், பெண்டிர் நூற்கயிற்றில் தாலி கோத்தல்.*

*குலப்பெயர் - குலப்பெயரை மாற்றுதல் அல்லது பட்டப் பெயரைக் குலப்பெயராக ஆளுதல்.*

*ஆட்பெயர் - வர்மன் குப்தன் என்னும் ஈறுகள் கொண்ட வடசொற் பெயர் பூணல்.*

*பட்டம் - பிள்ளை, முதலியார், செட்டியார் என்னும் பட்டங் கொள்ளுதல்.*

*மணவுறவு - மேற்குலத்திற் பெண் கொள்ளல்.*

*மொழி- இயன்றவரை வடசொற் கலந்து பேசுதல், சமற்கிருதங் கற்றல், சமற்கிருதநூ லெழுதுதல், அல்லது செய்யுளியற்றல்.*

*பழக்கவழக்கம் - ஆடவர் காலையிற் சந்தியாவந்தனஞ் செய்தல், கைம்பெண் மணமின்மை.*

*பூசாரி - இருவகைச் சடங்கிற்கும் பிராமணனையே பூசாரியாகக் கொள்ளுதல்.*

*ஆரியத்தொடர்புக் கதை-குலமுதல்வன் வேள்வியில் தோன்றின தாகவோ, ஆரியனுக்குப் பிறந்ததாகவோ, கதை கட்டிக்கொள்ளுதல்.*

*ஒழுக்கம்-பிராமணனுக்குத் தானம் அல்லது தொண்டு செய்தல், இயன்றவரை பிராமணர் சடங்கைப் பின்பற்றல்.*

*சவ முடிவு - எரிப்பு.*

*இவற்றுள், எரிப்புத் தவிர, ஆரியச் சார்பான வெல்லாம் அறி யாமையாலும் அடிமைத்தனத்தாலும் நேர்வனவே. மக்கள்தொகை மிக்க இக்காலத்தில், புதைப்பினும் எரிப்பே பொருளாட்சிச் சிக்கனத்திற் கேற்றதாகும்.*

## குலப்பட்டம் தோன்றிய வகைகள்

*(1) முன்னோர் பதவி - (படை) முதலியார், படையாட்சி.*

*(2) முன்னோர் வேந்தனாற் பெற்ற சிறப்பு - ஏனாதி, காவிதி, வேள்- வேளான், அரசு, எட்டி - செட்டி, முதலி, பிள்ளை.*

*(3) முன்னோர் அருஞ்செயல் - புலிகடிமால், களம் வென்றான்.*

*(4) முன்னோர் கொடிவழி - அதிகமான், மலையமான் - மலை மான், வாணன் (வாணகோவரையன்), முத்தரையன் (முத்து ராசு).*

*(5) ஊர்த்தலைவன் அல்லது குடித்தலைவன் பட்டம் - நாடான், நாட்டான், நாட்டாண்மைக்காரன், ஊராளி, கரையாளன், அம்பலகாரன், மன்றாடி, குடும்பன், கவுண்டன், உடையான்.*

*(6) தொழில் - பண்ணையாடி, மந்திரி, ஓதுவார், குருக்கள்.*

*(7) தொழிற் கருவி - சாம்பான் (சாம்பு=பறை).*

*(8) அறிவு - புலவன், பண்டிதன், பண்டாரம்.*

*(9) சிற்றரசன் தொடர்பு - வளுவாதி, தொண்டைமான்.*

*(10) பத்திநெறியாட்சி - ஆண்டி.*

*(11) வேந்தன் தொடர்பு - தேவன்.*

*(12) குலவுயர்த்தம் - பிள்ளை, முதலி.*

# ஆரிய அட்டூழியத்தால் தமிழர்க்கு விளைந்த கேடுகள்

## (1) குமுகாயத் துறை

*ஒற்றுமைக் கேடு: நால்வரணக் கட்டுப்பாடு*

| புலனம் (விடயம்) | அந்தணர் (பிராமணர்) | அரசர் (சத்திரியர்) | வணிகர் (வைசியர்) | வேளாளர் (சூத்திரர்) |
|---|---|---|---|---|
| தொழில் | ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் | ஓதல், வேட்டல் , ஈதல், நாடுகாத்தல், பொருதல், வேட்டை யாடல் | ஓதல், வேட்டல், ஈதல், உழவு, வணிகம், நிரைகாத் தல் | மேல்மூவர்க்கும் தொண்டு செய்தல் |
| உயர்வு மேம்படுதல் | அறுமடங்கு அறிவால் | மும்மடங்கு வல்லமையால் | இருமடங்கு காசுகூலம் ஆநிரையால் | ஒருமடங்கு அகவையால் |
| பூணூல் | பட்டு | சணல் | கம்பளி | — |
| பெண் கொள்ளல் | நால்வர ணத்திலும் | பின் மூ வரணத்தில் | பின் இரு வரணத்தில் | தன் வர ணத்தில் |
| பற்குச்சு நீளம் | 12 விரல் | 11 விரல் | 10 விரல் | 9 விரல் |
| நலம் வினவல் | குசலமா யிருக் கிறாயா? | நோயின்றி யிருக் கிறாயா? | சேமமா யிருக் கிறாயா? | சுகமா யிருக் கிறாயா? |
| தானம் பெறும் போது பெற்றேன் எனல் – | உரக்க | மெல்ல | வாய்க்குள் | உள்ளத்தில் |
| அறங்கூற வையத்திற் சான்றாளனை ஏவல் | சொல் | உண்மை சொல் | பொய் சொன்னால் ஆவும் விதையும் பொன்னும் உனக்குதவா. | பொய் சொன்னாற் பிராமணனைக் கொன்ற பழி சாரும். |
| மனைநில மண்சுவை | இனிப்பு | கார்ப்பு | புளிப்பு | கசப்பு |
| மனைத்திசை | தெற்கு | மேற்கு | வடக்கு | கிழக்கு |
| மனைநோக்கு | வடக்கு | கிழக்கு | தெற்கு | மேற்கு |
| மரம் | வேம்பு | தேக்கு | இலுப்பை | வேங்கை |
| அளவுகோல் நீளம் | 29 விரல் | 27 விரல் | 25 விரல் | 26 விரல் |
| முழக்கோல் | மூங்கில் | ஆச்சா | தேக்கு | வேங்கை |
| மட்டக்கோல் | புளிமா | ஆச்சா | தேக்கு | வேங்கை |
| சங்குமரம் | கருங்காலி | வன்னி | தேக்கு | புளி |

| | | | | |
|---|---|---|---|---|
| எழுத்து | பன்னீருயிர், கஙசஞடண | தநபமயர | லவழள | றன |
| காக்குந் தெய்வம் | நான்முகன், சிவன், திருமால், முருகன் | வேந்தன், கதிரவன் திங்கள் | குபேரன், வாரணன் | கூற்றுவன் |
| பாடப்பட வேண்டும் பா | வெண்பா | ஆசிரியப்பா | கலிப்பா | வஞ்சிப்பா |
| பாட்டோலை நறுக்கு நீளம் | 26 விரல் | 20 விரல் | 16 விரல் | 12 விரல் |
| கலம்பகச் செய்யுள் தொகை | 95 | 90 | 50 | 30 |
| நாடகக் கதைத் தலைவனுக் குரிய பொருள் | அறம் பொரு ளின்பம் வீடு | அறம் பொரு ளின்பம் | அறம் பொருள் | அறம் |
| நாடகக் கதைத் தலைவனுக் குரிய சுவை | ஒன்பான் சுவையும் | இளிவரலும் சமநிலையும் ஒழிந்தவை | சமநிலை ஒழிந்தவை | பெருமிதமும் சமநிலையும் ஒழிந்தவை |

## சோழ பாண்டி நாடுகள்

| பிராமணர் ஊர்ப்பெயர் | பிராமணர் தெருப்பெயர் | பிராமணர் வீட்டுப்பெயர் |
|---|---|---|
| சதுர்வேதிமங்கலம் | அக்கிரகாரம் | அகம் |

**சேர(மலையாள)நாடு**

**வீட்டுப் பெயர்கள்:**

*பிராமணன் - இல்லம், மனை*
*நாயர்(பொது) - வீடு*
*நாயர் (தலைவன்) - இடம், தரவாடு*
*கொல்லர், சாலியர், ஈழவர் முதலியோர் - புரை, குடி.*
*கோவிற் பணியாளன் - வாரியம், பூமடம்*
*பறையன் (குடி) - சேரி*
*செறுமன் - சாலை*

## இனஇழிபு

***முதல் நிலை :*** *பார்ப்பாரும் அந்தணரும் (ஐயரும்) பிராமணரே யென்று, தமிழப் பார்ப்பாரும் அந்தணரும் தம் நிலையினின்று தள்ளப்பட்டமை.*

***இரண்டாம் நிலை :*** *உழுவித்துண்ணும் வேளாளராகிய வெள்ளாளரும் சூத்திரருள் அடக்கப்பட்டமை.*

***மூன்றாம் நிலை :*** *அரசரும் வணிகரும் உட்படத் தமிழ ரெல்லாரும் சூத்திரர் எனப்பட்டமை.*

*வெள்ளாளர் தம்மை உயர்த்தக் கருதிச் சற்சூத்திரர் என்று தம்மைச் சொல்லிக்கொண்டது சிரித்தற்குரிய செயலாம்.*

***நாலாம் நிலை :*** *இசை நாடகத் தொழிலும் உழவுத் தொழிலுஞ் செய்துவந்த சில வகுப்பாரைத் தீண்டாராக்கி, அவரை ஐந்தாங் குலத்தினர் (பஞ்சமர்) என்றமை.*

*முதற்கண் பாணரும், பின்னர்ப் பறையரும், அதன்பின் பள்ளரும் தீண்டாராக்கப்பட்டனர். இறுதியிற் சான்றாரையும் தீண்டாராக்கத் தொடங்கினர். ஆயின், ஆங்கிலராட்சியும் ஆங்கிலக் கல்வியும் கிறித்தவ நெறியும் பரவியதால், சான்றார் விழித்தெழுந்து தப்பிக்கொண்டதுமன்றித் தம்மை உயர்த்தியுங்கொண்டனர்.*

*சில வகுப்பார் தீண்டாராகவே, அவருக்குப் பணி செய்யும் வண்ணானும் மஞ்சிகனும் (மயிர்வினைஞனும்) ஆகிய குடிமக்களும், பூசை செய்யும் பண்டாரமும் தீண்டாராயினர்.*

***ஐந்தாம் நிலை :*** *தீண்டார் நாளடைவில் பிராமணருக்குக் காணார் ஆக்கப்பட்டனர். அதனால், தீண்டுவார் தீண்டார் அண்டார் காணார் எனத் தமிழர் பிராமணரை நோக்கி நால்வகைப்பட்டனர்.*

***ஆறாம் நிலை :*** *தீண்டார் மேல்வகுப்பாரான தமிழருள்ளும் சிலர்க்கு 30 எட்டுத் தொலைவிலும் சிலர்க்கு 60 எட்டுத் தொலைவிலும் விலகி நிற்க நேர்ந்தது.*

***ஏழாம் நிலை :*** *மலையாள நாட்டுத் தீண்டாருள் ஒரு வகுப்பாரான நாயாடிகள், தமிழருக்கும் அல்லது மலையாளியர்க்கும் காணார் ஆயினர். தாழ்த்தப்படாத தமிழக் குலத்தாருள்ளும், உயர்வு தாழ்வுபற்றி ஒற்றுமைக் குலைவு ஏற்பட்டது.*

*பிராமணர், நிறத்திலும் துப்புரவிலும் நாகரிகத்திலும் தமக்கு எத்துணையும் தாழ்வில்லா மரக்கறி வெள்ளாளர் சமைத்ததையும் தொட்ட வுண்டியையுங்கூட இன்றும் உண்பதில்லை. தமிழருள் மரக்கறி வெள்ளாளரே தலைமையாகக் கருதப்படுபவர். அவருந் தாழ்த்தப்பட்டதனால், தமிழினம் முழுதும் தாழ்த்தப்பட்டதே யாகும். இன்று தாழ்த்தப்பட்டவர் என்று சொல்லப்படுபவர் உண்மையில் ஒடுக்கப்பட்டவரே யாவர்.*

பிராமண வுண்டிச்சாலைகளில், முதலில், தமிழர் தலைவாயிலை யடுத்த கூடத்திலும், பிராமணர் மறைவான உள்ளறையிலும் படைக்கப்பட்டனர். அன்று, பிராமணர் எச்சிலையினின்று கறிவகை கள் எடுத்துத் தமிழர்க்குப் படைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. இதை வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார் கண்ணாரக் கண்டு, தாமரைத் திரு. வ. சுப்பையாப் பிள்ளையிடம் சொல்லியிருக் கின்றார். நாகர்கோவில் வாணரான ஆறுமுகம் பிள்ளை என்னும் தொடக்கப்பள்ளி யாசிரியர், ஒரு பிராமண வுண்டிச்சாலைக்கு உண்ணச் சென்றபோது, இத்தகைய இழிசெயலைக் கண்ணாரக் கண்ட அவருடைய பிராமண நண்பர், அவரை உண்ண வேண்டா வென்று தடுத்ததாக, அவர் காலஞ்சென்ற பர். இராசமாணிக்க னாரிடம் சொல்லியிருக்கின்றார். தில்லை இராமசாமிச் செட்டியார் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் திரு. சாமிநாத முதலியாரும், அவர் தந்தையார் ஒரு பிராமணர் வீட்டில் இத்தகைய இழிநிலைக்கு ஆளாகவிருந்து தப்பியதாக என்னிடம் சொன்னார்.

இந் நூற்றாண்டுத் தொடக்கத்தில், தில்லையில் ஒரு பிராமண உண்டிச்சாலையில், 'பிராமணர்க்கு மட்டும்' என்று ஒரு பலகை தொங்கவிடப்பட்டிருந்தது.

நான் 1928-லிருந்து 1934 வரை இராசமன்னார்குடியி லிருந்த போது, கீரங்குடிக் கோபாலையர் உண்டிச்சாலையில், தமிழர்க்கு எடுப்புச் சாப்பாடும் இல்லாதிருந்தது.

தமிழர் இங்ஙனம் தாழ்த்தப்பட்டும், பிராமணனை எதிர்க்காது, தமக்குள்ளேயே, "என் குலம் உயர்ந்தது, உன் குலம் தாழ்ந்தது" என்றும், "எனக்கெதிரில் நீ செருப்பணிந்து நடக்கக் கூடாது" என்றும், "மேலாடையை வல்லவாட்டாக அணியக் கூடாது" என்றும், "திருமண வூர்வலத்தில் நீ பல்லக் கேறக் கூடாது" என்றும், "குடை கொடி பிடிக்கக்கூடாது" என்றும், பலவாறு பிதற்றிக் கலாமுங் கலகமுஞ் செய்து வருவாராயினர்.

## வலங்கை இடக்கை வழக்காரம்

குலப்பட்டம், குடை கொடி பந்தம் முதலிய விருதுச் சின்னங்கள், வெண்கவரி வீச்சு, சிவிகை குதிரை முதலிய ஊர்தி, மேளவகை, தாரை வாங்கா முதலிய ஊதிகள், வல்லவாட்டு, செருப்பு ஆகியவைபற்றிக் குலங்கட்கிடையே பிணக்கும் சச்சரவும் ஏற்பட்டதனால், கரிகாலன் என்னும் பெயர்கொண்டிருந்த வீர ராசேந்திரச் சோழன் (1063-69) அவ் வழக்கைத் தீர்த்து வைத்ததாகத் தெரிகின்றது.

**" காவிய மாகிய காமீகங் கண்டுகங் காகுலத்தோர்**
**ஓவிய பாத்திர ராக விருபத்து நான்குயர்ந்த**

**மேவிய கோட்டத் திலுங்கரி கால வளவன்மிக்க**
**வாவிய மேன்மை கொடுத்தளித் தான்றொண்டை மண்டலமே"**

என்பது, 17ஆம் 18ஆம் நூற்றாண்டிலிருந்த படிக்காசுப் புலவர் பாடியது.

சோழனுக்கு வலக்கைப் பக்கம் அமர்ந்திருந்த குலத்தார் வலங் கையர் என்றும், இடக்கைப் பக்கம் அமர்ந்திருந்த குலத்தார் இடங்கையர் என்றும் பெயர் பெற்றதாக உய்த்துணரலாம். பகைகொண்ட இருசாரார் ஒரே பக்கத்தில் இருந்திருக்க முடியாது.

இருகையிலும் பல குலத்தார் சேர்ந்திருப்பினும், வலங்கையில் வேளாளரும், இடங்கையிற் கம்மாளருமே தலைமையானவர் என்று கருத இடமுண்டு.

சோழராட்சிக்குப்பின் பல்வே றரசுகள் ஏற்பட்டதனாலும், பல புதுக் குலங்கள் தோன்றியதனாலும், ஆங்கிலர் அரசாட்சிக் காலத்தில் மீண்டும் வலங்கை யிடங்கைச் சச்சரவு கிளர்ந்தெழுந்தது. 1809ஆம் ஆண்டு சூலை மாதம் 25ஆம் பக்கல், செங்கழுநீர்ப்பட்டு மாவட்ட நயன்மைத் தீர்ப்பாளர் சார்சு கோல்மன் (George Colman) துரை, அவ் வழக்கைத் தீர்த்து ஒவ்வொரு குலத்தார்க்கும் உரியவற்றைத் திட்டஞ் செய்தார்.

| **வலங்கைக் குலங்கள்** | **இடங்கைக் குலங்கள்** |
|---|---|
| வேளாளன், | கம்மாளன், |
| அகம்படியான், | பேரிச் செட்டி, |
| இடையன், சாலியன், | நகரத்துச் செட்டி, |
| பட்டணவன், சான்றான், | கைக்கோளன், பள்ளி (வன்னியன்), |
| குறவன், குறும்பன், | வேடன், இருளன், பள்ளன், |
| வள்ளுவன், பறையன் | இரட்டைமாட்டுச் செக்கான் |
| முதலியன. | முதலியன. |

இடங்கையினும் வலங்கை பெருங்கை. மேளகாரன், கணிகை (தாசி), பணி செய்வோன் முதலிய குலங்களில் இருகையு முண்டு. ஒருசில குலங்களில் ஆடவர் ஒரு கையும் பெண்டிர் ஒரு கையும் ஆவர். வடுக கன்னட நாடுகளிலும் இவ் வகுப்புகள் இருப்பதால், அந் நாட்டுப் பகுதிகள் 11ஆம் நூற்றாண்டிலும் தமிழ்நாடா யிருந்தமை அறியப்படும்.

"இத் தமிழ்நாட்டில் ஒவ்வொரு நகரத்திலும் சிற்றூரிலும் இடங்கை வலங்கையார் வசிப்பதற்கு வீதிகள் தனித்தனியே ஏற்பட்

டிருக்கின்றன. ஒருவர் வசிக்குந் தெருவில் மற்றொருவர் வசிப்ப தில்லை. சுபாசுபப் பிரயோசனங்களிலும் ஒருவரிருக்கும் வீதி வழியாக மற்றொருவர் ஊர்வலம் வருவதில்லை. பிரேதங் கொண்டு போவ தில்லை. கருமாதியிலுமப்படியே. இருவருக்கும் பொது வாயுள்ள வீதியில் போவதற்குத் தடையிராது. சுவாமிகளுக்கு உற்சவாதிகளும் அந்தந்தக் கட்சிகளிலுள்ள வீதிகளிலேதான் நடத்துவார்கள்" என்று கனகசபைப் பிள்ளை 1901ஆம் ஆண்டில் எழுதியுள்ளர். (வருண சிந்தாமணி, பக். 502-3).

**கல்வியிழப்பு:** வேதம் முதலிய பன்னூலொடு பல்கலையும், பிராமணர்க்கு ஊணுடையுடன் வேத்தியற் செலவிற் கற்பிக்கப் பட்டன. தமிழர்க்கு மூவேந்தரும் ஒரு கல்விச்சாலையும் ஏற்படுத்த வில்லை.

**நடுநிலை நயன்மை யிழப்பு:** மூன்றாங் குலோத்துங்கச் சோழன் ஒரு பிராமணக் குற்றவாளிக்குக் கொலைத்தண்டனை யிட்டதனால், அப் பிராமணன் ஆவி அவனை நெடுநாள் அலைக்கழித்ததென்று ஒரு கதை கட்டப்பட்டுள்ளது. மலையாள நாட்டிற் பிராமணனுக்குக் கொலைத் தண்டனை யில்லையென்று சட்டமிருந்தது.

**முன்னேற்றத் தடை:** தமிழன் தன் முயற்சியினால் இம்மையில் தன் நிலைமையை யுயர்த்தினாலும், தன் குலத்தை மறுமையில்தான் மாற்ற முடியும் என்றும், சூத்திரன் பல பிறப்பில் தவஞ்செய்து வைசியனாகலா மென்றும். இங்ஙனமே வைசிய நிலையிலும் சத்திரிய நிலையிலும் முயன்ற பின்னரே இறுதியிற் பிராமணனாக முடியு மென்றும், ஒரு திரிவாக்கக் (Evolution) கொள்கை புகுத்தப்பட்டது. இதை நம்பி ஏராளமான பொருளை வேள்வியிற் செலவிட்ட பேதையர் எத்தனையோ பேர்! இனி, ஆறு தாண்டலையும் கடல் கடத்தலையும் தடுத்தது அறிவு வளர்ச்சித் தடையாகும்.

## (2) பண்பாட்டுத் துறை

**மறமிழப்பு:**

> **" கொல்லேற்றுக் கோடஞ்சு வானை**
> **மறுமையும் புல்லாளே ஆய மகள்."** (கலித்.103)

என்று புகழப்பட்ட ஆயர் குலம், இன்று பெண்டிர் மட்டுமன்றி ஆட வரும் ஆட்டுக்குட்டிகள் என்னுமாறு, அடங்கியொடுங்கி யமைந்தது. அன்று கூற்றுவனும் நடுங்குமாறு கோவர் (ஆயர்) நடத்தி வந்த கொல்லேறு கோடல்விழா இன்று மறவராற் சல்லிக்கட்டு என்னும் பெயரில் காட்சியளவாக நடைபெற்று வருகின்றது. பொது வர் கல்லூரி அல்லது கோவர் கல்லூரி என்று அழகிய பெயரிடவும் துணிவின்றி, யாதவர் கல்லூரி என்று ஒரு வடநாட்டரசன் பெயர் பற்றிய வடசொல்லை ஆண்டுள்ளனர்.

***பகுத்தறிவிழப்பு:*** *தமிழருள் தலைமையான குலத்தானாகக் கருதப்படும் மரக்கறி வெள்ளாளன், பொற்கலத்தில் நன்னீர் கொடுப்பினும் குடிக்க மறுக்கும் பிராமணன், வெள்ளாளனின் மிகத் தாழ்ந்தவளாகக் கருதப்படும் இடைச்சி, பழமட்கலத்தில் தண்ணீர் கலந்து விற்கும் தயிரை, வானமுதம் போல் வாங்கிக் குடிப்பது கண்டும், தான் அவனின் தாழ்ந்தவனென்று மானமின்றிச் சொல் கின்றான்.*

*பிராமணரில்லா மற்ற நாடுகளிலெல்லாம் என்றும் மாறக்கூடிய தொழில்பற்றியே மக்கள் வகுப்புகள் ஏற்பட்டிருத்தல் கண்டும் , பிரா மணருள்ள இந் நாட்டில் மட்டும் குலங்கள் இறைவன் படைப் பென்று கருதுவது, பகுத்தறிவின்மையைத் தெளிவாகக் காட்டும்.*

***தன்மான மின்மை:*** *முதற் குலோத்துங்கன் காலத்தில், பையற் பருவத்து ஆளவந்தார் வித்துவ சனகோலாகலன் என்னும் ஆக்கி யாழ்வானோடு தருக்கித்து, அரசி வேத வுரைப்படி கற்பிழந்தவ ளென்று, வேத்தவையில் அரசன்முன் சொன்னதை அவையோர் ஒப்புக் கொண்டதும் அவ்வாறே நச்சினார்க்கினியரும் தொல் காப்பியவுரை வரைந்திருப்பதும், கோழிக்கோட்டு மன்னரான சாமொரின் குடியினர் தாம் மணந்த பெண்டிரை முதல் முந்நாள் பிராமணன் நுகரவிட்டதும், தமிழரின் அல்லது தமிழ வழியினரின் தன்மானமின்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாம்.*

***நெஞ்சுரமின்மை:*** *திருவரங்கத்தில் அரங்கநாயகி மூக்குத்தியைத் திருடிய பிராமணப் பெண், அத் தெய்வம் ஏறியவளாக நடித்து, கழுநீர்ப்பானையினின்று அம் மூக்குத்தியை எடுத்துக் கொடுத்த போது, தஞ்சை விசயராகவலு நாயக்கர் தண்டியாது விட்டதும்;*

*இறுதியாக ஆண்ட திருவாங்கூர் மன்னர் இங்கிலாந்து சென்று மீண்டவுடன், அவரது பதுமநாபர் கோவிலுக்குத் தீவைத்த பிராமணப் பூசாரியைத் தீக்கரணியம் வினவியபோது, அது மன்னர் மேனாடு சென்றதனாற் பொங்கிய தெய்வச்சினம் என்று விடையிறுத்ததைக் கேட்டு, வாளாவிருந்ததாகச் சொல்லப்படுவதும்;*

*சென்ற ஆண்டு 'தென்மொழி' ஆசிரியர் பாவலர் பெருஞ்சித் திரனார், திருநெல்வேலித் திரவியம் தாயுமானவர் தென்மதக் கல்லூரித் திருவள்ளுவர் விழாவிற் சொற்பொழிவாற்றிய போது தடுத்ததும்; தமிழ திரவிடரின் நெஞ்சுரமின்மையைத் தெற்றெனத் தெரிவிக்கும்.*

***தமிழ்ப்பற்றின்மை:*** *சில கட்சித் தலைவரும் பாவிசைப் பாளரும், கட்டாய இந்தியை ஏற்பதும் கோவில் தமிழ் வழிபாட்டைத் தடுப்பதும் தாய்மொழிப் பற்றின்மை யாலேயே.*

## (3) மொழித்துறை

**மொழியிழிபு** : சிவனியம் மாலியம் என்னும் இரு மதமும் தோன்றிய தமிழ் வழிபாட்டிற்குத் தகாத மொழியென்று தள்ளப் பட்டது.

**சொல்லிழிபு:** சோறு, தண்ணீர் முதலிய தூய தமிழ்ச்சொற்கள் பள்பறை வழக்கென்று தமிழராலும் பழிக்கப்பட்டன.

**சொல் வழக்கு வீழ்வு** : கழுவாய் (பிராயச்சித்தம்), சூள்(ஆணை) முதலிய நூற்றுக்கணக்கான அருமையான தமிழ்ச்சொற்கள், வழக்கு வீழ்த்தப்பட்டன.

**சொல்லிறப்பு:** ஆயிரக்கணக்கான இருவழக்குத் தமிழ்ச் சொற்களும் இறந்துபட்டன. இறந்த சொற்கு என்றும் எடுத்துக் காட்டில்லை.

**சொற்பொருளிழப்பு:** உயிர்மெய் என்பது, ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர்வரைப்பட்ட உயிரொடு கூடிய மெய் (living thing). பிராணி என்னும் வடசொல் வழக்கினால், உயிர்மெய் என்னும் சொல் தன் பொருளை இழந்தது, உயிரி என்றொரு சொல்லுந் தோன்றவில்லை.

புஜம் என்னும் வடசொல் வழக்கினால், தோள் என்னும் தமிழ்ச் சொல் தன் பொருளை யிழந்து, தோள்பட்டையைக் குறித்து, சுவல் என்னும் தென்சொல்லை வழக்கு வீழ்த்தியும் உள்ளது.

தமிழையும் தமிழ்ச்சொற்களையும் போற்றிக் காக்க வேண்டு மென்னும் உணர்வு, இன்றும், முப்பல்கலைக்கழகத் துணைக் கண் காணகர்க்கும் கல்வியமைச்சர்க்கும் தலைமைத் தமிழ்ப் பேராசிரி யர்க்கும் இல்லை.

## (4) இலக்கியத் துறை

பல்லாயிரக் கணக்கான முதலிரு கழக நூல்களும் பெயருமின்றி அழிக்கப்பட்டுவிட்டன. தொல்காப்பியமும் திருக்குறளுந் தவிர, கிறித்துவிற்கு முற்பட்ட எல்லா நூல்களும் இல்லாவாயின. பொது விலக்கியத்தைச் சேர்ந்த, பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் ஆகிய பாடற்றிரட்டுகளும் கீழ்க்கணக்குப் பனுவல்களும் அல்லாது, அறிவியலும் கலையும்பற்றிய கடைக்கழகக் காலச் சிறப்பிலக்கியம் ஒன்றுகூட இன்றில்லை. பதிற்றுப்பத்து முதலும் ஈறும் இன்றி நிலை பெற்றுவிட்டது. அகத்தியம் முதுநாரை பரதம் ஆகிய முத்தமிழ்ப் பிண்ட நூல்களும், அவற்றிற்கு முந்திய முத்தமிழ் மாபிண்ட நூல்களும் இறந்துபட்டன.

பாலவநத்தம் வேள் பாண்டித்துரைத் தேவர், அரும்பாடுபட்டுத் தொகுத்து வைத்திருந்த ஆயிரக்கணக்கான அரிய பண்டைத் தமிழ்

*ஏட்டுச்சுவடிகளும், மதுரைத் தமிழ்ச் சங்கக் கட்டடத்தில் ஐந்திலே ஒன்று வைக்கப்பட்டன.*

*திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கும் மூலமுமான உலக முதற்றாய் உயர்தனிச் செம்மொழியாம் தமிழ், சமற்கிருதக் கிளையும் பன்மொழிக் கலவையுமான புன்மொழியென்று, நாலரை யிலக்கம் உருபாச் செலவிட்டுத் தொகுக்கப்பட்ட, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகரமுதலியிற் காட்டப்பட்டுள்ளது.*

*சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகரமுதலித் திட்டம் ஏற்படுமுன், ஒரு தமிழ்ப் பேரகர முதலி தொகுக்கவேண்டு மென்றும், அதற்கு நேருஞ் செலவனைத்தும் புதுக்கோட்டையரசு ஏற்றுக்கொள்ளு மென்றும், பாண்டித்துரைத் தேவர் தம்மிடமுள்ள புலவரைக் கொண்டு அப்பணியில் ஈடுபடவேண்டுமென்றும், அவருக்குப் புதுக்கோட்டை யரசர் எழுதிவந்த நெடுநாள் எழுத்துப் போக்குவர வடுக்கு, தமக்குப் பின் வந்த பிராமணரால் அகற்றப்பட்டு விட்டதென்று, ஓய்வுபெற்ற புதுக்கோட்டைத் தலைமை நடுத்தீர்ப் பாளர் சிவஞான முதலியார் என்னிடம் சொன்னார்.*

*ஆரியக் கருத்துகளைப் புகுத்தித் தமிழிலக்கியத்தை ஆரிய வண்ண மாக்குதற் பொருட்டே, தொல்காப்பியர் காலம் முதல், நூல் களும் நூலுரைகளும் பிராமணத் தமிழ்ப் புலவரால் இயற்றப்பட்டும் எழுதப்பட்டும் வந்திருக்கின்றன.*

*பிராமணர் அண்டிப் பிழைக்க வந்த அயலினச் சிறுகுழுவாரா யிருந்தும், தமிழ்நாட்டுக் கோவில்களில், தமிழர்க்குப் பயன்படா வாறும், தமிழ்கெடுமாறும், பல கல்வெட்டுகள் வடமொழியிற் பொறிக்கப்பட்டுள்ளன.*

## (5) மதத் துறை

***கடவுள் மத மறைப்பு:*** *ஊர் பேர் குணங்குறி யின்றி எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளை, உருவமின்றி உள்ளத்தில் கண்டு தொழும் கடவுள் நெறியை, உலகில் முதன்முதல் தெளிவாகக் கண்டவர் தமிழரேயாயினும், அதனாற் பிராமணர்க்குப் பிழைப் பில்லை யென்றும், தமிழர் அறிவொளி பெறக்கூடா தென்றும், அந் நெறி அடியோடு மறைக்கப்பட்டுள்ளது.*

***இறைவனொடு தொடர்பின்மை:*** *சிவனியமும் மாயோனி யமும் தூய தமிழ் மதங்களா யிருந்தும், அன்பான தந்தையுடன் அவனுடைய அருமை மக்கள் நேரடியாய்ப் பேச முடியாவாறு, இடையில் ஓர் அயலான் நின்று தடுத்து, மக்கள் கருத்தை அல்லது விருப்பத்தைத் தானே அவர் கட்குத் தெரியாத அயன்மொழியில் தந்தைக்குத் தெரிவித்தல் போல், கோவிலிலுள்ள பரம*

*திருத்தந்தையும் அருட்கடலுமான இறைவன் உருவிற்கு,தமிழர் தாமே தம் நெஞ்சார்ந்த அன்பு கனிந்த வணக்கத்தைத் தம் தாய்மொழியில் தெரிவித்து வழிபட்டுப் படைத்து, பேரின்பப் பெருமகிழ்ச்சி பெற முடியாவாறு, மேனாட்டினின்று வந்த பிராமணன் இடைநின்று, படைப்புத் தேங்காயை வாங்கி யுடைத்து, தமிழர்க்குத் தெரியாத, தனக்குந் தெளிவாக விளங்காத, அரைச் செயற்கை இலக்கிய நடைமொழி யாகிய சமற்கிருதத்தில் தான் உருப்போட்டதைச் சொல்லி, அஞ்சலகத்திலும் வைப்பகத்திலும் (Bank) வரியகத்திலும் பணங் கட்டியவர் திரும்புவதுபோல் வழிபட்டவரைத் திரும்பச் செய்வது, எத்துணை கேடான தீவினை!*

***உயிரிழப்பு:*** *சிறந்த சிவனடியாராக ஒழுகிய குற்றத்தினால், நந்தனார் என்னுந் தூயர், பட்டப் பகலிற் பலர் காணச் சுட்டெரிக்கப் பட்டார். இத்தகைய கொடிய நிலைமையும் 1940ஆம் ஆண்டுவரை தென்னாட்டி லிருந்துவந்தது.*

## (6) பொருளாட்சித் துறை

***பொது விழப்பு:*** *பிராமணர், மூவேந்தரிடத்தும் கோவலன் போன்ற செல்வரிடத்தும் பல்வகை தானமாகப் பெற்ற பொன்னிற்கும் ஆவிற்கும் நிலத்திற்கும் பிற பொருள்கட்கும் கங்குகரை யில்லை.*

***சில வகுப்பாரிழப்பு:***

> ***“ குழலினும் யாழினும் குரன்முத லேழும்***
> ***வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டும்***
> ***அரும்பெறன் மரபிற் பெரும்பா ணிருக்கையும்“*** (சிலப். 5:35–7)

*என்று இளங்கோவடிகளாற் புகழ்ந்து பாடப்பெற்ற பாணர், மாட்டிறைச்சி யுண்டதனாற் புலையர் என்று இழித்திடப்பட்டு, 11ஆம் நூற் றாண்டிற்குப் பின் தம் தொழிலையும் வருவாயையும் இழந்தனர்.*

*ஐரோப்பியரும் அவர் வழியினரும் அராபியரும் யூதரும் இன்றும் மாட்டிறைச்சி யுண்பவரே. ஆரியப் பூசாரியரும் வேதக் காலத்தில் அதை விரும்பி யுண்டவரே.*

*தவத்திற் சிறந்த பரத்துவாசர் தம் புதல்வனுடன் காட்டில் வாழ்கையில், விருது என்னும் தச்சனிடம் பல ஆக்களை வாங்கிக் கொன்று தின்றார் .*

*செம்மறியாட் டிறைச்சியால் நான்கு மாதம் வரையும், வெள்ளாட் டிறைச்சியால் ஆறு மாதம் வரையும், காட்டெருமைக் கடா விறைச்சியால் பத்து மாதம் வரையும், தென்புலத்தார் (பிதுர்க்கள்) பொந்திகை (திருப்தி) யடைகின்றனர் என்று மனுதரும சாத்திரத்திற் கூறப்பட்டுள்ளது.*

பாணர் இசைத்தொழிலை இழந்ததனால், பல இசைத்தமிழ் நூல்களும் இறந்தொழிந்தன. சதுரப்பாலை திரிகோணப் பாலை என்னும் பண் திரிவு முறைகளையும், அகநிலை மருதம், புறநிலை மருதம் முதலிய பண் நுட்பங்களையும் விளக்குவார் இன்று எவரும் இல்லை.

சென்னை இராயபுரம் பாதாள விக்கினேசுவரர் கோவில் தெருவிலுள்ள சுப்பிரமணியம் என்னும் இசைவாணர், புதுக்கோட்டைத் தட்சிணாமூர்த்தியார்போற் கஞ்சுரா இயக்கினும், ஒரு முடிதிருத் தாளன் மகனார் என்பதுபற்றி, அவரை அரங்கிற் கழைப்பார் ஒருவருமில்லை.

***தனித்தமிழ்ப் புலவர் இழப்பு:*** மறைமலையடிகள் வழிப்பட்ட தனித்தமிழ்ப் புலவர், எத்துணைப் புலமையும் ஆராய்ச்சியும் உடையவராயிருப்பினும், ஆரியத்திற்கு மாறானவர் என்னுங் கரணியத்தால், அரசியல் திணைக்களத்திலும் பல்கலைக்கழகத்திலும் அமர்த்தப் பெறுவதில்லை.

## ஊர்ப்பெயர் மாற்றம்

தமிழ்நாட்டை ஆரியப்படுத்தற்குப் பல ஊர்ப் பெயர்கள் வடசொல்லாக மாற்றப்பட்டுள்ளன.

எ-டு

| தென்சொல் | வடசொல் |
|---|---|
| குடமூக்கு - குடந்தை | கும்பகோணம் |
| குரங்காடுதுறை | கபித்தலம் |
| சிலம்பாறு | நூபுரகங்கை |
| சிற்றம்பலம் | சிதம்பரம் |
| பழமலை, முதுகுன்றம் | விருத்தாசலம் |
| புள்ளிருக்கு வேளூர் | |
| வினைதீர்த்தான் கோவில் | வைத்தீசுவரன் கோயில் |
| பொருநை | தாம்பிரபரணி |
| மயிலாடுதுறை | மாயூரம் |
| மரைக்காடு - மறைக்காடு | வேதாரணியம் |

வடமொழியை யெதிர்த்து வெல்லும் வலிமை தமிழுக்கேயிருப்பதால், ஆரியக் கட்டுப்பாடு தமிழ்நாட்டிலேயே மிகக் கடுமையாகப் புகுத்தப்பட்டுள்ளது.

# 3

# தெளிநிலைக் காண்டம்

## திருவள்ளுவர் தமிழரின் கண்திறப்பிப்பு

(தோரா. கி.மு. 2ஆம் நூற்.)

*“ அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்*
*செந்தண்மை பூண்டொழுக லான்.”* (குறள்.30)

*“ அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்*
*போஒய்ப் பெறுவ தெவன்.”* (குறள்.46)

*“ இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி*
*வேளாண்மை செய்தற் பொருட்டு.”* (குறள்.81)

*“ சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்*
*கோடாமை சான்றோர்க் கணி.”* (குறள்.118)

*“ ஒழுக்க முடைமை குடிமை யிழுக்கம்*
*இழிந்த பிறப்பாய் விடும்.”* (குறள்.133)

*“ மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்*
*பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.”* (குறள்.134)

*“ அவிசொரிந் தாயிரம் வேட்டலி லொன்றன்*
*உயிர்செகுத் துண்ணாமை நன்று.”* (குறள்.259)

*“ அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்*
*நின்றது மன்னவன் கோல்.”* (குறள்.543)

*“ இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட*
*பெயலும் விளையுளுந் தொக்கு.”* (குறள்.545)

*“ ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்*
*காவலன் காவா னெனின்.”* (குறள்.560)

*“ உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்றா(து)*
*எழுவாரை யெல்லாம் பொறுத்து.”* (குறள்.1032)

*“ உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்*
*தொழுதுண்டு பின்செல் பவர்.”* (குறள்.1033)

> ***"இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது***
> ***கைசெய்தூண் மாலை யவர்."*** (குறள்.1035)

> ***"ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்(கு)***
> ***இரவி னிளிவந்த தில்."*** (குறள்.1066)

## நக்கீரர் தமிழ்ப் பெருமை காப்பு

*(கி.பி. 2ஆம் நூற்றாண்டு)*

> ***"ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த***
> ***காரியத்தாற் காலக்கோட் பட்டானைச் – சீரிய***
> ***அந்தண் பொதியி லகத்தியனா ராணையாற்***
> ***செந்தமிழே தீர்க்கசுவா கா."***

*நாற்பால்பற்றி ஔவையார் சோழனுக்குக் கூறியது*

*(தோரா. 12ஆம் நூற்.)*

> ***"நூலெனிலோ கோல்சாயும் நுந்தமரேல் வெஞ்சமராம்***
> ***கோலெனிலோ வாங்கே குடிசாயும் – நாலாவான்***
> ***மந்திரியு மாவான் வழிக்குத் துணையாவான்***
> ***அந்த வரசே யரசு"***

*தமிழிலக்கணச் சிறப்பை எடுத்துரைத்த முனிவர்*

> ***"கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து***
> ***பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமிழ் ஏனை***
> ***மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்***
> ***எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ."***

*என்று பாடினார், திருவிளையாடற் புராண ஆசிரியர் பரஞ்சோதி முனிவர் (16 ஆம் நூற்.).*

## தென்மொழியின் தாழ்வு நீக்கிய முனிவர்

> ***"இருமொழியும் நிகரென்னும் இதற்கையம் உளதேயோ"***

*என்று பாடி, வடமொழியையும் தென்மொழியையும் சமப்படுத்தியவர் சிவஞான முனிவர் (16 ஆம் நூற்.).*

### ஆங்கிலராட்சியும் அதன் நன்மைகளும்

*ஆங்கிலராட்சி, 18ஆம் நூற்றாண்டிடையில் தோன்றி, இவ் விருபதாம் நூற்றாண்டிடையில் நீங்கியது. அரசினர் அலுவலகங்களிலும், பெருஞ்சாலைகளிலும், பொதுவிடங்களிலும், புகைவண்டிகளிலும், மின்வண்டிகளிலும், உயர்கல்வி நிலையங்களிலும் வகுப்பு வேற்றுமை நீக்கப்பட்டது. ஆங்கிலக் கல்வி எல்லா வகுப்பார்க்கும் பொது வாயிற்று. எல்லாத் துறையிலும் பொய்யும் புரட்டும் கட்டுங் கதையுமான ஆரியத் தொல்கதை (புராண) முறைக் கல்வியின்றி,*

உண்மையும் அகக்கரண வாற்றலை வளர்ப்பதும் அறியாமையையும் அடிமைத்தனத்தையும் அறவே அகற்றுவதுமான அறிவியற் கல்வி புகட்டப்பட்டது. கல்வித் திறமைமிக்க அனைவர்க்கும் வகுப்பு வேற்றுமை யின்றிப் படிப்புதவி (Scholarship) யளிக்கப்பட்டது. இந்தியா முழுதும் படிப்படியாக ஒரு பேரரைய ஆட்சிக்குட் கொண்டுவரப் பட்டது. ஆங்கிலராட்சி யிருந்த இலங்கை காழகம் (பர்மா) மலையா தென்னாப்பிரிக்கா முதலிய பல வெளிநாடு களிலும், இந்தியர் குடியேறித் தமக்கேற்ற தொழிலும் அலுவலும் பெற்று ஏந்தாக வாழ்ந்தனர். ஆங்கில வரசு மதத்துறையில் தலை யிடவே யில்லை. குல மத கட்சி யின வேறுபாடின்றி, எளியார்க்கும் வலியார்க்கும் ஏழைகட்கும் செல்வர்க்கும் ஒரே நடுநிலை நயன்மை (நீதி) வழங்கப் பட்டது. இதனால், ஆங்கில ராட்சி நேர்மையையும், புதுச்சேரி காரைக்கால் தெரு நேர்மையையும் ஒருங்கு நோக்கி, “பிரிட்டிசு நீதியும் பிரெஞ்சு வீதியும்” என்று பழமொழியாக வழங்குமாறு, பொதுமக்கள் புகழ்ந்து பாராட்டினர். சமுதாய இன்ப வாழ்க்கைக்கும் மக்கள் முன்னேற்றத்திற்கும் முட்டுக்கட்டையா யிருந்த உடன்கட்டை யேறல், செடிற்குத்தல் (hook-swinging), குழந்தை மணம், நரக்காவு (human sacrifice) முதலிய குருட்டுப் பழக்க வழக்கங்களும்; தக்கர், பிண்டாரியர், தீவட்டிக் கொள்ளைக்காரர் முதலிய கொடிய கயவர் கூட்டங்களும் அறவே ஒழிக்கப்பட்டன. அருமையான அஞ்சல் துறையும், குறைந்த செலவில் விரைந்து வழிச்செல்லும் இருப்புப் பாதைகளும், அழகிய மாடமாளிகைகளும் மலைநகர்களும், இந்தியா வெங்கும் அமைந்தன. உயிருக்கும் பொருட்கும் சேதமின்றி அமைதியாக வாழுமாறு சிறந்த ஊர் காவலொழுங்கும், கலகமும் போருங் கனவிலுங் காணாவாறு மாபெரும் படையமைப்பும் ஏற்பட்டன. எல்லாத் திணைக்களங் களிலும் (departments), இந்தியர் தத்தம் கல்விக்கும் திறமைக்கும் தக்கவாறு பொறுப்பு வாய்ந்த பதவிகளில் அமர்த்தப்பெற்றனர். இந்தியா முழுதும் ஒன்றுபட்டு நாளடைவில் தன்னாட்சி பெறுமாறு இந்தியத் தேசியப் பேராயம் (Indian National Congress) கியூம் (Hume, Allen Octavian) என்னும் ஆங்கிலப் பெருமகனாரால் 1855-ல் தோற்று விக்கப்பெற்றது. அதன் பயனாக, பேராயத் தலைவர்கள், ஆங்கிலர் நேரடியாட்சி மண்டலங்களில் மட்டு மன்றி, எல்லா உள்நாட்டு மன்னர் நாடுகளுள்ளும் உரிமையொடும் பாதுகாப்பொடும் புகுந்து, விடுதலைப் போராட்டத்திற்கு விதைகளை வாரியிறைத்து வந்தனர். இறுதியில், 1947ஆம் ஆண்டு முழு வெற்றியும் பெற்றனர். தந்தை மகனிடத்திற் சொத்தையும், அரசன் இளவரசனிடத்தில் நாட்டையும், தகுந்த பருவத்தில் ஒப்படைப்பதுபோல், ஆங்கிலரும் பேராயத் தலைவரிடம் இந்தியாவை ஒப்படைத்துவிட்டு அமைதியாய் அகன்றனர். அதனாற் பிரெஞ்சியரும் போர்த்துக்கீசியரும் சற்றுப் பிந்தி இந்தியாவை விட்டு நீங்க நேர்ந்தது.

## ஆங்கிலர்க்கும் பிராமணர்க்கும் வேற்றுமை

| | ஆங்கிலர் | பிராமணர் |
|---|---|---|
| (1) | வாணிகத்திற்கு வேண்டும் பொருளொடும், பாதுகாப்பிற்கு வேண்டிய படையொடும், ஆட்சிக்கேற்ற அறிவொடும், வந்தனர். | கையுங் காலுமாக வந்தனர். |
| (2) | வெண்ணிறமாயிருந்தும், தம்மை மக்களென்றே கூறினர். | வெண்ணிறம் பொன்னிறமாயும் செந்நிறமாயும் கருநிறமாயும் மாறிய பின்னும், தாம் நிலத்தேவ ரென்றே கூறி யேமாற்றினர். |
| (3) | தம் மொழி மக்கள்மொழி யென்பதை மறைக்கவேயில்லை. | ஆங்கிலத்தொடு தொடர்புள்ளதாயிருந்தும், தம் முன்னோர் மொழியையும் இந்தியாவிற்புணர்த்த சமற்கிருதம் என்னும் இலக்கிய நடைமொழியையும் (literary dialect), இன்றும் தேவமொழி யென்றே துணிச்சலுடன் சொல்கின்றனர். |
| (4) | தாழ்த்தப்பட்ட தமிழருட் கடைப்பட்ட பறையரைத்தம்சமையற்காரராக்கி, அவர் ஆக்கியதையும் படைத்ததையும் பிராமணரும் விரும்பி யுண்ணும்படி செய்தனர். | தமிழருள் தலைமையானவராகக் கருதப்படும் மரக்கறி வெள்ளாளர், பொற்கலத்திற் கொடுக்கும் தண்ணீரும் குடிக்கத் தகாதது போல் நடிக்கின்றனர். |
| (5) | அகக்கரண வாற்றலை வளர்க்கும் உண்மையான அறிவியலைக் கற்பித்தனர். | தமிழரை அடிமடையராக்கி, அடிமைத்தனத்துள் ஆழ்த்தும் தொல்கதைக் கல்வியைப் புகட்டினர். |
| (6) | தமிழ் ஆரியத்திற்கும் சித்தியத்திற்கும் முந்தியதென்றும், மக்கள் முதன் மொழிக்கு நெருங்கியதென்றும், கூறினர் (கால்டுவெல்). | தமிழ் சமற்கிருதக் கிளையென்றும் பன்மொழிக் கலவை யென்றும் காட்டியுள்ளனர். (சென்னைப் ப.க.க. தமிழ் அகர முதலி) |
| (7) | குலம் தொழில்பற்றியதென்றும் மக்கள் படைப்பென்றும் கூறுகின்றனர். | குலம் பிறவிபற்றியதென்றும் இறைவன் படைப்பென்றும் அதை இறைவனே சொன்னானென்றும் கூறுகின்றனர். (பகவற் கீதை) |
| (8) | ஆங்கிலத்திலுள்ள அயற் சொற்களையெல்லாம் தாமே தெரிவிக்கின்றனர். | வடமொழியிலுள்ள தமிழ்ச் சொற்களெல்லாம் வடசொல்லே யென்று வலிக்கின்றனர். |
| (9) | கிறித்தவ மதம் உரோம நாட்டினின்று வந்து இலத்தீன் வாயி லாகப் புகுத்தப்பட்டும், தம் தாய்மொழியில் வழிபாட்டை நடத்துகின்றனர். | சிவனியமும் மாயோனியமும் முழுத்தூய தமிழ மதங்களா யிருந்தும், தமிழர் கோவில் வழிபாட்டையும் சடங்குகளையும் அவர்க்குத் தெரியாதவடமொழியிலேயே ஆற்றிவருகின்றனர். |

| | | |
|---|---|---|
| (10) | ஆட்சியினாலும் கல்வியினாலும் இந்தியா முழுவதையும் ஒற்றுமைப் படுத்தினர். | ஒரே பேரினத்தைப் பல சிற்றினமாகவும், ஒவ்வொரு சிற்றினத்தையும் பற்பல அகமணப் பிறவிக் குலங்களாகவும், சின்ன பின்னமாக்கிச் சிதைத்துள்ளனர். பிரித் தாட்சி முறையைப்பிராமணரைப்போற்கையாண்டவர், இவ்வுலகத்தில் வேறொரு வருமில்லை. |
| (11) | தமிழ் தூய்மையாகப் பேசப்படுவதையே விரும்புவர். | நூற்றிற்கு நூறும் வடசொற் கலந்து பேசப்படுவதையே விரும்புவர். |
| (12) | தம் திருமறை இறைவனால் ஏவப்பெற்ற முற்காணியரால் (தீர்க்கதரிசிகளால்) எழுதப்பட்டதென்பர். | ஐம்பூதச் சிறுதெய்வ வழுத்துகளும் ஆரிய வரலாற்றுத் துணுக்குகளுமான வேத மந்திரங்கள், இறைவனால் இயற்றப் படவில்லை யென்றும், முனிவராற் காணப் பட்டவையே யென்றும், பிதற்றுவர். |
| (13) | தாம்கண்டவற்றையும்செய்தவற்றையுமே தம் செயலாகக் கூறுவர். | அயலார் நாகரிகத்தையும், இலக்கியத்தை யும் தமவென்றே கூசாது பறையறைவர். |
| (14) | தம் வளமனைக்குள் நல்லார் எவரையும் தாராளமாகப் புகவிடுவர். | தம் இல்லத்திற்குள் பிராமணர் அல்லார் புகின் தீட்டெனக் கருதுவர். |
| (15) | தமக்கு உதவிய மொழிகளையும் அயலாரையும் நன்றியறிவோடு புகழ்வர். | தமக்கு வாழ்வளித்த தமிழையும் தமிழரையும், இழிந்தோர் மொழி (நீசபாஷை) யென்றும், சூத்திரர் என்றும் பழிப்பர். |
| (16) | தமிழ் நூல்களை அச்சிடின், உள்ளபடியே அச்சிடுவர். | பழந்தமிழ் நூல்களையும் பாடல்களையும் அச்சிடும்போது, தம் குல மேம்பாட்டிற்கேற்ற வாறு சொற்களை மாற்றியே அச்சிடுவர். |
| (17) | பிரித்தானியம் உடலைமட்டும் தாக்கி, ஆங்கிலனுடன் நீங்கிவிட்டது. | பிராமணியம் ஆதனையும் (ஆன்மாவையும்) அகக் கரணங்களையும் தாக்கி, உயிர் நீங்கிய பின்னும் தொடர்வதாயுள்ளது. |

*பிராமணர் தென்னாடு வந்து மூவாயிரம் ஆண்டாகியும், இன்னும் தமிழருடன் உறவாடாவிடினும் உடனுண்ணாவிடினும், ஒரு தெருவிற் குடியிருப்பதைக்கூட விரும்புவதில்லை. திருச்சிராப் பள்ளியில் தில்லை நகர் தோன்றுமுன், தென்னூரில் அமைந்த ஒரு பிராமணத் தெருவில், வழக்கறிஞர் வேதாசலம் பிள்ளை ஒரு மனை நிலம் வாங்காவாறு தடுக்கப்பட்டுவிட்டார்.*

## கிறித்தவ விடையூழியர் (Missionaries) தொண்டு

*இந் நூற்றாண்டுத் தொடக்கத்தில், முகவை மாவட்டத் திருவில்லிபுத்தூர் வட்டத் தென் எல்லையிலுள்ள சீயோன்மலை*

என்னும் திருக்குளிப்புத் (Baptist) திருச்சவை நிலையத்தில், மேனாடு துரையிருந்த காலத்தில், அருள்புத்தூரிலிருந்து வந்த தேவதாசன் என்னும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த கிறித்தவ ஆசிரியர், கல்பட்டியிற் பிராமண ஊராளி (கிராம முனிசீபு) யிருந்த தெரு வழியாக வந்தாரென்று, அவரேவலால் அடிக்கப்பட்டார். அதை அவர் மேனாடு துரையிடம் முறையிட்டார். உடனே துரை, வண்டி கட்டிக் கல்பட்டி சென்று, ஊராளி யில்லத்தை யடைந்தார். அவர் வருகை யறிந்த, ஊராளியார், வீட்டிற்குள் சென்று தலைவாயிற் கதவைச் சாத்தித் தாழிட்டுக்கொண்டார். துரை கதவைத் தட்டிவிட்டுத் தெருத் திண்ணையில் அமர்ந்தார். சிறிது நேரம் கழித்து, ஊராளியாரின் மனைவியார் கதவைத் திறந்து, ஊராளியார் ஊரிலில்லை யென்று சொல்லிவிட்டார். துரை நடந்ததைச் சொல்லி, ஒரு கிழமைக்குள் ஊராளியார் தம்மிடம் வந்து மன்னிப்புக் கேளாவிடின் அவர் வேலை போய்விடும் என்று சொல்லிவிட்டுத் திரும்பிவிட்டார். ஏழாம் நாள், ஊராளியார் தேவதாசன் ஆசிரியரை அழைத்துக்கொண்டு துரையிடம் வந்து மன்னிப்புக் கேட்டுச் சென்றார்.

குலவேற்றுமைக் கொடுமையினின்று தப்பவே, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பலர் முகமதியராயினர்.

## கால்டுவெலார் கண்ட வுண்மை

கால்டுவெலார் காலத்தில், தொல்காப்பியமும் கடைக்கழகப் பனுவல்களும் தலைமைத் தமிழ்ப் புலவர்க்குந் தெரியாது மறைந்து கிடந்தன. மறைமலையடிகள் போலும் தனித்தமிழ்ப் புலவரும் ஆராய்ச்சியாளரும் அக்காலத்தில்லை. இனவிழிப்புறுத்தப் பெரியா ரியக்கமும், இனத்தை முன்னேற்ற நயன்மைக் கட்சியாட்சியும், தமிழின் பெருமை யுணர்த்தச் சுந்தரம்பிள்ளையும் அன்றில்லை. குமரிநாடென்ற பெயரும் ஒருவரும் அறியார். எல்லாத் துறையிலும் தமிழர் ஆரியருக் கடிமைப்பட்டு ஊமையரா யிருந்த காலத்தில், கால்டுவெலார் வழிகாட்டுவாரின்றித் தாமே ஆராய்ந்ததனால், நெடுங்கணக்கும் எண்வேற்றுமையும் சமற்கிருதத்தினின்று வந்தவை யென்றும், உயரிய கலைகளும் அறிவியல்களும் ஆரியர் கண்டவை யென்றும், இலங்கைக் கப்பால் எத் தீவுந் தமிழர்க்குத் தெரியா தென்றும் தவறாகக் கூற நேர்ந்தது. ஆயினும் மொழித்துறையில் ஓர் உண்மையைத் தெளிவாகக் கண்டார். அது, தமிழ் ஆரியத்திற்கும் சித்தியத்திற்கும் முந்தியதும் மாந்தன் முதன்மொழிக்கு நெருக்க மானதுமாகும் என்பதே. இவ் வுண்மை விளங்கித் தோன்றிய சொற் றொகுதிகள், சுட்டுச் சொற்களும் மூவிடப் பெயர்களுமாகும்.

சுட்டெழுத்துகள் ஆ ஈ ஊ என மூன்றே. அவை பின்னர் அ இ உ எனக் குறுகின. இழைத்தல் மொழி (Articulate Speech) தோன்றுமுன்,

அஃதாவது எழுத்துஞ் சொல்லுஞ் சொற்றொடரும் ஆகிய மூவகை யுறுப்புகளைக் கொண்டதாக மொழி அமையுமுன், ஆ ஈ ஊ என்பன சுட்டொலிகளாகவே யிருந்து, பின்னர்ச் சுட்டெழுத்துகளாயின. எழுத்து நிலையிலும், உண்மையில் அவை ஒரெழுத்துச் சுட்டுச் சொற்களே. ஓரெழுத்தாயினும் பலவெழுத்தாயினும், பொருள் தருவனவெல்லாம் சொல்லேயாம்.

முதற்காலக் குமரிமாந்தர், இதழகற்றிச் சேய்மை சுட்டியும், இதழைப் பின்வாங்கி அண்மை சுட்டியும், இதழ்குவித்து இடைப் பட்ட முன்மை சுட்டியும் ஒலித்த ஒலிகளே, முறையே ஆ ஈ ஊ என்பனவாம். அவை சுட்டுச் சைகைகளோடு கூடியதனாலேயே, இன்றும் தவறாது மூவிடத்தையும் குறிக்கின்றன. ஆரியமக்கள் இதை யுணராமையால், அவர் வாயிற் சுட்டொலிகள் பலவாறு திரிந் துள்ளன. அதனால், அவர் மொழிகளிற் சுட்டுச் சொற்களே யன்றி, அவற்றிற்கு அடிமூலமான சுட்டெழுத்துகளில்லை. தமிழர் குமரிமாந்தரின் நேர்வழியினராதலால், முச்சுட்டொலிகளும் தமிழில் தம் இயல்பு மாறாதிருக்கின்றன.

முச்சுட்டொலிகளினின்றே மூவிடப் பெயர்கள் தோன்றி யுள்ளன. படர்க்கைச் சுட்டுப்பெயர் போன்றே, தன்மை முன்னிலைப் பெயர்களும் சுட்டுப்பெயர்களே யாம். தன்மையிலும் முன்னிலை யிலும் சுட்டுப் பெயரன்றி வேறின்மையால், தன்மைச் சுட்டுப் பெயரும் முன்னிலைச் சுட்டுப் பெயரும் தன்மைப் பெயரென்றும் முன்னிலைப் பெயரென்றும் சுருக்கிச் சொல்லப்படுகின்றன.

| **மூவிடச் சுட்டுப் பெயர்கள்** | | | **ஒருமை** | **பன்மை** |
|---|---|---|---|---|
| முதல் நிலை: | படர்க்கை | - | ஆன் | ஆம் |
| | தன்மை | - | ஈன் - ஏன் | ஈம் - ஏம் |
| | முன்னிலை | - | ஊன் | ஊம் |

**குறிப்பு** : ஒருமை குறிக்கும் னகரமெய் ஒன் (ஒன்று) என்பதன் முதற்குறையும், பன்மை குறிக்கும் மகரமெய் உம் என்பதன் முதற்குறையும் ஆகும். உம்முதல் கூடுதல்.

| | | | | |
|---|---|---|---|---|
| 2 ஆம் நிலை: | படர்க்கை | - | தான் | தாம் |
| | தன்மை | - | யான் | யாம் |
| | முன்னிலை | - | நூன் | நூம் |
| 3 ஆம் நிலை: | படர்க்கை | - | அவன் | |
| | | | அவள் | அவர் |
| | | | அது | அவை |
| | தன்மை | - | நான் | நாம் |
| | முன்னிலை | - | நீன் | நீம் |

*குறிப்பு: அவன் அவள் முதலிய ஐம்பாற் படர்க்கைச் சுட்டுப் பெயர்கள் தோன்றியபின், தான் தாம் என்பன படர்க்கைத் தற்சுட்டுப் பெயர்கள்* (Reflexive Pronouns) *ஆயின.*

*தன்மைப் பன்மைப் பெயரின் இரு வடிவுகளுள், யாம் என்பது தனித்தன்மைப் பெயரும், நாம் என்பது உளப்பாட்டுத் தன்மைப் பெயரும் ஆயின.*

*நீன் என்பது நீ என்று ஈறு குன்றி வழங்கி, 'இர்' ஈறு சேர்ந்து நீயிர் - நீவிர் - நீர் என்னும் பன்மை வடிவுகளையும் தோற்றுவித்தது.*

*நகரம் மகரமாகத் திரியும்:*

*எ-டு: நாம்-மனமு (தெ.),*
*தென்பு - தெம்பு.*

*மகரம் வகரமாகத் திரியும்:*

*எ-டு: அம்மை-அவ்வை, குமி-குவி.*

*நகரம் தகரமாகத் திரிவதுமுண்டு.*

*எ-டு: நுனி-நுதி. நேரம்-தேரம்(நாட்டுப்புற வழக்கு).*
*தேரம் - தேர் (இந்தி).*

*நீங்கள் என்பது மலையாளத்தில் நிங்ஙள் என்று குறுகியது போல், நூன் என்பது நுன் என்றும் நூம் என்பது நும் என்றும் குறுகும்.*

*நூன் - நுன் - துன் - து (இந்தி).*

*நூம்-நும்-தும் (இந்தி).*

*நான் நாம் என்னும் தன்மைப் பெயர்களின் முந்திய வடிவம் யான் யாம் என்றிருப்பது போல், நூன் நூம் என்னும் முன்னிலைப் பெயர்களின் முந்திய வடிவமும் யூன் யூம் என்றிருந்தன.*

*தகரம் சகரமாகத் திரிவது பெரும்பான்மை. எ-டு: மதி-மசி, மாதம்-மாஸ (வ.).*

| **தமிழ்** | **பிராகிருதம்** | **சமற்கிருதம்** | **தியூத்தானியம்** | **இலத்தீன்** | **கிரேக்கம்** |
|---|---|---|---|---|---|
| நான் | மைன் | அஹம் | இக் | எகொ | எகோ |
| நாம் | ஹம் | வயம் | வீ | நோஸ் | ஹெமெயிஸ் |
| நூன் | து | த்வம் | தௌ | தௌ | ஸு |
| நூம் | தும் | யூயம் | யூ | வோஸ் | ஹுமெயிஸ் |

*மேற்காட்டிய திரிபுகளை யெல்லாம் உளத்திற் கொண்டு ஒப்பு நோக்கின், தன்மை முன்னிலைத் தமிழ்ப் பெயர்கள் பிராகிருதம் முதலிய ஐம்மொழிகளில் எங்ஙனந் திரிந்துள்ளன என்பது விளங்கும்.*

படர்க்கைப் பெயர்களின் திரிபு, A Guide to Western Tamilologists என்னும் நூலில் விளக்கப் பெறும். பாலிலிருந்தே நெய் தோன்றினும், உருக்கின நெய் பாலினின்று எத்துணை வேறுபட்டுத் தோன்றுகின்றதோ, அத்துணை கிரேக்கச் சொல்லும் தமிழ்ச்சொல்லினின்று வேறு பட்டுத் தோன்றும் என அறிக. ஆரிய மொழிகளிலுள்ள எல்லாச் சுட்டு வினாச்சொற்களும் தமிழடியின என்பதையும் அறிதல் வேண்டும்.

நோஸ் வோஸ் என்னும் வடிவுகளின் ஈற்றை, மனம்-மனஸ் (வ.) என்னும் திரிபொடு ஒப்புநோக்குக.

**“ அன்றியுந் தமிழ்நூற் களவிலை யவற்றுள்**
**ஒன்றே யாயினுந் தனித்தமி ழுண்டோ?”**

என்று வினவின சாமிநாத தேசிகர், இன்றிருப்பின்,

**அன்றியும் வடநூற் களவிலை யவற்றுள்**
**ஒன்றே னுந்தனி வடமொழி யுண்டோ?**

என்று மாற்றியே பாடுவர்.

## தமிழன் பள்ளியெழுச்சிப் பாடகர் - சுந்தரம் பிள்ளை

## மனோன்மணீயத் தமிழ்த்தெய்வ வணக்கம்

**“ நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்**
**சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்**
**தக்கசிறு பிறைநுதலுந் தரித்தநறுந் திலகமுமே**
**தெக்கணமு மதிற்சிறந்த திரவிடநற் றிருநாடும்**
**அத்திலக வாசனைபோ லனைத்துலகு மின்பமுற**
**எத்திசையும் புகழ்மணக்க விருந்தபெருந் தமிழணங்கே.**

**பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்**
**எல்லையறு பரம்பொருள்முன் னிருந்தபடி யிருப்பதுபோல்**
**கன்னடமுங் களிதெலுங்குங் கவின்மலையா ளமுந்துளுவும்**
**உன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபல வாயிடினும்**
**ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்**
**சீரிளமைத் திறம்வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே.**

**சதுமறையா ரியம்வருமுன் சகமுழுது நினதாயின்**
**முதுமொழிநீ யநாதியென மொழிகுவதும் வியப்பாமே.**

**பத்துப்பாட் டாதிமனம் பற்றினார் பற்றுவரோ**
**எத்துணையும் பொருட்கிசையு மிலக்கணமில் கற்பனையே.**

**வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்**
**உள்ளுவரோ மனுவாதி யொருகுலத்துக் கொருநீதி.**

**மனங்கரைத்து மலங்கெடுக்கும் வாசகத்தில் மாண்டோர்கள்**
**கனஞ்சடையென் றுருவேற்றிக் கண்மூடிக் கதறுவரோ.”**

*சென்ற நூற்றாண்டிறுதியில், சித்தூர் மார்க்கசகாய ஆச்சாரியர், பஞ்சாங்கங் குண்டையனொடு போராடி வென்று, பிராமணனின்றித் திருமணம் நடத்தி, கம்மாளர்க்கு விசுவப் பிராமணர் என்னும் பட்டமும் நாட்டிவைத்தார்.*

*ஆங்கில ஆட்சியின் விளைவாகவும் ஆங்கிலக் கல்வியின் பயனாகவும், திரவிடர் கண் விரிவாகத் திறக்கப்பட்டு, நயன்மைக் கட்சி தோன்றி, 1920-லிருந்து 1937 இடைவரை இரட்டையாட்சியைத்* (Diarchy) *திறம்பட நடத்தி, தமிழரையும் திரவிடரையும் முன்னேற் றியது. அதனால், வகுப்புவாரிச் சுழல்பதவிகளும், குலத்தொகை விழுக்காட்டு அலுவற்பேறும், பிற்பட்டோர்க்குப் பலவகைச் சலுகை களும் ஏற்பட்டன. பேராய ஆட்சியிலும், தமிழ்நாட்டில் மட்டுமன்றி மலையாள தெலுங்கு கன்னட நாடுகளிலும் பிராமணரல்லார் முதலமைச்சராக வரவும், தமிழ்நாட்டிற் பிராமணரில்லா அமைச்சுக் குழு ஏற்படவும் முடிந்தது.*

*கல்வித் தொழில் பிராமணர்க்கே யுரியதென்னுங் கொள்கைக்கு மாறாக, ஆங்கிலர் எல்லா வகுப்பார்க்கும் அதைப் பொதுவாக்கித் தமிழரைப் பிராமணர்க்குச் சமமாக்கினதனால், தம் மேம்பாடும் பிழைப்பும் குன்றுவது கண்டு, ஏற்கெனவே ஆங்கிலராட்சியில் வெறுப்புற்றிருந்த பிராமணர், நூற்றிற்கு மூவராயுள்ள பிராமணர்க்கு அரசியல் அலுவற்பேறு நூற்றிற்கு மூன்றேயென்று நயன்மைக் கட்சி யாட்சி திட்டஞ் செய்தபின், கிளர்ந்தெழுந்து ஒன்றுகூடிச் சூழ்ந்து, ஆங்கில அரசை அடியோடொழித்தா லொழியத் தமக்கு உயர்வாழ் வில்லை யென்றறிந்து, மும்மொழிக் கூட்டு நாடாயிருந்த சென்னை மண்டலத்தில், தமிழருள்ளும் திரவிடருள்ளும் இளைஞரையும் தன்னலக்காரரையும் தமிழின் பெருமையை அறியாதவரையும் துணைக்கொண்டு, தேசியக் கட்சியைத் தோற்றுவித்து, வெள்ளைக் காரன் கொள்ளைக்காரன் என்றும், அவனை அகற்றிவிட்டால் விண்ணுலக வாழ்வு வந்துவிடு மென்றும்,* **நயன்மைக் கட்சி** *அயலானுக்கு நாட்டைக் காட்டிக் கொடுக்கின்றதென்றும் பொதுமக்களிடம் சென்று புகட்டலாயினர்.*

*நூற்றிற்குத் தொண்ணூற்றுவர் கல்லாதவராயும் ஏழைகளாயும் இருந்ததனால், அடிமே லடியடித்தால் அம்மியும் நகர்வதுபோல், நாளடைவிற் பொதுமக்கள் தேசியக் கட்சித் தொண்டர்க்குச் செவி சாய்த்தனர்.*

நயன்மைக் கட்சி யமைச்சர், எறும்புக்கடி போன்ற பிரித்தானியத்தினும் பாம்புக்கடி போன்ற பிராமணியம் கொடிதென்றும், ஆங்கிலர் ஒருகாலும் இந்தியாவினின்று நீங்கா ரென்றும் கருதினதனால், ஆங்கிலராட்சிக்கு மாறாகப் பேசினவரையும் ஒழுகினவரையும் தடியடி யடித்தும் சிறையிலிட்டும் துன்புறுத்தினர். இது பொது மக்கட்கு நேரிற் சொல்லப்பட்டபோது அவர்க்குச் சினம் மூண்டது. அதனால் தேசியக் கட்சி விரைந்து வளர்ந்தது. இறுதியில், பிரா மணரல்லாத காந்தியடிகள் முனிவர் கோலம் பூண்டு, தாழ்த்தப் பட்டவரை யணைத்துப் பொதுமக்களொடு தொடர்பு கொண்ட பின், வெற்றி கிட்டிற்று; விடுதலையும் கிடைத்தது. விடுதலைப்பற்றும் நாட்டுமொழி யறிவும் பொதுமக்கள் தொடர்பும் இன்மையால், நயன்மைக் கட்சித் தலைவர் 1937ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலிற் படுதோல்வி யடைந்தனர். பேராயம் ஆட்சியைக் கைப்பற்றியது.

## தனித்தமிழ் முன்னோடியர் இருவர்

நாட்டுப்பற்றிற்கு உயிர் மொழிப்பற்று. முன்னது எல்லார் வாயிலாகவும் வெளிப்படும்; பின்னது புலவர் வாயிலாக மட்டுமே வெளிப்படும்.

இந் நூற்றாண்டுத் தொடக்கத்தில், **சூரிய நாராயண சாத்திரியார்** தம் பெயரைப் **பரிதிமாற் கலைஞன்** என்று மாற்றி, மறுமலர்ச்சித் தனித்தமிழ்த் தொண்டைத் தொடங்கிவைத்தார்.

**பாம்பன் குமர குருதாச அடிகள்**, சேந்தன் செந்தமிழ் என்னும் ஐம்பான் வெண்பாத் தனித்தமிழ் நூலியற்றி, நூற்றுக்கணக்கான வடசொற்கட்கு நேர்த் தென்சொற்களும் மொழிபெயர்த்தும், ஆக்கியும் வைத்தார்.

## தனிப்பெருந் தமிழ் மீட்பர் மறைமலையடிகள்

கல்விக் கடல்; தமிழ் ஆங்கிலம் சமற்கிருதம் ஆகிய மும்மொழி வல்லுநர்; மருத்துவம், கருநூல் (Embryology), தொலைவுணர்வு (Telepathy), மனவசியம் (Mesmerism), அறிதுயில் (Hypnotism) முதலிய பல்கலை யறிஞர்; நூலாசிரியர், நுவலாசிரியர், உரையாசிரியர், இதழாசிரியர், பதிப்பாசிரியர், ஆய்வாசிரியர் ஆகிய பல்வகை யாசிரியர்; அடக்க மும் அஞ்சாமையும் உண்மை யொப்புக்கொள்வும் குலமத வேற்றுமை யின்மையும் கொள்கைக் கடைப்பிடிப்பும் கொண்ட பண்பாட் டாளர்; நாட்டிற்கும் மொழிக்குமன்றித் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்; மாபெருந் தமிழ்ப் புலவரும் தமிழ்ப் பேராசிரியரும் தமிழுக்கும் வடமொழிக்கும் வேறுபாடு தெரியாது, நூற்றிற் கெண்பது விழுக்காடு வடசொற் கலந்து தமிழைப் பேசியும் எழுதியும் பாடியும் வந்த காலத்தில், தமிழ்ப்பயிர் அயற்சொற்களால் நெருக்குண்டு அடியோடழிந்து போகவிருந்த நிலையில், 1916ஆம் ஆண்டிலிருந்து வடசொற்களை அறவே களைந்து, தூய தீந்தமிழில், உரைநடையும் செய்யுளுமாகிய இருவகை வடிவிலும், அறிவியல்,

*சமயம், வரலாறு, ஆராய்ச்சி, திருமுகம், உரை, மொழிபெயர்ப்பு முதலிய பல துறையிலும், ஐம்பான் அருநூல்களை வெளியிட்டு, தமிழில் எந்நூலையும் இயற்றவும் மொழிபெயர்க்கவும் இயலும் என்பதைக் காட்டி, தமிழ் வரலாற்றின் மூன்றாங் காலமாகிய மறுமலர்ச்சித் தனித்தமிழ் ஊழியைத் தொடங்கி வைத்தவர்; முதன் முதல் தனித்தமிழ்த் திருமணஞ் செய்து வைத்தவர்;* Can Hindi be the Lingua Franca of India? *(இந்தி இந்தியப் பொதுமொழியா யிருக்க இயலுமா?) என்னும் ஆங்கிலச் சிறுநூலில், அறிவியன் முறையிலும் ஏரண முறையிலும் கட்டாய இந்திக் கல்வியை வன்மையாகக் கண்டித்தவர்; இறுதிவரை எழுத்தாலும் சொற்பொழிவாலும் அருந்தமிழ்த் தொண்டாற்றியவர்; இன்றும் இனி என்றும் ஈடிணை யற்றவர்; பல்லவபுரம் பொதுநிலைக் கழகத் தலைவர்* **மறைமலை யடிகள்.**

***மறைமலை யென்னும் மறையா மலையின்***
***நிறைநிலை வாரத்தே நிற்க – இறையும்***
***தமிழன் வடமொழித்தீத் தாழ்வின்றி வாழ***
***இமிழுங் கடல்சூழ் இகம்.***

## பெரியார் அருஞ்செயல்

*நயன்மைக் கட்சித் தலைவர், பொதுத் தேர்தலில் தோல்வி யடைந்தபின், இருக்குமிடந் தெரியாது ஓடி ஆங்காங்குப் பதுங்கிக் கொண்டனர். அன்று பெரியார் ஒருவரே திரவிட-ஆரியப் போர்க் களத்திற் புகுந்து உடைபடை தாங்கி இடைவிடாது போராடி, கல்லாப் பொதுமக்கள் கண்ணைத் திறந்து கற்றோர்க்குந் தன்மான வுணர்ச்சியூட்டி, பிராமணியத்தைத் தலைதூக்கவொண்ணா தடித்து வீழ்த்தி, ஆச்சாரியார் புகுத்திய இந்தியை எதிர்த்துச் சிறைத்துன்பத் திற் காளாகி, கணக்கற்ற சீர்திருத்தத் திருமணங்களை நடத்திவைத் தும், பகுத்தறி வியக்கத்தைத் தோற்றுவித்தும், மூடப் பழக்கவழக்கங் களை யொழித்தும்,*

***“ இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்***
***குற்ற மறைப்பான் உடம்பு.”*** (குறள்.1029)

***“ செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்***
***செயற்கரிய செய்கலா தார்”*** (குறள்.26)

*என்னுங் குறள்கட் கிலக்கியமானார்.*

## திரு.வி.கலியாணசுந்தர முதலியார் பொதுநலத் தொண்டு

*பெண்ணின் பெருமை, தொழிலாளர் உரிமை, சமயப் பொது நோக்கு, காதற் சிறப்பு முதலிய உண்மைகளையும் உரிமைகளையும் பண்புகளையும் நாட்டி, பல தமிழ்த் திருமணங்களை நடத்தி வைத்தவர்* **திரு.வி.க.**

## இரு தமிழ்ப் போராடியர்

உலக மொழிகளுள் ஒலிப்பு முயற்சி குன்றியது தமிழே யென்றும், அதன் நெடுங்கணக்கு முழு நிறைவானதென்றும், மேலை யாரிய மொழிகளும் தமிழினின்று கடன் கொண்டுள்ளன வென்றும், நாடு முழுதும் மேடையேறிப் பறைசாற்றிய **பா.வே.மாணிக்க நாயகரும்**; தமிழ்ப் பற்று, ஆரியத்தினின்று விடுதலை, தமிழ் வாழ்வு, குடும்ப நலம், கண்மூடிச் சடங்கொழிப்பு முதலியன பற்றி, எளிய இனிய மறப்பாடல்கள் ஏராளமாகப் பாடி நாட்டைத் திருத்திய புரட்சிப் பாவலர் **பாரதிதாசனும்** இரு தமிழ்ப் போராடிய ராவர்.

## இந்தி யெதிர்ப்புத் தலைவர் இருவர்

மறைமலையடிகளும் பெரியாரும் தத்தம் நிலையில் நின்று இந்திக் கட்டாயத்தை எதிர்த்து நிற்க, இயன்றபோதெல்லாம் நாடு முழுதும் பொதுக் கூட்டங்களும் மாநாடுகளும் கூட்டி, இடை விடாது இந்தியை வன்மையா யெதிர்த்த தறுகட்படைத் தலைவர் இருவர், பேரா. **சோமசுந்தர பாரதியாரும்** தமிழகப் புலவர் குழு அமைப்பாளர் **கி.ஆ.பெ. விசுவநாதமும்** ஆவர்.

## புலவர் பொறை குறைத்த பேராசிரியர்

ஆரியச் சூழ்ச்சியால், தமிழ்ப் புலவர் தேர்விற்குப் பாடமாக வைக்கப்பட்டிருந்த சமற்கிருதப் பகுதியைப் பெருமுயற்சி செய்து நீக்கியவர் பேரா. கா. நமச்சிவாய முதலியார்.

## பல்துறைத் தமிழ்த் தொண்டர்

தாமோதரம் பிள்ளை, பர்.உ.வே. சாமிநாதையர், பாலவநத்தம் வேள் பாண்டித்துரைத் தேவர், மு.சி. பூரணலிங்கம் பிள்ளை, ச. பவா னந்தம் பிள்ளை, த.வே.உமாமகேசுவரம் பிள்ளை, பன்னீர்ச்செல்வம், கா. சுப்பிரமணியப் பிள்ளை, மன்னார்குடிச் சோமசுந்தரம் பிள்ளை, நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், வ.திருவரங்கம் பிள்ளை, அண்ணாமலை யரசர், பண்டிதமணி கதிரேசச்செட்டியார், க.ப.மகிழ்நன் (சந்தோஷம்), துடிசைகிழார் அ.சிதம்பரனார், அம்பத்தூர்த் தலைமையாசிரியர் (M.) சோமசுந்தரம் பிள்ளை முதலிய பல்பேரறிஞர், தத்தம் துறையில் தத்தமக் கியன்றவாறு தமிழ்த் தொண்டு செய்தவராவர்.

## வரலாற்று நூல் தொண்டர் மூவர்

சேசையங்கார், (P.T.) சீநிவாச ஐயங்கார், (V.R.) இராமச்சந்திர தீட்சிதர் ஆகிய மூவரும், தம் வரலாற்று நூலால் தமிழின் பெருமையைக் காத்தவராவர்.

*கணியர் இ.மு.சுப்பிரமணியப் பிள்ளை, தலைமையாசிரியர் சாமி வேலாயுதம் பிள்ளையொடு கூடிக்* ***கலைச்சொற்கள்*** *ஆக்குவித்தும், பின்னர்* ***ஆட்சிச்சொல் அகரவரிசை*** *தொகுப்பித்தும், தமிழாட்சி நடைபெறத்தக்க தொண்டு செய்தவராவர்.*

## இசைத் தமிழாராய்ச்சித் தொண்டர்

*தஞ்சை ஆபிரகாம் பண்டிதர், அவர் மகனார் வரகுண பாண்டியன், மதுரைப் பொன்னுச்சாமிப் பிள்ளை முதலியோர், இசைத் தமிழாராய்ச்சியால் தமிழிசையின் பெருமையையும் முதன்மையையும் நாட்டியவராவர்.*

## நடிப்புத்துறைத் தொண்டர்

*இன்னிசை நடிகர் தியாகராசப் பாடகரும் நகைச்சுவை நடிகர்* (N.S.) *கிருட்டிணனும், நடிப்புத் துறையில் தமிழன் பெருமையையும் தமிழ்ப் பண்பாட்டையும் காத்தவராவர்.*

## தமிழ் வளர்த்த தனிப்பெரு முதல்வர் இராமசாமிக் கவுண்டர்

*1925-ற்கும் 1950-ற்கும் இடைப்பட்ட காலத்தில், தமிழ்நாட்டிற் கல்லூரி முதல்வராயிருந்த தமிழர் அனைவருள்ளும், வயிறு வளர்க்காது தமிழ் வளர்த்த தனிப்பெரு முதல்வர் அ.இராமசாமிக் கவுண்டர். கணிதப் பேராசிரியரா யிருந்தும் பெருங் கல்லூரிக்குச் சென்று பெருஞ்சம்பளம் பெறாது சேலத்திலேயே நிலைத்திருந்து, பண்பட்ட தமிழரையே பாடத்துறைத் தலைமையாசிரியராக அமர்த்தியும், பிற கல்லூரிகளில் இடம்பெறாத ஏழை மாணவர்க் கெல்லாம் இடந் தந்தும், திருக்குறட் கழகம் நிறுவி வகுப்பு நடத்தியும், திருக்குறட்கு உரை வரைந்தும், பெரியார்க்குத் துணை நின்றும், கல்லூரிகளிலும் மன்றங்களிலும் சொற்பொழிவாற்றியும், சாத்திரியார் கலைச்சொற் குழுவிலிருந்து பணிபுரிந்தும், எனக்கு வேண்டிய ஏந்துகளை யெல்லாஞ் செய்து என் மொழியாராய்ச்சியை முற்றுவித்தும், தம் துணையாசிரியர் சிலரைப் பிற கல்லூரி முதல்வராக்கியும், விருந்தோம்பி வேளாண்மை செய்து இறுதிவரை தமிழ் வாழ்வு வாழ்ந்தும், இறவாப் புகழ் பெற்றவர் சேலம் நகராட்சிக் கல்லூரி முதல்வர் இராமசாமிக் கவுண்டர்.*

## தமிழரை முன்னேற்றிய நகராட்சித் தலைவர் இரத்தினசாமிப் பிள்ளை

*இரண்டாந்தரமாயிருந்த சேலம் நகராட்சிக் கல்லூரியை முதற்றரமாக்கியும், ஆரியத்தை யெதிர்த்தும், இராமசாமிக் கவுண்டரை யூக்கியும், மறைமலையடிகளைப் போற்றியும், தமிழிசை மன்றம் நிறுவியும், தமிழையும் தமிழரையும் முன்னேற்றியவர், சேலம்*

நகராட்சித் தலைவர் அராவ அண்ணல் (இராவ்சாகிபு) இரத்தின சாமிப் பிள்ளை.

## பேராய வீழ்ச்சியும் தி.மு.க. ஆட்சியும்

நாட்டு விடுதலைக் கொள்கை யின்மையால் **நயன்மைக் கட்சி** தோல்வியுற்றது. நாட்டுமொழிப் பற்றின்மையால் **பேராயக் கட்சி** வீழ்ந்தது. திராவிடர் முன்னேற்றக் கழகம் 1967-இல் தமிழ்நாட்டு ஆட்சியைக் கைப்பற்றியது. அதன் தலைவர் அண்ணாதுரையார் சென்னை நாடென் றிருந்ததைத் தமிழ்நாடு என மாற்றினார்; சீர்திருத்தத் திருமணத்தையும் தமிழ்த் திருமணத்தையும் சட்ட முறைப்படி செல்லுபடியாக்கினார்; கோவை மாணவர் கிளர்ச்சி செய்த பின், சட்டப் பேரவையில் இந்தி விலக்குத் தீர்மானத்தை நிறை வேற்றினார்.

## தமிழ்நாட்டிற்குத் தகுந்த கட்சி தி.மு.க.வே

தமிழ்நாட்டிற் பல அரசியற் கட்சிகளிருப்பினும், நிலையாக இருந்து ஆளத்தக்கது தி.மு.க.வே.

பேராயம் இந்தியை ஏற்றுத் தமிழ்நாட்டிற்குக் கேடு செய்தது. ஆங்கிலேயன் தமிழர்க்கு மீட்பனாக வன்றி அடிமைப்படுத்தியாக வரவில்லை. அவன் வந்த நிலையில், தமிழன் நாயும் கழுதையும் பன்றியும்போல் பிராமணனின் எச்சிலுண்டியைத் தின்றுகொண் டிருந்தான். அஃறிணை போலிருந்த தமிழனைப் படிக்க வைத்துத் தன்மானமூட்டி மீண்டும் உயர்திணைப்படுத்தினவன் ஆங்கிலேயனே. அவன் வந்திராவிடின், இந்தியா முழுதும் ஒருபோதும் ஓராட்சிக்குட் பட்டிராது. இரசியா கைப்பற்றியிருப்பின் விடு தலையே பெற்றிருக்க முடியாது. கிழக்கிந்தியக் குழும்பாட்சியில்தான் ஊழலிருந்தது. இங்கிலாந் தரசு இந்திய ஆட்சியை மேற்கொண்டதி லிருந்து மேன்மேலும் சீர்திருத்தம் நிகழ்ந்துகொண்டே வந்தது. இறுதியில், இந்தியரைத் தம்மாட்சிக்குத் தகுதிப்படுத்திய பின் தானே நீங்குவதற் கிருந்தான் ஆங்கிலேயன். பேராயந்தான் அவனை முந்தித் துரத்தியது. அதனால் இந்தியா அடைந்த பொருளிழப்பும் ஆளிழப் பும் அமைதிக் குலைவும் கொஞ்சநஞ்சமல்ல. பேராயம் நயன்மைக் கட்சிக்கு மாறாகவே பிராமணரால் தமிழ்நாட்டிற் புகுத்தப்பட்டது. அதைத் தோற்றுவித்த பிராமணர் இவ் வுலகினின்றோ அக் கட்சியினின்றோ நீங்கிவிட்டனர். அடிமைத்தனமும் தன்னலமுங் கொண்ட தமிழரே அதில் இன்னும் ஒட்டிக்கொண்டிருக்கின்றனர். பெருநன்மை செய்த ஆங்கிலேயனைப் பெருந்தீங்கு செய்தவனாகக் கூறுவது, கழுவாயில்லா வழுவாயாகும்.

***“ எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை***
***செய்ந்நன்றி கொன்ற மகற்கு.”*** (குறள்.120)

இக் குற்றம் பேராயத்திற் சேர்ந்துள்ள தாழ்த்தப்பட்ட வகுப் பார்க்கோ பன்மடங்கு பெரிதாகும்.

ஆங்கில வரசு பல்கலைக்கழகக் கல்வி நிலையங்களில்தான், தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்க்கு இடந்தர முடிந்தது. மேல்வகுப் பார் நடத்தும் உயர்நிலைப் பள்ளிகளிலும், தொடக்கப் பள்ளி களிலும், கீழ் வகுப்பாரும் இடம்பெறச் செய்தது நயன்மைக் கட்சி யாட்சியே. அதன் பின்னரே, காந்தியடிகளின் முயற்சியால், பேராயமும் நயன்மைக் கட்சியைப் பின்பற்றியது. ஆயினும், குலங்களின் பிறவித் தொடர்பைக் காந்தியடிகள் நீக்க இயலவில்லை.

பேராயத் தமிழத் தலைவர் செய்த நன்மையெல்லாம், மனுதரும முறைப்படி பிள்ளைகள் பெற்றோர் தொழிலை மேற்கொள்ள வேண்டு மென்று ஆச்சாரியார் புகுத்த விருந்த தொடக்கக் கல்வித் திட்டத்தைத் திரு. காமராசர் தடுத்ததும்; திருவையாற்று அரசர் கல்லூரி விடுதியில், பிராமணன் சமைத்த வுண்டியைப் பிராமண மாணவர்க்குத் தனியிடத்திற் படைத்து வந்த வழக்கத்தை, தஞ்சை நாட்டாண்மைக் கழகத் தலைவர் நாடிமுத்துப்பிள்ளை நிறுத்தி யதுமே. இவை நயன்மைக் கட்சி யாட்சியிலும் நடந்திருக்கும் என்பதைச் சொல்லவேண்டுவதே யில்லை.

ஆங்கிலேயர் வந்திராவிடின், ஒரேயொரு வையாபுரி தவிர மற்றெல்லா அமைச்சரும் பிராமணரா யிருந்திருக்கக்கூடிய நிலைமை, இன்றில்லையே என்றெண்ணித்தான், அக் குலத்தார், நயன்மைக் கட்சியையும், அதன் கான்முளையாகிய தி.மு.க.வையும், காட்டிக் கொடுக்கும் கூட்ட வகையார் (Quisling variety) என்று பழிக்கின்றனர். இத்தகைய குற்றச்சாட்டு, நாட்டு மக்கள் வாயினின்று வரத்தக்கதே யன்றி, நாட்டைக் கெடுக்கும் வந்தேறிகள் வாயினின்று வரத்தக்க தன்று.

தி.மு.க. பொதுவுடைமைக் கொள்கையைப் படிப்படியாகத் தழுவுவதால், பொதுவுடைமைக் கட்சி இனிப் பிரிந்து நிற்கவேண்டுவ தில்லை.

## தமிழ்நாடு இன்னும் விடுதலை பெறவில்லை

வெள்ளைக்காரனை விரட்டிவிட்டோ மென்றும், நாட்டிற்கு விடுதலை வாங்கித் தந்தோமென்றும், பேராயத்தார் நாக்கடிப்பாக வாய்ப்பறை யறைந்துவரினும், ஆங்கிலன் நீங்கிக் கால் நூற்றாண்டான பின்னும், தமிழ்நாடு விடுதலை பெறவில்லை.

சமற்கிருதத்திற்கும் தமிழுக்கும் இடைப்பட்ட நிலைமை, தாக்குவோனுக்கும் தற்காப்போனுக்கும் இடைப்பட்ட தொத்ததே. தமிழன் தாழ்வு பிராமணன் உயர்வு என்ற முறையிலேயே தமிழின்

தாழ்வு சமற்கிருத வுயர்வு என்னும் நிலைமையுள்ளது. தாக்கு வோனைத் தாக்காது தற்காப்போன் விடுதலை பெற முடியாது. பிராமணர் இக்காலத்தில் தம்மை நிலத்தேவர் என்று சொல்ல முடியாதாகையால், சமற்கிருதம் தேவமொழியென்று சொல்லித் தம் மேம்பாட்டை நிலைநிறுத்த முயல்கின்றனர். கோவில் வழிபாடும் இருவகைச் சடங்குகளும் தமிழில் நடைபெற்றாலொழிய, தமிழ் விடுதலை யடைந்து தன் பழம்பெருமையை மீளப் பெறமுடியாது. தமிழுயர்ந்தால்தான் தமிழன் உயர்வான்.

## இன்று பிராமணியத்தை நடத்தி வருபவர் தமிழரே

பண்டை நாளில், பிராமணர் தம் வெண்ணிறத்தாலும் வேதமந்திர வெடிப்பொலியாலும் வேறு வழியாலும் மூவேந்தரையும் வயப்படுத்தி, அவர் வாயிலாகத் தம் கொள்கையைப் பொதுமக்களி டம் வலிந்து புகுத்தினர். இக்காலத்தில், சில கட்சித் தலைவரையும் சில செல்வரையும் வையாபுரிகளையும் துணைக்கொண்டு, தம் கருமத்தை முடிக்கப் பார்க்கின்றனர்.

ஆயினும், அவருள்ளும் ஒள்ளிய மனமும் தெள்ளிய அறிவு முடையார் உளர். தமிழரெல்லாரும் நல்லவ ரல்லர்; பிராமண ரெல்லாரும் தீயவரல்லர். திருவதங்கோட்டில் (Travancore) தீண்டாதார்க்கு முதன் முதல் திருக்கோவில்களைத் திறந்துவிட்டவர் (C.P.) இராமசாமி ஐயரே. வரலாற்று நூல் தமிழ்த் தொண்டருள் தலைசிறந்த மூவர் பிராமணரே.

சின்னஞ்சிறு தொகையினரும் போர்மறமும் வல்லுடம்பும் இல்லாதவருமான பிராமணர், காட்டிக் கொடுக்கும் போலித் தமிழ ருதவியின்றித் தமிழுக்கும் தமிழர்க்கும் மாறாக எதுவுஞ் செய்ய முடியாது.

## தி.மு.க. அரசிற்குத் தமிழே வல்லரண்

இந்தியை யெதிர்த்துத் தமிழ்ப்பற்றுக் காட்டியதனாலேயே, தி.மு.க. பேராயத்தை வீழ்த்தி ஆட்சியைக் கைப்பற்றியது. தமிழ் திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமுமாகும் என்னும் உண்மையை நாட்டின், இம் மண்ணுலகுள்ள அளவும் தி.மு.க. அரசை எவரும் அசைக்க முடியாது. இந்தி தமிழ்நாட்டினின்று தானே நீங்கிவிடும். திருக்கோவில்களில் தமிழிலேயே வழிபாடு நடைபெறும். பிற பைதிரங்களை (பிரதேசங்களை) விடத் தமிழ்நாடு மிகுந்த வுரிமை களை நடுவணரசினின்று பெறும்.

## கல்வித் திணைக்களத்தின் கடுங்குறைகள்

தி.மு.க. ஆட்சியில், கல்வித் திணைக்களம் (department) தவிர மற் றெல்லாத் திணைக்களங்களும் ஏறத்தாழச் சீராக நடைபெற்று வருகின்றன.

தமிழ்த் துறையில், கடந்த அரை நூற்றாண்டாக நான் செய்து வரும் சொல்லாராய்ச்சியும் மொழியாராய்ச்சியும் அகரமுதலித் தொகுப்பும், தமிழ்ப் புலவர் அனைவரும் அறிவர். தனித்தமிழ் வாரி யாம் மறைமலையடிகள் எனக்குத் தந்த நற்சான்றும், 'செந்தமிழ்ச் செல்வி'யில் வெளியிடப் பெற்றுள்ளது. ஆயினும், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகரமுதலியைத் திருத்தவும் மறுபதிப்பு வெளியிடவும், தகுதியில்லாத ஐந்தமிழ்ப் புலவர் அமர்த்தப் பட்டுள்ளனர்.ஒவ்வொருதமிழ்ப்புலவரும்அகரமுதலித்தொகுப்பாளரா (lexicographer) யிருக்க முடியும் என்று, கல்வியமைச்சர் கருதுவதாகத் தெரிகின்றது. அது சரியான கருத்தாயின், ஏனை மொழிகளிலும் எல்லாப் புலவரும் அகரமுதலித் தொகுப்பாளரா யிருத்தல் வேண்டும். அஃதில்லை. அகரமுதலித் தொகுப்பிற்குத் தேர்வுப்பட்டம் பெற்றிருத்தல் மட்டும் போதாது; பன்மொழிப் பயிற்சியும், இருவகை வழக்கறிவும், சொல்லாராய்ச்சியும் மொழி யாராய்ச்சியும், சொல்லாக்க நெறிமுறையறிவும், ஆங்கிலச் சொற்பிறப்பியல் அகரமுதலிகளைத் துருவிப் பார்த்தலும் வேண்டும். சாமுவேல் சான்சன், நோவா வெபுசித்தர் (Noah Webster) முதலிய அகர முதலித் தொகுப்பாளர் வரலாற்றைப் பார்த்தால்தான், அகரமுதலித் தொகுப்பிற்குரிய தகுதிகள் எவையென்று தெரிய வரும்.

ஓய்வு பெற்ற சேலங் கல்லூரி வரலாற்றுப் பேராசிரியரும், திரு. பத்தவற்சலனார் முதலமைச்சுக் காலத்திற் கல்லூரிப் பாடப் பொத்த கங்கள் எழுத அமர்த்தப்பட்டவரும், 'முதன்மொழி' ஆசிரியருமாகிய சொக்கப்பனாரின் (எம்.ஏ.,எல்.தி.) தலைமையிற் சென்ற குழு வகுத்துக் கொடுத்த, என் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்புத் திட்டம் தள்ளப்பட்டு, அதற்கு ஒரு குழு அமர்த்தப் படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டுவிட்டது. இது ஒரு புகைவண்டியை ஓட்டுநர் ஒருவர்க்குத் தலைமாறாக (பதிலாக), அதை இழுத்துச் செல்ல ஒரு குழு அமர்த்த வேண்டுமென்று சொல்வது போன்றதே. கல்வித் துறை உயர்திரு. மாதவனார் கையில் இருந்திருப்பின் நன்றா யிருந்திருக்கும். அகரமுதலித் திட்டத்தை அவர் ஒருதலையாய் ஒப்புக்கொண்டிருப்பார்.

குமரன், குமரி என்னும் தூய தென்சொற்களை வடசொல் லென்று தள்ளிவிட்டது மன்றி, திருவாட்டி என்ற முழுத் தமிழ்ச் சொல்லை நீக்கி விட்டுத் திருமதி என்ற அரைத் தமிழ்ச்சொல்லைப் புகுத்தியதே, இற்றைக் கல்வித் திணைக்களத்தின் நிலைமையை விளக்கப் போதிய சான்றாம்.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட அறிவிப்புத் தொடர்களுள், "அளவோடு பெற்று வளமோடு வாழ்க" என்பது, "அளவாகப் பெற்று வளமாக வாழ்க" என்றிருப்பின், சாரியை யின்மைக் குற்றம் நீங்கும்.

அரசினர் சாலைக் கடத்த (Govt. Road Transport) அறிவிப்புத் தொடர்களுட் பல புணர்ச்சியின்றி வரையப்பட்டுள.

எ-டு: தெற்கு பணிமனை, போக்குவரத்து துறை, அரசு போக்குவரத்து, தண்டையார் பேட்டை பணிமனை.

தமிழ் புணர்ச்சி மொழியாதலால், வலிமிகும் இடத்தில் மிகுக்காது எழுதுவது வழுவாம். மாணவரும் அதைப் பின்பற்ற நேரும். அறிவியலதிகாரம் வேறு, ஆள்வினை யதிகாரம் வேறு.

என்னை அகரமுதலிப் பணிக்கமர்த்தின் பிராமண எதிர்ப் புண்டாகுமென்று, சென்னைப் பல்கலைக்கழகத் துணைக் கண்காணகர் (Vice Chancellor) அஞ்சுவதாகத் தெரிகின்றது. பொய்யும் புரட்டும் சொல்லி ஒரு சிற்றின அயலார் தமிழ்நாட்டி லிருந்துகொண்டு துணிந்து ஏமாற்றும்போது, உண்மையைச் சொல்லி முன்னேற, மேலையர் திங்களை யடைந்த இவ் விருபதாம் நூற்றாண்டிறுதி யிலும், ஏன் தமிழன் அஞ்ச வேண்டும்? இங்ஙனம் அஞ்சி யஞ்சிச் செத்தால், என்றுதான் தமிழன் முன்னேற முடியும்?

**“ குட்டக் குட்டக் குனிகிறவனும் முட்டாள்**
**குனியக் குனியக் குட்டுகிறவனும் முட்டாள்”**

என்பது முதுமொழி.

என்னைப் பணியில் அமர்த்துமாறு தமிழன்பர் வேண்டின், எனக்கு ஏதோ நன்மை செய்யச் சொல்வதுபோல் அதிகாரிகள் கருது கின்றனர். அது தமிழுக்கே நன்மை என்றறியும் ஆற்றல் அவர்கட் கில்லை. இது அவர்களது தமிழறியாமையையோ தமிழ்ப்பற் றின்மையையேதான் காட்டும்.

## புலவர் பெருமிதம்

சோழன் நலங்கிள்ளியிடமிருந்து உறையூர் புகுந்த இளந்தத்தன் என்னும் புலவனை, ஒற்று வந்தானென்று காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி கொல்லப் புகுந்தவிடத்து, கோவூர்கிழார் என்னும் புலவர்,

**“ வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி**
**நெடிய வென்னாது சுரம்பல கடந்து**
**வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்**
**பெற்றது மகிழ்ந்து சுற்ற மருத்தி**
**ஓம்பா துண்டு கூம்பாது வீசி**
**வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை**
**பிறர்க்குத் தீதறிந் தன்றோ வின்றே, திறப்பட**
**நண்ணார் நாண அண்ணாந் தேகி**

***ஆங்கினி தொழுகி னல்ல தோங்குபுகழ்***
***மண்ணாள் செல்வ மெய்திய***
***நும்மோ ரன்ன செம்மலு முடைத்தே"*** (புறம்.47)

என்று பாடி, அப் புலவனை உய்யக்கொண்டார்.

மூன்றாங் குலோத்துங்கச் சோழன் முரண்பட்ட போது,

***" மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ***
***உன்னையறிந் தோதமிழை யோதினேன் – என்னை***
***விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ வுண்டோ***
***குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு"***

என்று கம்பர் பாடிப் பிரிந்தார். எல்லா நாட்டிலும் புலவர் இப்படித் தானிருப்பர். அது "மண்டைக் கனம்" அன்று. புலவர் வறுமையைப் பயன்படுத்தி அவரை யடக்கியாளத் துணிவதுதான் செல்வனின் அல்லது அமைச்சனின் மண்டைக் கனம். சில வணிகர் புலவர் வணங்கிப் பணிவது போல் எல்லாரும் பணியார்.

## முத்தமிழ்க் காவலர்

இன்று தமிழைக் காத்து வருபவர் மூவரே.

### (1) தவத்திருக் குன்றக்குடி யடிகள்

அருள்நெறித் திருக்கூட்டம் அமைத்தும், கட்டாய இந்திக் கல்வியைக் கண்டித்தும், தமிழ்நாடு முழுதும் இடைவிடாது அல்லும் பகலும் இனிய தமிழிற் சொற்பொழிவாற்றியும், ஆண்டுதோறும் பறம்புமலையிற் பாரிவிழா நடாத்திப் பாரி புகழைப் பரப்பிப் பல் புலவர்க்குச் சிறப்புச் செய்தும், திருக்கோவில்களில் தமிழ் வழிபாடு நடைபெறச் செய்தும், தமிழ்க் காப்பு நூல் வெளியீட்டிற்குப் பொருளுதவியும், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்புப் பணியில் ஈடுபடுமாறு தமிழக அரசைத் தூண்டியும், தமிழரின் இருமை நலத்திற்கும் அருந்தொண்டாற்றி வருபவர், தமிழ்நாட்டுத் திருமடத் தலைவர் அனைவருள்ளும் தலைசிறந்த தவத்திருக் குன்றக்குடி அடிகள் ஆவர்.

### (2) தாமரைத்திரு வ. சுப்பையாப் பிள்ளை

நீண்ட காலமாகக் கிடைக்காத நூல்கள் நேர்மையான விலைக்குக் கிடைக்குமாறும், விளங்காத செய்யுட் பனுவல்கள் எளிதாக விளங்குமாறும், ஆயிரத்திற்கு மேற்பட்ட அருந்தமிழ் நூல்களின் மூலத்தையும் உரையையும் ஆங்கில மொழிபெயர்ப்பையும், திண்ணிய வெண்டாளில் முத்துப்போன்ற எழுத்திற் செவ்வையாக அச்சிட்டு, கண்கவர் கவின் கட்டடங் கட்டி, உலக முழுதும் பரப்பித்

தமிழ்நூல் வெளியீட்டுத் துறையில் வாகை சூடியும், இந்தி யெதிர்ப்புப் போராட்டத்தில் ஆழ்ந்து ஈடுபட்டும், ஓய்வுபெற்ற தமிழ்ப் புலவர்க்கு வேலை யளித்தும், சென்னை வாணர்க்குச் சிறப்பாகப் பயன்படும் மறைமலை யடிகள் நூல்நிலையத்தை நிறுவியும், ஆங்காங்கு நூற்காட்சி யமைத்தும், ஆண்டுதோறும் மறைமலையடிகள் விழாக் கொண்டாடியும், தனித்தமிழ்த் தொண்டரை ஊக்கியும், இடைவிடாது தமிழைக் காத்து வருபவர், தாமரைத்திரு வ. சுப்பையாப் பிள்ளை ஆவர்.

## (3) பாவலர் பெருஞ்சித்திரனார்

பட்டம்பதவியோ செல்வச் சிறப்போ அமைச்சர் துணையோ சற்றும் இல்லாதிருந்தும், தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களும் அரசுகளும் வெட்கித் தலைகுனியவும், அகப்பகையும் புறப்பகையும் அடியோ டொழியவும், தமிழன்பர் தம் தவப்பயனை வியந்து மகிழவும், (சித்தியம் ஆரியம் சேமியம் என்னும்) முப்பெரு மொழிக் குடும்பங்களுக்கும் குமரிநாட்டுக் குலத்தமிழே உலக முதற்றாய் உயர்தனிச் செம்மொழி யென்று முரசறைந்து சாற்றவும், மக்களின முள்ள காலமெல்லாம் முத்தமிழ் அரியணையில் வீற்றிருந்து மொழியுலகம் முழுவதையும் ஒருகுடைக்கீழ் ஆளுமாறும், தமிழன் தலைநிமிர்ந்து ஏறுபோற் பீடுநடை கொள்ளுமாறும், எருதந்துறை ஆங்கிலச் சொற்களஞ்சியத்தை யொத்த, பன்னிரு மடலச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியை உருவாக்கவும் வெளியிடவும், இதுவரை எவரும் செய்யாத வகையில் ‘தென்மொழி’த் திட்டம் வகுத்து, எதிர்காலத் தமிழ் வரலாற்றில் தம் பெயரைப் பொன்னெழுத் திற் பொறிக்குமாறு செய்துகொண்டவர், ‘தென்மொழி’ ஆசிரியர் **பாவலர் பெருஞ்சித்திரனார்** ஆவர்.

## புரட்சிப் பாவேந்தன் கனவு இன்னும் நனவாகவில்லை

தமிழை மூலமாகக் கொண்ட மேலையாரிய வகையான கிரேக் கத்திற்கு நெருக்கமாயிருந்து, இந்தியாவிற்கு வந்தவுடன் வழக்கற்றுப் போய் வடதிரவிடமாகிய பிராகிருதத்துடன் இரண்டறக் கலந்த வேதமொழியாகி, பின்னர்த் தமிழை யண்டி அதனாற் பெரிதும் வளம்படுத்தப்பட்டு அரைச் செயற்கை இலக்கிய நடைமொழியான சமற்கிருதத்தை உலக அளவில் தலைமையாக்குதற் பொருட்டு, ஒரு புதிய சமற்கிருத ஆங்கிலப் பேரகர முதலி உருவாக்குதற்கு, இந்திய நடுவணரசும், மராட்டிர அரசும், பல்கலைக்கழக நல்கைக் குழுவும், பூனாப் பல்கலைக்கழகமும், ஒன்றிய நாட்டினங்களின் அமைப்பும் (U.N.O.), இரு கோடிக்குமேல் ஒதுக்கி யுள்ளன.

தமிழ்நாட்டிலோ, உலக முதற்றாய் உயர்தனிச் செம்மொழியான செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி உருவாக்கவோ, சமற்கிருதக்

கிளையென்றும் பன்மொழிக் கலவையென்றும் பிராமணப் புலவர் காட்டியுள்ள நச்சுத் தன்மை நிறைந்த சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகரமுதலியைத் திருத்தவோ, இற்றையரசு ஒரு சிறு தொகை யும் ஒதுக்கவில்லை.

தமிழ்நாட்டைத் தமிழ்நாடென்று அரசிய லேட்டிற் குறித்த தனாலும், அரசினர் சாலைக் கடத்தப் பேரியங்கிகளில் (Govt. Road Transport Buses) ஒவ்வொரு திருக்குறட் பலகையை ஆணி யறைந்து வைத்ததனாலும், தமிழ் வடமொழியினின்றும் இந்தியினின்றும் விடுதலை பெற்று வளர்ந்துவிடாது.

தமிழின் உண்மையான இயல்பை யறிந்து அதை அஞ்சாது போற்றிக் காப்பவன் தமிழ்நாட்டு ஆட்சித் தலைவனாகும் போதே, "தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சாய் வருதல் வேண்டும்" என்னும் பாரதிதாசன் கனவு நிறைவேறியதாகும்.

தமிழ் திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமும் ஆகும் என்னும் உண்மையை, உலகறிய நாட்டுவேன். அதன்பின், நடுவணரசு வடமொழி அகரமுதலிக்குத் தரும் தொகைபோல் ஒன்றரை மடங் கேனும் தமிழகர முதலிக்குத் தராவிடின், தமிழ்நாடு கீழ்வங்க நாடு போற் **பிரிந்தே யாகல் வேண்டும்.**

## சுரை யாழ அம்மி மிதப்பு

தமிழ்ப் புலவர் தமிழைப் பழம் பெருமைக்குக் கொண்டுவர வேண்டுமென்றும், ஆசிரியர் அறிவியல் மனப்பான்மை கொள்ள வேண்டு மென்றும் அடிக்கடி அமைச்சரால் சொல்லப்படுகின்றது. ஆயின், அறிவியல் முறைப்படி தமிழை ஆய்ந்து வளர்ப்பவர் பிழைப்பின்றிச் சாகவும், தமிழைக் காட்டிக் கொடுப்பவர் மேன் மேலுயர்ந்து வாழவுமே, இற்றைத் தமிழ்நாட்டு நிலைமை யுள்ளது. இத்தகை நிலைமையையே,

> ***" சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய***
> ***யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப***
> ***கானக நாடன் சுனை "***

என்று முன்னோர் பாடிக் காட்டினர். இந் நிலைமையே நீடின், இனித் தமிழு மில்லை தமிழாராய்ச்சியு மில்லை. எல்லா மொழியுங் கலந்த கொடுங் கொச்சைக் கலவைதான் தமிழ் என்று வழங்கும்.

அதன்பின்,

> ***ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதைந்தாலும்***
> ***சீரியவுன் பழையவிளஞ் செவ்விநினைந் தேத்துதுமே***

என்றே பாட நேரும். இன்று நான் உடம்போடிருந்து இந் நூலெழுதுவதற்கு ஏதுவாயிருந்தவர், பாவலர் பெருஞ்சித்திரனார்,

செட்டிகுளத்து நெசவாசிரியர் திரு. நாகமுத்தனார், செங்காட்டுப் பட்டித் திரு. செந்தமிழ்க் கிழார், அன்னத்தாளக ஆசிரியர் திரு. முருகனார், என் மதுரை மணிவிழாக் குழுவார், புன்செய்ப் புளியம் பட்டி மறைமலையடிகள் மன்றத்தார், தவத்திருக் குன்றக்குடி யடிகள் ஆகியோரே.

தமிழுக்கு ஒரு நன்மையும் செய்யாதவர் தெருத் தெருவாக விலைக்கு வாங்கவும், தமிழுக்கே தம் வாழ்நாளைத் தத்தஞ் செய்தவர் ஏன் குடியிருக்க வாடகை வீடு தேடித் தெருத் தெருவாய் அலைய வேண்டும்?

**முக்குலத்தார் கடமை**

தமிழருள் மூவகுப்பார் முதன்மை யானவர். மரக்கறி வெள்ளாளர் நிறத்திலும் கல்வியிலும், நாட்டுக்கோட்டைச் செட்டி மார் செல்வத்திலும், மறவர் மறத்திலும் சிறந்தவராவர். இம் மூவகுப்பாரும் தமிழையும் தமிழப் பண்பாட்டையும் தமிழினத் தாரையுமே தாங்கிக் காத்தல் வேண்டும்.

## தமிழ்நாடு முன்னேறும் வழிகள்

**தமிழகம் வரவரக் குன்றியமை**

ஒரு காலத்தில், முழுகிப் போன தமிழ்நாடாகிய பழம் பாண்டி நாடும் நாவலந் தீவு என்னும் இந்தியா தேசமும் தமிழகமாயிருந்தன. பழம் பாண்டிநாடு மூழ்கியபின், விந்தியமலைக்கு வடக்கிலுள்ள நிலப்பகுதி பிராகிருதம் என்னும் வடதிரவிட நாடாகி, ஆரியர் வந்தபின் ஆரியா வர்த்தம் என்னும் ஆரிய நாடாக மாறிற்று.

அதன் பின், குசராத்தி மராட்டியம் ஒட்டாரம் (ஒரிசா) ஆகிய நாடுகள், முன்பு திரவிடமாக மாறிப் பின்பு ஆரியமாகத் திரிந்தன.

அதன்பின், வடுகம் என்னும் தெலுங்க நாடும் பின்னர்க் கன்னட நாடும் திரவிடமாக மாறின. கன்னடநாடு 7ஆம் நூற்றாண்டுவரை தமிழ்நாடாகக் கருதப்பட்டது. அதனால், வடகன்னடத்திலுள்ள **கோகர்ணம்** அப்பர் சம்பந்தர் ஆகிய இருவரின் தேவாரப்பாடல் பெற்றது. அம் மட்டத்திற் கீழ்கரை வரையுள்ள இற்றைத் தெலுங்கு நிலமும், அன்று தமிழ் நிலமாயிருந்தது.

கன்னட நாடு தோன்றியபின், தெலுங்க நாட்டின் தென் எல்லை அல்லது தமிழகத்தின் வடஎல்லை, சற்றுத் தெற்கே தள்ளி வந்தது.

பன்னிரண்டாம் நூற்றாண்டின்பின், மூவேந்தர் தமிழ்நாடு களுள் ஒன்றான சேரநாடு, கேரளநாடு அல்லது மலையாள நாடு என்னும் திரவிட நாடாகப் பிரிந்துவிட்டது.

எஞ்சிய சோழ பாண்டிநாட்டு நிலப்பரப்பே, இன்று தமிழ்நாடும் புதுவை நாடுமாகப் பிரிந்த தமிழகமாக இருந்து வருகின்றது.

இதிலும் சில வட்டங்களைக் (கூற்றங்களைக்) கன்னடர் சுறண்டப் பார்க்கின்றனர்.

தமிழ்த் திரிபினாலேயே, தமிழர் பல்வேறு சிற்றினங்களாக மாறினர்; பல்வேறு நாடுகளும் தோன்றின. அதனால் தமிழகமும் வரவரக் குறுகிற்று. இனிமேலுங் குறுகாவாறு, செந்தமிழ் நடையைப் போற்றிக்காத்தல் வேண்டும்.

## ஆரிய நச்சுத்தன்மை இன்னும் அறாமை

மறைமலையடிகள் தனித்தமிழ்க் கிளர்ச்சி தொடங்கிய 1916ஆம் ஆண்டிலிருந்து, வடசொல் வழக்கிற்கு எத்தனையோ வகையில் எதிர்ப்பிருந்து வந்தும், இன்னும் ஆரியர் ஒல்லும் வகையிற் செல்லும் வாயெல்லாம் வடசொல்லைப் புகுத்துவதிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கின்றனர்.

சேலங் கல்லூரி மேனாள் முதல்வர் பேரா. அச்சுத நாயர் (எம்.ஏ.) மலையாள நாட்டிற் பூங்குன்னம் என்னும் ஊரிலிருந்தபோது, அவ்வூர்ப் பிராமணர், அவ்வூர்ப் பெயரை புஷ்பகிரி என்று மாற்ற நெடுநாட் பெருமுயற்சி செய்து, இறுதியிற் பேரா.அச்சுத நாயரின் துணை வேண்டினர். அதற்கு அவர் இசையாததால், அப் பெயர் மாற்றம் நிகழ வில்லை.

## (1) ஆங்கிலக் கல்வி

தமிழுக்கு நெருக்கமாயும் அறிவியல் இலக்கியப் பெட்டக மாயும் அமைப்பிலும் வழக்கிலும் உலகப் பொதுமொழியாயும் உள்ள ஆங்கிலம், தமிழர் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது. தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டும் கல்வி வாயிலாயிருத்தல் வேண்டும். தமிழ்வாயிற் கல்வியால் தமிழ்ப்பற்று வந்துவிடாது; ஆங்கிலவாயிற் கல்வியால் தமிழ்ப்பற்றுப் போய்விடாது. தமிழ் வாயிற் கல்வியே தமிழ்ப் பற்றைக் காட்டுமென்பது, ஆங்கிலர்மீது வெறுப்பும் ஆங்கில வறியாமையுங் கொண்ட அரசியற் கட்சித் தலைவராற் பரப்பப்பட்ட, குருட்டுமடக் கூற்றாகும். இரசியரும் சப்பானியரும்போல் தமிழர் புதுப்புனைவாளராகும் வரை, ஆங்கிலவாயிற் கல்வி இருந்தே தீரல் வேண்டும். குளத்தொடு புலந்து குளியாமலும் கூவவொடு புலந்து குடியாமலும் போனவனுக்கு, கேடேயன்றி ஆக்கமில்லை.

### (2) தனித்தமிழ்

*தமிழ் என்பது தனித்தமிழே. தனித்தமிழா லன்றிக் கலவைத் தமிழால் தமிழன் உயர்வடைய முடியாது. தமிழென்று பெயரிட்டுக் கலவைத் தமிழ் வழங்குபவன், அவலை நினைத்துக்கொண்டு உரலை யிடிப்பவனே யாவன்.*

### (3) ஆராய்ச்சியாளரைப் போற்றலும் (கோவைக் கோ. துரைச்சாமி நாயக்கர் (G.D.நாயுடு) போன்ற புதுப்புனைவாளரை (inventors) ஊக்கலும்

*செயற்கை மழை பொழிவிப்பு, கடல்நீரை நன்னீராக்கல், மண்ணினின்று நேரடியாக உணவுருவாக்கல், பாலையை மருதமாக்கல், கரடுகளையும் பாறைகளையும் தகர்த்து மனைநில மாக்கல், கதிரவன் வெம்மையைச் சமையற்குப் பயன்படுத்தல், நச்சுக் காய்கனிகளை நல்லனவாக்கல், கனிதரா மரஞ்செடி கொடிகளைக் கனிதரச் செய்தல்,வெப்பமான காலத்திலும் இடத்திலும் குளிர்காற்று வீசுவித்தல், தீங்கு செய்யும் பூச்சிகளையும் ஊரிகளையும் அறவே தீர்த்தல், மருந்திலா நோய்கட்கு மருந்து காண்டல், உள்ளக் கருத்தை அறிதல், இறந்தவனை எழுப்பல், பேரொலியைச் சிற்றொலியாக்கல், மூளையைத் திருத்தி மடயனை மதிஞனாக்கல், கூனுங் குருடும் ஊமுஞ் செவிடும் முதலிய எச்சப் பிறவிகளைச் சீர்ப்படுத்தல் முதலிய பல்வேறு அருஞ்செயல்களை, அறிவியற் பெருமதிஞரைக் கொண்டும் சூழ்ச்சியத் திறவோரைக் கொண்டும் ஆற்றுவித்தல்.*

### (4) பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சிப் பதவிகளில் இருக்கும் தமிழ்ப் பகைவரை அகற்றல்

*பேரா.(P.T.) சீனிவாச ஐயங்காரும் பேரா.(V.R.) இராமச்சந்திர தீட்சிதரும் போல், தமிழர் தென்னாட்டுப் பழங்குடி மக்கள் என்று கொள்பவரையே, பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவராக அமர்த்துதல் வேண்டும்.*

**அறுவகை ஆராய்ச்சித் தகுதி:**

*பரந்த கல்வி, மதிநுட்பம், நடுவுநிலை, அஞ்சாமை, தன்னல மின்மை, மெய்யறியவா.*

### (5) இலவசக் கட்டாயத் தொடக்கக் கல்வி

*துவக்கக் கல்வியால்தான், தாழ்த்தப்பட்ட வகுப்புப் பொது மக்கட்கு நாகரிகமும் தன்மான வுணர்ச்சியும் துப்புரவும் உண்டாகும். அதனால் தீண்டாமை நீங்கித் தமிழின ஒற்றுமை ஏற்படும். ஒருசிலர் கல்வி கற்பதால் மட்டும் முன்னேற்றம் வந்துவிடாது. பிற வகுப்பா ரொடு குடியிருக்கவும் கடைத்தெருவிலிருந்து வணிகஞ் செய்யவும்,*

கல்வியறிவும் துப்புரவும் ஒழுக்கமும் இன்றியமையாதன. இவ்வகை முயற்சியில் நாடார் குலத்தினரைப் பின்பற்றல் வேண்டும்.

பொதுத் தேர்தலில் தகுந்த தலைவரைத் தேர்ந்தெடுக்கவும், தமிழ்ப் பொத்தக வெளியீடுகள் பல்கவும், சிறந்த அறிஞரும் புதுப் புனைவாளரும் தோன்றவும், புலவர் போற்றப்படவும், கட்டாயத் துவக்கக் கல்வி பெரிதுந் துணை செய்யும், ஆயிரக்கணக்கான ஆசிரியர்க்கு வேலையுங் கிடைக்கும்.

### (6) பிறப்புப் பற்றாது தொழில்பற்றிய குடிமதிப்பு(census)

### (7) கல்வித்துறையிற் குலப்பட்டத்தை நீக்கல்

### (8) மக்கள்தொகைக் குறைப்பு

இந்தியா 30 கோடி மக்களைத்தான் தாங்கமுடியும். இன்று 56 கோடியாக மக்கள்தொகை பெருகியுள்ளது. இங்ஙனமே தமிழ் நாடும் இருமடங்கு பெருகியுள்ளது. இதனால், காடழிவும் மழையின்மையும் உணவுத் தட்டும் விறகு தட்டும், வேட்டை விலங்கு பறவையின மறைவும், கால்நடை மேய்ச்சல்நில மின்மையும், புன்செய் நிலக் குறைவும், குடியிருப்பு நில வீடின்மையும் ஏற்பட்டுள்ளன. இக் குறைகள் மேன்மேலும் வளரத்தான் செய்யும். மக்கள் பெருக்கத் தடுப்பைவிட (ஏற்கெனவேயுள்ள) தொகைக் குறைப்பே நன்று. இதற்கென்று தனித் திணைக்களம் ஏற்படுத்தி, உள்ள தொகையிற் பாதி குறையும்வரை, ஐந்தாண்டிற் கொருமுறையே திருமணங்கள் நடைபெறுமாறு சட்டம் பிறப்பித்தல் வேண்டும். இன்றேல், அடுத்த நூற்றாண்டு பஞ்சநிலை ஏற்பட்டு, அரசினர் அடக்க முடியாவாறு களவுங் கொள்ளையுங் கொலையும் மிகும்.

### (9) முன்னோக்கும் சேணோக்கும்

நாடாளும் அரசன், தன் காலத்திற்குப் பின்பும் நாட்டிற்கு நன்மை பயக்குந் திட்டங்களைக் கையாள வேண்டும்.

கடைக்கழகப் பாண்டியரும், கரிகால் வளவன், இராசராசன், இராசேந்திரன் முதலிய சோழரும், இலங்கையில் தமிழரைக் குடியேற்றி எளிதாக அதைத் தமிழ்நிலமாக்கி யிருக்கலாம். அதை அவர் செய்திலர்; தம்கால உயர்வை மட்டும் கருதினர்.

கி.பி.15ஆம் நூற்றாண்டிற்குப் பின் கடலாட்சி பெற்ற ஆங்கிலர், ஆறாயிரங்கல் தொலைவில் இருந்து வந்து, அதன் மேலும் தமிழகத்திற்குத் தென்கிழக்கில் நாலாயிரம் கல் தொலைவிலுள்ள தென் கண்டம் (ஆத்திரேலியா) முழுவதையும் கைப்பற்றிவிட்டனர். தமிழரோ,கி.மு 50ஆம் நூற்றாண்டிலேயே கடலாட்சி பெற்றுச் சாலித் தீவைக் (Java) கைப்பற்றி இருந்தும், கி.பி.10ஆம் நூற்றாண்டிலும்

*கடாரத்தை (பர்மாவை) வென்றிருந்தும், ஐம்பது கல் தொலை விலேயே அணித்தாகவுள்ள இலங்கையு மிழந்து, ஒண்டியிருக்கவும் அங்கு இடமின்றித் திண்டாடுகின்றனர்.*

## (10) தமிழனை முன்வைத்த இரட்டைப் பகுப்பு

*நயன்மைக் கட்சியார், தமிழ்நாட்டு மக்களைத் தவறாகப் பிராமணர் பிராமணரல்லார் என்று பிரித்தனர். அது வந்தேறிகட்குச் சிறப்புக் கொடுத்து நாட்டு மக்களைக் குறைவுபடுத்துவதாகும். தமிழர் தமிழரல்லார் என்றே பிரித்தல் வேண்டும்.*

### *தமிழர் யார்?*

*“யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்பதே தமிழர் கொள்கை. தமிழைப் போற்றுவாராயின், தமிழருக்கு மிக நெருக்கமான திரவிடர் மட்டுமன்றி, மராட்டியர் மார்வாடியர் முதலிய வடநாட்டாரும், ஆப்பிரிக்கர் ஐரோப்பியர் முதலிய அயல்நாட்டாரும் தமிழரே.*

***பெருமையெனப் புன்செருக்கிற் பிரிந்து வாழ்ந்து***
***பிறருக்கொன் றீயாத புல்ல ரேனும்***
***எருமையொடு குரங்கரவம் தவளை தின்பார்***
***இரப்பெடுப்பார் தீயதொழு நோய ரேனும்***
***கருமைமிகும் ஆப்பிரிக்கர் முண்ட மெய்யர்***
***காடுறையும் விலங்காண்டி மாந்த ரேனும்***
***அருமையுறுந் தனித்தமிழை விரும்பு வாரேல்***
***அவரன்றோ தலையாய தமிழர் கண்டீர்.***

*தமிழைப் போற்றுதலாவது, தமிழ் திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமுமாகும் என்னும் உண்மையை ஒப்புக் கொள்வதே.*

## (11) பரிசுச் சீட்டு நிறுத்தம்

*ஆசை காட்டல், போட்ட பணம் மீளாமை, உழைப்பின்றிப் பிறர் பணத்தால் விரைந்து செல்வராதல், இழப்பால் வருத்தமும் வென்றவன்பாற் பொறாமையும் உண்டுபண்ணல், எத்தனை முறை யாடினும் எல்லாரும் வெல்ல முடியாமை ஆகிய சூதாட்டியல்பு களுடன், அயல் மாநிலத்திற்குப் பணம் போதலாகிய தீதும் கூடிய பரிசுச் சீட்டுத் திட்டம், தமிழ்நாட்டில் தோன்றிய திருவள்ளுவர் பெயருக்கு இழுக்கு நேராவண்ணம், உடனே நிறுத்தப் பெறுவதே நன்றாம்.*

*பொதுநலத் திட்டங்கட்கு வேண்டும் பணத்தைச் செல்வரிடத் தன்றி ஏழை மக்களிடமிருந்து பெறுவது எவ்வகையிலும் பொருத்த மின்றாம்.*

## (12) பொறுப்பாட்சி (Responsible Government)

மக்கள்தொகை மிகாத இடைக்காலத்தில், அரசன் அல்லது முதலமைச்சன் நாடாளு மன்றத்திற்கே (Legislature) கணக்கொப்பு விப்பவனாயிருந்தான். இன்றோ முன்போல் எல்லார்க்கும் பிழைப் பின்மையால், ஆட்சித்தலைவன் குடிகள் என்னும் பொதுமக்கட்கே நேரடிப் பொறுப்பாளன் ஆகின்றான். ஆதலால், நாட்டிற் பிறந்த அனைவர்க்கும் பிழைப்பு வழி வகுத்தல் வேண்டும். அஃதியலாக்கால், நேர்மையான முறையில் மக்கள்தொகையைக் குறைத்தல் வேண்டும்.

வீடு கட்ட நிலப்பரப்பைப் பயன்படுத்தாது வான்வெளியையே பயன்படுத்தி, வானளாவிகள் (skycrapers) எழுப்ப வேண்டும். நிலப் பரப்பைப் பயன்படுத்தின், பழனங்களையும் ஏரிகளையும் விட்டுவிட்டுப் பாறைநிலத்திலும் கல்லாங்குத்திலும் முரம்பு மேட்டிலுமே கட்ட வேண்டும். விளைநிலங்கள் என்றும் விளை நிலங்களாகவே யிருத்தல் வேண்டும்.

## (13) மாணவர் அரசியற் கட்சியிற் சேராமை

மாணவர், கல்வியிலேயே முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டிய பயிற்சியாளராயும், தத்தம் திறமைக்கும் மனப்பான்மைக் கும் ஏற்பப் பிழைப்புவழி தேடும் முயற்சியாளராயும், பட்டறிவும் அகக்கரண வளர்ச்சி நிறைவும் பெறாத இளம்பருவத்தாராயும் இருப்பதால், அவர் அரசியற் கட்சிகளிற் சேர்தலோ சேர்க்கப் படுதலோ, கல்விநெறிக்கு மாறும் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை யும் ஆன கேடாகும். இதைக் கல்வியமைச்சன்மார் கண்டித்துத் தடுக்க வேண்டியிருக்க, அதற்கு மாறாக அதை ஊக்குவது, வேலியே பயிரை மேய்தல் போன்றாம். அரசியற் கட்சியைச் சார்ந்த மாணவரின் அகக்கரண வியல்பு, பெரும்பாலும் இயற்கை வளர்ச்சியடையாது கட்சியச்சில் வார்க்கப்பட்டுவிடுகின்றது. அதனால், அவர் தனிப் பட்ட தன்மையும் திறமும் அவர்க்கும் நாட்டிற்கும் பயன்படாது போகின்றன.

மாணவரைக் கல்லூரிகளில், சிறப்பாக மருத்துவக் கல்லூரி களில் சேர்ப்பதற்கும்; வேலை வேண்டுவோரை வேலையில் அமர்த்தற்கும் கையூட்டு வாங்காமை.

## தமிழின ஒற்றுமை

இங்கிலாந்தில் ஐபீரியர், கெலத்தியர் (Celts), பித்தியர்(Picts), காட்டியர் (Scots), ஆங்கிலர், சாகசனியர் (Saxons), சூதியர் (Jutes), தேனியர் (Danes), நார்மணியர் (Normans) முதலிய ஒன்பான் அல்லது பன்னிரு சிற்றினங்கள் கலந்த கலவைப் பேரினமா யிருப்பவர் இற்றை ஆங்கிலேயர். அதனால், மதிநுட்பமுள்ள மக்கள் பிறந்து, நீராவியும்

நெய்யாவியும் மின்விசையும் கொண்டியக்கும் பல்வேறு பொறி களையும் ஊர்திகளையும் புனைந்து, இற்றை அறிவியல்களைத் தோற்றுவித் திருக்கின்றனர். தமிழ்நாட்டிலோ, ஒரேயினம் ஆரியச் சூழ்ச்சியால் நூற்றுக்கணக்கான அகமணப் பிரிவுகளாகச் சிதைக்கப் பட்டுவிட்டதனால், இன்றும் தமிழர்

**"......................வளைவிற் பொறியும்**
**கருவிர லூகமும் கல்லுமிழ் கவணும்**
**பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும்**
**காய்பொன் னுலையும் கல்லிடு கூடையும்**
**தூண்டிலும் தொடக்கும் ஆண்டலை யடுப்பும்**
**..................................................**
**சென்றெறி சிரலும் பன்றியும் பணையும்"** (சிலப். 15:207–14)

நூற்றுவரைக் கொல்லி, தள்ளிவெட்டி, களிற்றுப்பொறி, விழுங்கும் பாம்பு, கழுகுபொறி, புலிப்பொறி, குடப்பாம்பு, சகடப்பொறி, தகர்ப் பொறி, அரிநூற்பொறி முதலியனவுமான, முன்னோர் செய்த மதிற் பொறிகளையுஞ் செய்யத் தெரியாது, மாட்டுவண்டியும் குதிரைவண்டியும் நரவண்டியும் தொடர்வண்டிக் கூண்டுமே செய்யும் நிலையிலுள்ளனர்.

இங்கிலாந்திலுள்ள மக்கள் பெயரெல்லாம் பெயரளவில் வழங்குகின்றனவே யன்றி, தமிழ்நாட்டிற்போல் சேம்பர்லேன் முதலியார், சர்ச்சில் செட்டியார், அத்திலீக் கவுண்டர், ஈடன் நாடார், வில்சன் பிள்ளை என்று பொருளற்ற வால்களுடன் வழங்குவதில்லை. (இங்ஙனமே ஏனை நாடுகளிலும்.)

அன்றியும், அங்கு மக்கள் வகுப்பை வினவின், தொழிலடிப் படையில் உழவர் வணிகர் ஆசிரியர் கணக்கர் என்று சொல்லு கின்றனரேயன்றி, இங்குப்போல் ஆசிரியனைக் கம்மாளன் (ஆச்சாரி) என்றும், கணக்கனை வணிகன் (செட்டியார்) என்றும், கட்டட வேலை செய்பவனைப் படைத்தலைவன் (முதலியார்) என்றும், தையற் காரனைப் பாடகன் (பாணன்) என்றும், ஒரே வேலை செய்பவரைப் பல்வேறு தொழிற் குலத்தாராகவும், இல்வாழ்வானைத் துறவி (ஐயர்) என்றும் பகுத்தறிவின்றிச் சொல்வதில்லை.

இனி, மாணவனின் அறியாமையைப் போக்கி அவனுக்கு உண்மையான செய்திகளை அறிவிக்கக் கடமைப்பட்டுள்ள ஆசிரியன், மாந்தனூலும் (Anthropology) உடல்நூலும் (Physiology) கற்றவனா யிருப்பினும், அவற்றிற்கு மாறாக, பிறப்படிப்படையில் அவனை ஓர் இனமாகவும் (species) தன்னை மற்றோரினமாகவும் கூறுவதும், இங்ஙனமே கல்வியதிகாரியும் கல்வித்துறை இயக்குநரும் கல்வி அமைச்சரும் பல்கலைக்கழகத் துணைக் கண்காணகருங்

*கூறுவதும், ஆசிரியன் மாணவனைப் பிறப்பில் தாழ்ந்தவ னென்றும் மாணவன் ஆசிரியனைப் பிறப்பில் தாழ்ந்தவனென்றும் கொள்வதும், எத்துணைக் கேடான செயல்! இத்தகைக் கல்வியால் ஒரு நாடு முன்னேற முடியுமோ?*

## பிறவிக்குலப் பிரிவினையால் விளையும் பெருங்கேடுகள்

*(1) உலகுள்ள அளவும் ஒற்றுமை யின்மை.*

*(2) இன முன்னேற்ற மின்மை.*

*(3) தமிழ்மொழி யிலக்கிய வளர்ச்சி யின்மை.*

*(4) தமிழப் பண்பாட் டழிவு.*

*(5) அடிமைத்தனமும் தாழ்வும் தொடர்கை.*

*(6) மதிவிளக்கமும் உடல் வலிமையுமுள்ள மகப்பேறின்மை.*

*(7) அயலார்க்கும் தகுதியில்லார்க்கும் பதவிப் பேறு.*

*(8) பகுத்தறிவைப் பயன்படுத்தாமை.*

*ஒருவர் எத்துணை யுயரினும், தம்மை நாடார் என்று சொல்லிக் கொள்ளின், குல ஏணியில் அவருக்குரிய படியில்தான் அவரை வைப்பர். அதனால் அவர் வெள்ளாளரொடு உறவாட முடியாது. அங்ஙனமே, வெள்ளாளரும் எத்துணை உயர்வா யிருப்பினும், அவர் பிராமணருக்குத் தாழ்ந்தவராகவே கருதப்படுவர். ஆதலால், ஆரியக் குல ஏணியைத் தூள் தூளாக்கிச் சுட்டெரித்தல் வேண்டும்.*

*ஒரு குலத்தாரிடை ஒரு நற்பழக்க மிருப்பின், அதைப் பிறரும் மேற்கொள்ள வேண்டும்; தீப்பழக்க மிருப்பின் அதை விட்டொழிக்க வேண்டும். நாகரிகம், துப்புரவு, ஒழுக்கம், கல்வி, செல்வம், அதிகாரம், மதிநுட்பம் முதலியவற்றாலேயே உண்மையான உயர்வு உண்டாகும். நான் கார்காத்த வெள்ளாளன் என்றும், நான் படைத்தலைக் கவுண்டன் என்றும் சொல்வதால் மட்டும் உயர்வுண்டாகாது. துருக்கியைத் திருத்தி முன்னேற்றிய* ***கமால் பாசா****போல், ஒருவர் தமிழ்நாட்டிற்குத் தேவை. கல்வியறிவிற் சிறந்த அண்ணாதுரை யாரினும் ஆள்வினையிற் சிறந்த* ***அருட்செல்வனார்*** *(கருணாநிதி யார்), அப் பொறுப்பேற்றுக் குமுகாயத் துறை மேடுபள்ளங்களைச் சமப்படுத்தி, தாம்* ***தமிழவேள்*** *என்று நாட்டுவாரா?*

> ***“ நல்ல குலமென்றுந் தீய குலமென்றும்***
> ***சொல்லள வல்லாற் பொருளில்லை – தொல்சிறப்பின்***
> ***ஒண்பொ ளொன்றோ தவங்கல்வி யான்வினை***
> ***யென்றிவற்றா னாகுங் குலம்.”*** (நாலடி.195)

## காலக் கடப்பு

*உலகத்தில் முதன்முதல் தோன்றி நாகரிக விளக்கேற்றிய நாடு தமிழகம். பிந்தித் தோன்றிய நாடுகளெல்லாம் முன்னேறிவிட்டன.*

*ஆங்கில நாடு தோன்றியது 5ஆம் நூற்றாண்டு; முன்னேறியது 18ஆம் நூற்றாண்டு. அமெரிக்க ஒன்றிய நாடுகள்* (U.S.A.) *தோன்றியது 18ஆம் நூற்றாண்டு; முன்னேறியது 19ஆம் நூற்றாண்டு. அ.ஒ.நா. ஆங்கில நாட்டின் கான்முளையே.*

*பிரான்சு தோன்றியது கி.மு. 7ஆம் நூற்றாண்டு; முன்னேறியது கி.பி. 19ஆம் நூற்றாண்டு. செருமனி தோன்றியது கி.மு. 4ஆம் நூற்றாண்டு; முன்னேறியது 19ஆம் நூற்றாண்டு. இரசியா தோன்றியது கி.பி. முதலாம் நூற்றாண்டு; முன்னேறியது 20ஆம் நூற்றாண்டு. இவற்றின் முன்னேற்றத்திற் கெல்லாம் மூலம் ஆங்கில முன்னேற்றமே.*

*சப்பான் தோன்றியது தோரா.கி.மு. 2000; முன்னேறியது கி.பி. 19 ஆம் நூற்றாண்டு. சீனம் தோன்றியது தோரா.கி.மு. 20,000; தாள் செய்தது கி.பி. 2ஆம் நூற்றாண்டு; அச்சுப்பொறி புனைந்தது கி.பி. 6ஆம் நூற்றாண்டு;மேலையறிவியல் முறையில் முன்னேறியது 20ஆம் நூற்றாண்டு.*

*தமிழன் முதன் முதலடைந்த முன்னேற்றம் மூவாயிரம் ஆண்டாகத் தடுக்கப்பட்டுள்ளது. இன்றேல், அவன்தான் முதன் முதல் திங்களை யடைந்திருப்பான். இன்றுள்ள மக்கட்பெருக்க வேகம் தொடரின், அடுத்த நூற்றாண்டு கொடிய உணவுப் பஞ்சமும் உறையுட் பஞ்சமும் ஏற்படுமென்று, மக்கள் நூலார்* (Demographers) *அடிக்கடி வன்மையாக எச்சரித்து வருகின்றார். கிறித்தவ ஊழியர் உலக முடிவு நெருங்கிவிட்ட தென்கின்றனர். இந் நிலையிலும், கடத்திவையாது உடனே தமிழன் முன்னேற முயல வேண்டும்.*

## தமிழன் முன்னேற்றத் தடை

*உயரப் பறக்கும் பருந்தின் காலிற் கட்டப்பட்டுள்ள பாறாங்கல் போல், தமிழன் உயர்முன்னேற்றத்தைத் தடுப்பது, பிராமண னுயர்வை அடிப்படையாகக் கொண்ட பிறவிக்குலப் பிரிவினையே.*

*பிராமணன் பிறப்பில் உயர்ந்தவன் அல்லன். அவன் எளிய இரப்போனாய் இங்கு வந்தவன். "முட்டிபுகும் பார்ப்பார்" என்று கம்பர் பாடியிருத்தல் காண்க. பண்டை வெண்ணிறமும் இன்றவனுக்கில்லை. இன்று வெள்ளையரா யிருப்பவர் ஐரோப்பியரும் அவர் வழியினருமே. மாந்தன் மூச்சொலியும் முழங்கொலியும் தம்மளவில் இறைவனுக் கேற்றவை யல்ல. கழுதை கத்தலும் அரிமா உரறலும் களிறு பிளிறலும் மாந்தனொலிகளினும் வலியன. இறைவனை இன்புறுத்துவது ஏழை யடியானின் தூய வுள்ளமே.*

கல்லா அடியானின் திருந்தாச் சொல்லே, கடவுட்குக் குழலினும் யாழினும் இனிய மழலைமொழி. சிவநெறியும் திருமால் நெறியும் ஆரியர் இந்தியாவிற்குட் புகுமுன்னரே தமிழர் கண்ட மதங்களே. என் 'தமிழர் மதம்' என்னும் நூலில் இது விரிவாக விளக்கப் பெறும். வேதத்திற்கும் தமிழ் மதங்கட்கும் எள்ளளவும் தொடர்பில்லை. ஆதலால், சிவனியன் என்றோ திருமாலியன் என்றோ, இரண்டிற்கும் பொதுவாகத் தென்மதத்தான் அல்லது தமிழ மதத்தான் என்றோதான் தமிழர் தம் மதத்தைத் தெரிவித்தல் வேண்டும். கிரேக்கத்திற்கு நெருங்கிய கீழையாரியமும், அதுவும் பிராகிருதமுங் கலந்த வேதமொழியும், வேதமொழியும் தமிழுங் கலந்த சமற்கிருதம் என்னும் இலக்கியமொழியும் தேவமொழியல்ல. அவற்றிற்கெல்லாம் மூலம் தமிழே.

தமிழன் ஒவ்வொருவனும் தான் பிறப்பில் தாழ்ந்தவன் அல்லன் என்று கருதி,

> **"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்குந் தத்தம்**
> **கருமமே கட்டளைக் கல்."** (குறள். 505)

என்னும் நெறிமுறையைக் கடைப்பிடித்தொழுக வேண்டும். அதுவே கார்டியன் முடிச்சறுக்கும் (Cutting the Gordian knot) வழி.

> **ஆரிய வேடனின் அயர்ந்தனை மறந்தனை**
> **சீரிய மொழிநூல் செவ்விதி னுணர்த்தலின்**
> **மூரிய பெருமையை முற்று முணர்ந்தினே**
> **பூரிய அடிமையைப் போக்குவை தமிழனே.**

பிராமணியத்தால் தமிழன் முன்னேற்றம் மட்டுமன்றி, உலக வரலாறு (World History), குமுகாய, பண்பாட்டு மாந்தனூல் (Social and Cultural Anthropology), பொது மொழிநூல் (General Linguistics) என்னும் உலகந்தழுவிய மூவறிவியல் வளர்ச்சியும் தடைப்படுகின்றது.

## தமிழ்நாட்டுப் பிராமணர்க்கு ஓர் அன்பெச்சரிக்கை

அன்பர்காள்,

நும் முன்னோர், வேறெந் நாட்டிலும் அயலார் கையாளாத வலக்காரங்களைக் கையாண்டு, கள்ளங் கரவற்ற பண்டைத் தமிழ் மூவேந்தரையும் ஏமாற்றி வயப்படுத்தி, அவர் வாயிலாகத் தமிழரிடை நும் தன்னலச் சிறுதெய்வ வேள்வி மதத்தைப் புகுத்தி, அதனால் தமிழ் கெடவும் தமிழிலக்கியம் இறந்துபடவும், தமிழர் இழிந்து சிதறி விடவும் செய்துவிட்டனர். அத் தீத் தொழிலை, அறிவாராய்ச்சியும் உரிமை யுணர்ச்சியும் மிக்க இக் காலத்தும் நீவிர் தொடர்தல் இயலாத தொன்றாம்.

"ஊருடன் கூடி வாழ்." ("When you are at Rome do as Rome does.") என்ற முறைப்படி, தமிழருடன் உடன்பிறப்புப்போற் கூடி வாழ்ந்து, உண்மையாகவும் நன்றியறிவுடனும் தமிழைத் தாய்மொழியாகப் பேணின், நீவிரும் நும் வழியினரும் முழுஉரிமையுடன் தமிழ்நாட்டில் வழிவழி வாழவும் ஆளவும் இடமுண்டாம்.

தமிழைப் போற்றாது வெறுப்பவர் தமிழ்ப் பகைவராகவே நடத் தப்படுவர். ஒருசில வையாபுரிகள் நுமக்குத் துணையாயிருப்பது உண் மையே. ஆயின், அக் கூட்டம் நாளடைவில் தேய்ந்து மாய்ந்து போம்.

தமிழே திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமுமான உலக முதல் உயர்தனிச் செம்மொழி யென்று, தமிழ்நாட்டிலும் இந்தியாவிலும் மட்டுமன்றி, உலக மேடையிலும் நாட்டப்பெறும். அதன்பின், தமிழ் நாட்டிற் சமற்கிருதம் இன்றுள்ள நிலையில் இருத்தல் இயலாது.

"எண்ணெயும் உண்மையும் இறுதியில் மேற்படும்." ("Oil and truth get uppermost at last.")

## புரட்சி

இன்று தமிழன் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையா யிருந்து பழமை போற்றி வருபவர், பெரும்பாலும் முந்திய அல்லது மூத்த தலைமுறையினரே. இனிமேலும் அவ் வநாகரிகக் கொள்கையில் ஊன்றியிருப்பாராயின், விரைந்து ஒரு பெரும் புரட்சியே கிளர்ந்தெழும். இளந்தமிழர் உள்ளத்திலெல்லாம் ஓர் எரிமலை கொதித்துக் குமுறிக்கொண்டிருக்கின்றதென்றும், எச் சமையத்திலும் அது பொங்கி வழியுமென்றும் அவர் அறிவாராக.

# பின்னிணைப்பு

## 1. உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடுகள்

*திருத் தனிநாயகம் தோற்றுவித்த உலகத் தமிழ்ப் பேரவைச் சார்பாக, இதுவரை நடைபெற்ற உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடுகள் மூன்றாலும், தேமதுரத் தமிழோசை உலகெல்லாம் பரவிவிட்டதாகப் பல பேராசிரியரும் கருதிக்கொண்டிருக்கின்றனர். ஆரியத்தால் அடைந்த பேதைமை இன்னுந் தமிழருள்ளத்தினின்று நீங்கவில்லை என்பதற்கு, இது ஒரு சான்றாம். தமிழனை ஆரியனும் ஏமாற்றுகின்றான், திரவிடனும் ஏமாற்றுகின்றான், தமிழனும் ஏமாற்றுகின்றான்.*

*பர்.தெ.பொ.மீ.யின் மாணவரென்று தம்மைச் சொல்லிக் கொள்ளும் திருத் தனிநாயகம், தமிழ் வளர்ச்சிக்கென்று உலகத் தமிழ்ப் பேரவையைத் தோற்றுவித்ததாகத் தெரியவில்லை. அண்ணாமலை நகரில் அவர் என்னைப் பார்க்க வந்திருந்தபோது, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகர முதலியிலுள்ள குற்றங் குறைகளை யெல்லாம் எடுத்துக் காட்டினேன். அதற்கு அவர் ஒரு விடையுஞ் சொல்லாது சென்றுவிட்டார். அதனால், அவருக்குத் தமிழ்ப்பற் றில்லையென்றும், என் தமிழ்த் தொண்டிற்குப் பயன்பட மாட்டாரென்றும் கண்டுகொண்டேன். அவரும், தாம் அமைக்கும் குழுக்களில் என்னைச் சேர்க்கக்கூடா தென்றும், சேர்ப்பின் அவர் வேணவா நிறைவேறாதென்றும் துணிந்துவிட்டார்.*

*மறைமலையடிகளும் நானும், வயிறு வளர்க்கவோ பொருளீட் டவோ தமிழும் பிறவும் கற்காது, தமிழை வடமொழிப் பிணிப் பினின்று மீட்கவே பலவும் கற்றாய்ந்தேம். ஆயினும், திருத் தனிநாயகம் நடத்திய உலகத் தமிழ்க் கருத்தரங்குகள் மூன்றிற்கும் எனக்கு வெற்றழைப்பும் இல்லை. அவ் வரங்குகளிற் கலந்துகொண்ட தமிழ்ப் பேராசிரியருள் ஒருவரும் இதுபற்றி வினவவுமில்லை.*

*முதற் கருத்தரங்கு, முறைப்படி தமிழ்நாட்டில் நடைபெறாது, அயல்நாடான மலையாவில் நடைபெற்றது. கட்சித் தலைவர் பலர் சுற்றுலாச் செல்வதுபோற் குடும்பத்துடனும் அங்குச் சென்றனர்.*

*இரண்டாம் கருத்தரங்கு சென்னையில் நடைபெற்றது. தமிழன்பர் பலர் என்னைப்பற்றித் திரு. அண்ணாதுரையார்க்கு எழுதினதனால், அவர் தம் ஆட்சியதிகாரத்தைப் பயன்படுத்தி, 'தமிழ்த் தாள்கள்'* (Tamil Papers) *என்னும் கடைப்பட்ட 8ஆம்*

*கட்டுரைக் குழுவில், இறுதியில் என் பெயரைச் சேர்த்துக்கொண்டார். எனக்குரிய குழு 'மொழிநூல்'. அதற்குத் தலைவராயிருந்தவர் வங்கப் பிராமணரான பர். சட்டர்சி.*

*தமிழ் வல்லுயிருள்ள வழங்குமொழி யாதலால், உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடு, மறைமலையடிகள் இல்லாத காலத்தில் அவர்கள் வழிப்பட்ட ஒரு மொழிநூலறிஞரான தமிழ்ப் புலவர் தலைமையில். தமிழருள்ள நாட்டில் தமிழிலேயே நடைபெறல் வேண்டும். அகப் பகைவரும் புறப்பகைவரும் அறவே விலக்கப்படல் வேண்டும். கட்டுரைகளெல்லாம் தமிழிலேயே படிக்கப்படல் வேண்டும். தமிழிற் பேசவோ எழுதவோ படிக்கவோ ஆற்றலில்லார் பார்வையாளராக மட்டும் இருத்தல் வேண்டும். கருத்தரங்கு மாநாட்டு மண்டபத்திற் கருகில் அமைக்கப்படும் மாபெரும் பந்தற் கீழ், பொதுமக்கள் அமர்ந்து மாநாட்டு நிகழ்ச்சிகளையும் கட்டுரை களையும் உரத்தொலிப்பான்கள் (Loud speakers) வாயிலாகக் கேட்டறிதல்வேண்டும். மாநாடு முடிந்த பின், அதன் நடபடி(க்கை) கள் ஆங்கில அறிக்கை வாயிலாக அயல்நாட்டார்க்கு அறிவிக்கப் படல் வேண்டும். இம் முறையில் எம் மாநாடும் நடைபெறவில்லை.*

*சென்னைக் கருத்தரங்கு மாநாட்டில் தமிழ்க் கட்டுரை படிப்போர்க்கு வழிகாட்டியாக விடுக்கப்பட்ட, 'ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்கான விளக்கக் குறிப்புகள்' என்னும் அறிவிப்பில்,*

*"யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்கிற தமிழ் மூதுரையில் பொருத்தமாக வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒன்றே உலகம் என்னும் நம் வாழ்வு முறையின் உயர்வு நவிற்சியற்ற காட்சியை வழங்குவதே நம்முடைய நோக்கமாக இருக்க வேண்டும்.*

***" .......................கல்தோன்றி மண்தோன்றாக்***
***காலத்து முன்தோன்றிய பழங்குடி"***

*என்பது போன்ற தக்க ஆதாரமில்லாத தற்பெருமையான கூற்றுகள், எதையும் அறிவியல் அடிப்படையில் ஆராய்ந்து பார்க்கும் நம்முடைய தகுதியிலும் திறமையிலும் அவநம்பிக்கைதான் ஏற்படச் செய்யும்" என்றுள்ளது. இஃதொன்றே, திருத் தனிநாயகம் உலகத் தமிழ்ப் பேரவை, வையாபுரிகள் கூட்டம் என்பதைக் காட்டப் போதிய சான்றாம்.*

*உலகத் தமிழ்ப் பேரவைத் தலைவரான, தமிழறியாத பேரா.* ***பில்லியோசா,*** *பண்டைநாளில் சமற்கிருதமே இந்தியப் பொது மொழியா யிருந்த தென்றார். ஆரிய வழியினரான திரு.* **ஐராவதம் மகாதேவன் தமிழெழுத்தைப்** *பிராமியெழுத்தோடு தொடர்பு படுத்தி, தமிழெழுத்தும் தொல்காப்பியமும் கி.மு. 2ஆம் நூற்றாண்டில் தோன்றின என்றார். கொச்சைத் தமிழ் நச்சியாரான*

பர். காமில் சுவலெபில், மறைமலையடிகளும் சோமசுந்தர பாரதியாரும் பாரதிதாசனும் தமிழைக் கெடுத்தவர் என்று அறிவித்தார். அவர் நற்றிணை என்னும் கடைக்கழகச் செய்யுட் பனுவலையும் ‘நாலுவேலி நிலம்’ என்னும் கடுங்கொச்சை நாடகப் பொத்தகத்தையும் அடிப் படையாகக்கொண்டு, தமிழ் தோன்றிய காலம் கி.மு. 1500 என்று கணித்திருப்பதும், அது சென்னைப் பல்கலைக்கழகத்தால் வெளி யிடப்பட்டிருப்பதும், இற்றைத் தமிழர் மாபெரும் பேதையர் கூட்டம் என்பதையே காட்டும்.

பாரிசு மாநகரில் நடந்த 3ஆம் உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடும், சுற்றுலாக் கூட்டமாகவே நடந்தது. அதிற் கலந்து கொண்ட கட்சித் தலைவரையெல்லாம் தகுதி வாய்ந்தவரே யென்று, பொறுப் பற்றதனமாய் எழுதினார் ஒரு பொறுப்பு வாய்ந்த தமிழ்ப் பேராசிரியர். சிந்துவெளி நாகரிகம் திரவிடரது என்பது பர். காமில் சுவெலபிலால் மறுக்கப்பட்டு, அதன் தீர்ப்பு திரு. ஐராவதம் மகாதேவனிடம் ஒப்படைக்கப்பட்டது. உலகத் தமிழ்ப் பேரவையின் நோக்கம் ஆராய்ச்சியே யன்றி, தமிழை வளர்ப்பதோ பரப்புவதோ அன்றென்று திருத் தனிநாயகத்ததால் வெளிப்படையாகச் சொல்லப் பட்டது.

அயல்நாட்டார்க்குத் தமிழைப்பற்றி யிருந்த உயர்வான எண்ணம் வரவரத் தாழ்ந்து போனதே, முக்கருத்தரங்கு மாநாடுகளின் விளைவு மாகும். சமற்கிருத வெறியரான இருதிசை யாரியரும் வையாபுரிகளும் வணிகப் புலவரும் தமிழறியாதவருமே திருத் தனிநாயகத்தின் துணைவர். ஆதலால், அவரால் தமிழுக்கு நன்மையை எதிர்பார்ப்பது, களாச்செடியிற் பலாப்பழத்தைப் பறிப்பது போன்றதே.

பட்டம் பெறுவதும் பதவியுயர்த்துவதும் பெரும் பொருளீட்டு வதுமே வணிகப் புலவர் குறிக்கோள்.

**“ இருவே றுலகத் தியற்கை திருவேறு**
**தெள்ளிய ராதலும் வேறு”** (குறள்.374)

குமரிநாடே தமிழன் பிறந்தகம் என்பதை, வையாபுரிகள் போன்றே வணிகப் புலவரும் ஒத்துக்கொள்வதில்லை.

**“ உலகத்தார் உண்டென்ப தில் லென்பான் வையத்**
**தலகையா வைக்கப் படும்”** (குறள்.850)

A History of South India, The History and Culture of the Tamils, New Light on the Indus Civilization, Aryatarangini முதலிய எத்தனையோ வரலாற்று நூல்கள், தமிழுக்கும் தமிழர்க்கும் கேடாக வெளியிடப்பட்டு வருகின்றன. அவற்றை வணிகப் புலவர் கண்டிப்பதே யில்லை.

**" நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்**
**நெஞ்சத் தவல மிலர் "** (குறள்.1072)

*வணிகப் புலவர் சிலர், பண்டாரகர் பட்டம் பெற்ற அளவில், தம்மை அனைத்து மறிந்தவரென்றும் எல்லாம் வல்லுநரென்றும் இறப்ப மதித்து, பல்கலைக்கழகத் துணைக் கண்காணகரையும் அமைச்சரையும் ஏமாற்றி வருகின்றனர். "தான் அறியாதான் என்பதை அறியாதான் முட்டாள், அவனை விட்டொழி.* ("He who knows not that he knows not is a fool, shun him.") *என்பது ஓர் ஆங்கிலப் பொன்மொழி.*

*இங்ஙனம் தம்மை இறப்ப மதிப்பதால், தமிழ் கெடினும் கெடுக; தம் பெயர் மங்கக் கூடாதென்று, மறைமலையடிகளையும் அவர்கள் வழிப் புலவரையும் இருட்டடிப்புச் செய்து, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பைத் தம்மால் இயன்றவரை தடுத்து வருகின் றனர். இது காலஞ் சென்ற பர். சேதுப்பிள்ளையிடம் பெற்ற பயிற்சி.*

*பிறநாட்டார்க்குக் கொச்சையும்* (barbarism) *உலக வழக்கும்* (colloquialism) *ஒன்றாம். தமிழர்க்கோ அவை முறையே தள்ளத் தக்கதும் கொள்ளத் தக்கதுமாய் வெவ்வேறாம்.*

*பர். காமில் சுவெலபில், தம்* `Lectures on Historical Grammar of Tamil' *என்னும் ஆங்கிலச் சுவடியில், கொச்சைத் தமிழையும் உலக வழக்குத் தமிழொடு சேர்க்கும் முப்பேராசிரியரை வானளாவப் புகழ்ந்து,* "The three most eminent Tamil Scholars of our time" *என்று (ப.12) குறித்திருக்கின்றார். அம் மூவருள், ஒருவர் மொழிநூலையே அறியாதவர்; ஒருவர் மேலையர் மொழிநூல்களைப் படித்துமட்டும் இருப்பவர்; ஒருவர் சமற்கிருத அடிப்படையில் தமிழாய்ந்தவர். இந் நூற்றாண்டில் முப்பெருந் தமிழ்ப் புலவர் என்று சொல்லத் தக்கார், மறைமலை யடிகளும் சாமிநாதையரும் கா. சுப்பிரமணியப் பிள்ளையுமே.*

*சமற்கிருதப் பேராசிரியரான பர். பரோவும் பர். எமெனோவும் சிறந்த அறிஞரேனும், தமிழைச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகர முதலி கொண்டும், திரவிட மொழிகளை அவற்றிலுள்ள அகர முதலிகள் கொண்டும் படித்தவரே யன்றி, திரவிட மொழி கட்குத் தாயான தமிழை ஆழ்ந்து ஆய்ந்தவரல்லர். அதனால், ஆரிய மொழி திரவிடத்தினின்று 500 சொற்கள்போற்கடன் கொண்டுள்ளதே யன்றி, ஆரிய மொழியமைப்பிற்குள் திரவிடம் புகவில்லையென்று முடிபு கொண்டுவிட்டனர். அது தவறென்பது, என்* ' A Guide to Western Tamilologists' *என்னும் ஆங்கில நூலில் விரிவாக விளக்கப்பெறும். எத்துணைப் பேரறிஞராயினும், அடிப்படை தவறாயின் முடிவும் தவறாகவே யிருக்கும். மேலை மொழிநூலார் எல்லாரும், தமிழர்*

நண்ணிலக் கடற்கரை நாடுகளினின்று வந்தேறிகள் என்னும் தவறான கொள்கையினரே.

ஒரு நாட்டு இலக்கியத்தை அயலார் கற்று அதில் தேர்ச்சி பெறலாம். ஆயின், அதன் மொழியை, அதைத் தாய்மொழியாகக் கொண்டவரொடு பிள்ளைப் பருவத்தினின்று நெருங்கிப் பழகினா லொழிய, ஒரே தலைமுறையில் அவர்போல் முற்றக் கற்க முடியாது.

ஓய்வு பெற்ற சமற்கிருதப் பேராசிரியரான பரோவும் (T. Burrow) எமெனோவும் (M. B. Emeneau) தொகுத்துள்ள திரவிட அகரமுதலி, 'திரவிடச் சொற்பிறப்பியல் அகரமுதலி' (A Dravidian Etymological Dictionary) என்று பெயர் பெற்றிருப்பினும், உண்மையில் ஓர் ஒப்பியல் அகரமுதலியே (A Comparative Lexicon).

கால்டுவெலார் கருத்திற் கிணங்கத் தமிழை ஆழ்ந்து கற்றுத் திரவிடமொழிகளைக் கொடிவழி முறைப்படி (Geneological method) ஆராயாது, இற்றை வண்ணனை மொழிநூல் (Descriptive Linguistics) போல் ஒப்பியல் முறைப்படி (Comparative method) மட்டும் நோக்கி, தமிழிலுள்ள தவறான சென்னைப் பல்கலைக் கழக அகர முதலியையும், தமிழைத் தாய்மொழியாகப் பயன்படுத்திக்கொண்டே அதை இயல்பாக வெறுக்கும் பிராமணக் குலத்தைச் சேர்ந்த, (P.S.) சுப்பிரமணிய சாத்திரியார் எழுதிய தொல்காப்பிய எழுத்ததிகார சொல்லதிகாரக் குறிப்புரைகளையும், அளவை நூல்களல்லாத பிறவற்றையும், தமிழறியாதவர் தொகுத்த திரவிட மொழி யகரமுதலிகளையுமே, அடிப்படையாகக் கொண்டு தொகுத்ததனால், அவர் அகரமுதலி பின்வருமாறு பல பிழைபாடுகள் மலிந்துள்ளன.

(1) தமிழ் குமரிநாட்டில் தோன்றிய தென்னும் அடிப்படை யுண்மையை அறியாமை.

(2) சமற்கிருதம் முந்தியதென்றும் அதனால் தமிழ் வளம் படுத்தப் பட்டதென்றும் ஒரு முற்கோள் (prejudice) உடைமை.

(3) அங்கணம் (anganam) என்பதை ankanam என்றும், அஞ்சு (anju) என்பதை ancu என்றும், அண்டி (andi) என்பதை anti என்றும், அந்தணன் (andanan) என்பதை antanam என்றும், அம்பு (ambu) என்பதை ampu என்றும், தவறாக ஆங்கிலத்தில் எழுத்துப் பெயர்த்துள்ளமை.

(4) பல தென்சொற்களை ஆரியமாக அல்லது சமற்கிருத மாகக் காட்டியுள்ளமை.

| | சமற்கிருதம் | தமிழ் |
|---|---|---|
| எ-டு: | ஆர்ய-பிரா. | |
| | அஜ்ஜ | அச்சன் |
| | ஸகஸ்ர | ஆயிரம் |

(5) பல தென்சொற்களை ஐயுறவுபடக் குறித்துள்ளமை

எ-டு: ஆணி-Cf. ani
காக்கை—Cf. kaka
முகம்-Cf. mukha
கான்-
கானம்-Cf. kanana

(6) சில தமிழ்ச்சொற்கும் திரவிடச் சொற்கும் தவறாக மூலங் காட்டப்பட்டுள்ளமை.

எ-டு: தோட்டம் < தொடு (தோண்டு)
உரா (பிராகுவீ) = வீடு < ஊர்.
தோடு = திரட்சி. தோடு - தோட்டம்.
ஒ.நோ: தொகுப்பு - தோப்பு.
உறை (உறையுள்) = வீடு. உறை - உரா.

(7) சில கூட்டுச் சொற்கள் தவறாகப் பிரிக்கப்பட்டுள்ளமை.

எ-டு: தகப்பன் = தகு + அப்பன்.
தம் + அப்பன் = தமப்பன் - தகப்பன் என்பதே உண்மை நிலையாம்.

(8) ஆயிரக் கணக்கான தென்சொற்கள் விடுபட்டுப் போன சென்னை அகரமுதலியிலுள்ள தமிழ்ச்சொற்களும், எல்லாம் காட்டப்படாமை.

(9) ஒரு சொற்கேனும் வரலாறு வரையப்படாமை.

(10) வட இந்தியர் சொற்களை யெல்லாம் சமற்கிருதமென்று கொண்டுள்ளமை.

இவற்றால், இற்றை மேலைத் தமிழறிஞருள் தலைசிறந்த பேராசிரியன்மாரும் பண்டாரகன்மாரும் தமிழதிகாரிகளல்லர் என்றும், அவர்கள் கலந்துகொண்டதனால் உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடுகள் சிறப்புற்றுவிடா என்றும், தெற்றெனத் தெரிந்துகொள்க.

கால்டுவெலார் 'திரவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கண' 3ஆம் பதிப்பில், முன்னுரையிலுள்ள 'திரவிட மொழிகளின் முது பழஞ் சான்றுகள்' என்னும் பகுதியில், 'Komaria Akron' என்னும் தலைப்பின் கீழுள்ள அடிக்குறிப்பில் (பக்,.96)

"Compare Cymri (Wales). “It is stated that the original home of the Cwmry. Cumri or Cymry, was in the Southern Hindustan, the Southern extremity of which, Cape Comorin, takes its name from the same root."—From a Historical Souvenir issued on the occassion of the meeting of the British Medical Association at Swansea 1903-Editors.''

என்று கனம் வயற்று ஐயரும் (Rev. J. L. Wyatt, M.A.) (T.) இராமகிருட்டிண பிள்ளையும் (B.A.) குறித்திருத்தலைக் கூர்ந்து நோக்குக.

> **“ பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்கும்**
> **கொல்குறும்பும் ”** (குறள்.735)

தமிழ்நாட்டில் மிக்கிருப்பதால், அவற்றையெல்லாம் நீக்கி, எவருக்கும் அஞ்சாது நடுநிலையில் நின்று முன்னோர் முறையில் தமிழை வளர்த்ததற்கு, 1969ஆம் ஆண்டு உலகத் தமிழ்க் கழகம் தோற்று விக்கப்பட்டுள்ளது. உண்மைத் தமிழன்பர் அனைவரும் உடனே அதில் உறுப்பினராகச் சேர்க.

பெரும் புலமையும் தமிழ்ப்பற்றும் இல்லாதவர், தம் பெயர் விளம்பரத்தின் பொருட்டே, பொதுப் பணத்தை ஏராளமாக வீண் செலவு செய்து கூட்டித் தமிழைக் கெடுக்கும் உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடுகட்கு, இனிமேலாயினும் தமிழக அரசு தன் ஒத்துழைப்புதவியை நல்காது விழிப்பாயிருக்க.

## 2. மொழியின வுணர்வும் படிமுறைக் கலப்பும்

இந்தியாவில், சிறப்பாகத் தமிழ்நாட்டில், இன்றுள்ள பிறவிக் குலங்கள் பிற நாடுகளில் இல்லாவிடினும், செல்வநிலை, பட்டம், தொழில், மதம், கட்சி, பழங்குடி என்பனபற்றிய பொதுவகையான வகுப்புகள் இருக்கின்றன. இருப்பினும், அவையெல்லாம் நாட்டுமொழி வகையில் ஓரினமாய் ஒன்றுபட்டுவிடுகின்றன. ஒரு நாட்டிற் பன்மொழி யினங்கள் தனித்தனிப் பெருந்தொகை மக்களைக் கொண்டிருப்பின், அப் பன்மொழிகளும் அங்கு நாட்டுமொழி களாகச் சமநிலையடைகின்றன. தமிழ்நாட்டிலோ, ஆரிய வழியினருக் கும் தமிழே தாய்மொழியா யிருந்தும், அவரது இரண்டகத்தாலும், அவர்க்கடிமைப்பட்ட அரசியற் கட்சியாளரின் பேதைமையாலும், வேற்று மொழிகளே போற்றப்பட்டு நாட்டுமொழி தூற்றப்படு கின்றது. இக் கேட்டுநிலை எவ்வகையிலும் உடனே மாற்றப்படல் வேண்டும். அல்லாக்கால், தமிழ் வாழவும் தமிழன் முன்னேறவும் எள்ளளவும் இடமில்லை.

கடந்த மூவாயிரம் ஆண்டாகத் தமிழருள்ளத்தில் ஊட்டப்பட்ட ஆரிய நஞ்சைத் திடுமென்று வெளியேற்ற முடியாதாதலின் படிப்படி யாகத்தான் தமிழர் குமுகாயம் திருந்திவரல் வேண்டும்.

முதற்கண், ஒரே குலத்திலுள்ள அகமணப் பிரிவுகளெல்லாம் புறமணப் பிரிவுகளாகலாம்.

அதையடுத்து, தெற்கும் வடக்கும் வெவ்வேறு பெயர் கொண்டுள்ள ஒரே குலத்தார் ஒரே பெயர் கொள்ளலாம். எ-டு: நாடாரும் கிராமணியாரும், கைக்கோளரும் செங்குந்தரும்.

அதன்பின், வேளாண் குடியினின்றே படைத்தலைமைப் பதவி பற்றிப் பிரிந்த முதலியார் குலத்தினர். பிள்ளைப் பட்டமுள்ள மரக்கறி வெள்ளாளருடன் மணவுறவு கொள்ளலாம்.

அதன்பின், முக்குலத்தோர் (கள்ளர், மறவர், அகம்படியர்) ஒரே குலத்தாராகலாம்.

அதன்பின், உண்டாட்டிற் கலந்துகொள்ளுங் குலங்கள் மணவுறவிலும் கலக்கலாம்.

அதன்பின், சற்றே ஏற்றத் தாழ்வுள்ள குலங்கள், முன்பு உண்டாட்டிற் கலந்து பின்பு கொள்வினை கொடுப்பனையுஞ் செய்து கொள்ளலாம். அங்ஙனஞ் செய்யும்போது, ஒரு குலத்தாரின் உணவு முறை இன்னொரு குலத்தார்க்கு ஏற்காவிடின், அதை மாற்றிவிட வேண்டும்.

இறுதியில், கல்வியிலும் நாகரிகத்திலும் துப்புரவிலும் உயர்ந்து, ஒத்த பதவியில் அல்லது நிலைமையிலுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்புக் குடும்பங்களுடன், உயர்ந்த வகுப்பாரும் இரு வகையிலும் உறவாடலாம்.

தாழ்த்தப்பட்டோரின் உயர்விற்கு இலவசக் கட்டாயத் தொடக்கக் கல்வி இன்றியமையாதது. அதனால்தான், தன்மானவுணர்ச்சியும் துப்புரவும் உண்டாகும். துப்புரவும் நாகரிகமும் இன்றேல் தீண்டாமை ஒழியாது. தீண்டாமை ஒழிந்த பின்னும், சலக்கப்புரை வாருதலும் முடிதிருத்துதலும் போன்ற தொழில் செய்வார் வீட்டிலுண்டல் எல்லார்க்கும் ஏற்காது.

தமிழர் தமிழருடன் உறவு கலந்தபின், தெலுங்கர் கன்னடர் முதலிய திரவிடரொடும் உறவு கலக்கலாம். அதன்பின், தமிழ்ப் பற்றுள்ள இந்தி மக்களொடும் மணத்தொடர்பு கொள்ளலாம்.

மக்கள் தாமாகத் திருந்தாவிடின், எதிர்காலத்தில் உண்மையான பொதுவுடைமையாட்சி வந்து விரைந்து திருத்திவிடும். இன்று பொதுவுடைமையென்று உலகில் வழங்குவது கூட்டுடைமையின் (Socialism) முனைந்த வகையேயன்றி வேறன்று. உண்மையான பொதுவுடைமை மண்ணில் விண் என்னும் நூலில் விரிவாக விளக்கப் பெறும்.

## அரும்பொருள் அருஞ்சொல் அகரமுதலி
### (எண் பக்கத்தைக் குறிக்கும்)


| | |
|---|---|
| *அகத்தியர்* | *18* |
| *அசுர மணம்* | *84* |
| *எமெனோ* | *172* |
| *ஐந்திரம்* | *56* |
| *ஐயன்* | *103* |
| *கடைக்கழகம்* | *54* |
| *காமிண்டன்* | *121* |
| *கால்டுவெலார்* | *140* |
| *கியூம்* | *137* |
| *சமற்கிருதம்* | *55* |
| *சாலோமோன்* | *36* |
| *செந்து அவெத்தா* | *32* |
| *தியூத்தானியம்* | *3* |
| *தொல்காப்பியம்* | *47* |
| *நாரதன்* | *22* |
| *நால்வரணம்* | *25* |
| *பதினாறு தானம்* | *78* |
| *பரோ* | *172* |
| *பாணினீயம்* | *56* |
| *பேடிக் கூத்து* | *34* |
| *மாக்கசு முல்லர்* | *16* |
| *முத்தமிழ்க் காவலர்* | *154* |
| *முத்திருமேனி* | *29* |
| *வாள்போழ்ந் தடக்கல்* | *78* |